# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 154 சித்திரை 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 29 ஏப்ரல் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


### தும்பளையில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஏப். 29
பருத்தித்துறை தும்பளையில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் பருத்தித்துறை ஆதார » 53

### வயிற்றோட்டத்தால் நீரிழப்பு ஏற்பட்டு குழந்தை இறந்தது

யாழ்ப்பாணம், ஏப். 29
7 மாதங்களேயான குழந்தை வயிற்றோட்டம் ஏற்பட்டதால் நீர் குறைவு ஏற்பட்டு பரிதாபமாக உயிரிழந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் மாதகல் கிழக்கில் இடம்பெற் » 53

## 'மே 1' கூட்டங்களுக்கு பொலிஸ் தடை இல்லை

கொழும்பு, ஏப். 29
மே முதலாம் திகதி தொழிலாளர் தினக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவது சட்டரீதியாகத் தடைசெய்யப்படாத நிலையில், அன்று நடைபெறும் கூட்டங்களுக்கு பொலிஸாரால் எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தப்படமாட்டாது.
இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
எனினும், மே மாதம் முதலாம் திகதி வெசாக் தின நிகழ்வுகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில், வீதிகளில் போக்குவரத்துத் தடை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால், அதற்கு எதிராக நடவ » 53



## காரைநகரில் வீதி வலம்வந்த கோவில் தேர் சரிந்து வீழ்ந்தது

காரைநகர், ஏப். 29
யாழ்ப்பாணம் காரைநகர் கோவிலில் வீதிவலம்வந்த தேர் திடீரெனச் சரிந்து வீழ்ந்தது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
காரைநகர் கருங்காலி போசிட்டி முருகன் » 53

5 மாதங்கள் உறக்கத்துக்குப் பின்னர்

# அரசமைப்பு வழிநடத்தல் குழு மே 8க்குப் பின்னர் கூடுகிறது

கெழும்பு, ஏப்ரல் 29
ஐந்து மாதங்களுக்கு மேலாக முடங்கிக் கிடந்த அரசமைப்பு சபையின் அரசமைப்புத் திருத்தத்துக் கான வழிநடத்தல் குழு அடுத்த மாதம் மீண்டும் கூடவுள்ளது என்று வழிநடத்தல் குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.
கடந்த ஆண்டு நவம்பரில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. கூட்டு அரசுக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகளை அடுத்து, வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகள் முடங்கிப் போயின. பின்னர் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றதால் வழிநடத்தல்குழுவின் செயற்பாடுகள் முற்றாக முடங்கின. எதுவுமே நடக்கவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதிக்குப் பின்னரான நாள்களில் அது கூடவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.
எதிர்வரும் மே 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ளது. அன்று இடம்பெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வழிநடத்தல் குழு வின் கூட்டம் இடம்பெறும் சரி » 53

மருத்துவ சிகிச்சை பெறமுடியாமை, சித்திரவதையை நிரூபித்தால்

## புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஐரோ. நீதிமன்று புகலிடம் வழங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 29
ஐரோப்பிய நாடுகளில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டிருப்பவர்கள், தாங்கள் சித்திரவதைக்கு உள்ளானவர்கள் என்பதையும், சொந்த நாட்டில் போதிய மருத்துவ சிகிச்சை பெற முடியாது என்பதையும் நிரூபித்தால், புகலிட அனுமதியைப் பெற்றுக்கொள்ள இயலும் என்று ஐரோப்பிய நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்துள்ளது.
மூத்த சட்ட ஆலோசகரும் வழக்குரைஞருமான அருண் » 04

### மின்னல் தாக்கியதால் ஒருவர் உயிரிழந்தார்

வவுனியா, ஏப். 29
மின்னல் தாக்கியதால் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். » 53

## புதிய ஆட்சி அமைக்க திரைமறைவில் பேச்சு

ஐ.தே.க. அதிருப்தியாளர்களுடனும் மகிந்த அணியுடனும் பேசுகின்றனர் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள்

கொழும்பு, ஏப்ரல் 29
கட்சி மறுசீரமைப்பால் அதிருப்தியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கணிசமான உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு புதிய ஆட்சி அமைக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழு வீச்சில் ஈடுபட்டுள்ளது என்று அறியமுடிகிறது. அதற்காக சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர் ஐ.தே.க. அதிருப்தியாளர்களுடன் திரைமறைவில் இரகசியமாகப் பேச்சு நடத்தி வருகின்ற » 53

## ஹபாயா தொடர்பில் கவனமாகப் பேசவும்

*கல்லூரி வரலாற்றை மாற்றமுடியாதென இரா.சம்பந்தன் வலியுறுத்துகிறார்*

கொழும்பு, ஏப். 29
"திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கென உலகம் ஏற்றுக்கொண்ட ஒரு மரபு உண்டு. அந்த மரபுகளுக்கு ஏற்ப கருமங்கள் நடக்க வேண்டும். அவற்றை மீறாமல் பேச்சு நடத்தப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்."
இவ்வாறு எதிர்க்கட்சித் » 53

### அரசின் அழைப்பை நிராகரித்தார் சூகா

யாழ்ப்பாணம், ஏப். 29
பன்னாட்டு உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் தலைவரும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் நிபுணருமான யஸ்மின் சூகா விடம், இலங் » 53

### அமெரிக்க மருத்துவக் குழுவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஏப். 29
திருகோணமலைக்கு வந்துள்ள அமெரிக்க கடற்படையின் பெரிய மிதக்கும் மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள், » 53

யாழ்ப்பாணப் பல்கலையில்

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு மானிய ஆணைக்குழு நிரந்தரத் தடை

அரச கொள்கைகளுக்கு எதிரானதாம்

யாழ்ப்பாணம், ஏப். 29
யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்க முடியாது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிரந்தரத் தடை விதித்துள்ளது.
குறித்த தூபி அமைப்பது அரச கொள்கைகளுக்கு எதிரானது என்று ஆணைக்குழு தெரிவித்து தூபி அமைப்பதைத் தடுத்துள்ளது என்று பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் » 53

## இதுவரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி எங்கே?

ஊடகவியலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 29
இலங்கை அரச படைகளாலும், ஆயுததுணைக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கும் » 53









## இசைக் கருவிகள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.29
இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறை மற்றும்யாழ்ப்பாணமாவட்டகிளைகளின்ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யபப்பட்ட பாடசாலைகளுக்குஇசைக்கருவிகள்வழங்கப்பட்டன. நிகழ்வுயாழ். முத்துதம்பிமகாவித்தியாலயத்தில் கடந்த செய்வாய்க்கிழமை இடம் பெற்றது.
நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்ப்பாணம், அம்பாறைமாவட்டப்பிரதிநிதிகள் மற்றும் நன்கொடையாளர்கள், பாடசாலைமாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந.ரி4)

## புலனாய்வினர் எனக் கூறி மத்குருவிடம் விசாரணை

சாவகச்சேரி.ஏப்.28
சாவகச்சேரிவடக்கில்உள்ளஇந்துமதகுருஒருவர் புலனாய்வுப்பிரிவினர்எனத்தெரிவித்துவந்தவர்களால் நேற்றுமுன்தினம் விசாரணைக்குட்படுத்தபட்டார்என்று தெரிவிக்கப்பட்டது.
மதகுருவின்உறவினர்களிடமும்விசாரணைகள் நடத்தப்பட்டதுடன் குடிமனை மற்றும் காணியிலும் சோதனை நடத்தப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.
கடந்தஐந்துமாதங்களுக்குமுன்னர்மதகுருவின் வீட்டுக்கு வந்த புலனாய்வுப் பிரிவினர் பெருமளவு ஆயுதங்கள் இருக்கின்றன என்று தகவல் கிடைத்துள்ளதுஎனக்கூறிதேடுதல்நடத்தியதுடன் மதகுருவை விசாரணை செய்து விட்டுச் சென்றனர் என்றும் அதன் தொடர்ச்சியாகவே விசாரணைகள்நடத்தப்பட்டனஎன்றும் தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4,9)



குருநகர் புனித கிறிஸ்தோப்பர் கடற்சாரணர் குழு கடல் மாசடைவதைத்தடுக்கும் முகமாக குருநகர் கடற்கரையில் தேங்கும் குப்பைகளை சுத்தப்படுத்தும் செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். 26 பேர் கொண்ட குழுவால் இந்த செயற்றிட்டமானது தொடர்ந்து 10வது நாளாக இடம்பெற்றுவருகின்றது. (ந.ரி4,114)

## பாரவூர்தி காட்டு யானை விபத்தில் 4 பேர் காயம்

கொழும்பு,ஏப்.29
மகியங்கனையில் பாரவூர்தி காட்டுயானை ஒன்றுடன் மோதியதில் 4 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
மெதிரிகிரியவிலிருந்து வெல்லவாய நோக்கி பயணித்த பாரவூர்தியேஇவ்வாறுவிபத்துக்குள்ளாகியது.
பாரவூர்தியில்பயணித்த4பேரே விபத்தில் காயமடைந்து மகியங்கனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் எனக் கூறப்பட்டது. மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)

# மக்களின் நலனுக்காகவே இணைப்பாளர்கள் நியமிப்பு

### யாழ். மாநகர சபை முதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப்.29
**யாழ்.நகரமேம்பாட்டுக்காக மக்கள் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு மக்கள் தொடர்பாடல் அதிகாரம் மாநகர முதல்வருக்கு இருக்கும் பிரதானமான அதிகாரங்களுக்குள் ஒன்றாகும். அதனடிப்படையில் என் கொள்கைப் பிரகடன உரையில் ஆலோசனைக் குழுக்கள், இணைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்என்று குறிப்பிட்டிருந்தேன். தற்போது மக்கள்தொடர்பாடலை இலகுபடுத்தும்நோக்குடன் 12 இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆர்னோல்ட் தெரிவித்தார்.
யாழ்ப்பாணமாநகரமுதல்வர் இ. ஆர்னோல்ட் அதிகார முறைகேடுகளில் ஈடுபடுகின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுஎன்றுவெளியான செய்திகள் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயேஇவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.
அதில் உள்ளதாவது:
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் தீர்க்கப்பட வேண்டியமக்கள்தேவைகள் ஏராளம் உள்ளன. யாழ்ப்பாணம் மாநகர சபை நிறுவப்பட்டு 30 நாள்கள் கழியாத நிலையில்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்மீது குற்றஞ்சாட்டியுள்ளமைஅவர்கள் எத்தகைய மனநிலையோடு செயற்படுகின்றனர்என்பதை எடுத்துக் காட்டுகின்றது. வெளிப்படைத்தன்மையோடு மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்படுகின்ற எமக்கு இவ்வாறான செயற்பாடுகள் புதிதல்ல. ஆனால்மக்களுக்கு இதுதொடர்பில்தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு எமக்கிருக்கின்றது.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாது நீண்ட காலமாக இயங்கிவருகின்றது. மத்திய அரசு, மாகாண அரசு, உள்ளூராட்சிஅமைச்சு என்பன சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக 2018ஆம் ஆண்டுக்கானவரவுசெலவுத் திட்டம் 2017ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு சட்டரீதியான அனுமதி பெற்றுத் தற்போதுநடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதுவே 2018ஆம் ஆண்டுக்கானவரவுசெலவுத் திட்டமாகும். இந்த வரவுசெலவுத்திட்டத்தின்மீதுஒருஅவையில் விவாதமோ, வாக்கெடுப்போ நடத்தப்படமாட்டாது.
மேலதிக செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தவேண்டியிருப்பின் வரவு செலவுத் திட்டத்தின் மீதான குறை நிரப்புப் பிரேரணை ஒன்றின் மூலம் அவைக்குமுன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு அவையின் அனுமதி பெறப்படும். இங்கு எந்தவித முறைகேடுகளும் கிடையாது.
விரைவில்குறைநிரப்புப்பிரேரணை யொன்றை அவைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
இணைப்பாளர்கள்நியமிக்கப்பட்டமை மக்கள் நலன் சார்ந்தவையாகும். இவைமுதல்வரின்நலனுக்கானவைஅல்ல. தமிழ்த்தேசியமக்கள்முன்னணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எவையும் மக்கள்நலன்சார்ந்தன அல்ல என்பதும், அரசியல் நோக்கோடும், பத்திரிகைச் செய்தியை உருவாக்கும் நோக்கோடும் கூடியவை என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள் எனநம்புகின்றேன். (ந)



திருநெல்வேலி அரசடி சிறி சிவகாமசுந்தரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாகடந்த15ஆம்திகதிகொடியேற்றத்துடன்ஆரம்பமானது. (ந.ரி4,37)

## வீதி மறுசீரமைப்பை கோரி ஆர்ப்பாட்டம்



நுவரெலியா,ஏப்.29
நோட்டன்பிரிட்ஜ் தெபட்டன் பிரதான வீதியைமறுசீரமைத்துத்தருமாறுகோரி மக்கள் நேற்று ஆரப்பாட்டம் ஒன்றில் ஈடுப்பட்டனர்.
மஸ்கெலியா பிரதான வீதியிலிருந்து கொத்தலென்ன வரையிலான சுமார் 6 கிலோ மீற்றருடைய பிரதான வீதி 10 வருடங்களுக்கு மேலாக மறுசீரமைக்கப்படாதுள்ளது.
அரசியல்வாதிகள்தேர்தல் காலங்களில் கொடுத்தவாக்குறுதிகளுக்குஅமைவாக இந்தப்பிரதானவீதியைமறுசீரமைக்கக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
தெபட்டன்சந்தியில்முன்னெடுக்கப்பட்ட இந்தஆர்ப்பாட்டத்தில்எதிர்ப்புப்பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பிபொதுமக்கள் இந்தகவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.
பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க வேண்டாம் என நோட்டன்பிரிட்ஜ் பொலிஸாரால் நீதிமன்ற உத்தரவு பெற்றிருந்த போதிலும், மக்கள் இந்த உத்தரவுக்கமைவாக வீதியில் மருங்கில் இருந்து போராட்டத்தை நடத்தியமை குறிப்பிடதக்கது. (ந.ரி4)



## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.29
யாழ். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் ஆரம்பப்பிரிவில்அமைக்கப்பட்டஇருமாடிக்கட்டடமும் சிறுவர் முற்றமும் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
அதில்வடமாகாணசபைஉறுப்பினர்பா. கஜதீபன், வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் செ. சந்திரராஜா, மாகாணசபைஉறுப்பினர், வலிகாமம்வலயக்கல்விப்பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ந.ரி4)

# உரிமைகள்பாதுகாக்கப்படும்ஆட்சியை உருவாக்குவது ஆட்சியாளரின் கடமை

## வாழ்த்துச் செய்தியில் தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.29



போலியற்ற உண்மையான கருத்துப் பரிமாற்றத்துக்கு இடமளிக்கப்படும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்சூழலொன்றை உருவாக்குவது ஆட்சியாளரின் கடமை. இவ்வாறு தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச்செய்தியிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். அதில்குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

புத்த பெருமான் காட்டித் தந்த தர்மத்தின் வழியில் நாம் எந்தளவுபயணித்துள்ளோம்என்பதைசிந்தித்துப்பார்க்கஇந்த வெசாக் தினம் சிறந்த சந்தர்ப்பமாகும்.

ஆட்சியாளர்அனைத்துசமூகப்பிரிவினருக்கும்நன்னெறியுடன் பாதுகாப்பை வழங்க வேண்டும். மக்களுக்கு உரித்தானவற்றைதடையின்றி அனுபவிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கக்கூடிய உயிர்ப் பாதுகாப்பு மிக்க குடும்ப வாழ்வு பாதுகாக்கப்படும், என சக்கவத்தி சீஹநாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக கடுமையானகஷ்டங்களுக்குமத்தியில்அரசுஎன்றவகையில்நாம் நடவடிக்கைகளைமேற்கொண்டுவருகிறோம். ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் தார்மீக சமூகம் என்பதை யதார்த்தமாக மாற்றுவது கற்றறிந்த நற்பண்பு மிக்க அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும் என்பதை நாம் அறிவோம். அன்பு, பரிவிரக்கம், கருணை, மனஅமைதி என்பவற்றைமுதலாகக்கொண்டபுத்தபெருமான்போதித்த தர்ம மார்க்கம் அந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பலமான அடிப்படையை வழங்குகிறது என்பதில் சந்தேகமில்லை. சமூகத்தின் சிறந்த இருப்புக்காக பௌத்தமதத்தைஉரிய முறையில்பின்பற்றுவதற்குஇந்த வெசாக் தினத்தில் உறுதிபூணுவோம்.

அதற்காகஅனைவரது உள்ளங்களும்ஒளிபெறும்இனிய வெசாக்திருவிழாவாகஅமையட்டும்எனவாழ்த்துகிறேன். என்றுள்ளது. (ற,ரி2)

# புத்த தர்மத்தின் வருகையே மனிதனைசிந்திக்கவைத்தது

## வெசாக் வாழ்த்துச் செய்தியில் அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.29

**புத்த தர்மத்தின் வருகையாலே மனிதன் சிந்தித்து செயலாற்றி உண்மையை உணரும் உரிமையை தனதாக்கிக் கொண்டான். மனிதன் உயர்வதும் தாழ்வதும் பிறப்பால் அன்றி அவனதுசெயலாலேயே ஆகும்என்பதேபுத்த பகவான்அருளியபோதனையின்அடிநாதமாகும். இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**



வெசாக் தினத்தை முன்னிட்டு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டிருந்தது. அதில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

சித்தார்த்த குமாரரின் பிறப்பு, ஞானம் பெறுதல் மற்றும் புத்த பெருமான் சமாதியடைதல் ஆகிய முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு உலக வாழ் பௌத்த பெருமக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது வெசாக்விழா.

பாரதசமூகம்பல்வேறுநம்பிக்கைகள் வழிபாடுகள்மதங்கள்ஆகியவற்றைப்பின்பற்றும்மிகச்சிக்கலான நிலையில் இருந்தபோதே கௌதம புத்தரின் உதயம் நிகழ்ந்தது.

அன்று மனித சமூகம் பல்வேறுகூறுகளாகவும்பிரிக்கப்பட்டிருந்தது.

பெண்கள் புறக்கணிக்கப்பட்ட ஜீவராசிகளாகவே கணிக்கப்பட்டதோடுஆணாதிக்கத்தின் முன்னால் பெண்மை வரப்பிரசாத மற்றஒருபகுதிஎன்றநிலைமைக்குஆளாக்கப்பட்டிருந்தனர். பழங்கால சம்பிரதாயக்கருத்துக்களைசிதைத்த புத்த தர்மத்தின் வருகையால்அகந்தைஇருளில் மூழ்கியிருந்த சமூகம் விஞ்ஞான நோக்குமிக்க விழிப்புணர்வைப் பெற்றதுடன் மனிதன் நேரடியாகவே அறிவின் வழிகாட்டலுக்கு ஆளாக்கப்பட்டான். அதனால் மனிதன் சிந்தித்துச் செயலாற்றி உண்மையை உணரும் உரிமையை தனதாக்கிக் கொண்டான்.

பொய்மையிலிருந்து விடுபட்ட ஆன்மிக மனிதன் இந்தச் சமூகத்துக்குக் கிடைக்கப் பெற்றான். மனிதன்உயர்வதும்தாழ்வதும் பிறப்பால் அன்றி அவனது செயலாலேயே ஆகும் என்பதேபுத்தபகவான்அருளிய போதனையின்அடிநாதமாகும். அதன் மூலம் சகல மனிதர்களும் ஒன்றாய் இணையும்சகவாழ்வுஉயிரோட்டம் பெற்றது. குரோத மனம் மீது கருணையைப் பாய்ச்சி, உயிரினங்கள்மீது அளவற்ற அன்புடன் மனிதனின் அறிவை மலரச் செய்து வாழ்க்கையின் விமோசனத்தை அடையும் வழியை உணர்த்திய புத்த பகவானின் பெரும் குணங்களைஞாபகப்படுத்தும்இந்த புனிதமான வெசாக் வைபவத்தில் அந்த புத்த பகவானின் அருளால் உலக வாழ் பௌத்த மக்கள் அனைவருக்கும்புனிதமான வெசாக் பண்டிகைவாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கின்றேன்என்றுள்ளது.

(ற-ரி2)

# தரித்து நின்ற தொடருந்து பயணிகள் அசௌகரியம்

வவுனியா,ஏப்.2018

வவுனியாதொடருந்துநிலையத்தில்நேற்றுஇரண்டுமணித்தியாலங்கள் தரித்து நின்ற தொடருந்தால் பொதுமக்கள் பாரியஅசௌகரியங்களுக்குஎதிர்கொண்டதாகத்தெரிவிக்கப்பட்டது . வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி அதிகாலையில்செல்லும்கடுகதிதொடருந்தேஇயந்திரத்தில்ஏற்பட்ட கோளாறு காரணமாக தரித்து நின்றது.

இதனையடுத்து. அனுராதபுரத்திலிருந்து தொடருந்தின் இயந்திரம் வரவழைக்கப்பட்டு. பொருத்தப்பட்டு கொழும்பு நோக்கி புறப்பட்டது.

இதனால் பயணிகள் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் தொடருந்து நிலையத்தில் நின்றதாக தொடருந்து நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ற.ரி2)

# சமாதானத்தை நிலை நாட்ட அனைவரும் அணி திரளுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.29



புத்தபிரான் புனித காலடி எடுத்து வைத்த இந்த பூமியில் போர் மோதல்கள் மற்றும் துயர்கள் அற்ற வகையில், அனைத்தின சமூகங்களுக்கும் சமமான உரிமைகள் மற்றும் நீதி நியாயம் என்பன கிடைக்கப் பெறுகின்ற நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நாம் அனைவரும்அணிதிரளுதல்வேண்டும். இவ்வாறுஎதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர்அனுப்பிவைத்தவாழ்த்துச்செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் உள்ளதாவது:

புத்தபெருமானின் வாழ்க்கைப் பயணத்தில்மிகமுக்கியத்துவமிக்கமூன்று நிகழ்வுகள் இடம்பெற்ற வெசாக் தினத்தை கொண்டாடும் பௌத்த சமய பக்தர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கக் கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எவரும்பிறப்பிலே உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ காணப் படுவதில்லை என்பதை உறுதிசெய்து, மனித வர்க்கத்தினர் அனைவரையும்சமமாக மதித்து, வாழவேண்டும்.

சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பிரிவினைகள் என்பவற்றை அகற்றி பாரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்குபுத்தபிரான்அவர்களால்முடிந்துள்ளது.

சமாதானம் மற்றும் ஒத்துழைப்புடன் கூடிய சகவாழ்வின் ஒளியின் ஊடாக இப்புனித வெசாக் தினத்தில் எமது தேசத்தை மெருகூட்டுவோம்.

உங்கள் அனைவருக்கும் புனித வெசாக் தின வாழ்த்துக்கள் உரித்தாகுக-என்றுள்ளது. (ற.ரி2)

# தமிழ்த் தின திறனாய்வுப் போட்டி

சாவகச்சேரி ஏப்.29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலானவலயநிலை தமிழ்த் தின திறனாய்வுப் போட்டிகள் இரு நாட்கள் இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம்மட்டுவில்சந்திரபுரஸ்கந்தவரோதயமகாவித்தியாலயத்தில் இசை, நாடகம், வில்லுப்பாட்டு இசை (தனி) குழுப்பாடல் ஆகியவை நடைபெற்றன.

நேற்றைய தினம் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில், பேச்சு, பாவோதல், இசையும்அசைவும், வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு ஆகிய போட்டிகளும்சாவகச்சேரிமகளிர்கல்லூரியில் நடனம், தனி, குழுப்போட்டிகளும்நடைபெற்றதெனவலயக்கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தெரிவித்தார்.

பாடசாலைகளில்நடத்தப்பட்டதமிழ்த் தினதிறனாய்வுப்போட்டிகளில்தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வலய நிலைப் போட்டிகளில் பங்குபற்றினர் எனவும் வலய நிலைப் போட்டிகளில்தெரிவுசெய்யப்படும்மாணவர்கள் மாகாண நிலைப் போட்டிகளில் பங்குபற்றுவர்எனவும்அவர்தெரிவித்தார். (ற.ரி2,9)

# குருதிக் கொடை நிகழ்வு

சாவகச்சேரி.ஏப்.29



சாலை விபத்தில் சாவடைந்த தோழனின் நினைவாக அவரது பள்ளித்தோழர்களால் குருதிக்கொடைவழங்கும் நிகழ்வு நேற்று சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிமண்டபத்தில் இடம்பெற்றது.

கடந்தடிசம்பர்28ஆம்திகதிமட்டுவில்பகுதியில் இடம்பெற்ற சாலை விபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவனான வரணி இயற்றாலையைச்சேர்ந்தகோணேஸ்வரன்சாருஜன் என்பவர் சாவடைந்திருந்தார்.

இவரதுநினைவாகஇவரதுபள்ளித்தோழர்கள் "உயிருக்கு உதிரம்" என்னும்குருதிக்கொடை நிகழ்வை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த டிசம்பரில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் ஒருவாரத்தில் விபத்தில் சாவடைந்தார் எனவும் இவருக்கு பரீட்சையில்ஒன்பதுபாடங்களிலும்அதிசிறப்பு சித்தி கிடைத்ததாகவும் குருதிக் கொடையை ஏற்பாடுசெய்தவர்கள்தெரிவித்தனர். (ற.ரி2,9)

வேலை வாய்ப்பு
கொழும்பு வெள்ளவத்தையில்
இயங்கும் சேவை நிறுவனத்துக்கு யாழ்,
கொழும்பு கனரக வாகனம்
செலுத்தக்கூடிய
வாகன சாரதிதேவை.
குறிப்பு: உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு
076 376 0022/ 076 690 8963
(ex. 145384) (13.17)

பணியாளர்கள் தேவையா???
உங்கள் விளம்பரச் செலவையும். நேர விரயத்தினையும் தவிர்த்துக் கொள்வது மட்டுமன்றி
நீங்கள் விரும்பும் தகைமையுடனும். திறமையுடனும் கூடிய அனுபவம் மிக்க (பயிற்சி அளிக்கப்பட்ட) பணியாளர்களை உடனே பெற்றுக்கொள்ள இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
(IN/6615)(11.17)
WINSTAR CONSULTANTS (Pvt) Ltd
45, Vembadi Street, Jaffna.
021 320 2789

# தொடருந்துடன் மோதி 8 மாடுகள் உயிரிழந்தன

வவுனியா, ஏப். 29

வவுனியாவில் தொடருந்துடன் மோதி 8 மாடுகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் சுமார் 30 நிமிடங்கள் தாமதமாகவே தொடருந்து பயணத்தைத் தொடர்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்து வவுனியா கொல்லர் புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போதே பிற்பகல் 3 அளவில் மாடுகளுடன் மோதுண்டது. விபத்தில் அதேபகுதியைச் சேர்ந்த ஒருவருடைய 8 மாடுகள் உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (4,110)

# தங்கம் கடத்திய நால்வர் கைது

கொழும்பு, ஏப்.29

89 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் நால்வர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மும்பை நோக்கிச் செல்ல முற்பட்ட வேளை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களுள் 3 பெண்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் காலி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# சிற்றூர்தி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.29

கொழும்புவெல்லவாய வீதியின் மாரகொல்லிய பிரதேசத்தில் சிற்றூர்தி கள் இரண்டு ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார் 6 பேர் காயமடைந்தனர். இந்த விபத்து நேற்று நடந்தது. காயமடைந்தர்வர்களில் 7 வயதான சிறுமி ஒருவரும் அடங்குகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற-ரி5)

## நிரந்தர நியமனம் வழங்காவிடில்

# ஒரே நாளில் விலகுவோம்

## தொடருந்துக் கடவை காப்பாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.29

நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையானால் அகில இலங்கை ரீதியில் பணியிலிருக்கும் தொடருந்துக்கடவை காப்பாளர்கள் ஒட்டுமொத்தமாக ஒரே நாளில் பணியிலிருந்து விலகுவோம்.

இவ்வாறு வடக்கு, கிழக்கு தொடருந்துக்கடவை காப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ஜே. றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"கடந்த ஐந்து ஆண்டு காலத்துக்கு மேலாக பொலிஸாரால் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஊழியர்களாக கடமையாற்றி வருகின்றோம். கடந்த காலத்தில் பலதரப்பட்ட அதிகாரிகளுடனும் திணைக்களங்களுடனும், அமைச்சுக்களுடனும் தொடருந்துக்கடவை காப்பாளர்களாகிய நாங்கள் எங்கள் பிரச்சினைகளை பல தடவை முன்வைத்த போதும் எங்கள் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. எனினும் நேரடியாக அரசதலைவரைச் சந்தித்து மகஜர் ஒன்று கையளித்திருந்தோம்.


அரசதலைவர் எங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தால் நாங்கள் மன வேதனைக்கு உள்ளாகியுள்ளோம்.

எங்களுக்குப் பதில் வழங்குமாறு அரசதலைவர் மற்றும் பொலிஸ் மா அதிபர், பிரதமர், முதலமைச்சர் ஆகியோருக்கு மனு ஒன்று அனுப்பியுள்ளோம்.

வடக்கு, கிழக்கு தொடருந்து காப்பாளர் சங்கம் மற்றும் அகில இலங்கை தொடருந்துக்கடவை காப்பாளர் சங்கம் ஆகியன இணைந்து எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய எங்கள் ஊழியர்களுடைய நிரந்தர நியமனம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்பதனை எமக்கு எழுத்து மூலம் அறியத்தராதவிடத்து நாடு தழுவிய ரீதியில் ஒட்டுமொத்த தொடருந்துக்கடவைக் காப்பாளர்களும் ஒரே நாளில் இந்தச்சேவையை விட்டு விலகுவதாக தீர்மானித்துள்ளோம்.

எங்களுடைய சேவையை இந்த அரசு மதிக்க வேண்டும். உயிரை பணயம் வைத்து சேவையாற்றி வரும் எமது ஊழியர்கள் நாள் ஒன்றுக்கு 250 ரூபாவுக்கு சேவையாற்றி வரும் நிலையில் எமது ஊழியர்களின் வாழ்வாதாரம் தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எமது ஊழியர்களின் நிரந்தர நியமனத்தை வழங்க அரசு முன்வரவேண்டும். - என்றார். (ற-ரி5)





வண்ணை சிறி காமாட்சி அம்மன் ஆலயத்தேர்திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அன்னை அருள் பெற்றனர். (ற)

# அளவெட்டியில் சிறிசக்கர பூசை

அளவெட்டி, ஏப்.29

அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் ஸ்ரீசக்கர பூசை இன்று பிற்பகல் 4மணிக்கு இடம்பெறும். சிறப்புப் பூசைகள், அபிசேகங்கள் இடம்பெற்று உள்வீதி வெளிவீதி உலா இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா சபை தெரிவித்துள்ளது. (36)

# மலேரியா பரவும் அபாயம் முல்லையில் அதி தீவிரம்

## தடுப்பு அதிகாரி எச்சரிக்கிறார்

முல்லைத்தீவு, ஏப். 29

முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியாக் காய்ச்சல் பரவும் சாத்தியக்கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன என்று மலேரியா தடுப்பு இயக்கத்தின் பொறுப்பதிகாரி மருத்துவர் வி. விஜிதரன் தெரிவித்தார். முல்லைத்தீவில் நேற்று அவர் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த எச்சரிக் கையை விடுத்தார். "இலங்கையில், மலேரிய நுளம்பு முற்றாக அழிக்கப்பட்டு விட்டா லும், அது முல்லைத்தீவு மாவட் டத்தில் பரவும் சாத்தியக்

>> 53

## புகலிடக்...

கணநாதன் மற்றும் கீத் குலசேகரம் ஆகியோரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஒரு ஈழத்தமிழர் தொடர்பான வழக்கிலேயே ஐரோப்பிய நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

அதாவது மனித உரிமைச் சட்ட விதியின் கீழ் ஐரோப்பாவில் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கும் ஒருவர் கடந்தகாலத்தில் அனுபவித்த சித்திரவதைகளின் விளைவாக தமது உடல் அல்லது உளவியல் சார்ந்த கடுமையான பாதிப்புகளை கொண்டிருந்து சொந்தநாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் சொந்த நாட்டில் கொலை அச்சுறுத்தல் போன்ற தீங்குகள் இல்லாவிடினும் போதிய சிகிச்சையின்றி மிகமோசமாக பாதிக்கப்பட நேரிடும் அல்லது தற்கொலை செய்துகொள்ள நேரும் எனக்கண்டால் சப்சிடரி ப்றொட்டக்சன் என்று அழைக்கப்படும் புகலிடம் வழங்க ஐரோப்பிய நீதிமன்றம் அனுமதித்துத் தீர்ப்பளித்துள்ளது. எனினும் அவரது சொந்த நாட்டில் அவ்வாறான மருத்துவ உதவி கிடைக்கப்பெறாது என்பதை ஆராய்ந்து உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதும் புகலிடம் வழங்குவதும் சம்பந்தப்பட்ட ஐரோப்பிய உறுப்புநாட்டின் நீதிமன்றங்களைச் சார்ந்தது என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பின்னணி

இந்த வழக்கின் விண்ணப்பதாரி தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினராக இருந்த காரணத்தால் இலங்கை பாதுகாப்பு படையினரால் முன்பு சித்திரவதைக்கு உட்பட்டிருந்த ஒரு ஈழத்தழிழராவார். இவர் 2005 இல் மாணவராக பிரிட்டனை வந்தடைந்தார். இலங்கையில் உயிர் ஆபத்துக் காரணமாக திரும்பிச்செல்ல முடியாத காரணத்தால் 2009 இல் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார். அவர் இலங்கையில் அனுபவித்த சித்திரவதையின் விளைவாக மன உளைச்சல் மற்றும் மனச்சோர்வுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆரம்பத்தில் புகலிடக்கோரிக்கை மறுக்கப்பட்டபோதிலும், மூத்த சட்ட ஆலோசகரும் வழக்குரைஞருமான அருண் கணநாதனின் கடும் உழைப்பால் அவரது வழக்கை உதாரண வழக்காகத் தெரிவுசெய்து, இலங்கைக்கான அரசியல் தஞ்ச வழிகாட்டிஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது.

மேல்முறையீடுகளால் வழக்கு பிரிட்டன் உயர்நீதிமன்றம் வரை சென்றது. அவர் போன்று, சித்திரவதை காரணமாக மனநிலை பாதிப்பு அடைந்தவர்களுக்கு புகலிடம் வழங்குவதற்காக புதிய நடைமுறை ஒன்றை பிரிட்டன் அரசு உருவாக்க வேண்டும் என்ற வாதத்தை அவரது சட்டத்தரணிகள் உச்ச நீதிமன்றில முன்வைத்தனர். இதனைத்தொடர்ந்து இந்த வழக்கை விசாரித்த பிரிட்டன் உயர்நீதிமன்றம், மூன்றாம் உலகநாட்டைச்சேர்ந்த பிரஜைகள் அல்லது நாடற்றவர்களுக்கான குறைந்தபட்ச நியமங்களை அளிக்கும் ஐரோப்பாவின் 2004 ஆம் ஆண்டு பணிப்புகளின் அடங்கல்கள் குறித்து விதிக்குமாறு லக்ஸம்பேர்க் இனைத் தளமாகக் கொண்ட ஐரோப்பிய நீதிமன்றிடம் கோரியிருந்தது. இந்த வழக்கில் அவர் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பினால் அங்கு போதிய சிசிச்சையின்மையால் அவரது உடல்நலத்துக்குத் தீங்கு நிகழுமா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டியது பிரிட்டன் நீதியரசரே எனவும் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டின் ஐரோப்பிய பணிப்புகளின்படி, புகலிடம், அகதி அந்தஸ்து பெற தகுதி பெற்றிருக்காத மூன்றாம் உலகநாட்டின் ஒருவர் அல்லது நாடற்ற ஒருவருக்கு பொருந்துமெனினும் அவர் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அங்கு தூக்குத் தண்டனை அல்லது உயிர்பறிப்பு, சித்திரவதை அல்லது கடும் அச்சுறுத்தல் போன்ற மிகக் கடுமையான தீங்கை அனுபவிக்கும் வகையிலான கடும் ஆபத்துக்களுக்கு நிரந்தரமாக முகம் கொடுக்க நேரிடும் என்ற நிலையில் உள்ளவராக மட்டுமே இருக்க வேண்டும் என்றிருந்தது.

### சட்டத்தரணி கருத்து

இந்த வழக்கின் வெற்றிக்காக கடுமையாக உழைத்த சட்டத்தரணிகள் ஒருவரான கீத் குலசேகரம் தெரிவித்ததாவது:

வதை முகாம்களில் சித்திரவதைகளுக்கு உள்ளாகி தப்பிப்பிழைத்த தமிழர்கள் மேற்கு நாடுகளில் அகதி தஞ்சம் கோரி வருகின்றனர். பல்வேறு காரணங்களுக்காக பலரின் கோரிக்கைகள் நிராகரிக்கபட்ட நிலையில் மீண்டும் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படும் நிலையில் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களில் பலர் கடுமையான உடல் மற்றும் உள நல பாதிப்புக்களை அனுபவித்து வருகிறார்கள். ஐரோப்பிய நாடுகளில் மறைந்து வாழும் நிராகரிக்கப்பட்ட அகதிக் கோரிக்கையாளர்கள், இந்த அடிப்படையில் மீண்டும் புதிய விண்ணப்பங்களை மேற்கொண்டு, இந்த வகையிலான புகலிடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த தீர்ப்பு புதிய பாதையை திறந்து விட்டுள்ளது" என்று தெரிவித்தார். (4,37)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 3024 திகதி: 28.04.2018
சனிக்கிழமை
பச்சை
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து
07 36 44 75 X
போனஸ் இலக்கம்
08
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
40,330,540/-
Web: www.dlb.lk

## காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு 5 1/2 காணி நிலாவரை புத்தூர் வீதியில் உடனடியாகவிற்பனைக்கு உள்ளது. கூடிய விலை கோருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**076 883 8116/ 077 625 8246**

## மனேஜர் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் வாய்ந்த GUEST HOUSE இற்கு அனுபவம் வாய்ந்த கணினி அறிவுடைய மும்மொழி ஆற்றலுடைய மனேஜர் தேவை. ஆண் / பெண் இருபாலாரும்.

**தொடர்பு 076 429 3040** (CS 16183)(10)






## ஆடம்பர வசதியுடன் புதிய வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகரில் இருந்து 4km, தூரத்தில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் மற்றும் ஏனைய சுப நிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்குவதற்குரிய சகல வசதிகளுடன் உண்டு. A/C, Non A/C, தளபாட வசதிகள், சமையல் பாத்திரங்கள், எலற்றோனிக் உபகரணங்கள் என அனைத்து வசதிகளுடன் உண்டு.

**(30 பேர் வரை தங்கக்கூடிய வசதி)**

**077 110 4770** (IN/6613)(11,17)






# கிராஞ்சிக் கடலில் இந்திய ரோலர்கள்

*70 மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்பு என பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஏப்.29

பூநகரிப்பிரதேசத்துக்குட்பட்ட கடலில் இந்திய ரோலர்களைநிறுத்திவைத்துள்ளமையால் அந்தப்பகுதியில் தொழில்செய்யமுடியாது 70க்கும் மேற்பட்ட குடும்பங்கள்பாதிக்கப்பட்டுள்ளன என்று பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மீனவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. கிளிநொச்சி பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்பிரதேச செயலக மணாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதன் தலைமையில் இடம்பெற்றுது. இதன் போது மீனவர்களால்குறித்தவிடயம்தொடர்பில்சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தொழில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் மீட்கப்பட்ட இந்திய ரோலர் படகுகள், பூநகரி கிராஞ்சிக் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படகுகள் நீதிமன்றங்களின் உத்தரவின் பேரிலேயே குறித்த இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் 70 மீனவ குடும்பங்கள் வரை தொழில் புரிவதற்கு பெரும் இடர்பாடுகளைச் சந்தித்துள்ளனர்.

எனவே அந்த ரோலர்கள் வேறு இடத்துக்குமாற்றப்படவேண்டும். அவ்வாறு மாற்றப்படும் வரை பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கவேண்டும் என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கோரிக்கையைஎழுத்துவடிவில் தருமாறும், ரோலர்களை நீதிமன்றின் அனுமதியுடன்பொருத்தமான பகுதிக்கு மாற்றுவதற்கு பிரதேச செயலாளர், கடற்படையினர்ஊடாகநடவடிக்கைமேற்கொள்ளுமாறும் தீர்மானம் எட்டப்பட்டது. (21,6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### சுப்பிரமணியம் ஜெயக்குமாரன் (ஐயா)

(மகாமாரி லைற் உரிமையாளர்)

கடந்த 30.03.2018 வெள்ளிக்கிழமை இறைபதமெய்திய எமது அன்புத் தந்தை அமரர் சுப்பிரமணியம் ஜெயக்குமாரன் (ஐயா) அவர்களின் வீட்டுக்கிரியை நிகழ்வுகள் இன்று (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, மதிய போசன நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (30.04.2018) திங்கட்கிழமை சுன்னாகம், வரியப்புலம் மகாமாரி அம்பாள் ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அத்துடன் எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும், துண்டுப்பிரசுரம், பதாகைகள், மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

குடும்பத்தினர்.

வரியப்புலம், சுன்னாகம். தொ.பே: 0770 690 266

(CS16165)(10)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### தியாகராஜா சசிக்குமார்

தோற்றம் 25.05.1976

மறைவு 03.05.2015

திதி: சதுர்த்தசி (29.04.2018)

மூன்றாண்டுகள் சென்றாலும் நாளாக நாளாக தீராது
உங்கள் பிரிவின் வலி கால்நூற்றாண்டு கடந்தாலும் உங்கள்
கருணைமுகம் காணாது அடங்காது நாம் கதறி அழும் ஒலி
வானுறையும் தெய்வ சந்நிதியில் ஆன்ம ஈடேற்றம் பெற

உங்கள் பிரிவினாலும் துயரத்தாலும் வாடும்
பெற்றோர்கள், சகோதரர்கள்,
அப்பா (தியாகராஜா), அம்மா புஸ்பராணி,
தம்பி: (மதனமோகன், பிரதீபன், ஜெயரூபன்),
தங்கை: சுஜந்தா, சியமளா,
மச்சாள் - சுதர்சினி, துளசி
மச்சான் - கரன், யசிகரன்
பெரியப்பா - டிசாந், தனுஷியா
மருமகன் - அக்ஷயன்

முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(AJA1 16161-13.17)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி இராசையா



மீசாலைவடக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொழும்பு தெஹிவளை எபநேசர் பிளேசை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இராசையா 26.04.2018 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசையாவின் (இளைப்பாறிய M.L.T)அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம் புவனேஸ்வரி மற்றும் மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கபிலன் (UK), தாரகா (ஆஸ்திரேலியா), ரேணுகா (UK), றாதிகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனராணி, பாபு, சிவதர்சன், துரைராஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிருத்வி, அர்விந்த், தான்யா, ஷிபாணி, சேயோன் அக்ஷயன், அனுஷயன், திவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2018) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்

தகவல்: குடும்பத்தினர்.

(IN/6616)(11,17)

**077 435 0120**

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம் கந்தசாமி

(இளைப்பாறிய அதிபர், விவேகானந்த வித்தியாலயம் - மானிப்பாய்)



சண்டிலிப்பாய், கல்வளை கொட்டாவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் கந்தசாமி 19.04.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - நன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி துரைச்சாமி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அமரகுலேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி,சிவநேசன், விசாலாட்டி, பரமேஸ்வரி மற்றும் வன்னியசிங்கம்(சிறாப்பர்) ஆகியோரின் சகோதரனும் சத்தியா, சீலதேவன், ஜெயசீலன், இரவீந்திரன், கௌரி, தயாபரி, பவானி, பத்மாசினி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் சுசீலா, கண்ணன், சிவகுமார், சாந்தகுமார், இராமகிருஷ்ணா ஆகியோரின் மாமனாரும் கஜேந்தினி - கோபிகிருஷ்ணா, வைஸ்ணவி - காவிந்தர் சிங், அஸ்வினி, சாயிவிக்னா, கவிதாகுமரன், அரன், அபிராமி, பிரணவி, விஸ்ணு ஆகியோரின் அன்புப் பேரனும் அபிஷேக் சாயி, கிருஷான், சியானா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.04.2018 கனடாவில் நடைபெற்று தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஜெயசீலன் - 0044 208 6689 388 தகவல்: குடும்பத்தினர்.**
**ரவீந்திரன் - 0416 895 7284/ சிவகுமார் - 0019054727863**

### திருமதி வேதநாயகி பத்மநாதன்



மீசாலை மேற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகி பத்மநாதன் நேற்று (28.04.2018) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், கோடீஸ்வரநாதன் (முன்னாள் பொது முகாமையாளர், தென்மராட்சி பிரதேச செயலகம்), காலஞ்சென்ற சிவலோகநாயகி மற்றும் தெய்வநாயகி (யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), ஜெகதீஸ்வரநாதன், அகிலநாயகி (யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் , காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, பர்வதவர்த்தினி, தையல்நாயகி, கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசமூர்த்தியின் மைத்துனியும், ஜெயந்தா, பரமேஸ்வரன், கலாநிதி, திருச்செல்வன் ஆகியோரின் மாமியாரும், சத்தியகலா, சத்தியப்பிரியா, சத்தியசுரேஸ், ஜோன்சனா, நிருஜன், கபிலன், அஜித்தா, அஸ்வின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை. தகவல்: குடும்பத்தினர்.

(IN/6617)(11,17)

**077 711 7750**

## ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)

**தேவை: பணிநிலை வேலை-** உதவி சிவாச்சாரியார்கள் (Religious Workers)

**தகைமை:** விண்ணப்பதாரர் உதவி சிவாச்சாரியார் பட்டம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 6 மாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**கடமைகள்:** ஆலயத்தில் நடைபெறும் பூஜை. விழாக்களுக்கு பிரதம சிவச்சாரியாருக்கு உதவிசெய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

**வேதனம்:** மாதம் £1222.00+ ஓய்வூதியம். வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை வழங்கப்படும்.

**பதவிக் காலம் :** 2 வருடங்கள்

ஆலயம் இலவச தங்குமிடமும் உணவும் வழங்கும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 25.05.2018** சுய விவரக்கோவையுடன் தபால் மூலம் அல்லது email மூலம் விண்ணப்பிக்கவும்

(AC 222)(10)

அனுப்ப வேண்டிய விலாசம்;

**General Secretary**
**Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)**
**Unit B, Rear of 59 Station Road, Harrow, Middlesex HA1 2TY**
**Email: sithivinayagarharrow@gmail.com**

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி அம்பலவாணர்



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி அம்பலவாணர் (24.04.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றஅம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை - தவமணி தம்பதியரின் அன்புமகளும் பகீரதி காலஞ்சென்ற நித்தியானந்தராஜா மற்றும் குலமணி ஆகியோரின் அன்புச்சகோதரியும் கலாநிதி நந்தகுமார், (USA) கலாநிதி மோகனகுமார் ( USA), சுஜேந்திரா (MSC-கொலண்ட்), மயிலநாதன் (கனடா), ஜெயகலைவாணி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மங்களா (USA), Dr. மீரா (USA), பிரியதர்ஷினி (கொலண்ட்), அமிர்தினி (கனடா) நகுலேச்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஹரி,நிசாந்தன், நிசித்தா, சஜனுகா, சஞ்சய், அபிஷா, தர்சனா, சுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் அராலி வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/)(11)

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 2051505,077 758 7755**

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் புடைவை நிலையத்திற்கு விற்பனையாளர்கள் ஆண்/பெண் இருபாலாரும் தேவை. அனுபவமுள்ளவர்கள் / பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**T.P: 076 601 9259**

(CS 16188)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி
### விமலாவதி பரமசாமி

மயிலியதனை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கேரதீவு வீதி, நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விமலாவதி பரமசாமி நேற்று (28.04.2018) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமசாமியின் அன்பு மனைவியும், சுசிலாவதி, புஸ்ப்பலீலாவதி, காலஞ்சென்றவர்களான சந்திராவதி, இந்திராவதி, சிவபூலோகசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனகுமார், சத்தியநாதன், குமாரவேலு, அமிர்தலிங்கம், சசிகலா, குணம், சரஸ்வதி, இரத்தினபூபதி, காலஞ்சென்ற யோககுகதாசன் ஆகியோரின் மைத்துனியும், கிறிஸ்கீசன், வாகீசன், லோகினி ஆகியோரின் பெரியம்மாவும், நாகதீபனின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேரதீவு வீதி,**
**நாவற்குழி.** (CS 16197)(10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம் உடைய கடை உரிமையாளருக்கு 4இல் சூரியன் செவ்வாய் உள்ளது. பெற்றோர் சூரியன், செவ்வாய் உள்ள மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

**Viber: 071 8475 629**

(CS16184)(10)

## வீடு தேவை

பிரதான வீதியில் அல்லது அண்மித்த இடத்தில் யாழ். நகரை அண்டி 3 km உட்பட்டதாக இந்திய உணவகம் நடத்த கூடிய வசதி உள்ள வீடு தேவை.

**0777 352165**

(CS16181)(10)

## விற்பனைக்கு

இரும்புக்கடைக்கான பொருட்களை அடுக்கும் றைக் மற்றும் கவுண்டர் ஆகியன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **077 2528 957**

(CS16185)(10)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதி, இலுப்பையடி சந்தியில் ஒன்றரைப் பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு முழுமையாகவோ பகுதியாகவோ வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தகுந்தது.

**077 942 5822/076 600 9553**

## கார் விற்பனைக்கு

TOYOTA VITZ SAFETY NEW FACE 2018 Brandnew Colour Dark Blue, Pus stand, DVD, Back Camera

**Contact- 077 248 7500**
**Viber: 077 248 7500**

(CS16194)(10)

## லொறி விற்பனைக்கு உண்டு

TATA 14 1/2' NPLK 3xxx அலுமினிய Body 75,000 K.M ஓடிய நல்ல நிலையிலுள்ள வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு **075 943 1018**

(29/4, 30/4 மட்டுமே பார்வையிடப்படும்)

(CS16177)(10)

## பணிப்பெண் தேவை

ஐந்து குடும்ப அங்கத்தவர்களை கொண்ட குடும்பத்தை கவனிப்பதற்கு குடும்ப பாங்கான பெண் ஒருவர் தேவை.

தொடர்பு:- **077 025 0339**

(CS16193)(10)

## மரண அறிவித்தல்



### தியாகராசா மகேஸ்வரி

அளவெட்டி வடக்கை (கிளாங்கொடை) பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா மகேஸ்வரி 27.04.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா (இளைப்பாறிய விதானை) - கனகம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், சிவரூபி (ஓய்வுநிலை அதிபர்), சிவராணி (ஜேர்மனி), விக்னேஸ்வரன் (லண்டன்), சிவமணி (கனடா), சிவமோகனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் சிவநேசன், லதா, பிறேமலிங்கம், யோதிவடிவேல் ஆகியோரின் அன்பு மாமியும், ஆதவன் (ஆசிரியர் - யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை, பிரதேச சபை உறுப்பினர் - வலி வடக்கு), சிவசாம்பவி (பொது முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), கௌதமி, சுயிதா, ப்ரணவ் (ஜேர்மன்), கயானன், ஆர்த்திகா (லண்டன்), நிரோஜன், நீரஜா, நிவேதன் (கனடா), ஜெய்சன், ஜோத்ஷனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிருஸ்டிகன், அட்சரன், செயின் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (01.05.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அளவெட்டி மத்தி,**
**அளவெட்டி.** (in 6619)(13,17)

**தகவல்:**
**பிள்ளைகள், மருக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

கலாபூஷனம் அண்ணாவியார்

### அன்ரனி பாலதாஸ்

மண்ணில் 26 . 04 . 1940



விண்ணில் 26 . 04 . 2018

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்ரனி பாலதாஸ் 26.04.2018 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி - சிசிலியா தம்பதியரின் அன்பு மகனும், செபஸ்ரியம்மா (சின்னமணி) வின் அன்புக் கணவரும், செல்லன், அருட்சகோதரி பவுலா அன்ரனி தி.க (லீமா) மற்றும் காலஞ்சென்றவர்களான பொன்னுமணி, நம்மணிக்கம், மாணிக்கத்தம்பி, பாக்கியம், அன்னமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பீற்றர், ஜோதினி, றாயு, குமார், அருட்தந்தை பிறையன், பிறிற்றோ ஆகியோரின் நேசமிகு தந்தையும் விமலா, றெஜிபோல்ரன் (குமார்), பிரியா, சிறோமி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 02.05.2018 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**797, கடற்கரை வீதி,**
**பாஷையூர், யாழ்ப்பாணம்.** (CS 16176)(10)

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 230 9940**

## துயிலுமில்லங்களை அரச நிர்வாக அலகுக்குள் கொண்டுவரக்கூடாது

*அரசியல் சூழ்நிலைகள் மாறினால் துயிலுமில்லத்தின் நிலை என்னவாகும்? என்று எச்சரிக்கிறார் உறுப்பினர் ரஜனிகாந்*

கிளிநொச்சி, ஏப். 29

தமிழ் மக்களின் உணர்வுகளோடு ஒன்றித்துள்ளமாவீரர்துயிலுமில்லங்களை அரச நிர்வாக அலகுக்குள் கொண்டுவரும் பிரேரணை சொந்த காசில் சூனியம் வைப்பதைப் போன்றதாகும் என கரைச்சிப் பிரதேச சபையின்உறுப்பினர்த.ரஜனிகாந் தெரிவித்தார்.

கரைச்சிப் பிரதேச சபையின் கன்னி அமர்வில் மாவீரர் துயிலுமில்லங்களை பிரதேச சபையின் ஆளுகைக்குள்கொண்டுவரவேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட பிரேரணைதொடர்பில்கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

துயிலுமில்லங்கள்துயிலுமில்லங்களாகவேஇருக்க வேண்டும். அது தாவரவியல் பூங்கா என்றோ இடுகாடு> சுடுகாடு என்றோ மாற்றம் பெறக் கூடாது. இதனைதமிழ்மக்கள்ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கடந்த வருடம் தாவரவியல் பூங்கா என்று பிரதேச சபையினால் நடப்பட்ட பெயர்ப் பலகையைக் கூட சில மணித்தியாலயங்களில் பொது மக்கள் பிடுங்கி எறிந்தனர். இந்த நிலைமையில் துயிலுமில்லத்தை தற்காலிக அரசியல்இலாபங்களுக்காகப் பிரதேசசபைகளுக்குகீழ் கொண்டுவருவது என்பதுமிகப்பெரும்ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

எனவே இதனை உணர்ந்து தூரநோக்கோடு செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். முல்லைத்தீவிலும், வவுனியாவிலும் சில பிரதேச சபைகளில் தேசிய கட்சிகள் ஆட்சியமைத்தது போன்று என்றோ ஒரு நாள் அரசியல்சூழ்நிலைகள்மாறிகரைச்சிபிரதேச சபையின் ஆட்சியதிகாரமும் தேசியக் கட்சிகளின் கைகளுக்குச் சென்றால் அந்தச்சந்தர்ப்பத்தில்துயிலுமில்லத்தின்நிலைஎன்னவாகும்? அவ்வாறான சூழலில்சபையின்தவிசாளர் தன்னுடைய கட்சியின் தலைவரானஅரச தலைவர், தலைமை அமைச்சர் என்ன சொல்கின்றனரோ அதனையே கேட்டுச்செயற்படுவார்.

கட்சியின் தலைமை கடும்போக்குநிலைப்பாடு கொண்டவராக இருந்தால் அதனையே இங்கு தவிசாளராக இருப்பவரும் வெளிப்படுத்துவார். இதுசொந்தகாசில்சூனியம் வைத்தது போன்றதாகிவிடும். எனவே துயிலுமில்லம் விடயத்தில் அதனை எந்த அரச நிர்வாக அலுகுக்குள்ளும் கொண்டுவருகின்றஎந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது பொது அமைப்பொன்றின் பொறுப்பின்கீழ்இருக்கின்றவாறுநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார். (21,35)

## மகாவலி திட்டம் தொடர்பிலான அரசின் கூற்று வெறும் புலுடா

*யாழில் இருந்து இந்தியாவுக்கும் நீரைக் கொண்டு செல்வார்கள் என்று அங்கலாய்த்தார் வடக்கு விவசாய அமைச்சர்*

**யாழ்ப்பாணம், ஏப். 29**

**இந்தியாவில்வறட்சி ஏற்பட்டால்யாழ்ப்பாணத்தில்இருந்து அங்கு தண்ணீர் கொண்டுபோவோம் என்றும் கூறும் இநந்த அரசு. எல்லாமே பேச்சளவில் இருக்குமே அல்லாது எமக்கு மகாவலி நீர் கிடைக்கப்போவதேஇல்லை. இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்தார்.**

வடமாகாண விவசாய அமைச்சின் "ஒன்றாய் இணைவோம் சிறுபோகம் வெல்வோம்" எனும் சிறப்பு வேலைத்திட்டம்நேற்றுமுன்தினம்கிளிநொச்சியில்அறிமுகப்படுத்தப்பட்டது. காலை10 மணியளவில் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் குறிதத் நிகழ்வு இடம் பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் கலந்து கொண்டார். குறித்த பிரதேசத்தில் தனியார் ஒருவரால் மேற்கொள்ளப்படும் விவசாயமுறைகளைஅடிப்படையாகக்கொண்டுகுறைந்தநீர் முகாமைத்துவத்தைப் பயன்படுத்திவிவசாயச்செய்கையை மேற்கொள்வது தொடர்பில் விவசாயிகள் மற்றம் மாணவர்களுக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

நீரைக் குறைவாகப் பயன்படுத்தல் மற்றும் உரங்களை முறையாகவும், வீண்போகாதவாறும் எவ்வாறு பயன்படுத்திசிறந்தவிளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும், வறட்சியானகாலப் பகுதியில்விவசாயங்களைக் கைவிடாது இவ்வாறான முறைகளைப் பயன்படுத்தி விவசாயத்தை முன்னெடுத்துச் செல்லுதல், இயற்கை விவசாயமுறைகளைப்பின்பற்றுதல் உள்ளிட்ட பல்வேறான விளக்கங்கள் இதன் போது விவசாய ஆராச்சியாளர்களால் விவசாயிகள் மற்றும், மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதுஅமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும்தெரிவித்த அவர்;

போரால் பாதிக்கப்பட்டுள்ள எமதுவிவசாயிகள்பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில்எமது விவசாயிகளுக்கு காலநிலையும் பல்வேறு சவால்களைக்கொடுத்துவருகின்றது. முன்னயகாலத்தில் எமது மூதாதையர்கள் கால நிலை மாற்றங்களை நன்று தெளிவாக அறிந்திருந்தனர்.

ஆனால்தற்போதுஅவ்வாறு கால மாற்றங்களை அறிய முடியாதுள்ளது. கடந்தகாலத்தில்ரணில்விக்ரமசிங்கமகாவலி அமைச்சராக இருந்த போது பல்வேறு வாக்குறுதிகளை எமக்கு வழங்கியிருந்தார். இன்று 2 தசாப்தங்கள் ஆகியும் நாம் மகாவலி நீரையே காணவில்லை.

நாம் மகாவலி நீரை நம்பி மூன்றுபோகம்செய்யலாம், விவசாயத்தில்முன்னேறாம் எனப் பல கனவுகளைக் கண்டோம். இப்போதும் மகாவலித் திட்டம் மாங்குளம் பகுதி வரைக்கும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு சென்று எந்தவொரு விவசாயியையும் கண்டு மாகாவலி நீரை எப்போதாவதுபயன்படுத்திவிவசாயம் செய்தீர்களாஎன்றுகேட்டால் இல்லை என்றுதான் சொல்வார்கள்.

குறிதத் திட்டத்தில் மகாவலி நீரை கனகராஜன் ஆறு மூலம் இரணைமடுக் குளத்தில் வீழ்த்தி அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் கொண்டு செல்லல், விவசாயத்துக்குநீர்வழங்கல்எனப் பல்வேறு உறுதிமொழிகளும், கருத்துக்களும் வழங்கப்பட்டன.

அது மாத்திரமல்ல இந்தியாவில் வறட்சி ஏற்பட்டால் யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு நீரைக் கொண்டு செல்வோம் என்றும்கூறுவார்கள். எல்லாமே பேச்சளவில்இருக்குமேஅல்லாது எமக்கு மகாவலி நீர் கிடைக்ப் போவதேயில்லை அது எமக்குத் தேவையும் இல்லை.

நாம் எமது மாகாணத்தை இருக்கின்ற வளங்களைக் கொண்டு சிறாப்பாக வளப்படுத்துவோம்என்றார். (21)

## வருடாந்த பொதுக்கூட்டம்

கைதடிஏப்29

கைதடிமக்கள்நலன் பேணும்நட்புறவுக் கழகத்தின் வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம் கைதடிதெற்குசனசமூக நிலையக் கேட்போர் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு தலைவர் லயன் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது வறிய மாணவர்களின் கல்வி விடயம், முதியோர்கள் மதிப்பளிப்பு உட்பட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதுடன் அன்றைய தினம்புதிய நிர்வாகசபைத்தெரிவும் இடம்பெற இருப்பதனால் கழக அங்கத்தவர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (288)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப் 29

வடமாகாண தொண்டராசிரியர் சங்கத்தினூடாக தற்போது நடந்து முடிந்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாத அனைத்துத்தொண்டராசிரியர்களிற்குமான கலந்துரையாடல் கிளிநொச்சி எடிசன் கல்வி நிலையத்தில் நாளை திங்கற்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

*வடக்கு மாகாணம்*

## கல்வியில் முன்பிருந்த உயர்நிலையை மீண்டும் பெற முயற்சிக்கவேண்டும்!

*வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு*





அச்சுவேலி, ஏப். 29

கல்வியில் தமிழ் மாணவர்கள் பெற்றிருந்த உயர்நிலையை மீண்டும் பெறுவதற்கு ஆசிரியர்கள், பெற்றோர் சமூகம் ஒருமித்த வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். 9ஆவது இடத்தில் இருந்து வரும் வடக்கு மாகாணத்தின்கல்விப்பெறுபேறுகள்எதிர்காலத்தில்மாற்றமடையவேண்டும். இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன்.

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் "புத்தாண்டு விழா - 2018" அச்சுவேலி மத்திய கல்லூரியில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

இந்து, பௌத்த, கிறீஸ்தவ, இஸ்லாம்மத குருமாரின் ஆசிவழங்கலுடன் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரிநா.சிவநேசன்தலைமையில் புத்தாண்டு விழா நிகழ்வுகள் நடைபெற்றன.

விழாவில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதேமேற்படிதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் இனம் திட்டமிட்ட வகையில்தாழ்த்தப்பட்டுஅடிமைப்படுத்தப்பட்ட நிலையில் நடத்தப்படுகின்றது.

இந்த நிலை எமது பிரதேசத்தில் சமகாலத்தில்நிகழ்வதைகாணும் போது கவலைமேலிடுகின்றது.

எமது இனம் கல்வியால் உயர் நிலைபெற்றது. அந்தநிலைமாறுபட்டு மாகாண மட்டத்தில் இன்று எமதுமாகாணம்9வதுநிலையில் உள்ளது.

இதில் மாற்றம் ஏற்பட வேண்டும். போரால், இராணுவ நடவடிக்கையால் பாதிப்புகளை இழப்புகளை எதிர்கொண்டுள்ளது. எமதுஇனம் மீண்டும்மேல்நிலைபெறவேண்டும்.

சகலபதவிநிலைகளிலும்30வீதத்துக்கு குறையாமல் இருந்து வந்த தமிழர்களின் நிலை தற்பொழுது 4வீதத்துக்கு குறைந்துள்ளது. எமது பாடசாலைகளில் சமகாலத்தில் வளவசதிகள் ஆசிரியர் எண்ணிக்கை அதிகரித்த நிலை இருக்கின்ற போதிலும் கல்வி.அடைவு மட்டம் மிகக் குறைந்த நிலையிலேயே உள்ளது.

இந்த விடயத்தில் காணப்படும் இடைவெளி இல்லாமல் செய்யப்படவேண்டும் - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம்,

'மேலைத்தேச கலாசார உள்வளங்களால்எமதுபாரம்பரியத்தை இழந்து வருகின்றோம். இந்த நிலை எமது சுயத்தை இல்லாமல் செய்துவிடும். எமது சுய கலை கலாசாரங்களைச்சிதைவடையாமல் பாதுகாக்க வேண்டும்.

எமது இனத்தின் கொண்டாட்டங்கள், விழாக்கள் ஒவ்வொன்றும் சமூக மேம்பாட்டை உடல், உள நலங்களை மேம்படுத்தும்வகையில் இருந்து வந்தன.

ஒவ்வொரு பண்டிகைக்குமென சிறப்பான விளையாட்டுக்கள் உள்ளன.

போர்த்தேங்காய், கிட்டி அடித்தல், சடுகுடு எனப் பல்வேறு விதமான விளையாட்டுக்கள் முன்பு விளையாடப்பட்டன. அவற்றை தற்பொழுது அனுசரிப்பது இல்லை. அது தொடர்பாக இளையதலைமுறையினருக்குத் தெரியாது. மீண்டும் எமது பாரம்பரிய விளையாட்டு மீட்சிபெறவேண்டும்.' எனக்கூறினார். (எ-11)

போருக்கு முழு ஆதரவையும் வழங்கிய

## ஜே.வி.பியின் யாழ்ப்பாண மே தின கூட்டத்தில் உள்நோக்கம் இருக்கிறது

*சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவிப்பு*

வவுனியா, ஏப்.29

போருக்கு முழு ஆதரவையும் வழங்கிய, இனவாதத்தைப் பேசும் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியினர் யாழ்ப்பாணத்தில் மே தினத்தை நடத்துவது என்பது தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான உள்நோக்கமேஎன்று நாடாளுமன்றஉறுப்பினர்சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அத்தோடு மே தினத்தை மாறியமைத்திருப்பதானது இலங்கைஅரசின்பௌத்த மேலாதிக்கச் சிந்தனையையே எடுத்துக் காட்டுகிறதுஎன்றும்அவர்தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆண்டு தோறும் மே முதலாம் திகதி நடைபெறும் தொழிலாளர் தினத்தை இலங்கையிலேயேபௌத்தமத தினத்தை அனுஷ்டிப்பதற்காகமாற்றப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் குருதி சிந்தித் தமது உரிமைக்குப் போராடிய தினத்தைஒருஇனத்துக்காகவோ, மதத்துக்காகவோ மொழிக்காகவோ ,இல்லாமல் பன்னாட்டு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வந்த தினத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகவே உள்ளது. அத்துடன் எமது நாட்டிலே இருக்கும் விவசாயிகள், மீனவர்கள் தமது தொழில்களைச் சரியானமுறையில்செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது. போருக்குப் பின்னர் கூடப் பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றனர் ,தோட்டத் தொழிலாளர்களின் நிலைமையும்அதுவே. அதனையும் தாண்டி 30 வருடமாகப் புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைதீர்க்கப்படாமல்இருக்கிறது. பலநாள்களாகக்காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள்வீதிகளிலே போராடிக்கொண்டிருக்கிறார்கள், சிறைகளில் இளைஞர்கள் விடுதலை இல்லாமல்இருக்கிறார்கள், காணி விடுவிப்புக்காகப் போராடுகிறார்கள். அவற்றைத்தீர்ப்பதற்குரிய விடயங்களை அரசு செய்த பாடில்லை. இன்றுஒட்டுமொத்தத்தமிழ் மக்களும் நிர்க்கதியற்று இருக்கும் நிலைமையே தோன்றியுள்ளது. பொதுவாக தென்னிலங்கை அரசியல் கட்சிகள் போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதில் மிகவும் முனைப்பாக இருக்கிறார்கள். ஐக்கிய தேசியக் கட்சி , சுதந்திரக் கட்சி , மக்கள்விடுதலை முன்னணி போன்றன தமிழ்மக்களின்உரிமைக்காகக்குரல்கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை போருக்கு முழு ஆதரவு வழங்கியதுடன் தமிழ்மக்களின்உரிமைசார்ந்தவிடயங்கள்

அவர்களுக்கானஅதிகாரம் போன்றவற்றில் இனவாதத்தைப்பேசும்மக்கள்விடுதலை முன்னணி யாழில் மேதினத்தை ஏற்பாடுசெய்திருப்பானதானது தாங்கள் ஒரு இனவாதமற்ற கட்சி தமிழ்மக்களோடுதாங்கள் இருக்கிறோம்என்று காட்டிகொள்வதன்ஊடாகத்தமிழ் மக்களின்ஆதரவைப்பெற்றுக்கொள்ளும் உள் நோக்கத்துடன் தான் யாழ்ப்பாணத்தில் இந்த தொழிலாளர் தினத்தை அனுஷ்டிப்பதாகக்கருதுகிறோம்-என்றார். (21,110)

## தொழிலாளர் அமைப்புகளின் மேதினம்

யாழ்ப்பாணம்,ஏப்29

யாழ்ப்பாணம் பன்னாட்டு மார்க்சிய குழுவின் மே தினம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை டி.எம்.ஐ. தனியார் கல்வி நிறுவனத்தில் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) மாலை 4 மணிக்குத் தலைவர் சொ. சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## யாழில் தொழிலாளர் தினத்தை மே1இல் கடைப்பிடிக்க அழைப்பு

*யாழ். தனியார் ஊழியர் சங்கம், பொது அமைப்புகள் விடுக்கின்றன*

யாழ்ப்பாணம், ஏப்.29

உலகத்தொழிலாளர்தினமான மேமுதலாம்திகதிமாபெரும் மேதின நிகழ்வுகளை நடத்த யாழ்ப்பாணம், மாவட்ட தனியார்ஊழியர்சங்கமும்பொது அமைப்புக்களும்இணைந்து தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும் மே 7ம் திகதியே மே தினம் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ள நிலையில், யாழ்ப்பாண மாவட்ட தனியார் சங்கமும் பொது அமைப்புக்களும் இணைந்து முதலாம் திகதி மாபெரும் மேதின பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது. அன்றையதினம் மாலை 3மணியளவில் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலிலிருந்து கிட்டுப்பூங்கா வரைபேரணிஇடம்பெற்றுஇறுதிப்பொதுக்கூட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தநிகழ்வுக்குவர்த்தகநிலையங்களைமூடிவர்த்தகர்கள் மற்றும்தனியார்தொழில்துறை ஊழியர்களை பங்குபற்றி ஆதரவு வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (21)

*நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி*

# புகையிரதக் கடவைக் காப்பாளர்கள் திங்கள் இரவு முதல் வேலைநிறுத்தம்

வவுனியா, ஏப்.29

**வடக்கு, கிழக்குத் தொடருந்துக் காப்பாளர்களுடைய நிரந்தரநியமனம் தொடர்பில்உரியபதில்கிடைக்கவில்லைஎனவே அகில இலங்கைரீதியில் அனைத்துக் காப்பாளர்களும் நாளை நள்ளிரவு முதல் பணியில் இருந்து விலகி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என்று வடக்கு, கிழக்குப் புகையிரதக் காப்பாளர் சங்கத் தலைவர் எஸ்.ஜே.றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

கடந்த ஐந்து ஆண்டுகாலத்துக்கு மேலாகப் பொலிஸாரால் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஊழியர்களாகக் கடமையாற்றிவருகின்றோம். கடந்த காலத்தில் பலதரப்பட்ட அதிகாரிகளுடனும் திணைக்களங்களுடனும், அமைச்சக்களுடனும் தொடருந்துக்கடவைக்காப்பாளர்களாகியநாங்கள்எங்கள் பிரச்சினைகளைப் பல தடவை முன்வைத்த போதும் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. இருந்தபோதும் நேரடியாக அரசதலைவரைச்சந்தித்து மனு ஒன்று கையளித்திருந்தோம். அரச தலைவர் எங்களுக்குவழங்கியவாக்குறுதிகளைநிறைவேற்றாத காரணத்தால்நாங்கள்மனவேதனைக்கு உள்ளாகியுள்ளோம்.

இன்று எங்களுக்குப் பதில் வழுங்குமாறு அரச தலைவர், தலைமை அமைச்சர், முதலமைச்சர், மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு மனு ஒன்று அனுப்பியுள்ளோம்.

வடக்கு, கிழக்குத் தொடருந்துக் கடவைக் காப்பாளர் சங்கம் மற்றும் அகில இலங்கைதொடருந்துக்கடவைக் காப்பாளர் சங்கம் ஆகியன இணைந்து எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய எங்கள்ஊழியர்களுடைய நிரந்தர நியமனம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன என்பதனை எமக்கு எழுத்து மூலம் அறியத்தராத விடத்து நாடு தழுவிய ரீதியில் இருக்கக் கூடிய ஒட்டுமொத்த தொடருந்துக் கடவைக் காப்பாளர்களும் ஒரே நாளில் இந்தச் சேவையை விட்டு விலகுவது என்று தீர்மானித் துள்ளோம். எங்களுடைய சேவையை இந்த அரசு மதிக்க வேண்டும். உயிரைப் பணயம் வைத்துச் சேவையாற்றி வரும்எமது ஊழியர்கள் நாள் ஒன்று 250 ரூபாவுக்குச் சேவையாற்றி வரும் நிலையில் எமது ஊழியர்களின் வாழ்வாதாரம்குறித்துஅரசுஎந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எமது ஊழியர்களின் நிரந்தர நியமனத்தை வழங்க அரசு முன்வரவேண்டும் என்றனர். (21,110)

## போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரத்தைமேம்படுத்தஅதிகநிதி

*இப்படிக்கூறினார்தேசியஒருங்கிணைப்புநல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி*



மன்னார், ஏப்.29

போரால் பாதிக்கப்பட்டபிரதேசங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில் தேசிய ஒருங்கிணைப்புநல்லிணக்க அமைச்சின் கீழ் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அதன் செயலர் சிவஞான சோதி தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மன்னார்பள்ளிமுனைகிராமத்தில்அமைக்கப்பட்ட மடுமாதா கைப்பணி அமைப்புக்கான கட்டடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமைஉத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்து.

மன்னார் பிரதேச செயலாளர் என்.பரமதாஸ் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன்மற்றும்தேசியஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதிஆகியோர்இணைந்து கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

அதனைத்தொடர்ந்துஉரையாற்றுகையிலேயே தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞான சோதி அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

போரால்பாதிக்கப்பட்டபிரதேசங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார் பள்ளிமுனைக்கிராமத்தில்அமைக்கப்பட்ட இந்தக்கட்டடத்தைத்திறந்துவைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் திட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு நன்மையடையமுடியும். தேசியஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் கீழ்யாழ்ப்பாணமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா இருக்கின்றார். எமதுஅமைச்சுக்குஇவ்வருடம் அதிகமான நிதி மீள் குடியேற்ற செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. போரால்பாதிக்கப்பட்டபிரதேசங்களுக்கு அதிகமான நிதி வழங்கப்பட வேண்டும்எனநாடாளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பிரதி நிதிகள்அரச தலைவரிடமும். தலைமைஅமைச்சரிடமும்பலகோரிக்கைகளை முன்வைத்தனர். நிதியை அதிகரிப்பதற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியதன் காரணத்தினால் இந்தவருடவரவு-செலவுத்திட்டத்திலே எமது அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 50 ஆயிரம் வீடுகளைஅமைப்பதற்கானவேளைத் திட்டத்துக்கும் அவர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள். அமைச்சரவை அதற்கானஅங்கீகாரத்தைவழங்கியுள்ளது. மேலும் வீதிகளை அமைப்பதற்குப் பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 56 பில்லியன்ரூபாய்ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரரிடமேநிதியைக்கடனாகப் பெற்றுக்கொண்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும். எனவே குறித்தகருத்திட்டம்மூலம்நீங்கள்முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்-என்றார். குறித்தநிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்குச் சுயதொழில் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. (21,56)

## சுந்தர காண்ட கிரியைகள்

யாழ்ப்பாணம், ஏப் 29

இணுவில் மருதனார்மடம் ஶ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோயில் சுந்தர காண்ட மஹாயக்ஞக் கிரியைகள் நாளை திங்கள் கிழமை ஆரம்பமாகிஎதிர்வரும்4ஆம்திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையும் என சிவஶ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார்.

## வில்லூன்றியில் சித்திரா பூரணை

சித்திரா பூரண நிகழ்வுகள் வில்லூன்றியில் இன்று ஞாயிற்றுக்கிழமைசிறப்பாகநடைபெறவுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத்தில் பாலஸ்தாபனம் இடம்பெற்று புனருத்தாரணவேலைகள்நடைபெறுவதால் விநாயகப் பெருமான் வீதி வலம் இடம்பெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல்காலை 7மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று 9மணிக்கு சித்திரபுத்திர நாயனார்கதைப்படிப்பு, சித்திரைக் கஞ்சி ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

## ஜி.சி.ஈ சாதாரன தரப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து ஜி.சி.ஈ சாதாரனதரப்பரிட்சைக்குஇந்தஆண்டில் இரண்டாம் தடவையாக தோற்றும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் 04 முன்னர் ஒப்படைக்குமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

விண்ணப்பதாரிகள் பாடசாலைக்குச் சமூகமளிக்கும் போது தேசிய அடையாள அட்டை , 2017 ஜி.சி.ஈ சாதாரன தரப் பரிட் சையில் தோற்றிய சுட்டெண், பாடசாலைச்சீருடை போன்றவற்றை கவனத்தில் கொள்ளுமாறு அிவிக்கப்பட்டுள்ளது.


# உலக பத்திரிகை சுதந்திர தினம் – மே 3

# ஈழத்தின் மிகப் பெரும் ஊடகப் படுகொலை – மே 2

# வேட்கை

(ஆக்க – அறிய – பகிர – வெளிப்படுத்த)

## உதயன்



**காலம்: 02.05.2018 (புதன்கிழமை)**

**நேரம்:** காலை 10 மணி

**இடம்:** யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடம்

ஈகைச் சுடரேற்றல்

அகவணக்கம்

வரவேற்புரை

தலைமையுரை

முதன்மைப் பேச்சாளர்கள் உரை

- தமிழ்த் தேசியமும் தமிழர் அரசியலும்
  – கே.ரி.கணேசலிங்கம்
  (அரசறிவியல் விஞ்ஞானத்துறைத் தலைவர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்.)

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட நல்லிணக்க முயற்சியில் இலங்கை அரசு எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்ற தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பு.
  – ஷ்றீன் சரூர் (மனித உரிமைச் செயற்பாட்டாளர்)

- தமிழ் ஊடகங்களின் செல் நெறியும் அவை பயணிக்க வேண்டிய திசையும்
  – எம்.ஏ.சுமந்திரன்
  (நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு"





கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையம்,கலைவாணி முன்பள்ளி ரேஞ்சஸ் விளையாட்டு கழகம் இணைந்து நடத்திய சித்திரை வருட சிறப்பு நிகழ்வு அண்மையில் கொலின்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டார் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கேடயமும் பெறுமதியான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.










அனலைதீவு அருணோதயா சனசமூக நிலையமும் அருணோதயா விளையாட்டுக்கழகமும் இணைந்து சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளை அண்மையில் நடத்தின. அனைத்துப் பிரிவினரும் பங்குபற்றக் கூடிய வகையிலான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், படகு ஓட்டம், தலையணைச் சண்டை, கிறிஸ் கம்பம் ஏறுதல் போன்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

(ற-9)















வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் புலி வேட்டை நடைபெற்றது. ஒவ்வொரு ஆண்டும் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெறுவது வழமை. நேற்றும் பொம்மலாட்டம், சிலம்பாட்டம், கம்படி, புலிவேட்டை போன்ற பாரம்பரிய நிகழ்வுகள் நடைபெற்றன. வானவேடிக்கைகளும் நடைபெற்றன. அதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர். (ற-26)

# மே நாள்



# 2018

**கல்வி கலங்கரை விளக்கு**

**தொழில்வளர்ச்சியின் உயிர்நாடி**

**உலகத்தொழிலாளர் தினமாம் மே நாளில்**

**அனைத்துத் தொழிலாளர்களுடனும்**

**அச்சகத் தொழிலாளர்களும்**

**சிறப்புற வேண்டுகின்றோம்.**




# கரிகணன்

## வடக்கின் அச்சகதாரர்

| | |
|---|---|
| இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். | T.P : +94 21 222 2717/ 8<br>+94 21 222 2737 |

## மணமகன் தேவை

1987 ஆம் ஆண்டு 8இல் சூரி, செவ்வாய்,
69 கிரகபாவம் உடைய இந்து கௌரவ
குடும்பத்தில் பிறந்த மணமகளுக்கு
மணமகன் தேவை.
**தொடர்பு: 076 4344 254**
**076 8035438**
(CS 16179)(10)

## சூரியன் திருமண சேவை

டாக்டர், இஞ்சினியர், விரிவுரையாளர்,
எக்கவுண்டன், பட்டதாரி
உத்தியோகத்தர்கள் உள்நாட்டு
வெளிநாட்டு மணமக்கள் உண்டு.
**சூரியன் திருமண சேவை**
561, K.K.S. வீதி,
மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
(CS 16182)(10)

## வீடு வாடகைக்குத் தேவை

கே.கே.எஸ் வீதியில் தெல்லிப்பழை தொடக்கம் கொக்குவில் வரையும் அல்லது இவ்வீதிக்கு அண்மித்த உள் பகுதிகளில் அல்லது அண்மித்த அயலூர்களில் வீடு குடும்பமொன்றுக்கு வாடகைக்குத் தேவை.

**077 947 2275,**
**075 568 0246**
(ACO/221)(11,17)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டம் வீதி,
இல. 93/14, இலக்க புதிய வீடு (3 அறை &
2 குளியலறை) உடனடியாக வாடகைக்குண்டு.
29.04.2018 மாலை 4 முதல், 6 வரை
பார்வையிடலாம்.
(IN/9145)(11,17)

**077 538 6435**

## சித்த ஆயுர்வேத, Homoeo, ACU இலவச வைத்திய ஆலோசனை

நர்ப்பட்ட தலைவலி, High B.P, Low B.P, தோல் நோய்கள் High Cholestrol, High or Low Thyroid நெஞ்சுவலி, தீராத சளி, இருமல், வாந்தி உணர்வு, தலைசுற்று, அல்சர், வாய்வு, மூலம், இரத்தம் வரல், கட்டிகள்.உடலின் எப்பாகத்தில் வந்தாலும் மூட்டுவலி, முள்ளந்தண்டு விலகல், Gout, கழுத்து வலி, பித்தப்பை, சிறுநீர்ப்பைக் கற்கல், குழந்தை இன்மை, கருகட்டாமை, கருப்பை Chocolate Cyst, உயிர் அணு குறைவு Low Libido மற்றும் மன நோய்கள், மன அழுத்தம், பக்க விளைவுகள் அற்ற மூலிகை சிகிச்சை

**Dr.R.Sivagurunathan - 077 730 1669**

## கடை வாடகைக்குண்டு

கோண்டாவில் கே.கே.எஸ். வீதியில்
அமைந்துள்ள இரு கடைகள்
வாடகைக்குண்டு.
**தொடர்பு: 077 633 4467**

ஓம் விராட் விஷ்வ பிரம்மனே நமஹ

## கலைவாணி சனசமூக நிலையம் திறப்புவிழா அழைப்பு

**இடம் :** மகாஜனாக் கல்லூரி வீதி, செஞ்சலனை ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, தந்தை செல்வாபுரம், தெல்லிப்பழை
**காலம் :** நாளை (30.04.2018) திங்கட்கிழமை
**நேரம் :** முற்பகல் 9.30 மணி

தலைமை: **பொ.ஸ்ரீஸ்கந்தராசா** (தலைவர்: கலைவாணி சனசமூக நிலையம்)

பிரதம விருந்தினர்கள் : **கௌரவ மாவை.சோ.சேனாதிராசா**
(பாராளுமன்ற உறுப்பினர் - யாழ். மாவட்டம், தலைவர் - இலங்கை தமிழரசுக் கட்சி)
**கௌரவ தருமலிங்கம் சித்தார்த்தன்**
(பாராளுமன்ற உறுப்பினர் - யாழ். மாவட்டம்)
**கௌரவ ஈஸ்வரபாதம் சரவணபவன்**
(பாராளுமன்ற உறுப்பினர் - யாழ். மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்: **சண்முகராசா சிவஸ்ரீ** (வலி வடக்கு பிரதேச செயலர்)
**கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன்** (தவிசாளர் -வலிவடக்கு பிரதேச சபை)
**இ.பகீரதன்** (செயலாளர் - வலிவடக்கு பிரதேச சபை)
**திருமதி சிவயோகம் செல்வவிநாயகம்**
(சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்)
**கார்த்திகேயன் துவாரகன்**
(கிராம சேவகர் - J/230 தந்தை செல்வாபுரம், தெல்லிப்பழை)

கௌரவ விருந்தினர்கள்: **Dr.S.T.S.சந்திரகுமார்**
(கண் சத்திரசிகிச்சை நிபுணர், ஆலோசகர் - யாழ் போதனா வைத்தியசாலை)
**Dr.G.நந்தகுமார்** (வைத்திய கலாநிதி, சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை)
**தேவராசா விக்கினேஸ்வரன்** (முகாமையாளர், சமூர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, தெல்லிப்பழை)
**ச.யோகேஸ்வரசர்மா** (பிரதம குரு - செஞ்சலனை ஞான வைரவர் கோயில், தெல்லிப்பழை)
**Dr.கனகசபை கோகிலன்** (மருத்துவப் பொறுப்பதிகாரி, சித்தமருத்துவ மருந்தகம், குடத்தனை)

**நிகழ்ச்சி நிரல்:**

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
- வரவேற்புரை
- ஆசியுரை
- தலைமையுரை
- கௌரவ விருந்தினர் உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- இறைவணக்கம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
(CS 16149)(11,17)

## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் - 2017

### அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| **வருமானம்** | | |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்தான வருமானம் | 8,136,139 | 6,895,459 |
| நிதியியல் கருவிகளிலிருந்தான வட்டி வருமானம் | 3,978,373 | 2,697,048 |
| **மொத்த வருமானம்** | **12,114,511** | **9,592,507** |
| **செலவினங்கள்** | | |
| வாடகை மற்றும் நிர்வாகச்செலவுகள் | 8,282 | 9,992 |
| வெளியீடுகளுக்கான செலவுகள் | 418 | 592 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கட்டணங்கள் | 60 | 8 |
| கோரப்படாத பெயரளவு வரிக்கழிவு | 750,076 | 718,564 |
| பொருளாதாரப் பணிகள் விதிப்பு | 79,296 | 23,979 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 196,784 | - |
| நிதியியல் பணிகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 154,483 | - |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதி சேர் வரி | 1,058,937 | - |
| கட்டுக்காப்பு மற்றும் ஏனைய கட்டணங்கள் | 212 | - |
| **மொத்தச் செலவினம்** | **2,248,549** | **753,135** |
| **காலப்பகுதிக்கான வருமான வரிக்கு முன்னரான மிகை** | **9,865,962** | **8,839,372** |
| கழி: வருமான வரிக்கான ஏற்பாடுகள் | - | - |
| **காலப்பகுதிக்கான வருமான வரிக்கு பின்னரான மிகை** | **9,865,962** | **8,839,372** |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் மீள்மதிப்பீடு மூலமான இலாபங்கள்/(நட்டங்கள்) | 3,012,448 | (928,886) |
| கழி: ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானக்கூறுகள் தொடர்பான வரி | - | - |
| **ஆண்டுக்கான வரிக்கு பிந்திய ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **3,012,448** | **(928,886)** |
| **மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **12,878,410** | **7,910,486** |

### நிதியியல் நிலைமைக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | 2017 | 2016 |
| **சொத்துக்கள்** | | |
| வங்கியிலுள்ள பணம் | 24 | 0 |
| அங்கத்துவ நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவை | 1,929,113 | 1,641,201 |
| முதலீடுகளில் செலுத்தப்பட்ட ஒன்று சேர்ந்த வட்டி | 37,732 | 71,834 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாக உள்ள நிதியியல் சொத்துக்கள் | 39,645,937 | 25,700,430 |
| கடன்களும் பெறத்தக்கவைகளும் | 6,128,784 | 6,178,989 |
| பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரி | 16,650 | 8,325 |
| **மொத்த சொத்துக்கள்** | **47,758,239** | **33,600,780** |
| **பொறுப்புக்கள்** | | |
| சில்லறை கடன்கொடுநர்கள் | 995 | 1,725 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை | 1,241,989 | 6,576 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **1,242,985** | **8,301** |
| பங்குரிமை மூலதனம் | | |
| இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம் | 44,123,264 | 34,257,301 |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஒதுக்கு | 2,391,990 | (664,823) |
| மொத்த பங்குரிமை மூலதனம் | **46,515,254** | **33,592,479** |
| மொத்த பங்குரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **47,758,239** | **33,600,780** |

மேற்காணப்படும் நிதித் தகவல் 2018 மார்ச் 26 திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைப்படி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளதுடன் நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

| (ஒப்பம்) | (ஒப்பம்) | (ஒப்பம்) |
|---|---|---|
| முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி | எஸ் கே ரணசிங்க | (திருமதி) எஸ் டபிள்யு எம் சிக விஜயரத்ன |
| ஆளுநர், இலங்கை மத்திய வங்கி | தீர்மானம் மற்றும் நடைமுறைப்படுத்தல் பணிப்பாளர் | தலைவர், வைப்புக் காப்புறுதி அலகு |

26.03.2018

## காணி விற்பனைக்கு உண்டு

அரியாலை கிழக்கில் கட்டடியில் (விசுவநாதன் தோட்டம்) 15 ஏக்கர் விற்பனைக்குண்டு. நான்கு பக்கமும் வேலி உண்டு. தென்னங் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களை தொலைபேசி ஊடாக அறியலாம்.

**ஒரு ஏக்கர் - 35 லட்சம். விலை பேசித் தீர்மானிக்கலாம்.**
**தரகர் தேவையில்லை.**
(CS/16146)(11,17)

**077 323 8235**
**மோ.சஜித் - 078 303 6311 (Viber)**

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்.** நீங்கள் விரும்பும் அரச உயர்பதவியில் உள்ளவர்கள், வங்கியாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், தனியார்துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**எல்லா நாள்களும் திறந்திருக்கும்.**

**47/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**(தம்றோக்கு முன்பாக)**
**077 138 7596, 071 894 5692**
(CS/16921)(11,17)

## கடை கட்டடத் தொகுதி வாடகை

யாழ் A9 வீதியில் யாழ் மாவட்ட செயலகத்திற்கும்
கச்சேரி ஒழுங்கைக்கும் அருகாமையில்
அமைந்துள்ள புதிய 1500, 1500 சதுர அடிகளைக்
கொண்ட 1ஆம், 2ஆம் மாடிகள் வாடகைக்கு
உள்ளன. தேவையானவர்கள் உடன்
தொடர்பு கொள்ளவும்.
(தனித்தனி கடைகளாகவும் கொடுக்கப்படும்)

**077 776 8606**

## நெடுந்தீவில் காணி விற்பனைக்குண்டு

நெடுந்தீவு மத்தியில்
பொதுச்சந்தைக்கு முன்பாக
அமைந்துள்ள 8பரப்பு உறுதிக்
காணி உடன் விற்பனைக்கு.

**077 718 9536**

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவமுள்ளவர்கள், பழக
விரும்புபவர்கள் உடன் தேவை.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
**42, 44, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 8847**
(IN 6614) (4,17)

## நிறைவாழ்வு மையம்

**இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகம்**
**இணுவில்**

**தொழில் பயிற்சி நெறி - 2018 - அழகுக்கலை பயிற்சி**

எம் நிறுவனத்தால் தையல், கைவேலைகள், கேக்ஜசிங், சமையல் வகுப்புக்கள் வாரநாள்களில் கொக்குவில், ஆனைக்கோட்டை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முக அலங்காரம் மற்றும் மணப்பெண் அலங்கார பயிற்சிகள் எதிர்வரும் புதன்கிழமை (02.05.2018) இலிருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் மூன்று மாத காலத்திற்கு இணுவில் மக்லியோட் வைத்தியசாலை வளாகத்திலமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளது. விரும்பிய பெண்கள் இணைந்து கொள்ளலாம்.
(CS 16148)(14,17)

**077 917 7230/ 021 205 4443**






# சீரணி நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
## சீரணி, சண்டிலிப்பாய்
# இரதோற்சவ சிறப்பிதழ் – 2018

### மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணத்தின் திவ்விய தேசமாய் விளங்கும் சண்டிலிப்பாய் சீரணி என்னும் அருட்பதியில் ஆனந்த அருள் ஆட்சி புரியும் தாய்க்கு இன்று தேர்த் திருவிழா பல ஊர் பக்தர்கள் பக்தியோடு நேர்த்தி செய்யும் புண்ணிய தலமாகிய இத்தலத்தில் சிறப்பு தனித்துவமானது அன்னை இன்று சித்திரா பௌர்ணமி நன்நாளில் தன் சிங்கரதத்தில் தேர் ஏறி அடியார்களுக்கு அருள் புரியும் பெரு நோக்கோடு இன்று தேர் வலம் வருகின்றாள். தேர்த்திருவிழா இனிதே சிறக்க மன நிறைவுடன் ஆசி கூறுகின்றேன்.

**பிரம்மஸ்ரீ கு. சோமாஸ்கந்தக்குருக்கள்**
**(தேவஸ்தான குரு)**

### அம்பிகையின் அருள் பெருகட்டும்

சீரணி அம்பாள் அருள் புரிய உன் பாதத்தில் என் மனதை கொடுத்தேன் அம்மா. இசை மழை பொழிய இன்புற்ற மக்கள் எல்லாம் துன்பத்தை மறந்து இன்பத்தில் அலை மோதுகிறார்கள். கண்கொள்ளாக் காட்சியெல்லாம் அடியார் சந்நிதியில் ஆரணி பூரணி அபிராமித் தாயே உன் கடைக்கண் பாராயோ நீதான் சரணம் என்று வந்தவர்க்கு அருள் கொடுக்கும் தாயே எங்களது இதயக் கதவை துறந்து விட்டாய் அம்மா உன் பற்றை மறந்து தவிக்கும் புழுக்கள் போல் துடிதுடித்து இறப்பதைக் கண்ணால் காண்பதற்கு கருணை உள்ளம் பிறக்குதம்மா எங்கள் கனவுகளை நினைவாக்கிக் கொள்பவளே உன் நாமத்தை சொல்ல சொல்ல என் மேனி சிலிர்க்குதம்மா உன் பற்றை அறியாத மானிடர்க்கு உன் பற்றை புகட்டுகிறாய் அம்மா உன் காலடியில் வந்தாலே என் கவலை தீர்ந்துவிடும் அம்மா. தேன் அருவியில் உன் இன்பத்தை காண்பதற்கு வீழ்ந்தேன் அம்மா. இது போல் உலக மக்களுக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும் அம்மா என்றும் உன் காலடியில் சரணம் அடைந்தேன் அம்மா .இறைவனின் இதயத்தை தொடுவதற்கு நாங்கள் செய்யும் தொண்டினால் தான் இறைவனின் இதயத்தைத் தொட முடியும். இத்தொண்டு செய்பவர்களுக்கு ஒரு கையால் கொடுத்தால் மறு கைக்கு தெரியாமல் இருக்க வேண்டும்.

**தம்பையா பரஞ்சோதி - ஆதீன கர்த்தா**
**சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.**

### ஆலய வரலாறு

இலங்கையில் புகழ்பெற்ற யாழ்ப்பாண நகரத்தில் அமைந்துள்ள பதியில் வாழ் மணியகாரன் உடையார் பரம்பரையினராகிய இராமன் சீரணி என்னும் மண்ணில் சிறப்புற்று வாழ்ந்து வந்தார். அவர் மகன் இராமர் அவர் மகன் முருகேசு. முத்தர் இனசன வழியில் பெரிய சாஸ்திரியார் தெய்வானைப்பிள்ளை. அன்னப்பிள்ளை. நன்னிப்பிள்ளை. மயில்வாகனம். பெரிய பிள்ளை. சின்னப்பிள்ளை. வேலர் ஆகியோருடன் இசைந்து வாழ்ந்து வந்தார். நாகபூஷணி அம்பாள் வாலாயம் பெற்ற முருகேசுவிடம் சோமவாரநாள் ஒன்றிலே நாகபூஷணி அம்பாள் கனவில் தோன்றி தான் இவ்விடத்தில் சீரணியில் எழுந்தருள வேண்டும் என்றும் தனக்கொரு கோயில் அமைக்கும்படி கேட்டதற்கு அமைய சைவ முறைப்படி ஒரு கொட்டகை அமைத்து அதில் பூசை செய்துவர வைத்திலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். இம்முறைப்படி இனசன மக்கள் எல்லோரும் சேர்ந்து வழிபட்டு வந்தார்கள். காலம் காலமாக முருகேசு பரம்பரையினர் பரிபாலித்து வருகின்றனர்.



**தங்கரத தேரேறி........**
சித்தர்கள் கூடி வாழும்
சீரணியாம் பதியினிலே
பக்தர்கள் புடை சூழ
பவனி வரும் நாயகியே
முப்பொழுதும் நமைக்காக்க
முத்துரதத் தேரேறி
சொர்ப்பணமாய் வலம் வருவாள்
சுந்தரி எம் நாகபூசணியே......

**இ.சிறிதரன் - தலைவர்**
**இந்து இளைஞர் மன்றம்.**

### வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தின் முத்தெனத் திகழ்ந்த இலங்கைத்தீவின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண குடாநாட்டின் வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்திபெற்ற இந்து ஆலயங்களுள் சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயமும் ஒன்றாகும். இங்கு வீற்றிருக்கும் அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாள் பக்தர்களுக்கு அருளாட்சி புரிந்து வருகின்றார். இவ் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் ஆண்டுதோறும் 18 தினங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இவ்வருட வருடாந்த மகோற்சவமானது ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 30 ஆம் நாள் (13.04.2018) ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவ்வகையில் விளம்பி வருடம் சித்திரை மாதம் 16 ஆம் நாளாகிய இன்று (29.04.2018) மகோற்சவத்தின் தேர்த்திருவிழாவானது மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வகையில் இன்று நடைபெறும் தேர்த்திருவிழாவில் தேர்த்திருவிழா சிறப்புமலர் வெளியிடப் படுகின்றமை சிறப்பம்சமாகும். இத்தேர்த்திருவிழா சிறப்பு மலரிற்கு எனது வாழ்த்துச்செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு சீரணி நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றேன்.

**உ. யசோதரா**
**பிரதேச செயலர், பிரதேச செயலகம்**
**சண்டிலிப்பாய்.**

### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி



அம்பிகையை சரணடைந்தால் அதிக வரம் பெறலாம். சண்டிலிப்பாய் திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சீரணி நாக பூஷணி அம்பாள் தேர் ஏறிவரும் திரு நாள் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். அருள் வளம் நிறைந்த அம்பாளின் திருத்தேர் விழாக் காண்பதற்கு பலவூர் மக்களும் பக்தியோடு ஒன்று கூடும் நன் நாள் இன்று ஆடுவோர்கள் அடியளித்துக் கும்பிடுவார்கள் பாடிப் பரவசமாக பக்தர் கூட்டம் வீதியெல்லாம் மெய்யுருகி நிற்கும் காட்சியை இவ்வாலயத்தில் இந் நாளில் காணலாம். சீரணி அம்பாளுக்கு நேர்த்தி வைத்து காவடி எடுப்பவர் தொகை எல்லையில்லை. தனித்துவச் சிறப்பு மிக்க இத்திருநாள் சிறக்க வேண்டி எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

### அன்னையவளின் இரதோற்சவ வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் கமழும் யாழ். மண்ணில் செழிப்பு மிக்க சண்டிலிப்பாயின் சீரணிப் பதியில் நாகபூசணி அம்பிகையாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற அன்னையவள் இயற்கை எழில் சூழ்ந்த அமைதியான சூழலில் புதுப்பொழிவுடன் புனரமைப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் வேண்டுவோருக்கு வேண்டும் வரமளிக்கும் அன்னையின் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று நாடி வரும் பக்தருக்கு வேண்டிய வரமளிப்பதற்காக இன்று தங்கரதத்திலே பக்தர்கள் புடைசூழ வீதியுலா வந்து காட்சிதரும் நன்நாளாகும் இந்த நாளில் வெம்மை தணித்து துன்பம் நீக்கி அனைவரின் குறைகளையும் தீர்த்தருள் வேண்டி உளமார பிரார்த்திக்கின்றேன். அன்னையின் தேர்த்திருவிழாவிற்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதற்கு அடியேனுக்கு வாய்ப்பு கிடைத்தமையினையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

குணசிங்கம் சற்குணராசா செயலாளர், வலிகாமம்தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

**MANIYAM IMPEX**
இல. 121A
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2222819,
077 3632963

**மொடேண் மற்ஸ் அக்கடமி**
MODERN MATHS ACADEMY
பிரதேச செயலகம் அருகில், சண்டிலிப்பாய்.
தரம் 3 முதல் ஆங்கில மொழி மூல வகுப்புக்களும்
நடைபெறுகின்றன. நிர்வாகி : B. குகா

**அம்பாள் அரிசி ஆலை**
காரைநகர் வீதி,
சண்டிலிப்பாய்.
072 7850 550

**ஐங்கரன் மோட்டோர்ஸ்**
சந்தை வீதி யாழ். றோட்,
மானிப்பாய்.
021 225 5150

**சுந்தர்சன்**
பிரதான வீதி,
மானிப்பாய்.
021 225 5136

**கணபதி ஹாட்வெயார்**
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மின்சார
உபகரணங்கள் மற்றும் கட்டட பொருள்கள் என்பவற்
றையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
தொட்டிலடி, சங்கானை. 077 6365 983

**சக்தி எலக்ரோனிக்கல்ஸ்**
ஒட்டக்கரை வீதி, சங்கானை.

**துர்க்கா மரத்தொழிற்சாலை**
மில் ஒழுங்கை,,சண்டிலிப்பாய்.
விற்பனையகம் -
சீரணி, சண்டிலிப்பாய்.
077 7114 852, 021 321 7963

**பாக்கியரத்தினம் ஹாட்வெயார்**
இல. 163, 165, பிரதான வீதி,
சங்கானை. 021 321 2713
Elephant house ஏகவிநியோகஸ்தர்

**மணி & ஈசன் ஜுவல்லர்ஸ்**
22 கரட் தங்க நகைகளை ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
021 791 2677

## நாஹா மருத்துவ நிலையம்

எலும்புகள் செயலிழக்கும் வாதம். கை. கால் எரிவு. ஆஸ்மா. மூட்டுக்கள் அழற்சி. தேய்வு. பாரிசவாதம். மாதவிடாய் கோளாறு குணப்படல். (CS 16150) (14.17)

வங்கி முன்னால்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகநதி வீதி), மானிப்பாய்.
**077 321 2740**

## பெண் வேலையாள் தேவை

Photo Copy Operator

- முன் அனுபவம் தேவையில்லை, A/L படித்த 20 - 35 வயதிற்குட்பட்டோர் மாத்திரம்.
- புகைப்படத்துடன் கூடிய சுயவிவரக் கோவை (Bio data) கொண்டு வரவும்.
- Salary - 12000/= (CS 13489) (14.17)

386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
**077 063 3116**

## வேலையாள் தேவை

செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.
▸ ஆண் சம்பளம் - 30,000/- ▸ பெண் சம்பளம் - 15,000/-
மதிய உணவும் வேலைக்கேற்ப சம்பள உயர்வும் வழங்கப்படும்.
**075 988 0000** (CS/16143) (11.17)

## பெண்களுக்கான விடுதி

பல்கலைக் கழகத்துக்கு அருகில் வாடகைக்கு உண்டு.
**077 177 2359, 075 615 6979**

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல தங்கும் விடுதி (Lodge) க்கு சுத்திகரிப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் உடனடியாகத் தேவை.
**076 845 0854**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம், 43 வயதுடைய அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
**077 802 9712**

## வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள Hotel ஒன்றுக்கு முகாமையாளர். உதவி முகாமையாளர் தேவை.
**077 763 2454**

## வீடு விற்பனைக்கு

வளன்புரம் கொழும்புத்துறையில் 1¾ பரப்பு காணியில் அமைந்துள்ள 3 படுக்கை அறை. மாபிள் பதிக்கப்பட்ட 2வரவேற்பறை. இணைந்த கொமேட்டுடன் குளியல் அறை. சாதாரண கழிவறை. வேறான சாதாரண குளியல் அறை. களஞ்சிய அறை கொண்ட வசதியான வீடு விற்பனைக்கு உண்டு.
**077 536 4396**

## விற்பனைக்கு

Tafe, 1500 மணித்தியாலங்கள் இயங்கிய RB - XXXX இலக்கமுடைய உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு. (CS 00451) (14.17)
**077 311 4419**

## வீடு வாடகைக்கு உண்டு

நாயன்மார் வீதியில் நான்கு (4) அறைகளுடன் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (CS 00452) (14.17)
**077 654 8695**

## வீடு உடனடி வாடகைக்கு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு (கந்தரோடை) அருகில் சகல வசதிகளுமுள்ள (இணைந்த குளியலறை. கழிவறை) கொண்ட வீடு பயன்தரு மரங்களும் உள்ளன. வாடகைக்குண்டு. (CS 16048) (14.17)
**077 411 3309**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1987 இல் பிறந்த பூரட்டாதி 2ஆம் பாதம். கி.பாவம் 40¾ இலக்கினத்தில் சனி. உயரம் 5' 7" உடைய சிங்கப்பூரில் மென்பொருள் பொறியியலாளராக தொழில் புரிபவருக்கு IT, Account தகைமையுள்ள (5வயது குறைந்த) மணமகள் தேவை. (CS 15955)
**072 346 6946 (Viber)**

## மணமகள் தேவை

யாழ்.இந்து. 1986 ஆம் ஆண்டு பிறந்த திரு-வாதிரை நட்சத்திரம். கிரகபாவம் 4 உடைய சொந்தமாக சுயமாக இரண்டு தொழில் நிறுவனத்தை (Printing Shop) நடத்தும் மாதம் நல்ல ஒரு வருமானத்தைப் பெறும் மணமகனுக்கு தகுந்த நல்ல குணமான படித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
**077 679 2275** (IN/9147) (11.17)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்பாக சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. நிறுவனத்துக்கும் கொடுக்கப்படும்.
**077 449 3222**

## கணக்கு பதிவாளர்கள் தேவை

**நெல்லியடியில் இயங்கும் தனியார் கணக்காய்வு** நிலையத்துக்கு கணக்கு பதிவாளர்கள் தேவை.
**தகைமை:** G.C.E A/L, வர்த்தகம் சித்தியடைந்தவர்கள் பெண்கள்
**077 905 8252/ 021 226 2941**

## வேலையாள்கள் தேவை

மேசன். காப்பெண்டேர்ஸ். வெல்டேர்ஸ். அலுமினிய வேலை செய்பவர்களும். பிளம்பிங். எலக்டீசியன்கள். கம்பி வேலை. பெயின்டிங் மற்றும் இதர வேலைகளிற்கு வேலையாள்கள் கம்பளை. கொழும்பு வேலைத்தளங்களிற்கு தேவை.
தொடர்பு - 071 397 5695. 071 435 6437. 076 424 2090

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலிக்கு அருகில் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட A/c TV உட்பட சகல தளபாடங்களுடன் புதிய பங்களாவில் A/c Non A/c அறைகளும் விடுமுறை. திருமணம். பிறந்தநாள் போன்ற சகல கொண்டாட்டங்களுக்கு 40 பேர் வரை தங்கக்கூடிய வசதிகளுடன் நாள். கிழமை. மாத வாடகைக்குண்டு. (cs. 16159) (13.17)
**077 810 5102/ 077 301 3659**

## விற்பனைக்கு

JAC லொறி (Aluminum Bady White)
12.5 அடி. 2.8 En gine Capacity
18000 Km
077 759 3794

## அறை வாடகைக்கு உண்டு

யாழ் பல்கலைக்கழகம் அருகில் பலாலி றோட்டில் பல்கலை மாணவிகள். உத்தியோகம் பார்க்கும் பெண்கள். படிக்கும் மாணவிகளுக்கு அறை உடன் வாடகைக்கு உண்டு. (CS 16152) (14.17)
**077 930 0148/077 880 8480/021 222 7069**

## விற்பனை

நல்ல நிலையிலுள்ள 1 SRI xxxx இலக்கமுடைய Morris Minor கார் விற்பனைக்குண்டு.
**076 864 9040, 077 440 0610**

## வாடகைத்தாய் தேவை

நல்ல குணம் உள்ள 30 வயதிற்குக் குறைவான பெண் ஒருவர் IVF ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் உண்டு. இரகசியம் பேணப்படும். (ACO 217) (14.17)
**077 637 3804**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மல்லாகத்தில் துர்க்கை அம்மன் கோயிலுக்கு 150 மீற்றர் தூரத்தில் 4 அறை. Kitchen 2 Bathroom வீடு 8 பரப்புடன் விற்பனைக்குண்டு. வீட்டுடன் 5 பரப்பு பிறிம்பாகவும். 3 பரப்பு பிறிம்பாகவும் கொடுக்கலாம்.
**011 255 9862, 077 653 3656**

## காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாயில் 13½ பரப்புக் காணி கிணற்றுடனும் அருகில் 3 Phase மின்சார வசதியுடனும் விற்பனைக்குண்டு.
**077 858 3898**

## Immediate Vacancies For Technical Officer (Civil) - 2 Positions

NVQ Level 4 with 2 years experience.
Fluent in Tamil with Sinhala or English.
**Sites are in Jaffna.**
**076 648 7265**
priyanga4u@gmail.com

## யாழ்ப்பாணம் காணி விற்பனைக்கு முதலாம் குறுக்குத்தெரு

முதலாம் குறுக்குத்தெருவில் வேம்படி மகளிர் பாடசாலைக்கு மிக அருகில் 3.1 பரப்பு (31 PERCHES) காணி உடன் விற்பனைக்குண்டு. தரகர் தவிர்க்கப்படும். (cs. 16139) (13.17)
**077 911 2861**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் கோயிலுக்கு 3 நிமிடம் வாகன தூரத்தில் 80 பேர்ச்சஸில் அமைந்துள்ள இரு வீடுகளும் கராச்சும் கொண்ட காணியொன்று முழுமையாகவும் அல்லது பகுதியாகவும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.
235/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**077 237 9347**

## SharmilaTravels


TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

விமானப் பயணச்சீட்டுக்களை முற்பதிவு செய்தல் **(Air Ticketing Course)** கணினி மூலம் நீங்கள் படிக்க விரும்பின் எமது **Sharmila Travels** உடன் தொடர்பு கொள்ளுங்கள். அத்துடன் விசா விண்ணப்பப் படிவங்களை நிரப்புதல். **Travels insurance** செய்தல் போன்றவற்றுக்கு தனியான பயிற்சி வழங்கப்படும். 03 மாதகால பயிற்சிக்கு 30,000 ரூபா மாத்திரமே. பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். சிறந்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

உங்களுக்குத் தேவையான விமானப் பயணச்சீட்டுக்கள் மிகமிகக் குறைந்த விலையில் பெற்றிடவும். இந்தியா. மலேசியா. டுபாய். கட்டார். பேங்கொக். வியட்னாம் போன்ற அனைத்து நாடுகளுக்குமான சுற்றுலா விசாக்களையும் பெற்றுக்கொள்ள முடியும். (CS/16155) (11.17)

**289, Stanley Road, Jaffna.**
**021 222 0266, 021 222 0267**
**email address:- jaffnapsa@sharmilatravels.com**

## Study in Australia




iCS A Complete Visa Solutions
Study Abroad Expert
Appointments :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06

## VACANCIES@ BlueOcean GROUP OF COMPANIES | LINK ENGINEERING

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பட்டயப் பொறியியலாளர் - (யாழ்ப்பாணம்) (Chartered Engineer)**

- பட்டய பொறியியலாளராக (Chartered Engineer) இருத்தல் வேண்டும்.
- சிவில் பொறியியல் துறையில் BSc பட்டம் (BSc in Civil Engineering) பெற்றிருத்தல் வேண்டும்.
- பிரசித்தமான பெரிய கட்டட நிர்மாண நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருட தொழில் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- தரப்படும் இலக்கை நோக்கி திட்டக் குழுவை வழிநடத்துவதுடன் திட்டம் தொடர்பான முன்னேற்றம் பற்றி அடிக்கடி நிர்வாகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் திறமை உடையவராக இருத்தல் வேண்டும்.

நிர்மாண வேலைத்தளத்திற்கு கிரமமாக விஜயங்களை மேற்கொண்டு திட்ட முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதுடன் வேலைத்தளங்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், தடங்கல்கள் போன்றவற்றை தீர்க்கக் கூடிய திறமை கொண்டிருத்தல் வேண்டும்.

நாம் எதிர்பார்க்கும் தகமைகளும் திறமைகளும் கொண்ட விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரங்கள், உறவினர் அல்லாத இரு தொடர்பாளர்களின் தகவல்கள் மற்றும் உங்கள் புகைப்படம் இணைக்கப்பட்ட சுய விபரக்கோவையை இந்த விளம்பரம் வெளியான தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது career@blueocean.lk என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

BOI CIDA ISO 9001 SLAB National Chamber CA CIMA

**Head of Human Resources**
**No. 32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka Tel : (011) 2 722 217**
**www.blueocean.lk / www.link.lk**

## சண்முகா கல்லூரி விவகாரம்:

# தமிழ் - முஸ்லிம் உறவை சிதைக்க முயலும் சக்திகள்

### அவதானம் தேவை என்கிறார் ரிசாத்

### சமரசத்துக்கு உதவுமாறு சம்பந்தனுக்கு கடிதம்

கொழும்பு, ஏப். 29
சமரசப் பேச்சின் மூலம் திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஹபாயாப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக்காண உதவ வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிசாத் பதியுதீன் எழுதியுள்ள கடிதத்தில் வேண்டு கோள் விடுத்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரி முஸ்லிம் ஆசிரியர்களின் ஹபாயா விவகாரத்தில் தலையிட்டு இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்க மூத்த அரசியல்வாதியான நீங்கள் உதவ வேண்டும். இந்த சம்பவத்தைப் பயன்படுத்தி தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க முற்படும் சக்திகள் குறித்து நாம் விழிப்பாயிருக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய மூவினமும் பரஸ்பரப் புரிந்துணர்வுடனும், நிம்மதியாகவும் வாழும் திருமலை மாவட்டத்தில் இவ்வாறானதொரு சம்பவம் ஏற்பட்டிருப்பது, இனங்களுக்கிடையிலான உறவைச் சீர்குலைக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கே வழிவகுக்கும்.

போர் முடிந்து சமாதானம் ஏற்பட்ட பின்னர் தமிழ் - முஸ்லிம் உறவு தழைத்தோங்கி மலர்ந்து வரும் தற்போதைய கால கட்டத்தில், இவ்வாறான சிறிய சம்பவங்கள் பெரிதுபடுத்தப்பட்டு இரு இனங்களுக்கிடையிலான சச்சரவாக, அது மாறுவதற்கு நாங்கள் அனுமதிக்க முடியாது.

திருமலை மாவட்ட முஸ்லிம்களுடன் நீண்டகாலமாக நல்லுறவுடனும், அன்னியோன்னியமாகவும் வாழும் உங்களைப் போன்ற மூத்த தலைவர்களுக்கு முஸ்லிம்களின் சமய, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் நன்கு தெரியும். அது மட்டுமன்றி நான் உட்பட நான் சார்ந்த சமூகமும் உங்களை ஒரு நீதியான, நேர்மையான அரசியல் தலைவராகவே கருதி வருகின்றோம். அநியாயங்களுக்கு நீங்கள் ஒரு போதுமே துணை போனவர் அல்லர். அதேபோன்று இனியும் அவ்வாறு நீங்கள் அநீதியான செயற்பாடுகளுக்கு இடமளிக்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கையிலேயே இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். இந்தப் பிரச்சினையில் அவசரமாக நீங்கள் தலையிட்டு, சமரசத் தீர்வொன்றைக் காண வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.

முஸ்லிம்களின் கலாசார உடையானது இன்று, நேற்று திடீரென்று வந்த ஒன்றல்ல என்பதை, முஸ்லிம்களுடன் நெருங்கிப்பழகும் நீங்கள் நன்கறிவீர்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரே மொழி பேசும் சிறுபான்மைச் சமூகத்தினராவர். கடந்த காலங்களில் இரண்டு சமூகங்களுக்கிடையிலான சிற்சில பிரச்சினைகளை பூதாகரமாக்கி, பிளவுகளை ஏற்படுத்தி அவற்றில் குளிர்காயப் பல்வேறு தீய சக்திகள் ஈடுபட்டன. அதே போன்று மீண்டும் தமிழ்- முஸ்லிம் உறவைச் சீர்குலைத்து ஆதாயம் தேடச் சில தீயசக்திகள் மீண்டும் முற்பட்டு வருகின்றன. இனியும் இரண்டு சமூகங்களும் ஒருவரோடு ஒருவர் புரிந்து வாழவும், ஒருவரை ஒருவர் மதித்து வாழவும் சிறந்த அடித்தளம் கட்டியெழுப்பப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

திருகோணமலை மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதியாகவும், தமிழர்களின் தலைவராகவும் அனைத்துச் சமூகங்களினாலும் பெரிதும் மதிக்கப்படுபவருமான நீங்கள், திருமலை மாவட்டத் தமிழ்- முஸ்லிம் அரசியல்வாதிகள், சமூகத்தலைவர்கள், இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் மற்றும் கல்விசார் ஆர்வலர்கள் அனைவரையும் அழைத்து, சமரசப் பேச்சின் மூலம் சுமூகமான, நியாயமான தீர்வை ஏற்படுத்துமாறு நான் அன்பாய் வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (5)



## ரூ.50 லட்சத்தில் விமல் விருந்து

### மகளின் 9 'ஏ' பெறுபேறுக்காக

கொழும்பு, ஏப். 29
கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டலில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, ஆடம்பர விருந்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 12ஆம் திகதி சங்கிரிலா ஹோட்டலில் 50 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பணத்தைச் செலவிட்டு இந்த விருந்து நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய விமல் வீரவன்சவின் மகள் 9 'ஏ' பெறுபேறு பெற்றிருந்தார். அதற்காகவே இந்த ஆடம்பர விருந்தை விமல் வீரவன்ச வைத்துள்ளார்.

இந்த விருந்தில் 800 பேர் கலந்து கொண்டுள்ளனர். சங்கிரிலா ஹோட்டலில் ஒருவருக்கான உணவின் பெறுமதி 6 ஆயிரத்து 650 ரூபாவாகும். விருந்தில் கலந்து கொண்டவர்களின் உணவுக்கு மாத்திரம் 53 லட்சத்துக்கு 20 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது.

விருந்தின் பின்னர் ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி விமல் வீரவன்ச உள்பட குடும்பத்தினர் கதிர்காமம் கோயிலுக்குச் சென்று மகளின் பரீட்சைக்காகச் செய்த நேர்த்திக்கடனை நிறைவேற்றினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## கட்டுநாயக்காவில் காணாமற்போகும் பயணப் பொதிகள்

கொழும்பு, ஏப். 29
கடந்த மூன்று மாத காலப் பகுதியில் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் சுமார் 75 பயணப் பொதிகள் காணாமற் போயுள்ளன.

கட்டுநாயக்கப் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் ஊடாக நாட்டுக்குள் பிரவேசிக்கும் பயணிகளின் பயணப் பொதிகள் காணாமற்போன சம்பவங்கள் தொடர்பில் 75 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம் திகதி கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் காணாமற்போன பயணப் பொதியை எடுத்துச் சென்றவர் மறைகாணி (சிசிரிவி) மூலம், கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ இவ்வாறு பயணப் பொதிகள் காணாமற் போன சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். (5)

# மைத்திரி-ரணில் இடையே புரிந்துணர்வு உடன்பாடு

### அதன் பின்னரே அமைச்சரவை மாற்றம்

கொழும்பு, ஏப். 29
அரசின் எதிர்காலப் பயணம் தொடர்பாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படவுள்ளது.

கண்டியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இந்தத் தகவலை வெளியிட்டார்.

'இந்தப் புரிந்துணர்வு உடன்பாடு தற்போது வரையப்பட்டு வருகிறது. புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்பட்ட பின்னரே, புதிய அமைச்சரவை பதவியேற்கும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)






## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



30.03.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

### திருமதி
### மதிவதனி நித்தியகுமார்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள்
இன்று (29.04.2018) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன
நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**புளியங்கூடல் வடக்கு,**
**ஊர்காவற்றுறை.**

**குடும்பத்தினர்.**

(CS 16151)(14,17)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 . 06 . 1941 | 27 . 04 . 2018 |

### திருமதி செபஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ்கா (நவம்)

கரம்பனைப் பிறப்பிடமாகவும் கனகபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ்கா(நவம்) 27.04.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை ஓவசியரின் அன்பு மனைவியும் யசிந்தா (சுவிஸ்), சுவந்தா (கரவெட்டி), அன்ரன் (சுவிஸ்), சிறி (கனடா), ஜெயா (வவுனியா) காலஞ்சென்றவர்களான தேவராசா (பம்பாய்), யோகராசா (மம்மாய்) மற்றும் வசந்தா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் றிச்சாட் (சுவிஸ்), செல்வராசா (அரிசி ஆலை - செல்வா நகர்), ஜெயராணி(சுவிஸ்), நிர்மலா(கனடா), பாலசிங்கம்(வவுனியா), வின்சன்ரைட்(கியூடெக் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியும் றேமன் அமலாவின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(30.04.2018) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இல 76, 8ஆம் பண்ணை கனகபுரத்தில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்திலிருந்து இறுதி ஆராதனைக்காக ஜெயந்திநகர் தூய அந்தோனியர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆனந்தநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.76, 8ஆம் பண்ணை,**
**கனகபுரம்.**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(AC 496) (14,17)

**077 601 0079**

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை செல்வேந்திரன் (துரை)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.09.1961 | 25.04.2018 |

கற்பகபிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மார்க்கம் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வேந்திரன் (துரை) 25.04.2018 புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை பரமேஸ்வரி(கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும் ரமணகுமாரியின் (ரமணம்) ஆருயிர்க் கணவரும் மதுஷா, விதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரி(மணி), மங்கையர்க்கரசி(ரஜீனா), மகேந்திரன்(ஜெயா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற நடராசபிள்ளை, பத்மகௌரி, காலஞ்சென்ற சிறிதரன், கிருஸ்ணகுமாரி(ஜேர்மனி), சாந்தகுமாரி(கனடா), சிறிதினேஷ்(ஜேர்மனி), ரவீந்திரன்(ஜேர்மனி), விஜயகுமார்(கனடா), இந்துமதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலோஜினி(சுவிஸ்),நிரூபன் (சுவிஸ்) நிறைந்தினி(யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), நிறைந்தன்(புத்தகம் கட்டுநர் - யாழ் பல்கலைக்கழக நூலகம்), நிகாஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்), காலஞ்சென்ற காண்டீபன், சஞ்சத், சஞ்சீவ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஷாயகா(கனடா), வர்ஷகா, சௌமிதா, பவின் ஆகியோரின் பெரிய தந்தையும் சிந்துஜா, சிறீவினோத், விருதன் ஆகியோரின் சிறிய தந்தையும் கஜராம், சங்கவி, நிரேனி, நிசாரா, தனோஜன், காருணியா, கவினியா, நித்திலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2018) திங்கட்கிழமை Riverside Cremetorium, Canada இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகபிள்ளையார் கோயிலடி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்: நிறைந்தன்**
**(அப்பன் - மருமகன்)**

**021 492 5994/ 077 551 4327**

(CS 16009)(14,17)

# பாடசாலை அதிபரும் தலைமைத்துவ செயல்முறையும்

நடேசு தயாளன்

பாடசாலைத் தலைமைத்துவம் என்பது ஒரு செயன்முறையாகும். இது திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் தொடர்பான திறன்களை வெளிப்படுத்துவதோடு ஆசிரியர்களை, மாணவர்களைப் பாடசாலைச் சமூகத்தினரை உற்சாகமூட்டுதல் என்பவற்றுடன் தொடர்புபட்ட செயல்முறையாகும். இவற்றினூடாகப் பாடசாலைச் சமூகம், ஆசிரியர்கள், பெற்றோர் என அனைவரும் இணைந்து கல்வியின் பொது இலக்குகளை அடைந்து கொள்வதற்கான செயல்முறையாகவும் இது விளங்குகின்றது.

**அதிபரின் வழிகாட்டல்**

பாடசாலையொன்றின் தலைவரானவர், தான் நகர்ந்து செல்ல வேண்டிய பாதை தெரிந்தவராக அந்தப் பாதை வழியே ஏனையவர்களையும் இணைத்துப் பயணிப்பவராக ஏனையோருக்கு வழிகாட்டுபவராக வெற்றிக்கும் தோல்விக்குமிடையேயான தெளிவான வேறுபாட்டைத் தெரிந்தவராக விளங்குதல் அவசியமானதாகும்.

பாடசாலைக்கான தலைமைத்துவமானது பன்னாட்டு ரீதியாக முன்னுரி மைப்படுத்தப்பட்ட ஒன்றாகவுள்ளது. பாடசாலையினது வெளியீட்டில் பெரும் தாக்கத்தை உண்டுபண்ணுவதாகவுள்ள இந்தச் செயல் முறையானது பாடசாலைக்கு அதிகளவு சுயாட்சியை வழங்க முனையும் இந்த வேளையில் சிறந்த செயலாற்றலுடையதாக விளங்க வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

இத்தகைய பாடசாலைத் தலைமைத்துவமானது வெற்றிபெற்ற தலைமைத்துவமாக விளங்க வேண்டுமானால் நோக்கக் கூற்றினை தெளிவாக வடிவமைத்தல், கற்றல் கற்பித்தலினை வலுவூட்டல் பாடசாலையின் கவின் நிலையை மீள்வடிவமைத்தலும் வகிபாகத்துக்கேற்ப பொறுப்புக் கூறலுக்கு தயாராதல், கலைத்திட்ட நடைமுறையை வலுவுடையதாக்கல், ஆசிரியர்களது செயன் முறையில் தர மேம்பாட்டை ஏற்படுத்தல், பாடசாலையின் உள்ளக, வெளியகச் சமூகத்தினரிடையே உறவினை வலுவடையச் செய்தல், நிறுவனத்தினரும் கல்விச் செயல்முறையினதும் இலக்குகளை அடைவதற்கு வசதிகளை ஏற்படுத்தல், வெளியீட்டுக்கான வளங்களைத் தொடர்புபடுத்தல், பாடசாலையினை மகிழ்ச்சிகரமான இடமாக மாற்றியமைத்தல், ஆக்க மலர்ச்சிச் சிந்தனையுடன் செயல்படலும் ஏனையவர்களை வலுவூட்டலும் வகை கூறலுக்குட்பட்ட விடயங்களை எதிர்கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக் கொள்ளல், பாடசாலையைச் சுமுகமாகச் செயற்பட வைத்தல், வினைத்திறனான முகாமைத்துவ உத்திகளைக் கையாளல் என்பன அவசியமான தேவையாகவுள்ளது.

**நுட்பமான அறிவு அதிபரிடம் அவசியம்**

வினைதிறனான தலைமைத்துவ இயல்பு கொண்ட பாடசாலைத் தலைவரானவர் பாடசாலையின் நடத்தை இயல்புகளை அதனது அமைவிட நிலைமைகளை உணர்ந்தவராகவும் விளங்குவார். சமூக நிலைமைகள், ஆளிடைத் திறன்கள் என்பவற்றினதும் செயலாற்றம் தொடர்பிலும் அறிவுடையவராக விளங்குவார். நிறுவனக் கட்டமைப்பு வரலாறு, அரசியல் நிலைமைகள் தொடர்பிலான தெளிவும் அவரிடம் காணப்படும். பாடசாலைச் செயன்முறை தொடர்பிலான நுண்பமான அறிவு நிரம்பப் பெற்றவராகவும் காணப்படுவார் பாடசாலைத் தலைமைத்துவத்தில் பாடசாலையின் வகை முதன்நிலை முகாமையாளரது கல்வித் தகைமை, வயது, சேவை, அனுபவம், பாடசாலை அமைவிடம், தனியாள் இயலுமை, நிர்வாகத் தலைமைத்துவ இயல்பு என்பன நோக்கப்பட வேண்டியுள்ளது.

பாடசாலையொன்றைப் பொறுத்தவரையில் கற்றல், கற்பித்தல் செயல்முறையே பாடசாலையின் முக்கிய இலக்காகவுள்ளது. எனவே பாடசாலைத் தலைமைத்துவமும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதாக விளங்க வேண்டும். மேலும் பாடசாலைகளானது கலைத்திட்டத்தின் இலக்குகளை அடையத் தவறும் மாணவர்களுக்கான விசேட செயல் திட்டங்களைத் திட்டமிட்டு வழிநடத்த வேண்டிய தேவையுள்ளதால் இத்தகைய திட்டங்களைத் தயாரிக்கக் கூடிய இயலுமையுடையவராகப் பாடசாலைத் தலைவர் விளங்குதல் அவசியமானதாகும்.

**இணை பாடவிதானச் செயற்பாடுகள்**

பாடசாலைக்கான தலைமைத்துவமானது இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், திட்டமிடல், நேரசூசிகை தயாரித்தல், ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஊக்குவித்தல் ஆசிரியர் கூட்டத்தை நடத்துதல், முரண்பாடுகளை முகாமை செய்தல், ஆரோக்கியமான பாடசாலைச் சமூகத்தினைத் தோற்றுவித்தல், ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் ஒழுங்குபடுத்துதல், பாடசாலை ஆவணங்களைப் பேணுதல், மாணவர் அடைவுகளை மதிப்பீடு செய்தல், நிதியீட்டங்களுக்கான வழிமுறைகளைத் தேடியறிதல், சமூக நோக்குடன் செயற்படுதல் என்பற்றினை உள்ளடக்கிய திறன் கொண்டதாகக் காணப்பட வேண்டும்.

பாடசாலைத் தலைமைத்துவமானது திட்டமிடல் செயல்முறை தொடர்பில் கூடிய கவனத்துடன் செயலாற்றுவதாகவும் விளங்கவேண்டியுள்ளது. இதன் மூலமே தன்னால் வழி நடத்தப்படும் பாடசாலையின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்பதோடு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடியுமாயிருத்தல் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம் என்போரினை ஊக்குவிக்கவும் ஆக்க மலர்ச்சிச் சிந்தனைக்கும் வழிசமைப்பதாகவும் இருக்கும்.

**இலக்கு நோக்கிய நகர்வு**

வெற்றிகரமான பாடசாலைத் தலைமைத்தவமானது வளக்கணக்கெடுப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதாக இருக்கும். இதன் மூலமே தன்னிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி உச்சப் பயன் கொண்ட இலக்கு நோக்கிய நகர்வை மேற்கொள்ள முடியும். பாடசாலையின் முன்னோக்கிய நிகழ்ச்சித் திட்டங்கள் குறுங்கால, நீண்டகால நோக்கில் திட்டமிடுவதற்கு இது உதவியாக இருக்கும்.


பாடசாலைத் தலைமைத்துவமானது ஆசிரியர் கூட்டங்களைத் திட்டமிட்ட வகையில் நடத்துவதனூடாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், தீர்மானங்களை மேற்கொள்ளுதல், தொடர் செயற்பாட்டுக்கான ஊக்கங்களை வழங்குதல், குழு உணர்வினை வளர்த்தெடுத்தலும் கூட்டுணர்வி னைக் கட்டியெழுப்பலும், ஆசிரியர் மாணவர்கள் செயலாற்றங்களை மீளாய்வு செய்தலும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணவும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். இதற்காகத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நடத்துதலும் இலக்குகள் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் படிமுறையொழுங்கில் கட்டியெழுப்பலும் தீர்மானங்கள் ஜனநாயகப் பாங்கில் மேற்கொள்ளலும் இன்று முக்கியத்துவமுடையதாகவுள்ளது.

வெற்றியடைந்த தலைமைத்துவமானது தனது சொந்த வளர்ச்சிக்கும் கற்போனதும் கற்பிப்போனதும் வளர்ச்சிக்கும் வகை கூறுவதாக விளங்குவது காலத்தின் தேவையாகும். பாடசாலை அதிபரானவர் ஆசிரியர்களது வளர்ச்சியைத் தூண்டுபவராகவும் தனது சொந்த வளர்ச்சிக்காகத் தொடர்ந்து கற்பவராகவும் விளங்குவார். ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் செயன்முறையின் வெற்றியானது பாடசாலைத் தலைமைத்தவத்தின் வளர்ச்சியின் நீடித்த கல்வியின் செயல்முறையில் தங்கியுள்ளதும் நோக்கப்பட வேண்டும். பாடசாலை மாணவர்களது அடைவுக்கும் பாடசாலை செயன்முறையின் வெற்றிக்கும் பங்காற்றக் கூடியதாக பாடசாலைத் தலைமைத்துவம் விளங்க வேண்டியது அவசியமானதாகும்.

**பிள்ளையின் அடைவுக்கு அதிபர் பொறுப்புடையவர்**

இன்றைய பாடசாலைத் தலைமைத்துவமானது அனைத்து மாணவர்களது வளர்ச்சி தொடர்பிலான சாதகமான நிலைகள், பாதகமான நிலைகள் தொடர்பில் கருத்தில் கொள்பவராகவும் சவால்களை வெற்றி கொள்பவராகவும் பாடசாலை முழுவதற்கும் பரந்தளவிலான தரவுகள் தகவல்களை வழங்கக் கூடிய தரவுத்தளத்தினை தன்னகத்தே கொண்டதாகவும் விளங்குதல் அவசியமானது.

ஆசிரியுர்களிடத்தில் தலைமைத்துவத்தை உருவாக்கல், அறிவுறுத்தல், தந்திரோபாயம் மதிப்பீட்டு அளவீடுகள் தொடர்பான ஆளணி அபிவிருத்தி தொடர்பான தெளிவு உடையவராகவும் விளங்குதல் வேண்டும். ஒழுக்கவியல் ரீதியான தீர்மானம் மேற்கொள்ளும்திறன் தனது குழுவினரிடையே பல்திறன் ஆற்றல்லை வளர்த்தெடுத்தல், தொழில் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுத்தல், அழுத்த நிலைமைகளில் இருந்து பாடசாலைச் சமூகத்தினரை மீட்டெடுத்தல் என்பன தொடர்பில் தெளிவுடையவராக இருத்தல், ஒவ்வொரு பிள்ளைகளினதும் ஆசிரியரதும் திறனுக்கேற்ப அவர்களை முன்னேற்றமடையச்செய்தல் என்பன தொடர்பில் தெளிவுடையவராக இருத்தல் என்பவற்றுக்கப்பால் தொடர்பாடல் திறன் கூட்டினையும் திறன் விஞ்ஞானப் பாங்கான சிந்தனைத்திறன், பிரச்சினை தீர்க்கும் உத்திகள் ஊடாக சேர்ந்தியங்கும் இயல்பை வளர்த்தல், சாதனங்கள் தொடர்பான பொது அறிவு உலகு பற்றிய தெளிவு உடையவராக விளங்குதலும் அவசியமானதாகும்.



பிள்ளையின் அனைத்து விதமான உயர் அடைவுகளையும் பெற்றுக் கொடுத்தலுக்கு அதிபரும் ஆசிரியரும் வகை கூற வேண்டியவர்கள் என்பதோடு அனைவரும் தொழிலுக்குத் தயாரானவர்கள் என்பதனை உணர்த்துபவராகவும் பாடசாலைத் தலைமைத்துவம் விளங்குதல் வேண்டும்.

சிறந்த பாடசாலைத் தலைவரானவர் எதிர்கால நோக்கினை அறிந்தவராகவும் தனது சிந்தனையினை நடப்பு உலகத்துக்குப் பொருத்தமானதாக மாற்றியமைக்கும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். தலைவரானவர் தனது தீர்மானங்கள் அதன் தரம் தொடர்பில் நம்பிக்கையுடையவராக விளங்குதல் என்பதற்கப்பால் தனது கட்டளைகளை ஏனையவர்கள் பின்பற்றச் செய்பவராகவும் விளங்குதல் வேண்டும்.

பாடசாலைகள் சமூகத்துடன் கூட்டு இணையும் போது சிறப்பான செயலாற்றல் திறனை பாடசாலைகளுக்காகப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே பாடசாலைக்கான சமூக அணிதிரட்டலினை மேற்கொள்ளக் கூடிய திறன் பாடசாலை அதிபரிடம் காணப்பட வேண்டும். பாடசாலையானது வாழ்க்கை நீடித்த கல்வி, புதிய சவால்கள் உலக மாற்றங்கள், வேலை உலகின் எதிர்பார்ப்புகள், தொழில்படைக்கு அவசியமான மென்திறன்கள், உலக சமூக அங்கத்தினர் என்ற அடிப்படையில் பொருந்தி வாழக் கூடிய சமூக அங்கத்தவர் உருவாக்கம் என்பவற்றைக் கற்போனிடம் பாடசாலைகள் பெற்றுக் கொடுக்க வேண்டியுள்ளதால் அதற்கான ஆற்றல் மிக்கவராகப் பாடசாலைத் தலைவர் விளங்குகின்ற போது அவரது வாண்மைத்துவமும் உயர்வானதாகக் காணப்படும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வரலாற்றின் திரும்பல் இது!

கொரிய நாடுகள் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளன. 1953ஆம் ஆண்டு கொரியப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், கொரியா வடக்கு, தெற்கு என்று இரண்டாகப் பிரிந்தது. அன்று முதல் இருநாடுகளும் பரஸ்பரம் பகைமை பாராட்டியே வந்தன. 'தென்கொரியா சாம்பராக்கப்படும். தென்கொரியாவுக்குப் புகட்டப்படும் பாடத்தின் மூலம் வடகொரியாவின் வல்லாதிக்கம் உலகத்துக்குத் தெரியவரும்' என்று கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் தெரிவித்திருந்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோன் உன். அந்தளவுக்கு இருநாடுகளும் பரம வைரிகளாக இருந்தன. ஆனால் இந்த மனக்கசப்புக்களை இரண்டு நாடுகளும் முடிவுக்குக் கொண்டுவந்து இணைந்து செயற்படத் தம்மைத் தயார்ப்படுத்தியுள்ளன. இரு நாடுகளின் அதிபர்களும் நேரில் சந்தித்துப் பேசும் அளவுக்கு மாற்றம் சாத்தியமாகியுள்ளது. அதுவும் வெறும் நான்கு மாதங்களில்.

தென்கொரிய அதிபராக இருந்த பார்க் கியூன் ஹை ஊழல்மோசடிகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவர் பதவி விலக்கப்பட்டு, தற்போதைய அதிபர் மூன் ஜெ இன் புதிய அதிபராக கடந்த வருடம் பொறுப்பேற்றார். தனது முதலாவது உரையிலேயே வடகொரியாவுடன் நட்புறவாதல் என்ற விடயத்துக்கு அவர் அழுத்தம் திருத்தமானதும் காத்திரமானதுமான முக்கியத்துவத்தைக் கொடுத்திருந்தார். தென்கொரியாவில் அண்மையில் முடிவடைந்த குளிர்கால ஒலிம்பிக் தொடரில் பங்கெடுக்குமாறு வடகொரியாவுக்கு அழைப்பு விடுத்தார் மூன், இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார் கிம். இதுவே ஆறு தசாப்தகால போரின் திருப்பு முனையாக அமைந்தது என்று கொள்ளலாம்.

வடகொரியா மீது கடந்த பல தசாப்த காலமாக பொருளாதாரத்தடைகள் இருந்த போதிலும், கடந்த ஆறு வருடங்களிலேயே அந்த நாடு அதிகளவான அழுத்தத்தை எதிர்கொண்டது. பன்னாட்டுச்சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை மீறிய தொடர் அணுவாயுதச் சோதனைகளை அடுத்து ஐ.நா., அமெரிக்கா உள்ளிட்ட பல தரப்புக்களும் வடகொரியாவின் மீது ஏகப்பட்ட பொருளாதாரத்தடைகளைக் குவித்திருந்தன. வடகொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும், கனிய வளங்கள், கடலுணவுகள் உள்ளிட்ட பல்வேறு வருமான வாயில்கள் அடைக்கப்பட்டமை வடகொரியாவுக்கு விழுந்த பலத்த அடியே. இதுவும் வடகொரியா வழிக்கு வருவதற்கு ஒருகாரணம். எது எப்படியோ வடகொரியா– தென்கொரியா இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது.

'சர்வாதிகாரி' என்று பன்னாட்டுச்சமூகத்தால் குறிப்பிடப்பட்ட கிம் ஜோங் உன்னின் தனிமனித மனதில் ஏற்பட்ட மாற்றம், 1953ஆம் ஆண்டு கொரியப் போரின் பின்னர் தென்கொரிய எல்லைக்குள் கால்பதித்த முதலாவது வடகொரிய அதிபர் என்ற வரலாற்றுச்சிறப்பை அவருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. இவ்வாறானதொரு தனிமனித மாற்றம் இலங்கைத்தீவின் தென்பகுதி அரசியல்வாதிகளில் ஏற்படாதா என்று அங்கலாய்க்கிறது மனது. சிங்களம், பௌத்தம் என்ற இரண்டும் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பேரினவாதச் சக்திகளாக இருக்கின்ற நிலையில், சிங்கள பேரினவாதத்தை தமது மூச்சாகக் கொண்டு செயப்பட்டுவரும் அரசியல் பிரதிநிதிகளின் மனங்களில் ஏற்படுகின்ற தனிமனித மாற்றமே தமிழர் தாயகத்தின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும். நிம்மதியான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். தென்கொரியா விடுத்த அதே அழைப்பை தமிழர்தாயகம் இன்று தெற்குக்கு விடுக்கிறது. தெற்குத் தலைவர்களின் தனிமனித மனங்களில் மாற்றங்கள் ஏற்படுமா?. அப்படியே, வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னுக்கு ஏற்பட்டதைப் போல.

> இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட இரணைதீவு மக்களின் தொடர்ப் போராட்டம், உலகின் கவனத்தை ஈர்த்துவிட்டது. பெருமளவு மக்கள் வசதியீனங்களுக்கு மத்தியில், தாம் வெளியேற்றப்பட்ட தமது பூர்வீக மண்ணில் இருந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைக் கூட பிறரின் தூண்டுதலால் இடம்பெறுவதாகச் சிலர் கூறலாம். ஆனால் இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையிலேயே அந்த மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

# தவிர்க்க முடியாதவை தமிழர்களின் போராட்டங்கள்

இந்துமதி

வடக்கு மாகாணத் தமிழர்கள் ஒரு சில தரப்பினரால் தவறாக வழிநடத்தப்படுவதாக அரச தலைவர் கூறியுள்ளமை வியப்பைத் தருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பாக வடக்கில் இடம் பெறுகின்ற போராட்டங்களின் பின்னணியில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுவதாகவும் அவர் கூறியதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

### எப்போதுமே பாதிப்பை எதிர்கொண்டுவரும் தமிழ் மக்கள்

இந்த நாட்டில் உள்ள தமிழர்கள் அனைவருமே ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்ட நிலையில் தான் வாழ்கின்றனர். இதற்குப் போரை மட்டுமே காரணம் கூறிக்கொண்டு இருக்க முடியாது. அதற்கு மேலாக, நாட்டில் தமிழர்களுக்கு எதிரான இனவாதச் செயற்பாடுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. போரின் பின்னராவது இனவாதம் ஒழிந்து தாம் நிம்மதியாக வாழலாமெனத் தமிழர்கள் நினைத்தனர். ஆனால் அவர்களது விருப்பத்துக்கு மாறாகவே எல்லாமும் இடம்பெற்று வருகின்றன.



அரசு தமிழ் மக்களது குறைகளைப் போக்குவதில் அக்கறையுடன் செயற்படவில்லை. இதனால் எதையும் போராடித்தான் பெறவேண்டும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். போராட்டம் அவர்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளைத் தேடிக் களைத்துப் போயுள்ள நிலையில், தொடர்ப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமது உறவுகள் நாட்டின் எங்கோ ஓரிடத்தில் உயிருடன் உள்ளதாகவே இவர்கள் இன்னமும் நம்புகின்றனர். இவர்களை எவருமே போராடுமாறு தூண்டிவிடவில்லை. ஆனால் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் போராட்டத்தில் ஈடுபடுமாறு அவர்களைத் தூண்டுவதாக அரச தலைவர் கூறியுள்ளதை ஏற்க முடியவில்லை. இறுதிப் போர் இடம்பெற்றபோதுகூட மகிந்த அரசு அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது மிகக் கடுமையாக நடந்து கொண்டது. அவற்றைக் கண்காணிக்கவும் செய்தது. போரின் இறுதிக் கட்டத்தில், போர் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து அங்கு தொண்டுப் பணிகளில் ஈடுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்களை உடனடியாக வெளியேறிவிடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. போர்க் குற்றங்கள் தொடர்பாக இந்த நிறுவனங்கள் அறிந்துவிடக் கூடாது என்பதே இதற்கான பிரதான காரணமாகும். இவர்கள் வெளியேறுவதை விரும்பாத மக்கள், அவர்களைத் தடுத்துள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்முடன் தங்கியிருப்பது தமக்குப் பாதுகாப்பென அவர்கள் நம்பியதே இதற்கான காரணமாகும். அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேற்றிவிட்டு மகிந்த அரசு தமது விருப்பத்துக்கு ஏற்றவாறு போரை நடத்தியது. மக்கள் தங்கியிருப்பதற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு வலயப் பகுதிகள், மருத்துவ மனைகள் ஆகியனவும் தாக்குதல்களுக்கு உள்ளாகின. இதில் ஏராளமான மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இவற்றுக்கான சாட்சியங்களைப் பெறமுடியவில்லை. இதன் மூலம் அரசின் நோக்கமும் நிறைவேறியது.

### அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான அரச தலைவரது குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை

ஆனால் மகிந்த பாணியில், தற்போதைய அரச தலைவர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீது குற்றம் சுமத்துவதை ஏற்க முடியவில்லை. அதைவிட காணாமல் போனவர்களும், அரசியல் கைதிகளும் இல்லையெனவும் அவர் மீண்டும் கூறியுள்ளதையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மேலும் படையினர் கையகப்படுத்தி வைத்திருந்த பொதுமக்களின் காணிகள் தொடர்பாகவும் அரச தலைவர் தெரிவித்த கருத்தையும் முரண்பாடானதொன்றாகவே கருத வேண்டியுள்ளது. பொதுமக்களின் காணிகளில் பெரும்பாலானவை ஏற்கனவே விடுவிக் கப்பட்டுவிட்டதாகவும், சிறிய அளவிலான காணிகள் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

தமிழர்களுக்குப் போராட்டங்கள் புதிதானவை அல்ல. நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

### தமிழர்களது போராட்டங்கள் வரிசையில் மிகக் கடைசியானது இரணைதீவு மக்களது போராட்டம்

இறுதியாக ஆரம்பிக்கப்பட்ட இரணைதீவு மக்களின் தொடர்ப் போராட்டம், உலகின் கவனத்தை ஈர்த்து விட்டது. பெருமளவு மக்கள் வசதியீனங்களுக்கு மத்தியில் தாம் வெளியேற்றப்பட்ட தமது பூர்வீக மண்ணில் இருந்து கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைக்கூட பிறரின் தூண்டுதலால் இடம் பெறுவதாகச் சிலர் கூறலாம். ஆனால் இனியும் பொறுக்க முடியாது என்ற நிலையிலேயே அந்த மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். இது அந்த மக்கள் சுயமாக எடுத்த முடிவு என்பதால், அதைக் கொச்சைப்படுத்த முடியாது.

அரச தலைவர் இனியாவது தமிழர்களின் போராட்டங்களின் உண்மையான தார்ப்பாரியத்தை உணர்ந்து கருத்துக் கூற வேண்டும். வடக்கில் புலிகள் மீண்டும் தலையெடுத்துள்ளதாக இனவாதிகள் பொய்யான பரப்புரைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், அரச தலைவர் கூறுகின்ற கருத்துக்கள் அவர்களை மேலும் ஊக்குவிக்கவே செய்யும். அது மட்டுமல்லாது தமிழர்கள் தொடர்பாக மற்றவர்கள் தவறாக நினைப்பதற்கும் வழி வகுத்துவிடும்.

# இளைஞர் மாநாட்டில் அரசியல் வேண்டாம்

சேரலாதன்


தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இளைஞர் மாநாடு ஒன்று இடம்பெற விருப்பதாக ஊடகமொன்று தலைப்புச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டலை மேற்கொள்வது தேவையான ஒன்றுதான். ஏனென்றால் இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் இன்றைய இளைஞர்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆனால் அவர்களை ஒன்று திரட்டுவதும், அவர்கள் மனதில் அரசியல் செயற்பாடுகள் குறித்த தவறான எண்ணங்களைப் புகுத்துவதும் ஏற்கத்தக்கதல்ல.

### இளைஞர் மாநாடு தொடர்பாக எழும் சந்தேகங்கள்

தமிழ் மக்கள் பேரவையில் அரசியல் சார்ந்தவர்களின் கரங்கள் ஓங்கியிருப்பதால், இந்த இளைஞர் மாநாடு தொடர்பான சந்தேகங்கள் எழத்தொடங்கிவிட்டன. முதலமைச்சர் விக்னேஸ்வரன்கூட முன்பு ஒரு தடவை இளைஞர்களுக்கு அழைப்பு விடுவித்து உரையாற்றியமை நினைவுக்கு வருகின்றது. இதன் மூலமாக இளைஞர்களது ஆதரவை அவர் நாடிநிற்பது தெளிவாகத் தெரிகின்றது. பேரவையின் இணைத் தலைவர் என்ற வகையில் இந்த இளைஞர் மாநாட்டில் விக்னேஸ்வரன் பிரதான இடத்தை வகிக்கப்போவது ஒன்றுமே புதிதான விடயமல்ல.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. இதில் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் நிறுத்தப்படமாட்டாரென்பது ஓரளவு உறுதியாகிவிட்டது. கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் இதை வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டார். விக்னேஸ்வரனுக்கும் இது நன்கு தெரியும். இதனால்தான், அடுத்த மாகாணசபைத் தேர்தலில் தாம் தனிக்கட்சி அமைத்தோ அல்லது கூட்டணி சேர்ந்தோ முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். இதனால் இளைஞர்களின் ஆதரவைத் திரட்டுவதற்கான வியூகங்களையும் அவர் வகுத்துவிட்டார்.





### வடபகுதி வேலையற்ற இளைஞர்கள் விரக்தி நிலையில்

வடபகுதி இளைஞர்களில் பலர் உரிய வேலைவாய்ப்புக்கள் இன்றி விரத்தி யுடன் வாழ்ந்து வருகின்றனர். மாகாணசபையால் இவர்களின் குறையைத் தீர்க்க முடியவில்லை. அதிகாரங்கள் வழங்கப்படாமையே இதற்கான காரணமென மாகாணசபையின் சார்பில் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று அதன் மூலமாக பணம் சம்பாதிப்பதில் மாகாணசபை உறுப்பினர்கள் ஆர்வத்துடன் செயற்படுவதைக் காண முடிகின்றது.

கடந்த காலங்களில்கூட அரசியல்வாதிகள் இளைஞர்களைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். இல்லாத ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களை ஏமாற்றியும் வந்துள்ளனர். தமிழ் ஈழம் அமையப் போகின்றது. அங்கு இளைஞர்கள் சகல வளங்களையும் பெற்று வாழமுடியும் என்றுகூட ஆசைவார்த்தைகள் கூறி இளைஞர்களைத் திசை திருப்புவதற்கு முனைந்தனர். இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்குவதற்கு இதுவும் வழிவகுத்ததெனலாம். ஆயுதப் போராட்டம் வெற்றி பெற்றிருந்தால்

அரசியல்வாதிகள் இளைஞர்களைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். இல்லாத ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களை ஏமாற்றியும் வந்துள்ளனர். தமிழ் ஈழம் அமையப் போகின்றது. அங்கு இளைஞர்கள் சகல வளங்களையும் பெற்று வாழமுடியும் என்று கூட ஆசைவார்த்தைகள் கூறி இளைஞர்களைத் திசை திருப்புவதற்கு முனைந்தனர். இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்குவதற்கு இதுவும் வழி வகுத்த தெனலாம்.

தமிழர்களின் அவலங்களுக்கும் ஒரு தீர்வு கிடைத்திருக்கும். ஆனால் அதுவும் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. போரினால் ஏற்பட்ட அழிவுகள் என்றுமே ஈடுசெய்ய முடியாதவை. தமிழர்களின் அடித்தளத்தையே போர் ஆட்டிப் பார்த்துவிட்டது. ஏராளமான இளைஞர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் பலர் அங்கங்களை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

### முன்னாள் போராளிகளது அவல வாழ்க்கை

முன்னாள் போராளிகள் என்ற பெயருடன் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்ற ஆயிரக் கணக்கான இளைஞர்களை நாம் காண்கின்றோம். இலட்சக் கணக்கானவர்கள் புலம் பெயர்ந்தும் வெளிநாடுகளில் வசிப்பதற்கும் போரே காரணமாக அமைந்தது.

இவற்றையெல்லாம் பார்த்த பின்னரும் இளைஞர்களுக்கு உசுப்பேற்றுகின்ற நட வடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

இளைஞர் மாநாடு என்ற பெயரில் விக்னேஸ்வரனுக்கு ஆதரவு திரட்டுகின்ற பணிகள் ஆரம்பமாவதை இப்போதே யூகிக்க முடிகின்றது. கடந்த தடவை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பேரவையின் ஆலோசனைக்கூட்டம்பலத்தவாதப்பிரதிவாதங்களுடன் முடிவு பெற்றதை எளிதில் மறந்துவிட முடியாது. பேரவையில் அரசியல் கலந்துள்ளதே இதற்கான காரணமெனவும் கூறப்பட்டது.

தமிழ் மக்கள் பேரவையினர் ஆத்ம சுத்தியுடன் இந்த இளைஞர் மாநாட்டைக் கூட்டுவார்களாயின், அங்கு அரசியல் கலப்பில்லாததொரு சூழ்நிலை தென்பட வேண்டும்.

இளைஞர்களின் மனதில் குரோதமும், வெறுப்பும் விதைக்கப்படக் கூடாது. விக்னேஸ்வரனுக்கு அரசியல் ஆதரவைத் திரட்டுகின்ற பணிகளும் இடம்பெறக் கூடாது. இளைஞர்களுக்கு நல்லதொரு வழியைக் காட்டுகின்ற மாநாடாகவே அது அமைய வேண்டும்.

அதைவிடுத்து இளைஞர் மாநாடு என்ற பெயரில் இளைஞர்களைத் தவறாக வழி நடத்துகின்ற செயற்பாடுகள் இடம்பெறுமாயின் அதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

---

## ஆசிரியருக்கான கடிதம்

### இருந்ததையும் கெடுத்த கதைதான் இது!



தட்டாதெருச் சந்தியில் இருந்து ஆறுகால்மடம் நோக்கித் திரும்புப் வீதி ஒப்பீட்டு அளவில் அந்தப் பகுதியில் உள்ள ஏனைய வீதிகளை விடவும் தாழ்வானது. வீதியில் ஆங்காங்கே பள்ளங்களும் உள்ளதால் மழைக் காலங்களில் அந்த வீதியால் பயணிப்பதென்பது கெட்ட கனவுபோன்றதுதான். மழை வெள்ளம் தேங்கியிருந்த ஒரு சமயத்தில் வீதியா அல்லது குழியா என்று அடையாளம் தெரியாமல் விழுந்தெழும்பி நனைந்து சென்ற பெருமக்களில் அடியேனும் ஒருவன். பல தரப்பட்ட கோரிக்கைகளுக்குப் பின்னர் அந்த வீதி அண்மையில் சீரமைக்கப்பட்டது. 50 மீற்றருக்கும் குறைவான அந்தப் பகுதி இரண்டு பகல் பொழுதுகளில் சீரமைக்கப்பட்டமை எனது அவதானம். எனினும் வீதி இன்னமும் முழுமை பெறவில்லை. வீதியின் பள்ளம் தற்போது நிரப்பப்பட்டுள்ளது. எனினும், தார் ஊற்றப்படாத காரணத்தால் வீதியை நிரப்புவதற்காக போடப்பட்ட கற்கள் (ஈட்டி போன்று கூர்மையான கற்கள்) அந்தப் பகுதியால் பயணத்தை மேற்கொள்ளும் வாகனங்களின் ரயர்களைப் பதம் பார்ப்பதும் சமீபகாலப் பதிவுகள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பகுதிக்குத் தார் ஊற்றி, பயணிகளின் சீரான போக்குவரத்துக்கு வழியமைத்துக் கொடுப்பார்களாக.


*லயனல்.*



# நித்திய சுகம் 363

உடலே கோயில்

எம்.அரவிந்தன்



# நீரிழிவில் இருந்து விலகியிருப்போம்

நீரிழிவு நோயின் அறிகுறி, இனங்காணும் முறை, நோயின் தன்மை, நோயின் கனதி உள்ளிட்ட பல விடயங்கள் மருத்துவருக்கும் நபரொருவருக்கும் இடையிலான உரையாடல் பாணியில் இங்கு தரப்படுகிறது.

**கேள்வி:–** 27 வயதான எனது மகளின் நிறையானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்கின்றது. அவரது தற்போதைய நிறை 92Kg ஆகும். அவரது உயரம் 5அடி 4அங்குலம் ஆகும். அவரது மாத சுகவீனமும் ஒழுங்கற்று இருக்கின்றது. இவர் மிக விரைவில் திருமணம் செய்ய இருக்கின்றார். எமது குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி சில குருதிப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தோம். அப்பரிசோதனைகளின் படி சலரோக நோய் ஏற்படும் ஆரம்ப நிலையில் இருப்பதாகக் கூறியிருந்தார். எனது மகளின் உடல் நிலை பற்றி விளக்கிக் கூறவும். இதனால் இவருடைய திருமண வாழ்வில் ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா?

**பதில்:–** உங்களுடைய மகளின் உடல் நிறையானது மிகவும் அதிகமாக உள்ளது. ஒருவரின் உடல் நிறையானது அவரது உயரத்திற்கேற்ப இருத்தல் அவசியமாகும். இதனை உடற்திணிவுச் சுட்டெண் (Body Mass Index - BMI) மூலம் கணித்துக் கொள்ள முடியும்.

கணிப்பீட்டின்படி உங்கள் மகளின் BMI ஆனது மிகவும் அதிகமாக உள்ளது. (35.9) சாதாரணமாக ஒருவரின் BMI ஆனது 18.5 - 23 இனுள் இருத்தல் அவசியமாகும். ஒருவரின் உடற்பருமன் அதிகரித்துச் செல்லும்போது பல வகையான பிரச்சினைகளும் நோய்களும் ஏற்படுகின்றன. இளம் பெண்களில் அவர்களது சூலகங்களில் (Ovaries) சிறு கட்டிகள் போன்ற நோய் (Poly Cystic Ovarian Syndrome ) ஏற்படும் போது உடற்பருமன் அதிகரிப்பதோடு மாதவிடாய் ஒழுங்கீனங்களும் ஏற்படுகின்றது. இவர்களது முகத்தில் பருக்கள் ஏற்படுவதோடு, தேவையற்ற விதத்தில் ஆண்களைப் போன்று உரோம வளர்ச்சியும் ஏற்பட நேரிடுகின்றது.

### உடற்பருமனுக்கான காரணங்கள்

தவறான உணவுப் பழக்க வழக்கங்களும், தேக அப்பியாசமற்ற வாழ்க்கை முறையும் (Sedentary Life Style) இவ்வாறான உடற்பருமன் அதிகரிப்புக்கு பிரதானமான காரணங்களாகும். இதே போல தைரொயிட் சுரப்பிக் குறைபாடு போன்ற சில ஹோர்மோன் பிரச்சினைகளும் இவ்வாறான உடல் நிலை அதிகரிப்புக்கு காரணமாக அமையலாம்.

உங்களுடைய மகள் போன்று திருமணம் செய்யவிருக்கின்ற இளம் பெண்களின் உடல்பருமன் அதிகரிக்கும் போது பல வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மாதவிடாய் சக்கரம் ஒழுங்கற்றுச் சென்று சிறிது சிறிதாக குறைவடைய நேரிடுகின்றது. இவ்வாறு செல்லும் போது கர்ப்பம் தரிக்கும் சாத்தியக் கூறும் குறைவடைய நேரிடுகின்றது.

உங்களுடைய மகளின் குருதிப் பரிசோதனை முடிவுகளின்படி அவர் நீரிழிவுக்கு முந்திய நிலையில் (Pre diabetes stage ) இருக்கின்றார். இவர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து உடல் நிறையைக் குறைக்காது விடின் இன்னமும் சில வருடங்களில் முற்று முழுதான நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு மிக அதிகமாகும்.

இவருக்கு குருதியில் கொழுப்பின் (கொலஸ்திரோல் ) அளவு அதிகரித்தல் மற்றும் உயர் குருதி அமுக்கம் (High Blood Pressure) என்பனவும் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும். எனவே இவர் உடனடியாக வைத்திய ஆலோசனைகளைப் பெறுவது மிகவும் அவசியமாகும்.

### மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் சில

ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும். இனிப்பான சீனி சேர்ந்த உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். அதே போல மாச்சத்து அதிகமுள்ள உணவுகளையும் கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளையும் குறைவாக உள்ளெடுத்தல் வேண்டும். இவரது உடற்பருமனை குறைப்பதற்கு ஏற்ற விதத்தில் நாளொன்றுக்கு எடுக்க வேண்டிய கலோரிப்பெறுமானத்தை கணித்து உணவை உள்ளெடுக்க வேண்டும். இதனை வைத்திய ஆலோசனைப்படி அறிந்துகொள்ள முடியும்.

ஒவ்வொரு நாளும் ஆகக் குறைந்தது 45 நிமிடங்களாவது உடல் வியர்க்கும் வரையில் உடற்பயிற்சி செய்வது அவசியமாகும். வேகமாக ஓடுதல், சைக்கிளோட்டுதல் மற்றும் இயந்திரங்களின் உதவியுடன் அப்பியாசம் செய்தல் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

நீரிழிவுக்கு முந்திய நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு வைத்தியரின் சிபாரிசின்படி மெற்போமின் மருந்தினைப் பயன்படுத்த வேண்டும். இதனால் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு கட்டுப்படுவதோடு, பசியின் அளவும் குறைவடைந்து உடற்பருமனும் குறைவடைகின்றது.

உடல் நிலை பற்றிய பூரணமான பரிசோதனைகள் மேற்கொள்வது அவசியமாகும். சில வகையான குருதிப் பரிசோதனைகளுக்கு (உதாரணம் - கொலஸ்திரோல், தைரொயிட் மற்றும் வேறு ஹோர்மோன்கள்) உட்பட வேண்டியிருக்கும்.

இவரது மாதவிடாயினை ஒழுங்குபடுத்துவதற்கும் உடற்பருமனைக் குறைப்பது அவசியமாகும். வைத்திய ஆலோசனைப்படி குருதி, ஹோர்மோன் மற்றும் ஸ்கான் (கர்ப்பப் பை, சூலகங்கள்) பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்தப் பிரச்சினைக்கு தேவையான மருந்துகளையும் நிபுணத்துவமான வைத்தியரின் ஆலோசனைப்படி பெற்றுக் கொள்ள முடியும்.

இறுதியாக உங்கள் மகளானவர் இன்று முதல் ஆரோக்கியமான வாழ்க்கை மறையை வாழ்வதற்கு உறுதி பூணுதல் வேண்டும். அவ்வாறு வாழ்ந்து உடற்பருமனைக் குறைத்துக் கொள்ளும் போது அவருக்கு இருக்கின்ற பல வகையான பிரச்சினை களிலிருந்து விடுபடக்கூடியதாக இருக்கும். இன்னமும் 6 மாத காலத்தில் திருமணம் செய்யவிருப்பதால் துரிதமாக வைத்திய ஆலோசனையைப் பெற்று உடல் நிறையைக் குறைத்து, குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்தி, மாதவிடாய் சக்கரத்தை ஒழுங்காக்கிக் கொள்வது இன்றியமையாததாகும். இதன் மூலம் பல நீண்ட காலப் பிரச்சினைகளை, குறிப்பாக கர்ப்பம் தரிக்காத நிலைமையை (Subfertility ) தவிர்த்துக் கொள்ள முடியும்.

### நீரிழிவு நோயாளிகளுக்கான கவனக் குவிவு

நீரிழிவு நோய், கண், மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களைப் பாதிக்கும்.

இந்த நோய் உள்ளோர்க்கு ஏனையவர்களை விடவும் பார்வைக் கோளாறு ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

கண்களில் பாதிப்பை ஏற்படுத்தும் முக்கியமாக விழித்திரையின் குருதி நாளங்களைப் பாதிக்கும்.

விழித்திரையில் ஏற்படும் மாறுதல்களை கண் மருத்துவர்களினால் மட்டுமே பரிசோதித்து கண்டறிய முடியும். மூளை, இருதயம் மற்றும் சிறுநீரகங்களிலும் இதே மாறுதல்கள் ஏற்படுவதால் இந்தப் பரிசோதனை மூலம் இவற்றின் தன்மைகளையும் அறிந்து கொள்ள முடியும்.

நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரைப் பாதிப்பு, நோயின் தீவிரம் மற்றும் எவ்வளவு காலம் சக்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விடயங்கள் சார்ந்து அமைந்திருக்கும்.

பல வருடங்கள் நோய் உள்ளவர்களில் 70 - 80 சதவீதமானவர்களுக்கு விழித்திரைப் பாதிப்பு ஏற்படும்.

நீரிழிவு நோயாளிகளுக்குப் பார்வையிழக்கும் வாய்ப்பு அதிகம். குறிப்பாக 25 மடங்கு அதிகமாகக் காணப்படும்.

குறைந்த பார்வை அல்லது பார்வையிழப்பு ஏற்படும் வரை எந்தவித அறிகுறிகளும் தெரியாது.

> ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்தல் இன்றியமையாததாகும். இனிப்பான சீனி சேர்ந்த உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். அதே போல மாச்சத்து அதிகமுள்ள உணவுகளையும் கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுகளையும் குறைவாக உள்ளெடுத்தல் வேண்டும். இவரது உடற்பருமனை குறைப்பதற்கு ஏற்ற விதத்தில் நாளொன்றுக்கு எடுக்க வேண்டிய கலோரிப் பெறுமானத்தை கணித்து உணவை உள்ளெடுக்க வேண்டும்.

விழித்திரைப் பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து கதிரியக்கச் சிகிச்சையளிப்பதன் மூலம்கணிசமான அளவில் பார்வையிழப்பைத் தடுக்க முடியும்.

லேசர் சிகிச்சை மூலம் இருக்கும் பார்வையைப் பாதுகாக்க முடியும், மாறாக இழந்த பார்வையைத் திரும்பப்பெற முடியாது.

விழித்திரைப் பாதிப்பினால் ஏற்படும் பார்வையிழப்பைத் தடுக்க நீரிழிவு நோயாளிகள் அனைவருமே 12 மாதங்களுக்கு ஒரு முறையேனும் தங்கள் கண்களை கண் மருத்துவரிடம் அவசியம் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். விழித்திரை பாதிக்கப்பட்டிருந்தால் அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் கண் பார்வையை முற்றிலும் இழந்து போகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

*நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை*

சூரியகாந்தி
உதயன்
























# வலி உணர்வோம்

கட்டுரை
ஜெ.காயா




“இப்பிடியேபோனா இன்னும் கொஞ்ச நாளிலை எல்லாரும் இந்த வெயிலுக்க கிடந்து செத்துப்போயிருவம். இது பரவாயில்லை... அங்கைபோய்ப் பாத்தீங்க எண்டாத் தெரியும்... அது ஒரு சின்ன முள்ளிவாய்க்காலேதான். அதுகள் கிடந்து பொசுங்கிக் கொண்டிருக்குதுகள். அதிலை ஒருத்தர்... ஆள் வருத்தக்காரரும்தான்... ஆனா நல்லா இருந்த மனுசன்... முதல் நாள் களிமண் குழைச்சு சாந்துக்கரண்டியால கல்லடுக்கிக் குந்துகட்டிக் கொண்டிருந்த மனுசன்... உந்த வெயிலுக்க... தகரக் கொட்டிலுக்க கிடந்தா...? ஆள் முடிஞ்சுது...!

வயசுபோன ஆக்கள், சின்னப் பிள்ளையள் எண்டு இஞ்சையிருக்கிற பதினாறு குடும்பத்திலையும் பலபேர் இருக்குதுகள்... இப்பிடியேபோன ஒராள் தேறாது...”'

இது சந்தனத்தரையிலுள்ள சசி.

மூன்று பிள்ளைகளின் தந்தை.

சந்தனைத்தரையை அண்மித்த மல்லந்தரையில் குடியேறியவர்களில் ஒருவர் கடந்தவாரமளவில் சாவடைந்திருந்தார். அந்தச் சாவுக்குரிய உடனடிக்காரணமாக அதிகரித்த வெயிலும், கொதித்துக்கொண்டிருக்கின்ற அந்தத் தரையில் அவர்கள் அமைத்திருக்கின்ற தகரக் கொட்டில்களுமே சிலாகிக்கப்பட்டன. அவருடைய இறப்புக்கு இவையெல்லாம்தான் காரணமா? இல்லையா? என்பது தொலைவில் வைக்கப்பட்டாலும், அங்கு குடியேறிய ஏனையவர்களின் நிலையும் பரிதாபத்துக்குரியதாகத்தான் இருக்கிறது...



எவ்வளவு முயற்சி செய்தும் முடியவில்லை. எப்படி முனைந்தாலும் தோல்விதான் எட்டிப்பார்க்கிறது. அந்த வெயிலின் உச்சத்தை எப்படித்தான் சொல்வது...? சூடேறிய அந்தத் தரைக்கும் முறுகிச் சுருண்டுகொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. கொதிநிலை அதிகமாகிக் கொண்டிருந்தது. பாதணிகளுக்கு மேலாக ஏறி, குதிக்காலைப் பதம் பார்க்க விளைந்தது வெயில். 'அப்பாடா' என்றபடி அவர்கள் அமைத்திருக்கும் கொட்டகைக்குள் போய் ஒதுங்கிக் கொண்டேன்.

என்ன கொடுமை...! உள்ளே வெக்கை இன்னும் அதிகமாகிவிட்டிருந்தது. சருமம் எரிந்துகொண்டு வந்தது. கூடவே புளுக்கம். வியர்வை நீராட்ட விழைந்தது. அவர்கள் அமைத்திருக்கும் கொட்டகைக்குள் நிற்பதைக்ககாட்டிலும் வெட்ட வெளியில் நிற்பது உத்தமமாகப் பட்டது. ஆனாலும் அவர்கள் அனைவருக்கும் அந்தத் தகரக்கொட்டகைகள் தான் தஞ்சம். சசி சொன்னதைப்போலத்தான்... அவர்கள் வெந்துகொண்டிருந்தார்கள்.

**இதுமட்டுமல்ல சசி இன்னமும் சொன்னார்...**

"எங்கட சொந்த இடம் பலாலி. உதயகல வாசாலையடி. முருக்கடி எண்டுற இடத்தில இருந்தனாங்கள். எங்களுக்கு அங்கை மூண்டு பரப்புக் காணிக்குக்கிட்டக் கிடக்கு. எனக்கு மட்டுமில்ல இஞ்சை இருக்கிறஎல்லாருக்குமேஅங்கை ஒண்டோ, ரெண்டோ பரப்புக் காணியாவது இருக்குது. நல்ல இடம்... நல்ல தண்ணி... சின்னத் தோட்டம் வைப்பம். சிலவேளை தோட்டக்கூலிக்கும் போவம்... சிலர் சீவல் தொழில் செய்வினம், கடக்கரையை அண்டியிருக்கிறவை மீன்பிடிப்பினம், சில காலங்களிலை தோட்டம் செய்வம். இல்லாட்டிக் கூலிவேலைக்குப் போவம். வாழ்க்கை நல்லபடியப் போய்க்கொண்டிருந்துது. தொன்னூறாம் ஆண்டு இடம்பெயர்ந்தனாங்கள். கையில கிடைச்ச சமானுகளை எடுத்துக்கொண்டு போட்டிருந்த உடுப்புகளோடை வெளிக்கிட்டனாங்கள்... பதினாறு, பதினேழு குடும்பங்களா இஞ்சை வந்து(உடுப்பிட்டி) முகாமிலை இருந்தனாங்கள். பிறகு அதிலை கிடந்த காணி ஒண்டுக்குள்ள எல்லாரும் வீடுகளமைச்சு இருந்தம். கிட்டத்தட்ட இருபத்தெழுவருசம் இருந்தனாங்கள். அது வெளிநாட்டிலை இருக்கிற ஒருத்தற்ற காணியாம். அவர் கோட்சில கேஸ் போட்டு எங்களை எழும்பச் சொல்லி நோட்டீஸ் அனுப்பீற்றார். நாங்கள் எழும்பீற்றம்"

பத்து வருடங்கள்வரை ஓரிடத்தில் தொடர்ச்சியாக வசித்தால், வசித்தவர்களுக்கு அந்த நிலத்தில் உரிமை இருக்கிறது என்றும், அவர்களை அங்கிருந்து அகற்றுவதாக இருந்தால் அவர்கள் குடியமர்வதற்கேற்ப நிலத்துண்டை வழங்கவேண்டும் என்றும் உலாவுகின்ற செவிவழிக் கதைகள் இவ்விடத்தில் உங்களைப் போலவே எனக்கும் பொறி தட்டின. ஆனால், சசி தொடர்ந்து கூறினார்.

"எங்களை அந்த மனுசன் தன்ர காணிக்குள்ளை இவ்வளவு காலமும் இருக்க விட்டதே பெரிய காரியம்! நோட்டீஸ் வந்த உடனை நாங்கள் இருக்கிறதுக்குக் காணி விசாரிக்கத் தொடங்கினம். எல்லாரும் ஒரேயிடத்திலை இருக்கிறமாதிரிக் காணி கிடைக்கயில்லை. இதிலை(சந்தனத்தறை) 13பரப்புக் காணி வாங்கினது. ஆறு குடும்பங்கள் இருக்கிறம். ஆளுக்கு இவ்விரண்டு பரப்புக் காணிப்படி பங்கிட்டனாங்கள். பொதுக்கிணத்துக்கும் உந்த ஒழுங்கைக்கும் மிச்சத்தை விட்டிருக்கு. ஒரு பரப்பு ஒண்டேகால் லச்சம். ஜி.எஸ்மார் குடும்பத்துக்கு ரெண்டு இலட்சம் தந்தவை. நாங்கள் ஆளுக்கு அம்பதாயிரம் போட்டனாங்கள். ஆனா அங்காலை மல்லந்தரையில இருக்கிறவையின்ர காணி விலைகூட. அதிலை ஏழு குடும்பங்கள் இருக்கு. அங்கையும் ஆளுக்க



ரெண்டு பரப்புப்படி வாங்கினவை. இஞ்சாலை இன்னொரு இடத்திலையும் காணி வாங்கினது. அதிலை மூண்டு குடும்பங்கள் இருக்கு..."

"காணிவாங்கிறதுக்கு இரண்டு இலட்சம் தந்திருக்கினம். வீட்டுத் திட்டங்களும் ஏதாவது தாற மாதிரி...?" என்று இடைமறித்த நான், இழுத்தேன்.

"ஓ... நாங்கள் காணி வாங்கிறதுக்குக் காசுக்கு அந்தரப்பட்டுக் கொண்டிருக்க அவை சமுர்த்தி யி லை ரெண்டு இலச்சம் லோன் எடுத்துத் தந்தவை. நாங்கள்தான் அதைக் கட்டிக் கொண்டிருக்கிறம்' என்றார்". அத்தோடு, "வீட்டுத் திட்டம் தாற மாதிரித் தெரியேல்லை. எல்லாரும் இந்தத் தகரத்துக்க கிடந்து சாகிற நிலமைபோலதான் கிடக்கு. இஞ்சை குடிக்கிற தண்ணியில்லை. கிணத்துத்தண்ணி உப்பு. குடிக்கிற தண்ணிக்கு உங்காலை (கையால் திசை காட்டினார்) போகவேணும். விடியமுன்னம்போய்த் தண்ணி எடுத்துக்கொண்டு வந்திருவம். அதைவிட... (அவருடை பேச்சுப் பிசிறு தட்டியது. தெனிப்பில் வித்தியாசம்) மற்றதுக்குப்போறதெண்டாலும்விடியமுன்னமே போயிரவேணும். இங்காலை இருக்கிற சின்னப் பத்தையளுக்கதான். இஞ்சை நிறையச் சின்னனுகள் இருக்கு. இதாலை அதுகளுக்கு வருத்த துன்பம் வந்தாலும் வந்திரும்... அதோடை குமர்ப் புள்ளையள், பொம்பிளையாக்கள் எல்லாருமே இதாலை சரியாக் கஸ்ரப்படுகுதுகள். இப்ப எங்களுக்கு ரொய்லெற் கட்டச் சொல்லி அம்பத்தையாயிரம் ரூபா தந்திருக்கு. அந்தக் காசுக்கை ரொய்லெற் கட்டி முடிக்கிறது கஸ்ரம். அந்தக் காசுக்க சமாளிப்பம் எண்டால் அவை சொல்லுற மாதிரித்தான் கட்டவும் வேணும்... அதுக்கு டபுள் காசு போகும். இப்பதான் காணிக்குக் கடன்பட்டது. கிழமைக்குக் கிழமை அதைக் கட்டவேணும்..." இப்போது அவருடைய வார்த்தைகள் தயங்கின. இது அங்குள்ள அவர்போன்றவர்களின் தேக்க நிலையையும், பொருளாதார வறட்சியையும் சுட்டுவதாக உணர்ந்தேன்.



சந்தனத்தரை, மல்லந்தரை என இவர்கள் புதிதாகச் சொந்தமாக்கியிருக்கின்ற இருப்பிடங்கள் மூன்றிலுமே முதன்மையாக இருப்பது இந்த 'மலசலகூட' இடரே. அதைச் சமாளிக்கும் எத்தனங்களே தற்போது நடந்துகொண்டிருக்கின்றன. தந்தை மகள், கணவன் மனைவி என அவர்கள் ஒன்றிணைந்து, கொழுத்திக் கொண்டிருக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது, சீமெந்துக் கலவையைக் குழைப்பதிலும், தமக்கான மலசலகூடங்களைக் கட்டிவிடுகிற இதர செயல்களிலும் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். வெயிலைக் காட்டிலும் அவர்களை அதிகம் வாட்டியெடுப்பது அது.

0000

அங்குள்ள தகரக் கொட்டகைகள் எல்லாமே அண்ணளவில் ஒரே மாதிரி இருந்தன. அதில் ஒன்றில் மேலதிகமாக உயர்ந்த ஒரு தகரப் பந்தல் இணைக்கப்பட்டிருந்தது. இறந்தவீடு என்பதை அது உணர்த்தியது.

இறந்தவரின் மனைவி சோக மயமாகிக் கிடந்தார். இனம்காண அது உதவியது. அவரிடம் துக்கம் விசாரித்து முடிந்தது. அவர் கதைக்கத் தொடங்கினார்.

"அவர் வருத்தக்காரர் தான். ஆனா... வடிவாத்தான் இருந்தவர். முதல் நாள் வேலை செய்த மனுசன். இதிலை கிடந்தவர். இஞ்சை சரியான வெக்கை எண்டாப்போல நான் மகளின்ரை கொட்டிலுக்கைபோய்க் கிடந்தன். விடியப்புறம்போல வந்து பாத்தா ஆள் அசையாமக் கிடந்தார்(அமைதி காத்தார்). நாங்கள் பலாலி உதயகலைவாணி - அண்ணா வீதியடியில இருந்தனாங்கள். பலாலி மேற்குப்பக்கம். காணி உறுதியை மட்டும் எடுத்துக்கொண்டு உடுத்த உடுப்போடை வெளிக்கிட்டனாங்கள். அவர் அங்கை செத்தல் மிளகாய் யாவாரம் செய்தவர். இடம்பெயந்ததிலையிருந்து தொழிலுகள் அப்பிடியிப்பிடித்தான். மீன் யாவாரத்துக்குப் போறவர். அவருக்கு வருத்தம் வந்திட்டுது. இதிலை ரெண்டு பரப்புக் காணி வாங்கினது. சமுத்தியிலை லோன் எடுத்தனாங்கள்... கிழமை லோன்..." இவரும் இழுத்தார்.

"இனி எப்பிடி லோன் கட்டுவீங்கள்..."

"தோட்டவேலைக்குப் போய்த்தான் கட்டவேணும்"

"என்ன வேலை?"

"வெங்காயத் தோட்டத்திலை கூலி வேலை செய்யப்போனால், அறுநூறு ரூபா தருவினம்"

0000

அநேக ஆண்கள் வேலைக்குப் புறப்பட்டுவிட்டார்கள். குழந்தை ஒன்றை ஏணைக்குள்ளிட்டுத் தலாட்டிக் கொண்டிருந்தார் ஒரு தாய். சிறுவர்களைப் பாடசாலை முடித்து அழைத்து வந்தார்கள் சில தாய்மார்.

பாடசாலைப் பருவத்தினர் அனைவரும் பாடசாலைக்குப் போயிருந்தார்கள். தப்பித் தவறியவர்களாகச் சூழ்நிலையால் சிலர் நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் குழந்தைகளை இடுப்பில் தாங்கியபடி. முதிய தாய் ஒருவர் கொட்டில் நிழலுக்குள் தஞ்சமடைந்திருந்தார். மற்றைய அனைவரும் 'மலசலகூட' கட்டுப்பணியில் வெயில் காய்ந்தனர். இறந்த வீட்டுக்குத் துக்கம் விசாரிப்பதற்கும் ஓரிருவர் வந்துபோயினர். 'லோன்' கட்டுவதற்குப் போனவர்கள் ஓரிருவராக இருப்பிடத்துக்கு வந்துகொண்டிருந்தனர். இவை அங்கு கவனித்தவை.

சொந்தக் காணிகளைப் பறிகொடுத்திருக்கிறார்கள். இருந்த இடத்தை விட்டும் எழுப்பப்பட்டுவிட்டார்கள். தனக்குத் தேவையான இடத்தில் நீதியை வழங்கிக் கச்சிதமாக் காரியமாற்றுகிறது நீதிமன்றம். இங்குள்ள அரச கட்டமைப்புக்களும் நீதிமன்றத்துக்குச் சளைத்துவிடவில்லை. இன்றைக்கு வெயிலில் வெந்துகொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஆனால் அதன் பின்னணிகள் எவராலும் கண்டுகொள்ளப்படவில்லை. தீர்வுமில்லை.

"என்ன வெயிலப்பா... என்ன வெக்கையப்பா..." என்று சலித்தபடி வீடுகளுக்குள்ளும் அலுவலகங்களுக்குள்ளும் இன்னும்பிற கட்டடங்களுக்குள்ளும் பதுங்கியிருக்கும் நாமெல்லாம் எவ்வளவு பாக்கியசாலிகள் என்பது அவர்களுடன் தங்கியிருந்த கணங்களில் புரிந்தது. அது வலிகளை உணர்ந்த தருணம்.

என்ன கொடுமை...! உள்ளே வெக்கை இன்னும் அதிகமாகிவிட்டிருந்தது. சருமம் எரிந்துகொண்டு வந்தது. கூடவே புளுக்கம். வியர்வை நீராட்ட விழைந்தது. அவர்கள் அமைத்திருக்கும் கொட்டகைக்குள் நிற்பதைக்காட்டிலும் வெட்ட வெளியில் நிற்பது உத்தமமாகப்பட்டது.

# “பிரச்சினையை அரசியலாக்காமல் மனிதாபிமானமாக நோக்குதல் வேண்டும்”



பேராசிரியர்
க.தேவராஜா

## இந்தவாரக் கருத்தாளர்

இலங்கையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரால், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள பெருமளவான மக்கள் தமது சொந்தக் காணிகளையும், வீடுகளையும் விட்டு இடம்பெயர்ந்தமை எல்லோரும் அறிந்ததே. இவ்வாறு இடம்பெயர்ந்தோர் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் வாழ்ந்து வருவதுடன், பல்வேறு நாடுகளிலும்கூட அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். 2009ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர்கூட அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாதிருப்பது வேதனைக்குரியதே. புனர்நிர்மாண, மீள்குடி யேற்றத்துக்கென அரசு தனியான அமைச்சைக் கொண்டிருந்தபோதிலும், இன்னமும் இந்த மக்களைச் சொந்த இடத்தில் குடியமர்த்த முடியாமல் இருப்பது கவலைக்குரியதே.

இலங்கையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக் கலவரங்கள் மக்களை இடம்பெயர வைத்தமையை எல்லோரும் அறிவர். 1958, 1977, 1983ஆகிய காலப்பகுதிகளில் இடம்பெற்ற இனக்கலவரங்களால் நாட்டின் தென் பகுதியில் இருந்தும், குறிப்பாகத் தமிழ் மக்கள், ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்தமை யாவரும் அறிந்ததே. அந்தக் காலப்பகுதிகளில் தமிழ் மக்களது உயிரும், உடமைகளும் இழக்கப்பட்ட பரிதாப நிலையை எவரும் மறுப்பதற்கில்லை. இருந்தபோதிலும் இனக்கலவரம் முடிந்த பின்னர், இடம்பெயர்ந்தவர்களில் 75சதவீதமான மக்கள் தமது தொழிலின் நிமித்தம் தத்தமது வாழ்விடங்களுக்கே சென்றிருந்தனர். சிலர் அந்தக் கசப்பான நினைவுகளை மறக்க முடியாமல் தொடர்ந்தும் சொந்த இடத்துக்குத் திரும்பாமல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதுகாப்பான இடங்களில் தங்கிவிட்டனர். இதுவே இலங்கையின் இடப்பெயர்வில் முதற் கட்டமாகும்.

எழுபதுகளின் பிற்பகுதியில் உள்நாட்டுப் போர் ஆரம்பிக்கப்பட்டனர், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் தமது பாதுகாப்புக் கருதி மக்கள் இடம்பெயர்ந்தமையால், சொந்த வீடுகளையும், காணிகளையும் இழக்கும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு இடம்பெயர்ந்தோர் பல கஷ்டங்களுக்கு மத்தியில் நாட்டின் வெவ்வேறு பாகங்களில் சொந்தமாக இருப்பிடங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் தமது சொந்த இடங்களை மீட்க முனைப்புக்காட்டவிடினும் பலர் தமது சொந்த இடங்களில் தம்மைக் குடியேற அனுமதிக்கும்படி தொடரான கோரிக்கைகளைவிடுப்பது மட்டுமன்றி அமைதியான முறையில் பல போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். அத்தகையோரை அவரவர் சொந்த இடங்களில் குடியேற அனுமதிப்பதில் அரசுக்குத் தார்மீகப் பொறுப்பு இருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களின் சொந்த இடங்களை இராணுவம் ஆக்கிரமித்திருப்பதை எவரும் நியாயப்படுத்த முடியாது. அத்துடன் அந்த இடங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இடம்பெயர்ந்த மக்களுக்குத் தொடர்ந்தும் துன்பமிழைக்காது அவர்களைச் சொந்த இடங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கவேண்டும்.


இந்தப் பிரச்சினையை அரசியலாக்காமல் மனிதாபிமானமாக நோக்குதல் வேண்டும். மக்களைத் தொடர்ந்தும் துன்பங்களுக்குட்படுத்தா மல் எல்லா வகையான அமைப்புக்களும் இணைந்து அரசுடன்பேசி அவர்களுக்குச் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொடுப்பது காலத்தின் தேவை.

---

கட்டுரை

இர.சந்திரசேகர சர்மா

# பூமித்தாய் வெப்பமடைகிறாள்



இயற்கையான மக்களின் செயற்பாடுகள் காபனீரொட்சைட்டை வளிமண்டத்தில் சேர்க்கின்றன. காபனீரொட்சைட்டு சமுத்திரங்கள், எரிமலைகள், அழுகும் தாவரங்கள், உயிர்வாழ்வனவற்றின் சுவாசம் என்பவற்றால் உண்டாகிறது. நிலக்கரி, பெற்றோலியம், விறகு என்பனவற்றை எரிப்பதாலும் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் சேர்கின்றது.

புவிக்கோளம் மிக வேகமாகச் சூடேறி வருகிறது. 2020ஆம் ஆண்டளவில் இப்போதுள்ளதிலும் பார்க்க அதன் வெப்பநிலை1. 3பாகை செல்சியசாக அதிகரித்திருக்கும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். புவியைச் சூடாக்குவது முக்கியமாக வளி மண்டலத்தில் அதிகரித்துவரும் காபனீரொட்சைட் வாயுவாகும். இதோடு மீத்தேன், குளோரோபுளோரோ காபன், நீராவி என்பனவும் சேர்ந்து கொண்டு புவியைச் சூடாக்கி வருகின்றன. மீத்தேன் வாயுவின் அளவு ஆண்டுக்கு 1% அதிகரிக்கின்றது எனக் கண்டுள்ளனர்.

இயற்கையான மக்களின் செயற்பாடுகள் காபனீரொட்சைட்டை வளிமண்டத்தில் சேர்க்கின்றன. காபனீரொட்சைட் சமுத்திரங்கள், எரி மலைகள், அழுகும் தாவரங்கள், உயிர்வாழ்வனவற்றின் சுவாசம் என்பவற்றால் உண்டாகிறது. நிலக்கரி, பெற்றோலியம், விறகு என்பனவற்றை எரிப்பதாலும் காபனீரொட்சைட் வளிமண்டலத்தில் சேர்கின்றது. காடுகள், காட்டுத்தீயாலும் மனிதராலும் அழிக்கப்படுவதால் அவை பகலில் தமது ஒளித்தொகுப்புக்காகப் பயன்படுத்த வேண்டிய காபனீரொட்சைட் வளிமண்ட லத்திலேயே இருந்து விடுகிறது.

நைதரசன் உரப்பசளைகள், நெல்வயல்கள் சதுப்பு நிலங்கள், மாட்டுத்தொழுவங்கள், மாடு போன்ற அசைபோடும் விலங்குகளின் வயிறுகள் என்பன மீத்தேன் வாயுவை வளிமண்டலத்தில் சேர்க்கின்றன. இதனால் புவி வெப்பமடைகிறது.

புவி வெப்பமடைவதால் பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

**1.கடல் மட்டம் உயரும்**

துருவங்களிலுள்ள பனிக்கட்டிகள்,பனிமலைகள் உருகத் தொடங்கும். 2050ஆம் ஆண்டில் கடல் நீர்மட்டம் 1.5மீற்றர் உயரும் என விஞ்ஞானிகள் கணித்துக் கூறியுள்ளனர். நீர்மட்டம் உயரும் பிரதேசங்களாகக் கினிகுடாக்கரை, கரீபியன் கடற்கரை, வடகடல்,பால்டிக்கடற்கரை வங்காள விரிகுடாக்கரை, இந்தோனேசியாக்கரை, வடஆஸ்திரேலியாக்கரை பசுபிக் தீவுகள் என்பனவற்றை இனம் கண்டுள்ளனர்.

வங்காள தேசத்தின் மூன்றிலொருபகுதி சமுத்திரத்தினுள் ஆழ்ந்து விடும். மாலைதீவுகள் முற்றாகக் கடலினுள் மறைந்து விடும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள தீவுகள் சில கடலுள் மூழ்கும் அபாயமும் உள்ளது.

**2. காலநிலைகளில் மாற்றம் ஏற்படும்.**

சிலபகுதிகளில் கடும் கோடை ஏற்படும். கடும் புயலாகக் காற்று வீச ஆரம்பிக்கும். துருவங்களில் பனிப்பாறைகள் உருகும்போது அவற்றினுள் அடைந்து கிடந்த மீத்தேன் வாயு வெளியேறும்.

**3.பாலைவனம் உண்டாகும்**

புற்றரைகளும் காடுகளும் எரிந்து குறைந்துவரும். வெள்ளம்,சூறாவளி,காட்டுத்தீ போன்றவை அடிக்கடி ஏற்படும். வளமான நிலங்கள் வறண்டு உணவு உற்பத்தி குறைவடையும்.

**4. மிருகஇனங்கள் அழியும்**

பனிக்கட்டிகள் உருகுவதால் அங்கு வாழ்கின்ற ஓநாய்கள்,துருவமான்கள், எண்ணிலடங்கா பறவைகள் அழிகின்றன. காடுகள் அழிவதால் மிருக இனங்கள் மெல்ல அழிவுறும்.

உலக நாடுகளிலுள்ள சூழல் பாதுகாப்புச் சபையினர் வளிமண்டலம் மாசடைதலையும் வெப்பமடைவதையும் தடுக்குமாறு கோரிவருகின்றனர். அவைகள் அனைத்தும் இணைந்து புவியைச் சூடாக்காமல் பேணுகின்ற பெரும் பணியில் ஈடுபட வேண்டும்.

சதுப்பு நிலங்களில் மீத்தேன் வாயு தோன்றும் என்று குறிப்பிட்டோம். மீத்தேன் வாயு எரியக்கூடியது. அது இரவு நேரங்களில் சதுப்பு நிலங்களின்மேல் எரிந்துகொண்டு செல்லும்.

இதை பலரும் பார்த்துக்கொள்ளிவால் பிசாசு என்று பயந்தார்கள்.

இப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு மயானமும் அருகில் இருந்துவிட்டால் கொள்ளிவால் பிசாசு திரிகிறது என்று சொல்லித் தாமும் பயந்து மற்றவர்களையும் பயமுறுத்தி விடுவார்கள்.

முன்னர் மலைநாட்டில் தேயிலைத் தொழிற்சாலையில் வேலை முடித்து இரவு வீடு திரும்புவர்கள் கையில் பந்தம் ஒன்று பிடித்துக்கொண்டு செல்வார்கள். அவர்கள் மலைகளில் செல்லும்போது பந்தம் மரங்களில் மறைந்தும் பின்னர் வெளிவருவதுமாகச் செல்லும். இதைப் பார்த்தும் பலர் கொள்ளிவால் பிசாசு என்று பயந்திருக்கிறார்கள். அடுதத நாள் பகலில் மலையை அவதானிக்கச் செய்து மரங்களையும் காட்டிய பின்புதான் அவர்களுக்குத் தெளிவு பிறக்கும்.



பீட்சா.
ஜிகர்தண்டா போன்ற
கவனிக்கத்தக்க படங்களை
இயக்கிய கார்த்திக் சுப்புராஜின்
வசனங்கள் இல்லாத திகில்
எனலாம் இதை

# மெர்குரி

**கதைச் சுருக்கம்**
ஒரு மலை நகரம். அதில் சூழலை மாசுபடுத்துகிற ஒரு பாதரசத் தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலையின் நச்சால் பாதிக்கப்பட்டு கேட்கும் திறனையும் பேசும் திறனையும் இழந்த ஐந்து நண்பர்கள். ஒரு நாள் இரவு, இவர்கள் பிறந்த நாளைக் கொண்டாடிவிட்டு, வாகனத்தில் திரும்பிக்கொண்டிருக்கும்போது, ஒரு விபத்து நேரிடுகிறது. இனம்தெரியாத ஒருவர் உயிரிழக்கிறார். பயந்துபோன நண்பர்கள் சடலத்தை ஒரு குழிக்குள் போட்டு மூடிவிடுகிறார்கள். அடுத்த நாள் வந்து பார்க்கும்போது, அங்கு அந்தச் சடலம் இல்லை. பிறகு மூடப்பட்ட தொழிற்சாலைக்குள் ஈர்க்கப்படும் நண்பர்கள் ஒவ்வொருவராகச் சாகிறார்கள்.

**இயக்குநர், இசை, ஒளிப்பதிவாளர்களுக்குப் பாராட்டு**
கமல்ஹாசன் நடித்த பேசும் படம் படத்துக்குப் பிறகு வெளியாகியிருக்கும் வசனமில்லாத படம் இது. ஆனால், பேசும் படத்துக்கும் இந்தப் படத்துக்கும் இடையிலான வித்தியாசம், அந்தப் படத்தில் பேசுவதற்கான சந்தர்ப்பமே இல்லாமல் கதை நகரும். இந்தப் படத்தில், கதாபாத்திரங்களுக்குப் பேச வராது அவ்வளவுதான். சூழலை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு முக்கியமான பிரச்சினையின் பின்னணியில் இந்தக் கதையை உருவாக்கியிருப்பதால் இயக்குநர் பாராட்டப்படவேண்டியவர். வசனங்களே இல்லாத இந்தப் படத்துக்குப் பலமாக இருப்பது சந்தோஷின் இசை. அதேபோல திருவின் ஒளிப்பதிவும் தரம். இந்த இரண்டுக்கும் இணையாகச் சொல்லப்பட வேண்டியது, கலை இயக்குநரின் பணி. மாசுபாட்டால் கைவிடப்பட்ட ஒரு தொழிற்சாலையை அப்படியே கண் முன் கொண்டுவந்திருக்கிறார்கள்.


**பலவீனங்கள்**
ஆரம்பக் காட்சிகள் பொறுமையைச் சோதிக்கின்றன. பெரும் அயர்ச்சி ஏற்படுகிறது. விபத்து ஏற்பட்ட பிறகுதான் படம் சூடுபிடிக்கிறது. ஆனால், அதுவும் சிறிதுநேரம்தான். விரைவிலேயே, விபத்தில் கொல்லப்பட்ட பிரபுதேவா, பேயா அல்லது இறந்தும் இறவாத நிலையில் இருக்கும் உயிரியா? என்பது புரியாமலேயே படம் நகர்கிறது. கடைசியில் பேய் என்றே உறுதியாகிறது. ஒருவர் உயிரோடு இருக்கும்போது கண் தெரியாவிட்டால் பேயான பிறகும் கண் தெரியாது என்பது கதையின் நியதி. சத்தமேயில்லாமல் அதனிடமிருந்து இளைஞர்கள் தப்பியிருக்கலாமே என்ற வாதம் இதனால் ஏற்படுகிறது. ஒரு பாழடைந்த கட்டடம், அதற்குள் சிக்கிக்கொள்ளும் கதாபாத்திரங்கள், அவர்களை வேட்டையாடும் அமானுஷ்ய சக்தி, இறுதியில் மிஞ்சி உயிர் பிழைக்கும் ஒருவரோ, இருவரோ.. என்று காலம் காலமாகப் பார்த்துச் சலித்த வழக்கமான திகில் கதை என்பதால், திரைக்கதையில் பெரிதாகச் சுவை இல்லை.





**பாத்திரங்கள்**
படத்தின் ஆரம்பத்தில் பயமுறுத்தும் பிரபுதேவா, பிறகு மிகச் சாதாரணமாகிவிடுவது பிற்பாதியில் படத்தில் சுவாரஸ்யத்தைக் குலைத்துவிடுகிறது. படத்தில் நடித்திருக்கும் ஐந்து இளைஞர்களும் குறைசொல்ல முடியாதபடி நடித்திருக்கிறார்கள். சைகை மொழி, முகபாவங்கள் மூலம் சிறந்த நடிப்பைத் தந்திருக்கிறார்கள். அதிலும், இந்துஜாவின் நடிப்பு இயல்பும் அழகுணர்ச்சியும் மிக்கதாக ஈர்க்கிறது. கிட்டத்தட்ட இடைவேளையளவில் பிரபுதேவா நுழைகிறார் என்றாலும் அதன்பிறகு அத்தனை இடங்களிலும் ஈடு செய்கிறார். நடனம், நகைச்சுவை, துறு துறு பேச்சு என்று கலகலப்பான நபராகவே அறியப்பட்ட பிரபுதேவா இதுவரை ஏற்றிராத கதாபாத்திரம். மிரட்டலான ஒப்பனையுடன் வந்து நடுங்க வைக்கிறார்.
படம் முடியும்போதும், "நாம் எப்போதும் தவறான எதிரியுடன் மோதுகிறோம்" என்கிறது பிரபுதேவாவின் பாத்திரம். அவரை விபத்தில் கொன்றவர்களைச் சரியாகத்தானே பழிவாங்குகிறார் என்று கேள்வி தோன்றுகிறது. ஐந்து இளைஞர்களுக்கும் காது கேட்கும் திறனிருந்திருந்தால் இந்த விபத்து நடந்து தான் இறந்திருக்க மாட்டேன், அதனால் அதற்கு மூல காரணமான தொழிற்சாலைதான் உண்மையான எதிரி என்று சொல்ல வருவது நல்லதொரு செயல். இது வெறும் திகில் படமல்ல என்பது மனதில் பதிய முற்படுகிறது. ■






# 'டார்க் க்ரைம்ஸ்'

கைவிடப்பட்ட வழக்குகள் மீண்டும் கிளறப்படும்போது, மறைக்கப்பட்ட நீதி, இரகசியங்கள் சீற்றத்துடன் வெளிவர முயற்சிக்கும். மே மாதம் 11ஆம் திகதியன்று அன்று வெளியாகவிருக்கிறது க்ரைம் த்ரில்லரான 'டார்க் க்ரைம்ஸ்'. இந்தக் ஹொலிவூட் திரைப்படத்தின் கதை இந்தவகையைச் சார்ந்ததே.

> புதிய சவால்களில் பொதிந்திருக்கும் புதிர்கள், அவற்றில் சிக்கும் விசாரணை அதிகாரி என அடுத்தடுத்த திருப்பங்களுடன் மீதிக் கதை விறு விறுப்பாகிறது.

**கதை**
கொலைச் சம்பவம் ஒன்றைத் துப்பறிந்து ஆராய்கிறார் பொலிஸ் அதிகாரிஒருவர். மேற்கொண்டுவழக்கு நகராது போகவே அதைக் கைவிட நேர்கிறது. பணியில் கரைந்து போகும் இயல்புடைய அந்தப் பொலிஸ் அதிகாரி, அந்த வழக்கின் துண்டான முனையைத் தனக்குள் புதைத்துக்கொண்டு தொடர்ந்து இயங்குகிறார். ஆண்டுகள் கழிந்து வெளியாகும் நாவல் ஒன்று, கைவிட நேர்ந்த குற்றச் சம்பவத்தின் முடிச்சுகளை தொடர்புபடுத்துகிறது. தன்னால் கைவிடப்பட்ட அந்த வழக்கு ஞாபகத்துக்கு வரவே, அந்த அதிகாரி உத்வேகம் கொள்கிறார். பழைய கொலை வழக்கு விசாரணை புதிய கோணத்தில் மீண்டும் வேகமெடுக்கிறது.
நாவலின் எழுத்தாளரைக் குற்றவாளியாக வரிந்துகொண்டு விசாரணையைத் துரிதப்படுத்தும் அந்த அதிகாரிக்கு எதிர்பாராத அதிர்ச்சிகள் வரிசை கட்டுகின்றன. மறைவாகச் செயல்படும் நிழல் உலகமும் அதன் பின்னணியும் புலப்படுகிறது. கூடவே காவல் அதிகாரிக்கும் அதில் தனிப்பட்ட கண்ணி காத்திருக்கிறது. பழைய வழக்கின் தீர்வு, புதிய சவால்களில் பொதிந்திருக்கும் புதிர்கள், அவற்றில் சிக்கும் விசாரணை அதிகாரி என அடுத்தடுத்த திருப்பங்களுடன் மீதிக் கதை விறு விறுப்பாகிறது.

**உண்மைக்கதை**
பத்தாண்டுகளுக்கு முன்னர் 'த நியூ ஜோக்கர்' சஞ்சிகையில் வெளியான உண்மைச் சம்பவக் கட்டுரை ஒன்றை அடிப்படையாக வைத்து உருவான திரைக்கதையுடன் 'டார்க் க்ரைம்ஸ்' ரசிகர்களின் பார்வைக்காகக் காத்திருக்கிறது. விசாரணை அதிகாரியாக ஜிம் கேரி, எழுத்தாளராக மார்டன் பால் ஆகியோரின் நடிப்பு பன்னாட்டுத் திரைப்பட விழாக்கள் வாயிலாகப் பேசப்படுகிறது. உடன் அகதா கலேஸா, சர்லோட் கெயிர்க் உள்ளிட்டோர் நடிக்க, கிரேக்க இயக்குநரான அலெக்ஸாண்ட்ரோ அவ்ரனஸ் படத்தை இயக்கி உள்ளார்.





கப்ரன் மலரவன்

# போர் உலா 22

“மச்சான் அவசரப்பட்டு பொடியத் தூக்காத, றிலீஸ் சுவிச் ஏதாவது வைச்சிருப்பான்.” றிலீஸ் சுவிச் என்பது ஏதாவது பொருளின் கீழாக வெடி பொருளை அழுத்தி வைப்பதாகும். கனமான பொருள் அகற்றப்பட்டவுடன், வெடிபொருள் வெடிப்பதற்கான அதிர்வு வழங்கித் தொழிற்படும். இது பலத்த சேதத்தை உண்டு பண்ணக்கூடியது.

ஏற்ற முறையில் இரண்டு உடலங்களையும் ஆராய்ந்த பின் கடைக்குள் ஆளுக்கொருவராய் தூக்கிச் சென்று சீமெந்தில் வளர்த்தினோம். இரண்டு சடலங்களிலும் ஏராளமான துப்பாக்கிக் கத்திக்குத்துக்களை அவதானிக்க முடிந்தது.

“பார்த்தியளே, எங்கட பொடிக்கு எவ்வளவு பைனட்சாச் பண்ணியிருக்கிறாங்கள். தங்கட வெறிப் புத்தியை பொடியில காட்டிட்டுத்தான் போயிருக்கிறாங்கள்”என்று கூறிய மாஸ்ரர் வெறித்தபடி நின்றார். “எங்கே போகப் போறீங்கள் காட்டை விட்டு!” தனக்குள் கறுவிக்கொள்வது எனக்குக் கேட்டது.

நெற்றியில் சூடுபட்ட போராளியின் வயிற்றுப் பக்கம் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டுக் கிடந்தது. மற்றையதில் ஏராளமான பொத்தல்கள். ஒரு போர்முனை எத்தனைதான் உக்கிரமாக இருந்தாலும் போரில் பெரும் இழப்புக்களும் ஆத்திரமூட்டும் செயல்களும் மலிந்தாலும், எதிரியின் உயிரற்ற உடல் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அதைக் கைப்பற்றிய வீரர்கள் பின்னர் ஊறு செய்ய மாட்டார்கள். தகுந்த மரியாதையுடன் இறுதிக் கிரியைகளை இராணுவ முறையில் செய்வது, எந்த இராணுவமோ அரசுகளோ தமது கடமைகளாகக் கொள்ளும் விடயமாகும்.

ஆயினும் சிங்கள இனவெறியர்கள் இதற்கு முரணானவர்கள். தமக்கு இழப்புகள், தோல்விகள் ஏற்படும் பட்சத்தில் போராளிகளினது இறந்த சடலங்களையே குதறு வார்கள். இவர்கள் மக்களுக்குள் நுழைந்தால் எத்தனை பெரும் கொடுமைகளை இழைப்பர்? அப்படியான செயற்பாட்டிலிருந்து அவர்கள் மீளமுடியாதவர்கள். இந்த நிலையில் இவர்கள் போராளிகளில் இருந்து பெரும்பாலும் வேறுபட்டு நின்றார்கள். அடக்கப்படும் மக்களை எதிரி மேலும் அடக்குகையில்தான் எமது போராளிகள் முளைவிட்டுப் பெருகுகின்றார்கள். இதை எந்த ஆதிக்க சக்திகளும் இறுதிவரை உணர்வதில்லை... உணரினும் உணராதவராய் நடிப்பர். இது அவர்களது இயல்பு.

இவ்விதம் போராளிகளது உடல்களைச் சின்னா பின்னப் படுத்துவதில் இவர்களுக்கு ஆத்மதிருப்தி ஏற்படுகிறதுபோலும்!

உடல்களை மூடிவிட்டபின் கிணற்றடியை நோக்கிச் சென்றோம். நிறைய உடைகள் கொடிகளில் சிதறிக் கிடந்தன. பலவற்றில் குருதி கிடப்பது தெளிவாகத் தெரிந்தது கிணறு பெரிதான சுற்றளவில் கட்டப்பட்டதாகத் தெரிந்தது. கட்டுக்கள் உயரமாகக் கட்டப்படாமல் ஆபத்தானதாக இருந்தன. அதைக் கடந்து மாந்தோட்டத்தில் ஏராளமான மாங்காய்கள் சிதறிக்கிடந்தன. சில மரங்கள் முறிந்து சிதைந்து கிடந்தன. “லியோ, இங்கே பார், பிவ்ரி எம்ரியள் நிறையக் கிடக்கு!”

“ஓ, உதாலதான் அடிச்சடிச்சு வித்ரோ பண்ணியிருக்கிறான்போல!” கரையோரச் சிலிப்பர்க் கட்டைகளைச் சுட்டிக்காட்டினேன். அவை 50 கலிபர் சூடுகளுக்கு அரணாக இருந்தமையால் முன்னால் கிடந்த பற்றைகள் தொட்டந் தொட்டமாய் கருகிக் கிடந்தன. அந்த அடையாளம் நேராக மலைக்காவலரண் வரை சென்றது.

“இங்கே பார் குருதிக் கறை பட்ட உடுப்புகள்!”

“ஓ, அதிலையும் கனக்கக் கிடக்கு! ஞாயமாத்தான் செத்துக் காயமும் பட்டிருக்கிறாங்கள். ஏலாமத்தான் காட்டுக்குள்ள இறங்கியிருக்கினம்.”

ஆங்காங்கே சிதறிக்கிடந்த ரவைகளை ஒன்றாகக் குவித்து வைத்தோம். கைக்குண்டுகள், துப்பாக்கி எறிகணைகள் பெருமளவு ஆங்காங்கே இருந்தன. அவற்றைப் பக்குவப்படுத்திய பின் ஆபத்தான நிலையில் இருந்த குண்டுகளை மெதுவாகத் திரட்டி “எச்சரிக்கை” என மரத்தில் குறித்து அருகில் குவித்துச் சென்றோம். இவ்வாறு சேர்க்கப்பட்டவற்றில் பாவனைப் பொருள்களும் கிடந்தன.

பகைவனைப் பொறுத்தவரை சிறிய இன்ரமீடியம் ரவைகளும் எம். ரவைகளும் மண்ணில் புதைந்து கிடந்து, சேகரிப்பதில் சிரமத்தைத் தந்தன. ஆயினும் நாம் ஒவ்வொரு ரவையாக, நேரத்தைச் செலவிட்டுக் கிண்டி எடுத்தோம். அரிய பொருள்களைப்போல போராளிகள் கவனமாக மண்ணைத் துடைத்து ரவைகளைப் பெட்டிகளில் இடுவதில் ஆர்வம் காட்டினர். ரவைகளைப் பெறுவதற்காக இடிந்து கிடந்த தூண்களை மிகக் கஷ்ரப்பட்டு அகற்றித் தேடினோம். நேற்றைய மதியத்தின் பின் உணவற்றிருக்கும் போராளிகள் இரவு முழுவதும் போரை நடாத்தியபின் இன்றும் இவ்வளவு ஆர்வத்துடன் தமது கடமையைத் தொடர்கிறார்கள். இந்தக் கணத்தில் மக்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்பு கிறேன். என்னவெனில், எதிரி எம்மை விட ஆட்பலத்திலும் ஆயுத பலத்திலும் மிகுந்து நின்று போரை நடத்துகையில், பெருமளவு நாம் நம்பியிறங்கும் பலம் யாதெனில், அது உள உறுதியும், கொள்கைப்பற்றும், ஈழ மக்களின் மண்ணின் பாற்கொண்ட அன்புமேயாகும். இவையே அசைக்க முடியாத காவலரணில் பெரும் ஆயுதத்துடன் இருக்கும் எதிரியை நாம் காப்புத்தளமற்ற வெட்ட வெளிகளூடு முன்னேறி அழிக்க உதவும் எமது கவசகுண்டலங்களாகும். இவற்றை எமது மக்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது சிறப்பானது. அத்துடன் எதிரியிடமிருந்து கைப்பற்றும் ஒவ்வொரு ஆயுதங்களும் நாளை அவனைக் களத்தில் எதிர்க்கின்றன. ஆயுதங்களைக் கைப்பறச் சென்று வீரச்சாவடைந்த போராளிகளை எண்ணிப் பாருங்கள். எதிரியிடம் மீட்கும் ஒவ்வொரு ரவையும் நாளை எமது அந்நியனின் பாதங்களைக் குறைக்கும். எதிரியிடமிருந்து கைப்பற்றுதலை இயன்றளவு சுறுசுறுப்புடன் நாம் செய்வது இதற்காகவேயாம். இவற்றின் மூலம் எம்மை வலுவாக்கி அந்நிய ஆதிக்கத்தை உடைத்து சுதந்திர ஈழ மலர்வுக்காகப் போராளிகள் கணமும் உழைப்பார்கள் என்பது நிச்சயம். அந்த மைந்தர்களின் தாகத்தை மக்கள் தீர்க்க வேண்டும். எல்லோர்களாலும் இயலாது விடினும் அதை மதித்தாவது நடக்கப் பழகிக்கொள்ளல் வேண்டும். இதுவே மாவீரர்களின் ஆசைக் கனவு.

“மாஸ்ரர் வாங்கோ, பெரிய காம்புக்க போய்ப் பார்ப்போம்”

அழைத்துச் சென்றேன். முதன்மை வீதியினூடாக நடக்கும்போது எனது சிறுவயது எண்ணங்களை நினைத்துப்பார்த்தேன்.

'மாஸ்ரர் இந்த இடங்களைப் பார்த்தவுடன் எனக்கு முந்திய ஞாபகம் வருகுது.”

“ஏன் என்ன நடந்தது?”

“ஒன்றும் நடக்கேல்ல. 83,84களில எங்கட வீடு புதிசாக மன்னாங்குளத்தில் கட்டினனாங்கள். அப்ப முல்லைத்தீவு பஸ் வந்தா சந்தியில நிண்டிடும். அதில இறங்கினாப்பிறகு நேரா வாற வவுனியா, கொழும்பு பஸ்காறங்கள் ஏத்த மாட்டான்கள். அதால நடந்துதான் வீட்டுக்கு அநேகமாகப் போவோம். சிலநேரம் லொறி வரும். நடந்து போகேக்க நானும் அம்மாவும் தான் போறனாங்கள். எங்களுக்கு முன்னாலை இரண்டு பெடியள் சைக்கிளில் வர உதுக்குள்ளயிருந்து இரண்டு ஆமிக்கா ரங்கள் வந்தாங்கள். நாங்கள் அவங்களைக் கடப்பதற்கு இன்னும் 50அடி இருக்கும். பொடியங்களின்ரை சைக்கிளை நிற்பாட்டச் சொல்லாமல் கிட்ட வந்தவுடனே ஓர் உதை ஒன்றை ஓடுறவனுக்கு விட அவங்கள் பொத்தென்று விழுந்தாங்கள். அதற்குப் பிறகு துவக்கால விளாசித்தள்ளிப்போட்டு குளறக் குளற இழுத்துக்கொண்டு போனாங்கள். நாங்கள் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடிச்சம்.” “அவங்களுக்கு என்ன நடந்தது?”

“எங்களுக்குத் தெரியாது. ஆரோ சொல்லிச்சினம் காட்டில யானை மிதிச்சதென்று சொல்லி ஆஸ்பத்திரியில பொடியப் போட்டவங்களென்று. வீட்டுக்காரச் சனமும் ஏன் தாய்மார்கூட, தங்கட பிள்ளையள் என்று நம்பவில்லையாம். பிறகு உடுப்பைப் பார்த்துதான்....”

(தொடரும்)

## என் தங்கையே...


நாம் தொப்புள் கொடி
உறவு இல்லை
ஒரு தாயின் வயிற்றில்
பிறக்கவில்லை உன்
சொந்த பந்தத்திலும்
நானில்லை
ஆனாலும். நான் உன்
அண்ணனே! நீ என்
தங்கையே
மழலைக் கல்வி பயில.
சேர்ந்து நாம் சென்றதில்லை
மதிய உணவும் நாம்
பகிர்ந்ததில்லை
என் பள்ளிப் புத்தகத்தில்
உன் கிறுக்கலில்லை
உன் பட்டுப் பாதமும் எனை
எட்டி உதைத்ததில்லை
நாம் ஆற்றுக்குச் சென்று
ஆடிக் குளித்ததில்லை
அதேநேரம் தூண்டிலில் மீன்
பிடித்ததில்லை
அலைகடல் மண்ணில்
வீடுகட்டியதில்லை
மழையில் நனைந்து
ஆடிக் குதித்ததில்லை
உன் தலையில் குட்டி நான்
மகிழ்ந்ததில்லை
வழிகின்ற உன் விழிநீரை
நான் துடைத்ததில்லை
உன் செல்லச்
சிணுங்கல்களை நான்
இரசித்ததில்லை
சோகத்துடன் என் தோளில்
நீ சாய்ந்ததில்லை
அன்புடன் உன்
தலையை நான் தடவிக்
கொடுத்ததில்லை
அண்ணன் தங்கைகளாக
உறவாடும் எம் உறவு பற்றி
மற்றவர்களுக்கு
எங்கே தெரியும்
நாம் உயிரில் கலந்த
சகோதர பந்தத்தின்
பாசப் பிணைப்புகள்
என்பது?
நாம் என்றும் அன்பான
அண்ணன் தங்கையே
இதை யாராலும் என்றும்
மாற்றவோ தடுக்கவோ
முடியாது

கவிதை
இரா. நிஷா




# நூல் அறிமுகம்

தொகுப்பு
அயக்கிரீவன்




**நூல்-தளவாசல் (காலண்டுச் சஞ்சிகை-04)**
**முதன்மை ஆசிரியர்-இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**
**வெளியீடு - எழுகலை இலக்கியப் பேரவை**
**விலை - 100ரூபா**

எழுகலை இலக்கியப் பேரவையின் 'தளவாசல்' கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழின் ஜனவரி - மார்ச் 2018இன் இதழ் வெளியாகியுள்ளது. இதில், பேராசிரியர் சபா ஜெயராசா, இ.குமணன், பேராசிரியர் செ.யோகராசா, ந.குகபரன், கே. ஆர். டேவிட், மலரன்னை, ந.மயூரரூபன், பெஸீ. ஹெட் (தமிழில் ரிஷான் ஷெரிப்), அகமது பைசல், எஸ். என். சிவசேகரன், மன்னார் அமுதன், தேனுஷா யோகேஸ்வரன், கை.சரவணன், என்.கேசவன், சுவைஞன் சுப்பிரமணியன் போன்றோரின் படைப்புக்களுடன், மலரன்னையின் நேர்காணலும் இடம்பெற்றுள்ளது.




**நூல்-வளமான வாழ்க்கை**
**ஆசிரியர்-நாகலிங்கம் குலசிங்கம்**
**வெளியீடு - கிருஷ்ணா யோகா நிலையம் சுவிற்சர்லாந்து**
**விலை - 500ரூபா**

எத்தனையோ பாடசலைகள், மருத்துவ நிலையங்கள், வாசகசாலைகள். இன்னும் நாம் காணும் உலகும், நாம் வாழும் வாழவும் இவையாவையும் தவிர, இறைவன் மனிதருக்கென்று தந்த கோடிக்கணக்கான இயற்கை மூலிகைகள் யாவையும் அனுபவிக்கின்றோம். ஆனால், நமது கடமைகள் என்ன? செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவை என்ன? என்று அறிவதற்கு விருப்பம் இல்லை, படிக்க ஆர்வமும் இல்லை. தயவுசெய்து அவற்றை அறியவும் செய்யவும் முதலில் விரும்புங்கள். தயவுசெய்து உங்கள் அறிவுக்கண்ணைத் திறவுங்கள். சிந்தனை செயலின் தந்தை என்பார்கள்; சிந்தித்தால் வழி பிறக்கும். கடமைகளில் பிதிர்க்கடன் பெற்ற தாய் தந்தைகளுக்காகவும், பிரம்ம கடன் மனைவி, மக்களுக்காகவும், முனி கடன் கற்றுத்தந்த ஆசானுக்காகவும் செய்யவேண்டும். இது மிகவும் பிரதானம். இந்த வகையில் "அடியேன் என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை உணர்ந்து யோகத்தின் பூரணத்துவம் இந்த ஆண்டு விழா மலர் மூலம் என் இனத்துக்குக் கிடைக்க என்னால் இயன்ற பணிகளைச் செய்கிறேன். (நூல் ஆசிரியர்)

# பெண் குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுங்கள்...?

கட்டுரை
தர்சிகா சிவராமலிங்கம்

பெற்றோர்களே கவனம்...! உங்கள் வீட்டிலும் பெண் குழந்தைகள் இருக்கிறார்களா? அவர்கள் பத்திரம். இப்போதைய சூழலை நோக்குமிடத்து மனிதம் செத்துத்தான் போய்க்கொண்டிருக்கிறது. முன்பள்ளிக்குச் செல்லும் குழந்தை அப்போது தான் வெளி உலகத்தையே காணப் புறப்படுகிறது. ஆனால் குழந்தைகளை குழந்தைகளாக நோக்கும் கண்கள் பலருக்கும் குருடாக்கப்பட்டுள்ளன. இன்று பாலியல் வன்கொடுமைகள் ஆங்காங்கே நடந்து கொண்டு தான் இருக்கின்றன. சமீபத்தில் கூட இந்தியாவில் நிர்பயா, ஹாசினி, ஆசிபா எனப் பல சின்னஞ்சிறு குழந்தைகளை இத்தகைய பாலியல் வன்கொடுமையால் இழந்துவிட்டோம். இதற்கு நாமும் ஒரு காரணமாகத் தான் இருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? பெண் குழந்தைகளுக்குள் பாலியல் சார்ந்த பாதுகாப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது எமது கடமையல்லவா?

பெற்றோர்களே! நீங்கள் யோசிக்கலாம்...! இது பாலியல் கல்வியா..? என் குழந்தைக்கா? சிறு பிள்ளைகளுக்கு எதற்கு? என்று பலவாறாக. தேவையற்றது என்றும் பலர் கருதலாம். சிலர் தயங்கலாம்...? இதைப் பகிர்வதைச் சிலர் அருவருப்பாகக்கூடக் கருதலாம். ஆனால் இதைக் காலம் கட்டாப்படுத்தியிருப்பதை உங்களில் ஒருவராலும் மறுக்க முடியாது.

**சரி விடயத்துக்கு வருவோம். இந்தப் பாலியல் கல்வி ஏன் அவசியம்...?**

ஏனெனில், இன்று நம்மைச் சுற்றி நடக்கும் இந்தக் கொடுமைகளை நாம் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் தான் இருக்கிறோமோ தவிர அதற்கான தீர்ப்பிடலையோ அல்லது ஒரு விழிப்புணர்வையோ சமுதாயத்திடம் கொண்டு செல்வதில்லை. வேலை வேலை என்று சுயநலத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறோம். இவை நமது குடும்பத்தில் நடக்கும் வரை மற்றவர்களுக்கு நடப்பது நமக்கெல்லாம் ஒரு புதினமே தவிர வேறொன்றுமில்லை. இந்த விடயங்களைச் சிலர் விமசிப்பார்கள், சிலர் விவாதிப்பார்கள், சிலர் வேடிக்கையாகப் பார்க்கிறார்கள் என்று கூறுவதில் தவறில்லை எனக் கருதுகிறேன்.

இருந்தும் சில சமூக ஆர்வலர்கள் அத்தகைய கொடுமைகளை எதிர்த்து இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இதுபோன்ற விழிப்புணர்வுகளை முதலில் பெற்றோர்கள் மத்தியில் ஏற்படுத்துவது முக்கியமானது. அவர்களால் தான் தமது குழந்தைகளுக்கு ஏற்ப அதைக் கையாள்வதும் சாத்தியம்.

**தகாத தொடுகைகள்...**

பெற்றோர்கள் தங்களின் பெண் குழந்தைகளுக்குப் பிறரின் தொடுகை முறைகளில் எது நல்லது? எது தகாதது என்பதை இனம்காணச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்களின் புலனுக்கு எட்டாத பாலுணர்வு சார்ந்து இல்லாமல், இயல்பான ஒரு நற்பழக்கமாக அவர்களுக்குள் இதை ஊட்டுதல் நல்லது. குழந்தைகளின் மேல் பாயும், அல்லது சீண்டும் காமுகர்கள் குழந்தைகளுக்கு நெருக்கமான சூழலில் இருந்தும் கண்டுபிடிக்க முடியாதபடி செயல்படுவார்கள். பெரும்பாலும் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அக்கம் பக்கத்தில் வசிப்பவர்கள், வேலை செய்பவர்கள் என யாராக வேண்டுமானாலும் இவர்கள் மூக மூடி அணிந்து இருக்கலாம். குழந்தையிடம் இவர்களில் ஒருவரோ அல்லது வேறொரு இனம் தெரியாதவரோ தவறாக நடந்து கொண்டால், எவ்வாறு எதிர்ப்பை வெளிப்படுத்தி அந்த இடத்தை விட்டு விலக வேண்டும் என்பதையும் எதிர்ப்பால் முடியாதவிடத்து அவரிடமிருந்து எப்படிச் சூசகமாக விடுபட்டு, தாய், தந்தையர்க்குத் தகவல் தரவேண்டும் என்பது பற்றியும்கூட அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இதுபற்றிய அறிவைத் தமது பிள்ளைகளுக்கு தகுந்த முறையில் பழக்கமாக்கிக் கொள்வது பெற்றோர்களின் கடமையே.



**காமுகர்களை எவ்வாறு கண்டறிவது?**

இப்படிப்பட்டவர்கள் முதலில் குழந்தைகளுக்குப் பிடித்த பொருட்களை வாங்கிக்கொடுத்து அவர்களை தன் வசப்படுத்துவார்கள். எனவே, குழந்தைகளுக்குப் பரிசு வாங்கிக் கொடுப்பவர்கள் எல்லாம் மிக அன்புடையவர்கள் என்று நாம் கருதிவிடக் கூடாது. பிள்ளைகளுக்கும் இதில் தெளிவை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்கள் தமது குழந்தைகளிடம் யாருக்கும் முத்தம் கொடுக்கச் சொல்லியோ, கட்டிப்பிடிக்க சொல்லியோ வற்புறுத்தக் கூடாது. அது சரி என்று வாதமும் செய்யக்கூடாது. ஏனெனில், நல்ல உறவினர் விடயத்தில் நாம் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்கின்ற இந்தப் பழக்கமும் சில சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஆபத்தாக முடியலாம்!

அநேகமாகப் பேருந்தில் செல்லும்போது பக்கத்தில் அமர்ந்திருப்பவரிடம் குழந்தையைக் கொடுப்பார்கள். அதிலும் காமுகர்கள் இருக்கலாம். அது நமக்குத் தெரியாது. எனவே அத்தகையவர்களிடம் இருந்து உங்கள் குழந்தைகளைப் பாதுகாத்துக்கொள்ள, ஒருவர் எந்த நோக்கத்தில் தன்னைத் தொடுகிறார் என்பதை குழந்தைகளுக்கு முன்னரே சொல்லிக் கொடுக்க வேண்டும்.

**குழந்தைகளுக்கு முழுச் சுதந்திரம்**

குறிப்பாகத் தம்மிடம் யார் எது கொடுத்தாலும் வீட்டில் வந்து அதைக் கூறுவதற்குரிய முழுச் சுதந்திரத்தையும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் பொருட்களை வாங்கியபின் மறைக்காமல் கூறும் பட்சத்தில் குழந்தைகளைத் தண்டிப்பதைத் தவிர்க்கவும் வேண்டும்.

இன்றைய காலத்துக்கேற்ப உங்கள் குழந்தைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்புப் பயிற்சிகளைக் கூடக் கற்றுக்கொடுக்கலாம். கராத்தே, போன்ற சில தற்காப்புக் கலைகளைக் கற்றுக்கொடுக்கலாம். ஒருவரின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நுட்பங்களை கூட இதற்கென்று காட்டிக் கொள்ளாமல் கற்றுக்கொடுக்கலாம்.

ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் வயதுக்கும் மனதுக்கும் ஏற்றவாறு சொல்லிக் கொடுக்க வேண்டும். அதே சமயம் மிகச் சின்னஞ்சிறு குழந்தை களுக்கு அடிக்கடி சொல்லிக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் மறந்து விடுவார்கள். அத்தோடு உடல், உள ரீதியில் பாதிப்படையாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். இதை முதலில் உங்களின் குழந்தைகளுக்கும், அக்கம் பக்கத்தில் இருப்பவர்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும். உங்களின் வீட்டிலிருந்து இந்த மாதிரி விழிப்புணர்வை தொடங்கி இறுதியில் சமுதாயம் வரை கொண்டு சேர்ப்பது ஒவ்வொருவரதும் கடமையே. ஒரு விபரீதம் நடந்தேறியபின் சமூக வலைதளங்களில் கண்டபடி கருத்துப் பதிவிடுவதையும், அனுதாபம் தெரிவிப்பதையும் விடுத்து, இதுபோன்ற முற்பாதுகாப்பு, ஆயத்தங்களைக் கற்றுக்கொடுத்து, இது சார்ந்த அறிவைப் புகட்டி பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்வது சிறந்தது.

தொடர்கதை

# நின்னைச் சரணடைந்தேன்

கே.எஸ்.ஆனந்தன்

அத்தியாயம் 11



"அம்மா அவர் வந்திட்டார்'' என்று தாய்க்கு அறிவித்துவிட்டு அவன் கொண்டு வந்த பார்சலை வாங்கிக்கொண்டு அறைக்குள் சென்றாள். முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு வந்த ரவிசங்கர் சுடச் சுடத் தேனீரும், பலகாரமும் மனைவியுடன் சேர்ந்து சாப்பிட்ட பின்பு தேனீர் கோப்பையை எடுத்து வைத்துக்கொண்டு கேட்டான்.

"சுவேதா, அந்த ஓட்டோவில் போற பிள்ளை உங்கட ஒவ்பீசிலதானே வேலை செய்யிறாள். ஏதும் பிரச்சினையா? வீட்டுக்கு வந்து போறாளே ஏன்?"

"ஓ அவள் என்ரை ஒவ்பீசிலைதான் வேலை செய்யிறாள். இரண்டு வாரமா அவள் வேலைக்கு வரெல்லை. எங்களின்ர வெடிங்குக்கும் வரெல்லை. அவளுக்குக் குடும்பத்தில் பெரிய பிரச்சினை. ஆள் வலு கெட்டிக்காரி. ஒவ்பீஸில இருக்கிற பெண்களுக்கு இவள்தான் லீடர். அப்பழுக்கில்லாத வேலை. இவள் ஒருத்திதான் என்னிடம் குற்றம், குறை கேட்காது வேலை செய்பவள். ஆனால்...." என்று தொடங்கி அவளுடைய பிரச்சின்னகள் முழுவதையும் கூறி முடித்தாள்.

"அவள் பாவம்தான் ஆனால், நீதிமன்றம் இலகுவில் டிவோஸ் கொடுக்க மாட்டாது. வீண் செலவாகத்தான் முடியும், மாமியார்க்காரிதான் அந்தக் குடும்பத்தைக் குழப்புகிறாள் போலிருக்கு. யார் அந்த லோயர்?"

கடிதத்தை அவனிடம் கொடுத்தாள். பிரித்துப் படித்தவன் லோயருக்குப் போன் செய்தான். அவர் ரவியுடன் நல்ல பழக்கமானவர். உடனே தொடர்பு கொண்டார்.

0000

"ஹலோ"

"நான் ரவிசங்கர் பேசுறன்"

"என்ன திடீரென்று எப்படி உங்கள் திருமண வாழ்க்கை? சந்தோசம்தானே?" என்றார் சட்டத்தரணி சிவநேசன்.

"எல்லாம் நல்லபடியாய் நடந்துகொண்டிருக்கு. உங்களிடம் ஒரு விசயம் கேட்க வேண்டித்தான் போன் எடுத்தனான்"

"சொல்லுங்கோ உங்களுக்கு இல்லாத விசயமா?"

"என்னுடைய வைவ்வின்ர ஒவ்பீஸில் வேலை பார்க்கிற விசாலி என்ற பிள்ளைக்கு அவள் கணவர் சண்முகம் டிவோஸ் லெற்றர் உங்கள் மூலமாய் அனுப்பியுள்ளார் அது பற்றிக் கதைக்கத்தான்..."

"ஓ...... அதுவா? பாவமப்பா அந்தப் பையன். அவன் ஒரு சாதாரண ஸ்தாபனத்தில் வேலை செய்யிறான் என்று தெரிந்துகொண்டு தானே திருமணம் செய்தவை. இப்ப வேலை இல்லை என்பதற்காக அவனை 'இன்சல்ட்' பண்ணுறாங்களாம். இப்படிப் பல கேஸ் பென்டிங்ல இருக்கப்பா. இப்படி மானங்கெட்டு வாழ்வதை விடச் சாவது மேலென்று அழுகிறான். என்ன செய்யலாம் ரவி? நீரே சொல்லும்"

"அந்தாளை நான் ஒரு முறை சந்திக்கலாமா?"

"ஜெஸ்"

"அவன் மனைவி நல்லவள். இங்கே வந்து என் மனைவியிடம் அழுது விட்டுப் போயிருக்கிறாள். இரண்டு வாரமாய் வேலைக்கும் லீவு போட்டிட்டு அவனைத் தேடித் திரிஞ்சிருக்கிறாள். உங்கள் கடிதம் கிடைத்ததால் இண்டைக்கு இஞ்சை வந்திட்டுப்போறாள். நாளைக்கு அவனைச் சந்திச்சுக் கதைக்கலாமா?"

"நல்லது எனக்கும் ஓர் உபத்திரவம் குறையும். உம்மால் ஒரு பத்துமணி போல வரமுடியுமா ரவி?"

"ஓம் வாறன் சேர். அவருக்கு எதுவும் சொல்ல வேண்டாம் நீங்கள். ஆளை கேஸ் விசயமாய்க் கதைக்க வேணுமென்று கூறி வரவழையுங்கள். மிகுதி நாளைக்குப் பார்ப்பம். உங்களுக்கும் வீண் சிரமம் தந்துவிட்டன்"என்றான்.

"இல்லை ரவி. நீர் எனக்கு உதவி செய்கிறீர். அதற்கு நான்தான் நன்றி சொல்ல வேணும். ஓ.கே நாளை சந்திப்பம்"

0000

"இருந்த இடத்திலிருந்து கொண்டே கொஞ்ச நேரத்தில் பிரச்சினையைச் சுலபமாக்கி விட்டீர்கள். நான் இது பெரும் தர்ம சங்கடமான விசயமாயிருக்கப்போகுதுஎன்றுநினைச்சுக்கொண்டிருந்தன். அவனும் நல்லவன்தான் இருந்தாலும் சுயகௌரவரம் உள்ளவனால் மாமியார் செயலைத் தாங்கிக் கொள்ள முடியாது தான்''என்றாள் சுவேதா.

"சரி இப்ப என்ன செய்யலாம்? நீரே கூறும் பார்க்கலாம்"என்றான் ரவி.

"சட்ட ரீதியாக அணுகவோ, செய்யவோ முடியாததை மனித நேயத்தால் செய்ய முடியும். நீங்களும் அந்த அணுகுமுறையைத்தான் செய்ய நினைத்துள்ளீர்கள் என நினைக்கிறன்"

"அதுமட்டுமல்ல சுவேதா. உமக்கு இந்தப் பிரச்சினை சுமையாகி விடக்கூடாது. பிறகு என்னைப் பற்றி நினைக்காமல் இந்த கேஸில் மூழ்கி விடுவாய். அந்தப் பயத்தில்தான் உம்மை இதிலிருந்து விடுவிக்கப் போகிறேன்"என்று கூறிச் சிரித்தான்.

"எனக்கோ, எனது டிப்பாட்மென்டுக்கோ சம்பந்தமில்லாத விச யம்தான். எனது ஒவ்பீசில் வேலை செய்யிறவள் தனக்கு உதவும்படி கேட்டு வந்துள்ளாள். எப்படித் தட்டிக் கழிப்பது. யாருடனாவது இது விடயமாகக் கலந்தாலோசித்து ஏதாவது செய்யலாம் என்றுதான் நாளைக்கு அவளை ஒவ்பீஸ் வரும்படி கூறியனுப்பினேன். மற்றும்படி எனக்கு இதில் சம்பந்தம் எதுவுமில்லை. தவிர ஒவ்பீஸ் வேலை ஒவ்பீசுடன் சரி. வீட்டு வேலைகளுக்கும் அதற்கும் எந்தவித தொடர்போ, பாதிப்போ இருக்காது. நீங்கள் பயப்பட எதுவுமில்லை" என்று கூறி அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

0000

பெண்மையின் உணர்வுகள் விழித்துக்கொண்டால் அச்சமோ, நாணமோ மறைந்து போய்விடும்போலும். அவளுடைய செயற்பாட்டுக்கெல்லாம் ஒத்துழைத்து நடந்துகொண்டான். அதற்கிடையில் சிவகாமி அவளை அழைக்கும்குரல் கேட்டது. திடீரெனஎழுந்துஉடைகளைச் சரிசெய்துகொண்டுஅவன் கன்னத்தில் முத்த மிட்டு விட்டு அறைக்கு வெளியே சென்றாள். சில நிமிடங்களில் திரும்பிவந்தவள் "மருமகனுக்கு முட்டைப் பொரியல் போடவோ? என்று அம்மா கூப்பிட்டுக்கேட்வா" என்றாள்.

"சுவேதா! நான் எதையும் விரும்பிச் சாப்பிடுவதில்லை. எதைப் போட்டாலும் சாப்பிடும் பழக்கமுள்ளவன். உனக்கு எது பிடிக்குமோ, அதில் எனக்கும் தந்தால் சந்தோசமாகச் சாப்பிடுவன்"

"நான் சொல்லி விட்டேன். எனது மாமியார் எல்லாம் சொல்லித்தான் அனுப்பி வைத்தார்"

"எல்லாமா? அப்படி இருக்காதே. இதுவும் உனது மாமியார் சொல்லியனுப்பினாரா?'' என்று அவளை இழுத்தணைத்து மடிமீது போட்டுக் கொண்டான்.

"இதெல்லாம் அவள்கள் சொல்வார்களா? சொல்லித் தெரிவதில்லையல்லவா இந்தக் கலை"

"சொல்லித் தெரிவதில்லை என்று சொன்னாலும் இந்தக் கலைதான் குடும்பங்களுக்கிடையே பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாயிருக்கிறது"

"அதெப்படி?"

"அதுவா. ஆசை அறுபது நாள். மோகம் முப்பதுநாள் என்று கேள்விப்பட்டனீரோ?"

"ஓமோம்"

"மொத்தம் தொண்ணூறு நாள்களில் மனதில் சிலருக்கு அலுப்புத்தட்டிவிடும். சிலருக்குத் தினமும் இந்தக் கலை தேவையாயிருக்கும். இதனால் விரும்பியோ, விரும்பாமலோ சிலர் ஈடுபட்டாலும் நாளாக, நாளாக ஒருவர் மேல் ஒருவர் சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள். எல்லோருமல்ல. பெரும்பாலும் யதார்த்தமாக நடக்கும் ஒன்றுதான். இதனால் சிறுகச் சிறுக ஆரம்பித்துப் பெரும் பிரச்சினையாகி 'டிவோஸ்' வரைக்கும் கூடப் போய்விடும். இதனால்தான் நான் உமக்குச் சொன்னேன். உமது சந்தோசம் தான் என் சந்தோசம் என்று. இது ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள அன்பின் நிமித்தம் வளரும் உறவு. உதாரணத்துக்கு நீர் உடல் நலமில்லாது இருக்கும்போது எனது தேவையை நிறைவேற்ற முனைந்தால் நீரும் எதுவும் மறுப்புக் கூறாது இசைவுற்றாலும் அதுவே எமது அன்பின் அடித்தளத்தில் சிறு விரிசலை ஏற்படுத்திவிடும் இல்லையா?"

"உண்மைதான். உங்களைப்போல இவற்றையெல்லாம் விளங்கிக்கொண்டு அன்புணர்வால் இணைந்துகொண்டால் பிரச்சினைக்கு இடமிருக்காது என்று சொல்லுங்கள்"

"சரிதான்... இன்னும் சொல்லப்போனால், இப்போது உமக்கு இது புரியாமலிருக்கலாம். நாளாக நாளாகப் பொதுவில் பெண்களுக்கு இந்த உணர்வு எப்போதும் வராது. ஆனால் ஆண்கள் அப்படியல்ல. தினசரி உணவு உண்பதுபோல தேவை ஏற்படும். இதை ஆண்கள் உணர்ந்து நடந்துகொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை. போதை பாவிப்பவர்கள் பெரும்பாலும் பெண்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாது தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ளவே முயற்சிப்பார்கள். இதுகூட வன்புணர்வுதான்"

"போதுமப்பா. இவற்றையெல்லாம் எப்படி அறிந்துவைத்திருக்கின்றீர்கள்?"

"புத்தகங்களில் படித்தவை. அனுபவப்பட்டவர்கள் கூறக் கேட்டவை. சில கருத்தரங்குகளில் பெண்களே இந்தக் கருத்துக்களைக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறேன். நீ பயப்படாதே. நான் என்றைக்கும் உனக்கு விருப்பமில்லாத எதையும் கட்டாயப்படுத்தவோ, செய்யவோ மாட்டன்"

"அப்பாடா எனக்கு இப்படியொரு அப்பாவிப் புருஷன் கிடைப்பார் என்று தெரிஞ்சிருந்தால் திருமணத்துக்கு எப்பவோ சம்மதித்திருப்பன். அது சரி நீங்கள் குடிவகை ஏதும் பாவிப்பதில்லையா?"

> போதை பாவிப்பவர்கள் பெரும்பாலும் பெண்களின் மனநிலையைப் புரிந்துகொள்ளாது தமது தேவையை நிறை வேற்றிக் கொள்ளவே முயற்சிப்பார்கள். இது கூட வன் புணர்வுதான்

"இதுவரை அப்படி எதுவும் கிடை யாது. நீ விரும்பினால்..."

"வேண்டாம் அப்பா. மருந்தாகவும் சரி, விருந்தாகவும் சரி நீங்கள் மது பாவிப்பதை என்றைக்குமே விரும்ப மாட்டனே. உஷா சொன்னமாதிரி உண்மையில் நான்கொடுத்து வைத்தவள்தான்"என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு உணவருந்தச் சென்றாள்.

"உஷாவின் கணவன் குடிப்பானா சுவேதா? "என்று இரகசியமாகக் கேட்டான் ரவி. (தொடரும்)

தொகுப்பு
செ.மகேஷ்

# ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய விளக்குகள்

## 1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்ட விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள்பார்வை

6

ஒன்றுக்கும் உதவாதவன் என நாம் யாரையும் ஒதுக்கக் கூடாது. விவேகம் இல்லாதவர்களிடம் வேறு ஏதாவது திறமைகள் இருக்கும். 'மொக்கர்' எனக் கணிக்கப்படுபவர்களிடம் காணப்படும் ஆக்கத்திறன் பற்றி விளக்குகிறார் எழுத்தாளரும் பேச்சாளரும் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபருமான வித்துவான் க.சொக்கலிங்கம். இவர் சொக்கன் என்ற புனைபெயரில் கவிதை, கட்டுரை, சிறுகதைபோன்ற ஆக்கங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பிரசித்தமானவர். அவரது அனுபவப் பகிர்வாக இந்த ஆக்கத்தைப் பார்க்கலாம்.

**சொக்கனின் அனுவப் பகிர்வு...**

பல ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது இது. நான் அதிபராகப் பணியாற்றிய பாடசாலையின் ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அன்று லீவு எடுத்திருந்தார். வழக்கம் போல வகுப்புக்களை மேற்பார்வை செய்யச் செல்கையில், அந்த வகுப்பிலே ஆசிரியர் இல்லாததால் ஒரே அமர்க்களமாக இருந்ததைக் கண்டேன். பிள்ளைகளை ஏதாவது வேலையில் ஈடுபடுத்தி வகுப்பில் அமைதியை ஏற்படுத்தலாம் என்று வகுப்பறைக்குள் நுழைந்தேன். வணக்கம் கூறுதல் முதலிய சம்பிரதாயங்கள் நடந்து முடிந்ததையடுத்து, எனது பார்வையில் முதலில் அகப்பட்ட கரும்பலகையைக் காட்டி "பிள்ளைகளே இந்தக் கரும்பலகை பற்றிப் பத்து வசனங்கள் எழுதுங்கள். மிகத் திறமாக எழுதுபவருக்கு ஒரு புத்தகம் பரிசாக நான் தருவேன்" என்றேன்.

பிள்ளைகள் உற்சாகமாக எழுதத் தொடங்கினார்கள். பாடம் முடிவதற்குப் பத்து நிமிடங்களே இருந்தன. நான் எனது வகுப்பறை மேற்பார்வையைத் தொடர்ந்து முடித்த பின்பு, மீண்டும் ஐந்தாம் வகுப்பினுள் நுழைந்தபோது மேசையிலே அப்பியாசக் கொப்பிகள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றாக எடுத்து மதிப்பீடு செய்வதில் இறங்கினேன். எனது மதிப்பீட்டில் ஐந்து சிறு கட்டுரைகள் தரமுடையன வாய்த் தேறின.

இரண்டு சிறு கட்டுரைகளிலே எழுத்துப்பிழைகளோ வாக்கியப் பிழைகளோ இல்லை. கரும்பலகையின் அமைப்பு, பயன்பாடு, தேவை என்பன நல்ல ஒழுங்கமைப்பில் எழுதப்பட்டிருந்தன. மற்றைய மூன்றிலும் எழுத்துப் பிழைகளும் வாக்கியப் பிழைகளும் அதிகமாயிருந்தன. ஆனால் கரும்பலகை தங்கள் உள்ளங்களிலே ஏற்படுத்திய உணர்வுகளும் மனப்படிவுகளும் மிகநன்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று என்னை மிகவும் கவர்ந்தது. அதில் எழுதப்பட்டவற்றை எனது நினைவிலிருந்து (எழுத்துப்பிழைகள் வாக்கியப் பிழைகளை நீக்கி இங்கு தருகிறேன்)

எங்கள் வகுப்பில் ஒரு கரும்பலகை இருக்கிறது. அதன் நிறம் கறுப்பு. கறுப்பு என்றாலே அந்த நிறத்தைப் பலர் வெறுப்பார்கள். ஆனால் எனக்குக் கறுப்பு நிறத்திலே தான் விருப்பம். என் அம்மாவின் நிறமும் கறுப்புத்தான். ஆனால் அவர் தனது வெள்ளைப் பற்களைக் காட்டிச் சிரிப்பது மிக அழகாயிருக்கும். ஆசிரியர் கரும்பலகையில் வெண்கட்டியால் எழுதும் பொழுது என் அம்மா சிரிப்பதுதான் எனக்கு நினைவில் வரும். அதனால் எனக்குக் கரும்பலகையில் நல்ல விருப்பம். அதைத் தடவிப் பார்ப்பேன். பசுந்தாக அது இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தரும்.

பிழைகள் மலிந்திருந்தாலும் இந்தச் சிறு கட்டுரையின் சாரம், இதை எழுதிய பிள்ளையின் கற்பனையையும் உணர்ச்சிக் கிளர்வையும் வெளிப்படுத்துவதாய் எண்ணினேன். ஆனால் பிழையில்லாத, கட்டுக் கொப்பான வசனங்களை எழுதிய பிள்ளைக்குப் பரிசளித்தேன் என்று சொல்ல வேண்டுவதில்லை.

அடுத்த நாள் ஐந்தாம் ஆண்டு வகுப்பாசிரியர் வகுப்புக்கு வந்தார். நான் அளித்த பரிசு முற்றிலும் சரியானது என்று ஆமோதித்தார்: அந்தப் பிள்ளை மிகவும் விவேகமானவன். எல்லாப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு புள்ளிகள் எடுப்பவன். மற்றவனோ படுமொக்கன் இவன் இப்படித்தான் விசரெல்லாம் எழுதுவான் என்றபோது ஆக்கத்திறன் கொண்டவன் இவன் என நான் எண்ணியதில் தவறுள்ளதோ எனத் தவித்தேன். ஆசிரியரோ கணக்குப் பாடத்தில் இவன் பத்துப் புள்ளிகள் எடுத்தாலே அதிசயம் எனச் சொன்னார்.

ஆக்கத்திறனும் கற்பனையாற்றலும் அந்த ஆசிரியரைப் பொறுத்தவரையில் வெறும் விசர்கள். விவேகமும் அவதானிப்பும் அவதானித்ததைப் பிழையின்றி உள்ளதை உள்ளதுபோல் வெளிப்படுத்தும் திறனுமே முதன்மையானவை. அவைதாம் நுண்ணறிவுக்கு அறிகுறிகள் என்று எண்ணியபோது நான் கொண்ட முடிவு தவறோ என்று மீள நினைத்தேன். ஆனால் ஆசிரியரின் முடிவை அப்படியே விழுங்கிக் கொள்ள முடியவில்லை.


க.சொக்கலிங்கம்

**நுண்ணறிவுடையவர்கள் மிக அரிதே...!**

நீண்ட நாள்களாக எனது மனதில் அந்த ஆக்கத் திறன் கொண்ட பிள்ளைக்கு நீதி வழங்கவில்லை. என்ற உறுத்தல் இருந்து கொண்டே வந்தது. 1963 ஜீன் மாதத்தில் வெளியான 'றீடர்'ஸ் டைகெஸ்ற்' சஞ்சிகையிலே நான் வாசித்த கட்டுரை எனது மன உறுத்தலிலே தவறில்லை என்ற உண்மையை எனக்கு வெளிப்படுத்தியது. 'யுவர் சைல்ட் மே பி மோர் கிவ்ரெட் தன் யு திங்' என அதற்குத் தலைப்பிடப்பட்டிருந்தது. அமெரிக்காவிலுள்ள மினேசோட்டாப் பல்கலைக்கழகத்துக் கல்விப் பேராசிரியரும் பிள்ளைகளின் நுண்ணறிவு, ஆக்கத்திறன் பற்றிய பல கள ஆய்வுகளை நிகழ்த்தியவருமான கலாநிதி. போல் ரொறன்ஸ் என்பவரை ஜோன் கோட் லாஜ்மென் என்பவர் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை தான் அது.

அசாதாரணமான படைப்பாற்றல் நுண்ணறிவு கொண்டவர்கள் மிக அரிதாகவே காணப்படுவது உண்மை. படைப்பாற்றலில் இந்த நுண்ணறிவு ஈவின் அதிகப்பாடு முக்கியமானதன்று. படைப்பாற்றல் திறன் எங்கும் காணப்படும் என்ற பொது உண்மையை ஏற்றாலும் அது நுண்ணறிவு ஈவில் தாழ்ந்தவராகக் காணப்படுபவரிலேயே பெருமளவு காணக்கிடக்கிறது. மேதை எனக் கருதத்தகும் 180 நுண்ணறிவுடையவரிலும் சராசரி 120க்கும் அதனிலும் தாழ்வானதற்கும் உரித்தானவரிலே கூடிய படைப்பாற்றல் விளங்குவதை எனது கள ஆய்வுகள் நிறுவியுள்ளன.

மினிசோட்டா பல்கலைக் கழகத்தில் கல்வியியல் ஆய்வுப் புலத்திலே இந்த முடிவை அடைவதற்கு 15ஆயிரம் பிள்ளைகள்,

ஆண்களும் பெண்களுமாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இவர்களிலே பெரும்பாலானவர் மிகச் சிறந்த ஆக்கத் திறனோடு ஆரம்பித்து நாலாம் வகுப்புக்கு வந்ததும் படிப்படியாக அந்தத் திறனிலே பின்னடைவுக்குள்ளாகின்றனர் என்று இந்த ஆய்வு நிறுவியது.

**காரணம் என்ன...?**

பிள்ளைகளின் படைப்பாற்றலைப் பெற்றோரோ, ஆசிரியர்களோ தடை செய்து அவர்களின் உற்சாகத்தை முளையிலேயே கிள்ளிவடுகிறார்கள் என்பதல்ல. அவர்கள் அவற்றை இனங்காண முற்படாமையே குறை.

என்கிறார் பேராசிரியர் ரொறன்ஸ். பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகளிலே திறமை வாய்ந்த பிள்ளை என்று கணிக்கப்படுபவர் பாடப்புத்தகங்களிலே உள்ளவற்றை எழுத்துக்கு எழுத்துச் சரியாக ஒப்பிப்பவரே. அதாவது பாடங்களைச் சித்திரத்திலே காட்டுவது போல முற்று முழுக்கச் சரியாக வெளிப்படுத்தும் திறனே படிப்பில் திறமையாக எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் படைப்பாற்றல் மிக்க பிள்ளையோ நூல்களதும் நூலாசிரியர்களதும் மேலாண்மையை அப்படியே ஏற்றுக் கொள்வதில் நிறைவு காண்பதில்லை. அவன் தனது சொந்தக் கதைகளையும் முடிபுகளையுமே பெரிதும் விழைகின்றனன்: தான் காண்பதை அவ்வாறு கண்டது தனது மனத்திலே கிளர்த்திவிடும் உணர்வைப் புலப்படுத்துவதிலேயே நிறைவு காண்கின்றான். இவ்வாறு அவன் முடிவு மேற்கொள்ள அவன் வினாவும் வினாக்கள் அபத்தமாகப் மற்றவர்களுக்குத் தொற்றுவது அவன் பிழையன்று.

இந்தக் கூற்றுக்கு உதாரணமாக டானி என்ற நான்கு வயதுச் சிறுமி தனது தாயிடம் கேட்ட வினாவை ரொறன்ஸ் காட்டுகிறார். பன்னிரண்டு மைலா? பன்னிரண்டு மணித்தியாலங்களா கூட? என்பதுதான் அந்தக் கேள்வி முட்டாள்போலக் கேட்காதே என்று தாய் அவளின் கேள்வியை முனை முறித்துவிட்டாள்.

**இதுபற்றி ரொறன்ஸ் தரும் விளக்கம் இது**

உண்மையில் டானியின் கேள்வி மிகவும் நுண்ணறிவு வாய்ந்ததே. டானியின் பச்சிளம் வாழ்க்கையில் 12என்ற எண்ணானது எப்பொழுதும் ஏதோ ஒரு பொருளோடு இணைக்கப்பட்டுத்தான் வந்திருக்கிறது. அது மைலாகவோ மணித்தியாலங்களாகவோ போளைகளாகவோ முட்டைகளாகவோ இருக்கலாம். இப்பொழுது அவளுக்கு அந்த எண் இந்தப் பொருள்களுக்கு அப்பால் தனித்துவமான ஒன்றாக உருக்காட்டியிருக்கிறது. அந்த உருக்காட்டலைக் கண்டுபிடித்துவிட்ட உற்சாகந்தான் அவளை இவ்வாறு கேட்க வைத்தது. ஆக்கத்திறன் படைத்தவருக்கு ஒரு வினாவுக்கான விடை எப்பொழுதும் ஒன்றாகவே இருப்பதில்லை. நுண்ணறிவு ஈவுபோல ஆக்கத்திறன் ஈவு ஒரு விடைக்குள் அடக்கிவிடக் கூடிய காரியம் அல்ல.

**இதற்குப் பல எடுத்துக் காட்டுகளை ரொறன்ஸ் தருகிறார்**

ஒரு கட்டடத்தைக் கட்டுவதற்கு மரத்திலும் பார்க்கச் செங்கல் சிறந்தது என்பதேன்? பிள்ளைகளிடம் வினாவினால்..

செங்கல் கூடிய வலுவானது நீண்டகாலம் நின்றுபிடிப்பது பாதுகாப்பானது மரம் போல ஊடறுத்துச் செல்லமுடியாதது. என்பது உகந்தவிடை. இவற்றில் இரண்டையாவது விடையாகத் தந்தால் அந்த விடையைத் தந்த பிள்ளைக்கு முழுமையான புள்ளியை வழங்கலாம். ஆனால் ஒரு பிள்ளை எங்கள் தேசிய வனத்தைப் பாதுகாக்க மரங்கள் வேண்டும் ஆகவே செங்கற்களைப் பயன்படுத்துவது சிறந்தது என்கிறான். இன்னொரு பிள்ளை செங்கல் குளிர்மையானது அவலட்சணமானது ஆனால் மரமோ அழகானது போதிய வெப்பம் கொண்டது. எனவே மரந்தான் செங்கல்லிலும் சிறந்தது என்கிறான். விவேகமானதும் பொருத்தமானதும் முதல் விடையே என்றாலும் பின்லிரண்டிலும் உணர்ச்சியும் கற்பனையும் ஆக்கத்திறனும் இழையோடவில்லையா?

ஆக்கத்திறனுக்கான அடிப்படையான உளநிலைக்குப் பின்வரும் அம்சங்கள் இன்றியமையாதவை என்பதும் ரொறன்ஸின் கருத்தாகும். விடுப்பு, நெகிழ்வு, மெல்லுணர்வு, மீள்வரை விலக்கண ஆக்கம், தன்னுணர்ச்சி, தனித்துவம், அகநோக்கு.

**விளக்கு இன்றைக்கும் ஒளி வீசுகிறது...**

சிறு பிள்ளைகளில் மட்டுமல்ல வளர்ந்த மாணவர்களிலும் கூட ஆக்கத்திறன் வெளிப்பாட்டுக்கான அடிப்படைகள் இல்லாமலில்லை. அவர்களை வழிப்படுத்தும் பொறுப்புடைய ஆசிரியர்களாகிய நாங்கள் அந்தத் திறனை இனங்காண முற்படுகின்றோமா என்பது கேள்வி.

அண்மையில் பேராசிரியர் ஒருவர் பாலபண்டிதர்களுக்குச் செய்யுள் இயற்றுவதும் ஒரு வினாத்தாளாமே என்று வியந்தார். அந்த வியப்பின் பின்னணியிலே நையாண்டி தொக்கு நிற்பதை நான் கண்டு கொண்டேன். மற்றொருவர் எங்கள் இசையாசிரியர்களுக்குப் பாட நன்றாகத் தெரிகிறது ஆனால் சங்கீதம் இன்னதென்று அவர்களுக்குத் தெரியாது என்றார். இவ்விருவரதும் கருத்துக்களிலிருந்து கல்வி என்பது செயல் நிலையிலும், கருத்து நிலையிலும் அமைவதே சிறந்தது என்ற தொனிப்பை நன்கு உணரக் கூடியதாயிருந்தது. கற்பனையற்ற ஆக்கத்திறன் மழுங்கிய, வெறும் ஏட்டுக்கல்விதான் சமுதாயத்துக்குப் பயன் தரத் தக்கது என்பதை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம். ஆசிரியர்களாகிய உங்கள் சிந்தனைக்கே இதை விடுகிறேன்.

இந்த அனுபவப் பகிர்வானது அன்றைய நாள்களுக்கு மாத்திரமல்ல: இன்றைய நாள்களில் செயலாற்றும் கல்வியியலாளர்களின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் ஆக்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

'விளக்கு' ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்யும் தூரநோக்குடன் சிந்தித்து வெளியிட்டமையை அதில் வெளிவந்த இத்தகைய ஆக்கங்கள் வெளிப்படுத்துகின்றன.

(தொடரும்...)

அறிந்த மிருகம் அறியாத கதை



# சீழ்க்கை அடிக்கும் டொல்பின்கள்!

கட்டுரை
ஏ.ஜே.ஞானேந்திரன்

ஒவ்வொரு டொல்பினுக்கும் தனித்துவமான சீழ்க்கை ஒலி உண்டு என்பது எம்மை வியப்பின் உச்சிக்குக் கொண்டு செல்லும் தகவல். மனிதருக்கு மனிதர் கைரேகைகள் வேறுபடுவதைப்போல டொல்பினுக்கு டொல்பின் சீழ்க்கை ஒலி வேறுபடுகின்றது.

**டொல்பின் மீனா?**

கர்ப்பப் பை உள்ள ஒரு மீன்தான் டொல்பின்! மீன்கள், கணவாய் இனத்தைச் சேர்ந்த ஸ்குவிட்ஸ், ஓடுடைய நண்டு, சிங்க இறால் போன்ற கடல்வாழ் உயிரினங்களைத்தான் இவை விரும்பி உண்பவை! திமிங்கலம், கடற்பன்றிபோன்ற நீர்வாழ் உயிரினங்களின் நெருக்கமான உறவு இது! தமிழில் இதை ஓங்கில் என்று அழைக்கிறார்கள்.

**பெரிய குடும்பம் இது...!**

ஓங்கில்கள் எனப்படும் டொல்பின்கள், திமிங்கலங்கள் மற்றும் பாலூட்டிகளின் இடைப்பட்ட இனமாகும். கால்களில் இரட்டைப்படை விரல்கள் உடைய பாலூட்டிகளின் மூதாதையர் ஆகும். இவைகளின் முழுத் தொகையை அறிவது சிரமம் என்கிறார்கள். காரணம் இவை உலகெங்குமுள்ள கடல், ஆற்றுப் பிராந்தியங்களில் வாழ்கின்றன என்பது மட்டுமல்ல, இவற்றில் 40க்கு மேற்பட்ட இனங்கள் இருப்பதும் இதற்குக் காரணமாகும். நீண்ட மூக்கு பொது டொல்பின், குறுகிய மூக்கு பொது டொல்பின், பொதுவான குப்பி மூக்கு டொல்பின், இந்திய பசுபிக் குப்பி மூக்கு டொல்பின், புர்றான் டொல்பின் என்றெல்லாம்
பல வினோதமான பெயர்களில் இவற்றின் பல்வேறு இனங்கள் அழைக்கப்பட்டு வருகின்றன. வடக்கு திமிங்கில டொல்பின், தெற்கு திமிங்கில டொல்பின், இந்திய பசுபிக் கூன்முதுகு டொல்பின், சீன வெள்ளை டொல்பின், அத்திலாந்திக் பிரதேச கூன்முதுகு டொல்பின், அத்திலாந்திக் புள்ளி டொல்பின், புள்ளிகளுடைய டொல்பின், ஸ்பின்னர் டொல்பின், கோடிட்ட டொல்பின், கொலையாளித் திமிங்கிலம், குள்ளர் கொலையாளித் திமிங்கிலம், தவறான கொலையாளித் திமிங்கிலம் என்று திமிங்கலத்தின் பெயராலும் வேறு சில இனங்கள் அழைக்கப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட ஆறு இனங்கள் திமிங்கலத்தின் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன. .

**இவற்றின் உடலமைப்பு...?**

டொல்பின்கள் வேகமாக நீச்சலடிக்கும் வண்ணம் இயைபடைந்த நீள் வடிவ உடலைக் கொண்டிருக்கின்றன. வால் பகுதியில் உள்ள பெக்டோரல் துடுப்புகள் திசை, கட்டுப்பாட்டுத் திறனையும் முற்செலுத்தம் திறனையும் கொண்டிருக்கும். நீந்தும்போது முதுகு துடுப்புக்கு உறுதித்தன்மையை வழங்குகிறது. இனங்கள் வேறுபட்டவையாக இருப்பினும் பெரும்பாலும் கோடுகள் மற்றும் இணைப்புகளுடன் சாம்பல் வண்ணங்களைக் கொண்டவையாக உள்ளன.
சில இனங்களுக்கு 250வரையான பற்கள் முளைக்கும். டொல்பின்கள் தங்கள் தலைக்கு மேல் உள்ள ஓர் உறிஞ்சும் துளை மூலம் மூச்சுவிடுகின்றன. அந்த மூச்சுக் குழல் மூளைக்கு முன்புறமாக உள்ளது. டொல்பின் பெரிய மற்றும் மிகவும் சிக்கலான மூளையைக் கொண்டது.

**எதிரொலியின் துணைகொண்டு வேட்டை**

பெரும்பாலான டொல்பின்கள் நீரின் அடியில் மற்றும் வெளியேயும் தீவிர கண்பார்வை கொண்டவை. மனிதர்களை விட பத்து மடங்கு அல்லது அதற்கு மேற்பட்ட அதிர்வெண்களை இவற்றால் கேட்க முடிகிறது. நீருக்கு அடியில் கேட்க கீழ் தாடை எலும்பு ஒரு கொழுப்பு நிறைந்த குழி வழியாக நடுச்செவிக்கு ஒலியைக் கடத்துகிறது. டொல்பின் பற்கள், எதிரொலியை உணர்ந்து ஒரு பொருளின் சரியான இடத்தை அறிவதாக நம்பப்படுகிறது. இந்திய டொல்பின்கள் சில பார்வைக்குறைபாடு உடையன. அவைகள் மீன் மற்றும் சில வகையான உணவுகளைக் கண்டறிவதற்கு நுகர்வுத் திறனைப் பயன்படுத்துகின்றன.
இரையின் உருவம், அது வரும் வேகம், எந்த அளவு கொண்டது? எவ்வளவு தூரத்தில் நிற்கிறது? என்ற பல சங்கதிகளை இந்த எதிரொலி மூலம் கண்டறியும் என்பது மிக மிக ஆச்சரியமான சங்கதி!
சப்தத்தை எழுப்பி அதன் எதிரொலிப்பை உணரும் திறனுடைய வெளவாலைப்போல, இவை எழுப்பும் சத்தமும் இரையில் பட்டு எதிரெலிப்பதை இவை துல்லியமாக உணர்கின்றன. உணவை வேட்டையாடிக் கொள்கின்றன. இவற்றில் 40 வரையிலான இனங்கள் இருப்பதாகக் கூறினோமல்லவா? இதில் ஐந்து இனங்கள் ஆற்று வாழ்வையே விரும்புகின்றன.

**தீராத விளையாட்டுப் பிள்ளை**

அதிவேகமாக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்லும் தன்மை கொண்டுள்ளதாலும், விளையாட்டுச் சுபாவம் உடையதாலும், இவற்றை நேரில் பார்ப்பதற்குப் பலரும் ஆசைப்படுகிறார்கள். தண்ணீருக்குள்ளிருந்து செங்குத்தாக இதனால் நீர் மட்டத்துக்கு மேல் எழும்ப முடியும். தமது சுற்றுப்புறங்களை ஆராய்ந்துவிட்டு, கப்பல்களைப் பின் தொடர்வது இவற்றுக்குப் பிடிக்கும். கப்பலோடு இணைந்தாற்போல இவை நீந்திச் செல்வது, சக்தி விரயத்தைதடுக்கும் ஒரு யுக்தியென்று விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். திமிங்கலங்களையும் மீன்பிடிக் கப்பல் களையும் பின்தொடர்ந்து கடல்பறவைகள். மீன்கள் போன்றவற்றைப் பிடித்துண்ணும் பழக்கமுடைய இந்த டொல்பின்களைச் சந்தர்ப்பவாதிகள் என்றும் நோக்குகிறார்கள். இது உறங்கும்போது, நீரில் அமிழ்ந்து விடக்கூடாது என்பதற்காக, இதன் பாதி மூளை மாத்திரமே உறங்க, மீதி விழித்துக் கொண்டிருக்கிறதாம். டொல்பின் தொடர்ந்து சுவாசிக்க இது ஏதுவாகின்றது.

**டொல்பின்களின் காதல் வாழ்க்கை**

இவை ஒன்றுடன் ஒன்று கூடுவது குறிப்பிட்ட ஒரு காலத்தில்தான் என்றில்லை. வருடம் முழுவதும் இவை உறவு வைத்துக் கொள்கின்றன. சில பிராந்தியங்களில், வசந்த காலத்திலும், இலையுதிர் காலத்திலும் இது அதிகமாகச் சம்பவிக்கும். இனத்தைப் பொறுத்துக் குட்டிகளுக்கான சினைக்காலம் 9தொடக்கம் 17மாதங்கள் வரை நீளலாம். குட்டி
ஈனும் காலத்தில், தாய் தன்னை ஏனைய டொல்பின்களிடமிருந்து பிரித்துக் கொள்வதோடு, நீர் குறைந்த பிரதேசத்துக்கும் வந்துவிடுகின்றது. பொதுவாக ஒரு குட்டிதான் ஈனும். இரட்டைக் குட்டிகள்
பிறப்பது மிகவும் அபூர்வம். குட்டி பிறந்த அடுத்த கணம் குட்டி சுவாசிக்க வேண்டும் என்பதற்காக, நீரின் மேல் மட்டத்துக்குத் தாய் குட்டியைக் கொண்டு வந்து விடுகின்றது. 3தொடக்கம் 8வயது வரும்வரைத் தமது குட்டிகளைப் பராமரிக்கின்றன.

**இறைச்சிக்காக ஜப்பானில் பெருவேட்டை**

ஜப்பானின் மிகப் பெருமளவில் டொல்பின் வேட்டை ரைஜியில் நடத்தப்படுகிறது. அங்குள்ள மலைக் குகைப்பகுதியில் நூற்றுக்கணக்கான டொல்பின்கள் தினமும் வேட்டையாடப்படுகின்றன. செப்டம்பர் முதல் பெப்ரவரி வரை 6மாதங்கள் டொல்பின் வேட்டை தொடர்கிறது. ஒவ்வொரு பருவத்துக்கும் 2ஆயிரம் டொல்பின்கள் கொல்லப்படுகின்றன.
அதிகாலை சூரிய உதயத்துக்கு முன்பே மோட்டார் படகுகளில் மலைக் குகைக்கு வந்து, வலை விரித்துக் காத்திருக்கிறார்கள் வேட்டைக்காரர்கள். இடப்பெயர்ச்சி செய்யும் டொல்பின்கள் கூட்டமாக அந்தப் பகுதியைக் கடக்க முயலும்போது, வலையால் தடுக்கப்பட்டு, வேட்டையாளர்களின் ஈட்டிகளுக்குப் பலியாகின்றன. கூர்மையான உலோகக் கம்பிகளை வைத்து, டொல்பின் உடலில் பலமுறை குத்துகிறார்கள். அந்தப் பகுதி நீரே சிவப்பாக மாறிவிடுகிறது. இப்படிச் செய்வதால் டொல்பின்களின் உளவியல் பாதிக்கப்படுகிறது என்கிறார்கள் ஆய்வாரள்கள். உயிர் போக்காட்டுவதைக் கவனிக்காது உளவியலை ஆராய்ந்து என்னதான் பயன்?

**மன அழுத்தத்தில் சாவு...!**

குட்டிகளையும் இளம் டொல்பின்களையும் இந்த வேட்டைக்காரர்கள் கொல்லாமல் விட்டுவிட்டாலும் அவை மன அழுத்தத்தில் விரைவில் சாவைச் சந்தித்துவிடுகின்றன. ஏனென்றால், டொல்பின்கள் கூட்டமாக வாழ்பவை. ஒன்றுடன் ஒன்று மிகவும் அன்பாகப் பழகுபவை. கண் முன்னே தங்கள் உறவினர்கள் கொல்லப்படும் காட்சியைப் பார்க்கும் டொல்பின்கள், துன்பமடைகின்றன. டைஜி டொல்பின் வேட்டையை லூயி பிசியோஸ் ஆவணப்படமாக எடுத்து வெளியிட்டார்.
அதற்குப் பிறகு உலகம் முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. விலங்குகள் நல ஆர்வலர்களும் வேட்டையைத் தடுக்கப் போராடினர். ஆனாலும் தடுக்க இயலவில்லை. பல கோடி பணம் புழங்கும் தொழிலாக மாறிவிட்டதும் ஜப்பானிய அரசு ஆதரவு அளிப்பதும் தான் இதற்குக் காரணம். உடலுக்குத் தீங்கிழைக்கும் இரசாயனங்கள் கலக்கப்பட்ட டொல்பின் இறைச்சியைச் சாப்பிட வேண்டாம் என்று தொடர்ந்து செய்து வந்த விழிப்புணர்வு மூலம், ஜப்பானிய மக்களிடம் டொல்பின் இறைச்சிக்கான ஆர்வம் குறைந்து வருகிறது.
ஆனால், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் டைஜி டொல்பின் இறைச்சிகளை வாங்கத் தயாராக இருக்கிறார்கள்.

**இரா்ணுவச் சிப்பாய்களான டொல்பின்கள்**

டொல்பின்களும் இராணுவத்தில் பணிபுரிகின்றன என்பது நீங்கள் அறிந்திராத ஆச்சரியமான தகவலாக இருக்கலாம்.
கடலில் எங்காவது சிக்கியிருக்கும் மனிதர்களை மீட்கவும், இவற்றுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். வியட்னாமுடனான போரின்போது, வியட்நாமியச் சுழியோடிகளைக் கொல்ல, அமெரிக்க இராணுவம் டொல்பின்களைப் பயன்படுத்தியதாக ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் அமெரிக்க இராணுவம் இதை அடியோடு மறுக்கின்றது. 1990ஆம் ஆண்டுடன் டொல்பினுக்கான இராணுவப் பயிற்சிகளை ரஷ்யா நிறுத்தி விட்டாலும், அமெரிக்கா இந்தப் பயிற்சிகளை இன்றுவரை தொடர்கின்றது. கொல்லுவதற்கென்றே பயிற்றுவிக்கப்பட்ட டொல்பின்களை ரஷ்யா 2ஆயிரமாம் ஆண்டில் ஈரானுக்கு விற்றுவிட்டதா"ச் சொல்லப்படுகின்றது.

கட்டுரை

வினோஜா நாதரூபன்



# பூமிக்குள் ஒரு புலனாய்வு

ஒரு காலத்தில் மனித உடலுக்குள் என்ன இருக்கிறது என்பது புதிராக இருந்தது. ஆனால் இன்று அதை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப் பார்த்துவிட்டார்கள். பஞ்ச பூதங்களாலான உடலைப் பிரித்துப் பார்த்துவிட்டாலும் அந்தப் பஞ்ச பூதங்களில் ஒன்றான பூமியை இன்னமும் முழுதாகப் பிரித்துவிட முடியவில்லை. விருப்பம் இருந்தால் எமது உயிரின் மையத்தைக் கூட இந்தக் கணத்திலேயே உணர்ந்துவிடலாம். ஆனால் அத்தகைய மனோபலம் கொண்ட ஞானியால் கூட பூமியின் மையத்தைத் துளைக்கக்கூடிய விஞ்ஞானத்தைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது. இந்த இயற்கை எமது சிறிய ஞானத்துக்கு அப்பாற்பட்டது.

### குனிந்து பாருங்கள்...

வாசிப்பதை நிறுத்தி விட்டுக் குனிந்து உங்கள் கால்கள் இருக்கும் தரையைப் பாருங்கள். அங்கிருந்து பூமியின் நடுப்பகுதி 6ஆயிரத்து 370 கிலோ மீற்றர்கள் கீழே உள்ளது! யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு எட்டுத் தடவைகள் போய் வந்தீர்கள் என்றால், அத்தனை கிலோ மீற்றர்களுக்குச் சமனாகவிருக்கும். ஆனால் இதுவரை எம்மால் வெறும் 12கிலோமீற்றர்களே பூமியைக் குடைய முடிந்துள்ளது. பலர் நரகம் பூமிக்குக் கீழே உள்ளதென்று சொல்வார்கள். ஒருவிதத்தில் அது சரிதான். ஏனென்றால் நரகத்தில் இருக்கும் எண்ணைச் சட்டிகளைப்போல்தான் பூமியின் மையத்தில் வெப்பம் இருக்கும். யாழ்ப்பாணத்திலேயே வெயில் அப்படித்தான் இருக்கின்றது என்று சொல்கிறீர்களா? கொஞ்சம் பொறுங்கள். அங்கு வெப்பம் 6ஆயிரம் பாகை செல்சியஸ். கொதிக்கின்ற தண்ணீரைப்போல் அறுபது மடங்கு வெப்பம்.

அதோடு ஒப்பிடும் பொழுது நிச்சயம் நாம் நிறையப் புண்ணியம் செய்திருக்கிறோம் ('ஆறு' மனமே 'ஆறு'...). ஆனால், நிறையப் பாவம் செய்தவர்களுக்கு இன்னொரு தகவலைச் சொல்லிக்கொள்கிறேன். பூமியின் நடுப்பகுதிக்கு நீங்கள் போய்விட்டால் அங்கு அழுத்தம் மூன்றரை மில்லியன் அட்மோஸ்பியர்கள் இருக்கும். கிட்டத்தட்ட 48ஆயிரம் யானைகள் உங்கள் தலையின் மேல் ஏறி நிற்பது போன்ற அழுத்தம். (இயற்கையை நாம் பார்த்துக் கிழிக்கும் இலட்சணத்தில் அத்தனை யானைகளுக்குக் கடவுள் எங்கு போவார் என்று எனக்குத் தெரியாது).

### எம்மால் இவ்வளவே முடிந்தது...!

இதுவரைக்கும் வெறும் 12கிலோமீற்றர்கள்தான் பூமியைத் துளைத்திருக்கிறோம். ஆனால், 6 ஆயிரம் கிலோ மீற்றர்கள் அப்பால் இருக்கும் பூமியின் மையம் பற்றியும் இடையிலுள்ள பூமியின் கட்டமைப்புப் பற்றியும் எப்படி அறிந்து கொண்டோம்? சிதம்பர இரகசியமான பூமியின் உள்ளார்ந்தத்தை நாம் அறிய உதவுவது பூகம்பத்தின்போது பூமிக்குள் ஏற்படும் அதிர்வலைகள் மூலமாகத்தான். அதுமட்டும் அல்ல, இந்த அதிர்வலைகளை முறையாக ஆராய்வதன் மூலம் பூமியின் ஆரம்பம் மற்றும் இனிப் பூமியில் ஏற்படப்போகும் மாற்றங்கள், பூமியின் பரிணாம வளர்ச்சி, இவற்றையும் அறிந்து கொள்ளலாம். அத்தோடு எண்ணை மற்றும் வாயுக்கள் பூமிக்குள் எங்கு புதைந்திருக்கின்றன என்பது பற்றியும் தெரிந்துகொள்ளலாம்.

பூமியின் உட்புறமானது மெது மெதுவாக அசைந்துகொண்டிருக்கும் பல படிமங்களைக்கொண்டது. பூமியை ஒரு பெரிய வெங்காயமாகக் கருதினால் அதன் அடிமட்டத்திலுள்ள ஒரு சிறிய வெங்காய உருண்டைதான் பூமியின் உட்கருவகம். இது இரும்பாலும் நிக்கல் எனும் உலோகத்தாலும் ஆனது. திண்மநிலையில் கட்டியாகக் காணப்படும். அத்துடன் அதீத வெப்பநிலையிலும் அழுத்த நிலையிலும் காணப்படும். இதைச் சுற்றி உருகிய நிலையில் குழம்பாக இருக்கும் இரும்பையும் நிக்கல் உலோகத்தையும் வெளிக் கருவகம் என்று சுட்டுகிறார்கள். இந்தப் படிமமானது தொடர்ந்து மேற்காவுகை ஓட்டத்தில் அசைந்து கொண்டேயிருக்கும். அதாவது அந்தக் குழம்பின் அடியிலிருக்கும் வெப்பமான மூலக்கூறுகள், ஒப்பீட்டளவில் வெப்பம் குறைந்த குழம்பின் மேற்பரப்பில் இருக்கும் மூலக்கூறுகளின் இடத்தைப் பிடிப்பதற்காக மேல் எழுந்து செல்ல, குழம்பின் மேற்பரப்பில் இருந்த மூலக்கூறுகள் குழம்பின் அடிப்பாகத்துக்கு வருவதை மேற்காவுகை ஓட்டம் என்பர். இவ்வாறு மேலே வந்த வெப்பமான மூலக்கூறுகள் தம்மோடு தொடுகையிலிருக்கும் திண்மப் படிமங்களுக்கு வெப்பத்தைக் கொடுக்கும்.

விளங்கவில்லையாயின் ஒரு கற்பனை...!

ஒரு கேத்தல் முழுவதும் நீர் நிரப்பப்பட்டுள்ளது. கேத்தில் மூடியின் விளிம்பு பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டுள்ளது என்று கற்பனை செய்யுங்கள். இப்பொழுது கீழே எரியும் நெருப்பின் வெப்பம் கேத்தலின் சுவர்கள் வழியே கடத்தப்பட்டு மூடியை அடைய முயற்சிக்கும். இதை வெப்பக் கடத்தல் என்பர். இந்த வழிமுறையில்தான் திண்மங்களில் வெப்பம் கடத்தப்படுகிறது. ஆனால் மூடியின் விளிம்பு பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டுள்ளமையால் வெப்பம் மூடிக்குக் கடத்தப்படாது. உடனே வீராதி வீரன்போல், மூடி சுடாது என்று நினைத்து மூடி மேல் கையை வைத்து விடாதீர்கள். அது விவேகம் இல்லாத வீரம். அத்தகைய வீரம் மிருகங்களிடம்கூட உண்டு.

> இதுவரை எம்மால் வெறும் 12கிலோ மீற்றர்களே பூமியைக் குடைய முடிந்துள்ளது. பலர் நரகம் பூமிக்குக் கீழே உள்ளதென்று சொல்வார்கள். ஒருவிதத்தில் அது சரிதான். ஏனென்றால் நரகத்தில் இருக்கும் எண்ணைச் சட்டிகளைப்போல்தான் பூமியின் மையத்தில் வெப்பம் இருக்கும். யாழ்ப்பாணத்திலேயே வெயில் அப்படித்தான் இருக்கின்றது என்று சொல்கிறீர்களா. கொஞ்சம் பொறுங்கள். அங்கு வெப்பம் 6ஆயிரம் பாகை செல்சியஸ். கொதிக்கின்ற தண்ணீரைப்போல் அறுபது மடங்கு வெப்பம்.

வெப்பக் கடத்தல் மூலம் வெப்பம் மூடியை அடையாது. ஆனால், கேத்தலின் உள்ளே உள்ள நீரின் மேற்காவுகை ஓட்டத்தால் மூடிக்கு வெப்பம் கடத்தப்படும். கேத்தலின் அடியிலுள்ள வெப்பமான மூலக்கூறுகள் கேத்தலின் மேற்பாகத்துக்கு எழும். கேத்தலின் மேற்பாகத்தில் இருக்கும் வெப்பம் குறைந்த மூலக்கூறுகள் கேத்திலின் அடிப்பாகத்துக்குத் தாழும். இதேபோல்தான் பூமியின் அடியிலிருக்கும் வெப்பம் மேற்பாகங்களுக்குக் கடத்தப்படுகிறது. ஒருவேளை கடவுளின் கேத்தல்தான் பூமியாக இருக்கலாம். நாம் வெறும் தேயிலைப் பொடிகள் தானோ யார் அறிவர். ஆனால் நாம் கடவுளுக்குக் கொடுக்கும் தலையிடிக்கு, வெகுவிரைவில் அவருக்குத் தேநீர் தேவைப்படும், நமது கதையும் முடிந்துவிடும்.

### தயவுசெய்து பெண்கள் கோபப்பட வேண்டாம்...

பூமியின் வெளிக்கருவகத்தில் மட்டும் அல்ல, எந்தவொரு திரவத்துக்குள்ளும், வாயுவுக்குள்ளும் நிகழும் மேற்காவுகை ஓட்டத்தால்தான் ஓர் இடத்திலிருந்து வெப்பம் இன்னோர் இடத்துக்குக் கடத்தப்படுகிறது. கவனிக்கவும், திண்மங்களில் வெப்பக்கடத்தல் மூலமும், திரவங்கள் மற்றும் வாயுக்களில் மேற்காவுகை ஓட்டம் மூலமாகவும் வெப்பச் சக்தி கடத்தப்படுகிறது. இன்னொரு வழியிலும் வெப்பம் கடத்தப்படலாம். திண்மத்தின் தொடுகையோ இல்லை திரவவாயுமூலக்கூறுகளின் உதவியோ அன்றி எதுவும் அற்ற வெற்றிடத்தின் ஊடாகவும் வெப்பம் கடத்தப்படும். அதைக் கதிர்வீச்சு என்பார்கள். சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் எதுவும் அற்ற வெற்றிடம் காணப்படுகிறது. ஆனால் சூரியனின் வெப்பம் க்திர்வீச்சு மூலம் பூமியை வந்தடைகிறது. வெப்ப சக்தி கொஞ்சம் திமிர் பிடித்த பெண்தான் (சக்தி என்பதால் பெண் என்றேன், அதற்காக இதை வாசிக்கும் பெண்கள் கோபப்பட வேண்டாம்). ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால் திண்ம, திரவ, வாயுக்களின் உதவி இருப்பினும் பல சமயங்களில் வெப்ப சக்தி அவற்றின் உதவியை நாடாது கதிர்வீச்சின் ஊடாகத் தனது சொந்தக்காலில் நிற்பதுண்டு.

பூமியின் வெளிக்கருவகத்துக்கு அடுத்ததாகக் கீழ் மூடகம் என்ற அடுக்கும் அதைத் தொடர்ந்து மேல் மூடகம் என்ற அடுக்கும் காணப்படும். மேல் மூடகத்தின் மேற்பாகமும், கீழ் மூடகமும் கடினமாகக் காணப்படும். மேல் மூடகத்தின் கீழ்ப் பாகம் மெருதுவாய்க் காணப்படும். அத்தோடு முழுவதுமான மூடகம் என்று பார்க்கும்போது ஆங்காங்கே திரவநிலையிலும் இவை காணப்படும். அதனால் மூடகத்திலும், மேற்காவுகை ஓட்டத்திலாலான அசைவு நிகழ்ந்து கொண்டி ருக்கும்.

### கவசத்தகடுகள் எனும் மேலோடுகள்

இவற்றின் மேல் இறுதி அடுக்காக மேலோடு காணப்படுகிறது. இது வெறும் சில கிலோமீற்றர்களே தடிப்புக்கொண்டது. அதிக பட்சம் 75 கிலோமீற்றர்கள். இந்த மேலோடானது கண்ட, மற்றும் சமுத்திரப் புவித் தகடுகளை ஒன்றோடு ஒன்று அருகருகே அடுக்கி ஆக்கப்பட்டுள்ளது. (கடவுள் பொழுதுபோகாமல் ஜிக்சோ விளையாடியிருக்கின்றார்). இந்தத் தகடுகள் அசைந்துகொண்டிருக்கும் மேலோட்டின் மேல் மிதந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தகடுகளின் அசைவே பூகம்பங்களை உருவாக்கின்றது.

தகடுகளின் மேல் நாம் வாழும் நிலக்கோளம் இருக்கிறது. இதன் தடிப்பு அதிகபட்சம் 200கிலோமீற்றர்கள். பூமியின் கீழ் நிகழும் அசைவுகளால் புவித் தக்டுகள் ஒன்றோடு ஒன்று உராய்வடையும். அப்பொழுது அவற்றுக்கு இடையில் பொரிய விசைகள் கட்டமைக்கப்படுகின்றன. உள்ளே ஏற்படுகின்ற நெருக்கடி தாங்க முடியாமல் ஒரு கட்டத்தில் அவை சடுதியாக அசையத்தொடங்கும். அதுவே பூகம்பம். எரிமலை.

அப்பொழுது உருவாகும் அதிர்வலைகள் பூமியின் அனைத்துத் திசையிலும் பயணிக்கும். ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல பூமியின் ஒவ்வொரு அடுக்கும் ஒவ்வொரு தன்மைகொண்டது. இந்த அதிர்வலைகள் பூமிக்குள் பயணிக்கும் போது, அந்த அடுக்குகளின் தன்மைக்கேற்ப அவற்றின் வேகம் மாறுபடும். அந்த வேக வித்தியாசங்களை ஆராய்வதன் மூலம் பூமியின் கட்டமைப்பை அறிந்துகொள்ள முடிகிறது.



சிறுகதை

# பிள்ளை பிடிகாரி...?

தையிட்டி அ. இராசதுரை

> எல்லாம் தங்கடை கிறிஸ் பூதத்தின்ரை விளையாட்டுத்தான் என்ற ஐடியாவில்... பொலிசும்தான் இருந்த இடத்தைவிட்டு அசையதா கணக்காய்... முறையான பொலிஸ் டியூட்டிக் கதையாகியே விடுகிறது... திடீரென்று ஒரு ரெட் கப் வாகனமொன்று... வந்து அந்தக் கூட்டத்துக்குள்... சடின் ஸ்ரொப் ஆகிவிட... அடித்தவர்களெல்லோரும் ஓய்ந்த பெண்டுகளாய்... நின்றுகொண்டிருக்க...

“பிள்ளையளெல்லாரும் ரீச்சர் சொல்லுறதைக்கேட்டு, வலு கவனமாக நடக்கவேணுமென்ன...? உங்களையெல்லாம் களவாப் புடிச்சுக் கொண்டு போற... பொல்லாத பிள்ளைபிடிகாரி வரப்போறாள்... வந்துவிடப்போறாள்... ஒருத்தரும் ரீச்சருக்குப் பறையாமலுக்கு ஒண்டுக்கோ... தண்ணி குடிக்கவோ... வெளியிலை போகவே கூடாது... என்ன ரீச்சர் சொல்லுறது எல்லாம் நல்ல வடிவா விளங்குதே...? எங்கை எல்லாரும் ஓமெண்டு சொல்லுங்கோ பாப்பம்...?”

“பிலத்துப் பிலத்து...?”

“ஓம் ரீச்சர்...! ஓம் ரீச்சர்...! நாங்கள் ஒரிடமும் போவமாட்டம்...! போவமாட்டம்...!”

அந்தப் பேமசான, முன்பள்ளியின் ரீச்சரான சியமளாவின் கடும் எச்சரிக்கையான, வேண்டுகோளுக்கு... அந்தப் பிள்ளைபிடிகாரியின் பீச்சல் பயத்தில்... அந்தளவு முன்பள்ளிச் சிறார்களும்... இப்படியெல்லாம், கோரஸில்... முழுங்கித் தள்ளினார்கள்.

“எல்லாரும் அச்சாப் பிள்ளையளென்ன...? ரீச்சர் சொல்லுறபடி நடந்தா... உங்கட பாதர், மதர் எல்லாருக்கும் எவ்வளவு புளுகமாயிருக்கும்...! உங்களுக்கெல்லாம்... ஐஸ்பழம், சொக்லேற், போண்டா, வடை, மிக்சரெல்லாம் கிடைக்கும்தானே...!”

ரீச்சர் அந்தச் சின்னஞ்சிறு உலகங்களைத் தட்டிக்கொடுத்து, உசார் பண்ணி ஐஸ் வைத்தும் கதைத்து விட்ட போது...

“ரீச்சர்...! இஞ்சை ரீச்சர்...! அகிலனுக்கு மூத்திரமிப்ப சரியா வருகுதாம் ரீச்சர்...? மூத்திரம் பெய்யப் போறானாம் ரீச்சர்” தன்னுடைய யூறின் அவசரத்தையும் காட்டிக் கொள்ளாமல் பக்கத்து வாங்கில் கூட்டாளியான அரவிந்தன், குளறிக்கத்திச் சத்தம் போட்டான்...! தன்னுடைய அவதியான மூத்திர முடுக்கில்...?

இந்த, அவலமான நேரத்து... ஒரு சோதனைக் கலக்கடியான இந்த யூறின் கதையைக் கேட்டுச் சிரித்தும் விட்ட ரீச்சர், ‘என்ன அகிலன் அவுட்டுக்கு இப்ப அவசரமாப் போகப் போறீங்களா... என்ன?” ஒரு பெற்றதாய் நிகராய்... ரீச்சர் இப்படித்தான் கேட்டும் விட்டதும்...

அந்த, அவசர பங்ஷனுக்குரிய அகிலன் மாத்திரம் ‘ஓ’மென்று தலையாட்ட முன்னமாய்... “ஓம் ரீச்சர்... ஓம் ரீச்சர்...” என்ற பாரிய அவசர யூறின் கோரஸ்சே... பல பாட்டாலும்... வெடித்து... ஓவர் வ்லோவ் பண்ணியும் தான் விடுகின்ற மாதிரியாய்...?

அந்தப் பிள்ளைபிடிகாரி தொடர்பாக வந்தும்விட்ட யூறின் ஐயிற்றத்துக்கு முத்திரை குத்தப்பட்டும் விட்ட, அந்த அகிலன் பயல்... தான், சேர்த்து வைத்திருக்கும்... அந்தளவு யூறினையும்... வெரி வெரி சடினாய்... ரீச்சரின் காலடியிலேயே... எந்தக் கூச்ச நாச்சமும் இன்றி சரிகட்டியும் தான் விடப்போகின்றவனாய்... ‘இப்பவே’ என்ற மாதிரியாய் நின்றுகொண்டிருந்தான்...

◆ ◆ ◆

“சரி அவுட்டுக்குப் போப்போற, பிள்ளையளெல்லாரும், கெதியா, லைனிலை வந்து நில்லுங்கோ பாப்பம்... ம்... கெதியா... கெதியா...”

ரீச்சரின் பறப்பும் துரிதப்படுத்தலும்... ஹீரோவாக யூறின் கியூவில் முதலாளாய் அகிலன்... ரயில் என்ஜினாய் நிற்க, கொம்பாட்மென்ற் பெட்டிகளாய்... அடுக்கத் தொடுக்கவாய் அந்த யூறின், லிற்றில்ஸ்!


யூறின் கச்சேரி பினிஷ் ஆனதும் காத்திருந்து வெடிவைத்த கணக்காய்... “ரீச்சர் எனக்குத் தண்ணீ விடாய்க்குது...? இப்ப,தண்ணி ஒணும்... ஒணும்...?” வீட்டில் மாதிரி அந்த லிற்றில் தங்கச்சி நிரூஷா அடம்பிடிக்கத் தொடங்க, தண்ணீர் விடாயில்லாத மற்றைய லிற்றிசுகளும் தங்களுக்கு இப்ப தண்ணீர் வேணுமென்று வடம்பிடிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒரு பெற்ற தாய்க்குச் சரிக்குச் சரியான மனப்பாங்குடன்... சியாமளா ரீச்சர், ஒரு போத்தலையும் தூக்கியெடுத்துக் கெண்டே தண்ணீர் பைப்படிக்கு ஓடுகின்றாளா...? என்ன செட்டை கட்டிப் பறக்கின்றாளா?

புதிதாய்ப் போடப்பட்டும் விட்ட ரயில் பாதையில் ரயில் ஒன்று தனக்கெயுரித்தான அட்டகாசத்துடன் ஓடிவர... இந்தென்னாம் பெரும் ரயில் வண்டியனும்தான்...! தங்களைப் பிடித்து லபக்கென்று விழுங்கி விட்டாலுமென்ற பயக்கெடுதியில்... போல... ஒதுங்கிப் பதுங்கி ரயிலுக்கொரு தனி மரியாதையைப்போல் நின்றுகொண்டிருந்தவர்களெல்லாம் அந்த் ரயில் இராட்சதன் பாஸ் பண்ணியதும்... பாஸ் பண்ணி விட்டதும்... அந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவையை பெரும் சன நெரிசலோடு (ஆபத்தைக் கடந்து விட்டதைப்போல) முண்டியடித்துக் கொண்டே... கடக்கின்றார்கள்? கடந்து முடிக்கிறார்கள்...!

அந்த முகூர்த்தம் பார்த்துத்தான்... யாரோ ஒரு சனியன்... “பிள்ளை பிடிகாரி வாறளடாப்பா... வாறாளடாப்பா..” என்று, தொண்டை கிழிய... மூலம் புறப்பட... தன்னையும் தான் பிடிக்கப் போறளெண்ட... கடிக்கலக்கத்தில்... குளறிக் கத்திச் சத்தம்போட்டுத் தொலைக்க...

“அட எங்கையடாப்பா... எங்கையடாப்பா... ஐயோ... ஐயோ...?” என்றெல்லாம்... லிற்றிஸ்சோடு.. சைக்கிள்களில் ரண் பண்ணிக்கொண்டு வந்தவர்களெல்லாம்... அடுத்த பதில்களைக் கேட்க முன்னமே... வேலிகளுக்குள்.. சத்த வெடிகளாய்... விழுந்தொழும்பி... பயத்துக்கு மேலே பயத்தை அடுக்கி வைத்தும் கொண்டார்கள்...?

தனது லேடீசில்... பருந்துபோல்... வந்துகொண்டிருந்த பிள்ளைபிடிகாரி கார்த்திகா... ஒரு லிற்றிள்ஸ் கோழிக் குஞ்சுகளும்... வளப்படாத வன்மத்தில் ஓர், ஆமிச்சுற்றுச் சுற்றிச் சுழன்றடித்துவிட்டு... தான் நினைத்த பக்கமாய் தனது வண்டியை ற்ரேண் பண்ணியும் விடுகின்றாள்...! அந்த முன்பள்ளிக்கு முன்னால்... பெரும் அமளி துமளி... தொடங்கியும் விடுகிறது. தண்ணீர் எடுக்கவென்று பிள்ளைகளின் பரிதாபத்தில் பைப்படிக்கு ஓடிப்



போன ரீச்சர், தன்னையும் தான் இந்தப் பிள்ளைபிடிகாரி ரவுண்ட் பண்ணிக் கொண்டு வந்து ஆத்தாக் கடைசிக்குப் பிடித்துத்தான் விட்டாலுமென்ற பயக்கடுதியில்... எடுத்த பற்றாக்குறைத் தண்ணீரோடு...? ஓட்டமாய் ஓடித்தான் போய்விட்ட காட்சி...!

◆ ◆ ◆

முன்பள்ளி குளோஸ் பண்ணும் நேரமும் நெருங்க நெருங்க... பிள்ளைபிடி காரிப் பயமும் நீயா? நானா? என்ற விதமாய்... பிள்ளைகளைக் கூட்டிப்போகவென்று... வேளை காலையோடு... நேசறிக்கு ஓடி வந்தும்விட்ட... சில பேரன்ஸின்... மைண்டிலும் சுரு சுருவென்று ஏறிக்கொண்டிருந்தது.

“நேசறி குளோஸ் பண்ணுற நேரம்... அந்தப் பிள்ளை தின்னிக்கு கரெக்டாத் தெரியும்போல...?”

இப்படி ஒரு லிற்றிலின் பொறுப்பாளர்... தொடங்கி இன்னுமாய் பிள்ளை பிடிகாரியின் த்றில்லை வளர்க்கத் தொடங்கினார்.

“எல்லாரும் சேர்ந்து அவளை அடிச்சுச் சாக்கொல்ல வேணும்... என்ன ஆரும் கொண்டுபேறதுக்கா நாங்கள் பெத்துப்போட்டு விட்டனாங்கள்...? பிளடிவுமன்?”

உருப்படிக்கு எண்ணி எட்டைப் பெத்து வைச்சிருக்கிற ஒரு பிள்ளைப் பித்தரான... ஒரு பாதர்தான்... அடித்து முழக்கினார். குண்டு வெடித்த கணக்காய்...? அந்த நேரம் பார்த்துத்தான்... கோலொன்று வர ரீச்சர்... “ஹலோ...” என்று பறதிப்பட்டதும்... அவதிப்பட்டதும்...

“ஓ நான் தான்... அகிலன்ரை அம்மா கதைக்கிறன். பிள்ளைபிடிகாரிப்பேய் இண்டைக்கும் நெசறியடீலை லேடீசிலை போனவளெண்டு கோல் வந்திது...? ஐயோ மிச்சம் கவனம்... ரீச்சர்... எனக்கு அந்த ஒண்டே ஒண்டு தான்... அவனுக்கு ஒண்டெண்டா நாங்க பேந்தென்னத்துக்கு...”

அகிலனின் அம்மா பரிமளம் அழுதே விட்டாள்.

ம்.. அதே நேரம் அந்தப் பிள்ளை பிடிகாரி யும்தான். தன்னுடைய அந்த அவ்வளவையும்தான்... ஒரே ஷொட்டிச் அள்ளிக் கொடுத்தும் விட்டு இன்றைக்கும் அதற்காக உயிரைவிடவும் முடியாமலிருந்தும் கொண்டுதான்... இந்தப் பிள்ளை பிடிகாரி’ ஐயிற்றத்துக்குத் தொடங்கினாள்... என்ற மாட்சிமை தாங்கிய... இந்தத் திறில்லான... உண்மைகளை... எத்தனை பரிமளம் அம்மாக்கள் தான் ஒன்றுசேர்ந்தாலும் தன் இலேசில் கண்டுபிடித்துவிடவும்தான் முடியாதே...? அவளுடைய கணவனும்தான்... ஒரே அப்செற்... முள்ளிவாய்க்கால் சப்ஜெக்ற்? இந்தக் கோலுக்குக் கதை சொல்லிவிட்டகை வாங்க முன்னராய், அடுத்த கோலும் மான் பாய்ச்சலில் வந்தும்தான் விடுகின்றதே...! “ஓ... யெஸ் ரீச்சர். நான்தான் உங்கடை செல்லக்குட்டி... ஜானி கான்ரை மதர்தான்... இப்ப ரோக்கிங்... சோ... ஜான், மிச்சம் கவனம்! கவனம்! அவளின்ரை ஒரு மயிர் தன்னும்... அந்த என்னம் பெருத்திக்குக் கிடைக்கவே படாது... அந்த என்னம்பெரு கிறிஸ்பூதத்தி ன்ரை றொக்கேட்டையும்... இந்தப் பிள்ளை பிடிகாரி கலக்கடி பிறேக் பண்ணிட்டுதே...? எனக்கு நாலு பொடிப்பிள்ளையங்களுக்கு மடங்கு... உவதான்... ஒரு பொட்டைப்பிள்ளை...! உவாவுக்கு ஏதுமெண்டா நான்தான் முதல்லை சாவன்!”

திடீரட்டியனவாய்... வெளியில் கேட்கத் தொடங்கி விட்டதோர்... கண்ணிவெடிக்குண்டுவெடிப்பு... நிகரான இடியோசைச் சத்தம் சாடிகள்... அமளி துமளிகள் கொந்தளித்து... எங்கும் பர பரப்பாகிவிடவே... ரீச்சர் பெரும் நெஞ்சிடியோடு... வால் நுனியில் எழும்பி நிற்கும் பறநாகமாய்... பிள்ளைகளின் வாங்கிலில் ஏறியே விடுகிறாள். என்ன ஐயிற்றமென்று பார்ப்பதற்கதாக...?

யாரோ ஒரு குச்சிலாத்திப் பிள்ளையொன்று தன்னோட்டப் பொரிகளோடு... சேர்ந்து சகலதையும் மறந்து... மண் சோறு கறிகாய்ச்சி விளையா டிக் கொண்டிருந்த தக்க சமயம்... பார்த்து அந்தப் பிள்ளை பிடிகாரியான கார்த்திகா, அக்கணமே தன்னை மறந்து உயிரையும் வெறுத்தவளாய்... ஒரு பிள்ளை பிடிகாரிப்போராளி யாய்... அந்த ஆண் பிள்ளையையும் மின்னலாய் இறாய்ஞ்சி எடுத்துக் கொண்டே மறுபடியும் தான் தாயாகிவிட்டதுபோன்றதொரு மாட்சிமை தங்கிய ஒரு பிள்ளைக்காட்சியாகியே விடுகிறாள்...

இந்தக் கோலம்பறையாக வேறுபாதைகள் சரிவராமல், உள்ள அவசரத்துக்கும் பறப்புக்கும் திடுப்பெடுமென்று அந்த முன்பள்ளி சைற்றை அவள் மிதிவண்டி பாஸ் பண்ணுவதற்கிடையில்... காத்திருந்த அத்தனை சனமும், சினமும் அவளைப்போட்டு உள்ள சவியெல்லாம் கூட்டி... இராச குளவிக்கூட்டங்களாய்... மொய்த்துத் தாக்கவும்... தொடங்க அந்தப் பிள்ளையும்தான்... உத்தரித்துத் தள்ள... பொலிசுக்கும் கோல் பறந்தது...

எல்லாம் தங்கடை கிறிஸ் பூதத்தின்ரை விளை யாட்டுத் தான் என்ற ஐடியாவில்... பொலிசும்தான் இருந்த இடத்தைவிட்டு அசையதா கணக்காய்... முறையான பொலிஸ் டியூட்டிக் கதையாகியே விடுகிறது...

திடீரென்று ஒரு ரெட் கப் வாகனமொன்று... வந்து அந்தக் கூட்டத்துக்குள்... சடின் ஸ்ரொப் ஆகிவிட... அடித்தவர்களெல்லோரும் ஓய்ந்த பெண்டுகளாய்... நின்றுகொண்டிருக்க... முழிசியடிக்க... கார்த்திகாவின் ஓர் அனுதாபியான அமரசிங்கம்ஜி.எஸ். முதலில் கப் இலிருந்து அவுக்கென்று இறங்க, இந்தக் கார்த்திகாவின் முழு லைவ் கிஸ்ற்றீயையும் ஜி.எஸ். மூலமாய் அறிந்துகொண்டும் விட்ட, அந்த இரண்டு புலம்பெயர் தமிழர்களும்...கீழே இறங்க, அடுக்கத் தொடுக்கவாய்... அந்த அவளின் துயர்போக்க... கொண்டும் வரப்பட்டுவிட்ட அந்த இரண்டு ‘லிற்றின்சும்’ வாகனத்துள்ளே! வாழ்வே சிரித்த காட்சியாய்...! “எனிக் கார்த்திகா பிள்ளைபிடி காரியில்லை” ஜி.எஸ். முழங்கித் தள்ள, ஒரு பிள்ளைபிடி காரி, ஜனரஞ்சகமான குறும்படம் பார்த்தும் விட்டவர்களாய்... எல்லோரும் இரசிகர்களாய்... அவளின் விசிறிகளாய்...!

# தெருக் கல்வி...!

நேரடி அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

றோட்டு முழுக்க விளம்பரத்தட்டியள் நிறைஞ்சு போய்க் கிடக்கிறதை நீங்களும் பாத்திருப்பியள்தானே. எல்லாச் சாமானுகளுக்கும் விளம்பரம். சிலதுக்கு அனுமதியில்லாததால இல்லை. ஆனால் கெட்டிக்கார நிறுவனங்கள் அவையிவைக்குக் காசைக் குடுத்து மறுவள விளம்பரமாக வைக்காமலில்லை. குடி குடியைக் கெடுக்கும், புகையிலை புற்றுநோயை உண்டாக்கும், சட்டவிரோதமா ஆஸ்ரேலியா போக வேண்டாம் எண்ட மாதிரியாகத் தெரியாதவைக்கு எல்லாத்தையும் அறிமுகப்படுத்திற வேலைதான் உதுகள் பாருங்கோ? இல்லையோ?

அடுத்தது குப்பை. முதலும் ரெண்டொருக்காச் சொன்னனாலல்லே... இப்ப மறதிக்குணம் கொஞ்சம் கூட... சிலவேளை சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லுறதாய் கனபேர் சிரிக்கிறவை.
சிரிப்பினம்தானே. தீர்வில்லாத பிரச்சனையள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வாறதுக்கு நான் என்ன செய்யிறது?



தெருக்களிலை எண்டு தொடங்கி எங்கயோ போறனெண்டு நினைப்பியள். அதுவும் தேவைதான்... பாடங்களைப் படிப்பிக்கேக்குள்ள இது சோதினைக்கு வாறேல்லை எண்டு நடைமுறைக்குத் தேவையான கன விசயங்களை விட்டுப் போட்டு படிப்பிக்கிற மாதிரிச் சில விசயங்களை விட ஏலாது கண்டியளே... அப்பிடி விட்டு விட்டுப் போறதாலைதான் கனக்க நல்ல விசயங்களும் விடுபட்டுப் போகுது எண்டது விளங்குதோ என்னவோ?

0000


சோதினையை இலக்கு வைச்சு ஓடி, பட்டங்களை எடுத்துப் போட்டு என்ன செய்யிறதெண்டு விளங்காம திண்டாடுறதைப் பாக்கேக்குள்ள 'லைவ் ஸ்கில்' இல்லாமலானதும் 'கொமன் சென்ஸ்' இல்லாமலானதும் விளங்குதல்லே? இதைப்பற்றி கதைக்க நிறையக் கிடக்கு... இப்ப சொல்ல வந்தது அதில்லை.. ரியூட்டரியளுக்கு முன்னாலை றோட்டு நிறையக் கூடுகிற சனக்கூட்டம் இருக்கே... அப்பப்பா... சொல்லி மாளாது. அதிலையும் உந்த ஸ்கொலசிப் ரியூட்டரியளுக்கு முன்னாலை கேக்கவே தேவையில்லை. ஒவ்வொரு நாளும் திருவிழாக் கூட்டந்தான்.
அதுவும் இப்ப ஸ்கொலசிப் வகுப்புகள் மூண்டாம் தரத்திலையல்லே தொடங்குது... அப்ப மூண்டு, நாலு, அஞ்சு எண்டு மூண்டு வகுப்புச் சனம். பிள்ளையளை உள்ளுக்கை தள்ளிப்போட்டு (அனுப்பிப் போட்டு இல்லை எண்டதைக் கவனியுங்கோ) பெற்றார், உற்றார், உறவினர், வாடகை வண்டிக்காரர் அவையவை யோட கதைக்க வந்த ஆக்களெண்டு சனம் தான். கூட்டமெண்ட கூட்டம்.
எனிக் கதை கண்ட இடம் கைலாயம் தானே... தனியாக்களிலை தொடங்கி உலகப் பிரச்சனையள் வரைக்கும் எத்தினை விசயமிருக்கோ... அத்தினையும்... அனேகமா மறைஞ்சும் மறந்தும் போகும்.

வசூல்ராஜாக்களும் இதுகளைக் கண்டுகொள்ளுறதில்லையோ இல்லது ஏன் தேவையில்லாச் சோலியெண்டோ தங்கடபாட்டிலை கஸ்டப்பட்டு கண்ணியமா ஆரோடையும் முட்டாமத் தட்டாம விலகிப் போகுதுவினம். ரியூட்ட ரிக் காரர் உள்ளுக்க ஸ்பீக்கர் கட்டியும் சரிவராம படுகிறபாட்டிலை றோட்டைப் பாப்பினமே...?

0000

பிள்ளையளைக் கூட்டிக் கொண்டுவாறவை... இதிலை பாருங்கோ கதையோட மட்டும் நிக்காம தங்கட தங்கட அலுவலுகளைப் பாக்கிறவையும் நிறையப்பேரைக் கண்டிருக்கிறன்.
பிஸ்னஸ், இன்சூரன்ஸ், வாகன வியாபாரம், பயிற்சிப்புத்தக வியாபாரம், கலியாணப் புரோக்கர் வேலை, வீட்டுப் புரோக்கர் வேலை.. எண்டதுகளோட எந்தக் ஹோட்டல்ல என்ன அயிற்றம் திறம்? அதிலயும் எந்த நேரத்துக்கு எது திறம்? அது இதுவெண்டு நிறைய... கலியாணப் புரோக்கர் வேலை எண்டு போட்டு முடிக்காமல் வந்திட்டன் பாருங்கோ...தங்களுக்குத் தாங்களே சம்மந்தம் பேசுறதும் உண்டாம்... அதுதான் லவ்... அக்கான்ர பொடியனைக் கொண்டாற பெட்டை, அண்ணேன்ர பெட்டையைக் கொண்டாற பொடியனோட... அப்பிடியிப்பிடியெண்டு கரைசேருறதும், ஓடினதும் நடந்ததாம். இடையிலை விடுபட்டதும் உண்டாம். அதாலை இன்னொண்டு கலியாணமான பழஞ்சோடியளும் ரண்டொண்டு இடம்மாறி ஓடினதும் உண்டாம். நகரமெண்டா அது இது சகஜம்தானே... நாகரிகம் நல்லாயெல்லேமுன்னேறிவிட்டுது. பழைய மாதிரியே இருக்க வேணுமே? புரட்சிதானே...நடக்கட்டும்.
சோல்ல வந்தது இதுகுமில்லை... உந்தப் பெற்றார் படுகிற பாடு அவதியிலை சின்னாபின்னமாகிறது தங்கட பிள்ளையளின்ர எதிர்காலமெண்டதை உணருறதேயில்லை.
விடியத் தொடங்கிற வகுப்பு... பள்ளிக்கூடம்... மதியம் தொடங்கினா மாறிமாறி இரவு வரைக்கும் பெற்றோர்மார் றோட்டில, பிள்ளையள் கொட்டிலுக்கை... எண்டுற நிலைதான். சாப்பாடு தண்ணியெல்லாம் ஓடுற வாகனத்திலைதான்... நம்பமாட்டியள்... ஆனால் உண்மை இதுதான்.

இரவிலை வீட்டைவாற இன்டிவியூசல் வாத்திமார் வேற... ரியூட்டரியில காவல் நிக்கிறது ஒண்டு முடிய மற்றதுக்குக் கொண்டோடத்தான். நேரம் முக்கியம்தான் அதை எல்லா இடத்திலையும் பின்பற்றினா மட்டுந்தான்..சரியே?
ஸ்கொலசிப் பாசெண்டா நேரக் கம்பசுக்க படிக்கக் கூப்பிடப் போறாங்களோவெண்டா இல்லை. சரி கம்பஸிலை படிச்சு முடிச்சாச்செண்டு வாசல்ல வந்து நிண்டு வேலைக்குக் கூப்பிடவே போறாங்கள்?... சரி... சரி உங்கட பிள்ளையை நீங்கள் கொண்டு திரியுறியள்... என்னவெண்டாலுஞ் செய்யுங்கோ எண்டு விடலாமெண்டா மனங்கேக்குதில்லை. ஒழுங்கான சாப்பாடு, சரியான பயனுள்ள வாழ்க்கைக்கு உதவுகிற பழக்க வழக்கம் பண்பாடு உள்ளடங்கின விளையாட்டுகள் பொழுதுபோக்குகள் ஒண்டையும் காட்டாம, அறிய விடாம, வளக்கிறது சரியோ எண்டு கேக்கலாமெண்டா படிப்பின்ர அருமை
நிலவரங்கள் எல்லாம் அத்துப்படி கண்டியளோ...
பிள்ளையளை நாள்முழுதும் விசர்பிடிக்கிற அளவுக்குத் சோதினை வெறியூட்டித் திணிதிணியெண்டு திணிச்சு என்ன ஆகப்போகுதெண்டொருக்கா யோசிப்பியளெண்டு நினைக்கிறன்.
றோட்டு றோட்டாக் கொண்டு திரிவியள்...பிள்ளைக்கு நன்மை தீமை விளங்கிற வயதிலை ஒண்டையும் பாக்க மாட்டியள்... பிறகு பொடியள் றோட்டில நிக்குதுகள்... பெட்டையள் அலையுதுகள் எண்டு திட்டுவியள்... இதெல்லாத்தையும் பிஞ்சிலையே றோட்டு றோட்டாக்கொண்டு திரிஞ்சதும் பிறகு இப்பிடி வாறதுக்கு வழிசெய்ததும் ஆர்...? நீங்கள் தான். நானில்லை.



## வேடன்

ஆயிரம் நிழல்கள் ஆடும்
ஆனந்தக் காடு
அதன் வழியினில்
ஓர் அனாதைபோல் நான்

தொடமுடியாத் தூரத்திலிருந்து
எய்யப்பட்ட
மழைத்துளிகள்
ஒன்றென ஆகிக்
கடலெனக் குமுறும்
அவ்வாறே
அணுக்களின் ஒன்றிப்பில்
அகன்ற இவ் அழகு தோன்றும்

வேர்களற்ற சூரியனாய்
கிளைகள் மட்டும் பரப்பும்
கிழக்குரியோன்
நான்
உன் கண்ணில் மட்டும்
கலங்கி உடையும்
நதியில் நிலா

தாகத்தில் தவித்துத்
தன்னறிவு மறந்து
தலை
நின் தாள் சேர்க்கையில்
கண்ட உன் பொன்முகம்
ஓடும் நதியினில்
நிலைத்து நின்ற
நின் இன்முகம்
போதுமே
ஜென்மப் பொய்மை நீங்குமே

என் தாகம் மறந்து
ஏழ் உயிர் மகிழ்ந்து
ஐவிரல் நீண்டு
நினைத் தீண்ட நினைக்கையில்
அறிந்தேன்
நீ அருகினில் அன்று
அடையமுடியா
வான் கருவினில் என்று

இரவும் பகலும்
இதயமென
ஆனந்தம் துடிக்கும் காடு
அதன் நடுவில்
அனாதையென நகரும் நதி

கவிதை
ஓஷோ சிறிரதி





தொகுப்பு
அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து

## கல்வி நடவழிக்கைகள்!



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களுக்குமான கல்விநடவடிக்கைகளும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.
பல்கலைக்கழகக் கல்விசாரா ஊழியர்கள் 44நாள்களாக முன்னெடுத்த பணி நிறுத்தம் முடிவுற்று இந்தப் பல்கலைக்கழகத்தின் அனைத்து செயற்பாடுகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன.

## மேயரின் உத்வேகம்!

கல்முனை மாநகரசபையின் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம். றகீப், பதவியேற்றுக் குறுகிய காலத்துக்குள் தமது செயற்பாடுகளை உத்வேகத்துடன் முன்னெடுத்து வருகின்றார்.
கல்முனை மாநகரில்புரையோடிப்போயிருந்தமக்கள்பிரச்சினைகளைநேரில்சென்று ஆராய்ந்துவரும்மேயர்றகீப், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் மக்களுடன் கலந்துரையாடி அபிப்பிராயம் பெற்று நடவடிக்கையை முன்னெடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்.

*மேயரின் துடிப்பான, விவேகமான மக்கள் சேவைகள் தொடரட்டும்!*

## அகப்பட்டன ஆட்டோக்கள்!



அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சூட்சுமமாக, முச்சக்கரவண்டிகளைத் திருடி வந்த கும்பல் ஒன்று சம்மாந்துறைப் பொலிஸாரிடம் அகப்பட்டுக் கொண்டதுடன், இந்தக் கும்பல் களவாடிய பத்து முச்சக்கர வண்டிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
நிந்தவூர்ப் பிரதேசத்தில் களவாடப்பட்ட முச்சக்கரவண்டி ஒன்று தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்ட தீவிர நடவடிக்கையின்போதே இந்தத் திருட்டுக் கும்பலும், முச்சக்கரவண்டிகளும் சிக்கியுள்ளன.
முச்சக்கர வண்டிகளைச் சூட்சுமமாகத் திருடி, போலி ஆவணங்கள் தயாரித்து, இயந்திரச் சட்டக இலக்கத்தை மாற்றியும், நிறங்களை மாற்றியும் அவற்றை விற்று இந்தக் கும்பல் பணம் பெற்று வந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இது விடயத்தில் ஐந்து நபர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

*சம்மாந்துறைப் பொலிஸாருக்கு ஒரு சபாஷ்!*

## புதிய தொழிற்சங்கம்!

வடக்கு, கிழக்கைப் முதன்மைப்படுத்தும் வகையில் புதிய தொழிற்சங்கமொன்று அமைக்கப்படவிருக்கின்றது.
கல்முனையில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு இயங்கிவரும் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் உயர்மட்ட முக்கியஸ்தர்களாக இருந்து வந்த பலர், அந்தச் சங்கத்தலைவரின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டு வெளியேறிப் புதிய தொழிற் சங்கத்தை ஆரம்பிப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.
இந்தக் குழுவினர் எதிர்வரும் 1ஆம் திகதி வவுனியா நகரசபையின் பழைய மண்டபத்தில் செ. செல்வேந்திரன் தலைமையில் மே தினப் பொதுக்கூட்டத்தை நடத்தவும், புதிய தொழிற் சங்கத்துக்கான பொது நிர்வாக சபைத் தெரிவை நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.
அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையான தொழிலாளர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.



## சிறுபோக விதைப்பு!

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய விவசாயப்பிரிவுகளில் சிறுபோக நெற்செய்கைக்கான நெல் விதைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எனினும் இந்த முறை மிகக்குறைந்த அளவு காணிகளிலேயே சிறுபோக நெற் செய்கைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதால், பெரும்பாலான விவசாயிகள் நிர்க்கதி நிலைக்குள்ளாகி யுள்ளனர்.
குறித்த செய்கைக்கு நீர்ப்பாசனம் வழங்கும் சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம், வறட்சி காரணமாக வெகுவாகக் குறைந்துள்ளதால் இந்த மாவட்டத்தில் 1இலட்சத்து 83ஆயிரம் ஏக்கர் காணிகளில் மட்டுமே சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

*அரிசித் தட்டுப்பாடும், பஞ்சமும் வெகு தூரத்திலில்லை!*

## கன்னி அமர்வு!

காரைதீவு பிரதேச சபையின் கன்னி அமர்வு, புதிய தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில், பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்றது.
அமர்வின் ஆரம்பத்தில் உறுப்பினர் சி.ஜெயராணியால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின்படி அன்னை பூபதிக்குச் சபையில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.
இன நல்லுறவுடனும், அர்ப்பணிப்புடனும், மக்கள் நலனையே நோக்காகக் கொண்டு பணிகளை முன்னெடுக்க வேண்டுமென உறுப்பினர்கள் தமது கன்னி உரைகளில் திடசங்கற்பம் தெரிவித்தனர்.

*முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த மண்ணல்லவா காரைதீவு!*

## இப்படியும் ஒரு கருத்து!

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுடன் இணைந்து பங்காளியாக மாறி புதிய அரசை உருவாக்க வேண்டுமென, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும், ஈ.பி.ஆர்.எல். எப்பின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான செல்லையா இராசையா கருத்து வெளியிட்டுள்ளார்.
அரசின் பங்காளியாக மாறுவதால் தாம் கொண்ட கொள்கைகளையும், நோக்கத்தையும் உதறித் தள்ளி விடுவதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது எனவும் அவர் தெரிவிக்கத் தவறவில்லை.!

*நடைமுறைச் சாத்தியமானதா ஐயா இது?*

## பேண்தகு அபிவிருத்தி!

பாடசாலை பேண்தகு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட 'நஞ்சற்ற உணவு உற்பத்தி' வெற்றிகரமாக அமைந்துள்ளதுடன், சிறந்த அறுவடையையும் கொடுத்துள்ளது.
பாடசாலை அதிபர் வே.பிரபாகரனின் நெறிப்படுத்தலிலும், உற்பத்தித் திறன் உத்தியோகத்தர் என்.விஜயகுமார், திட்டப் பொறுப்பாசிரியை திருமதி.பவானி சந்திரகுமாரின் வழிகாட்டலிலும், இந்தப் பேண்தகு அபிவிருத்தித் திட்டம் மாணவர்களால் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*சாதனைகள் படைப்பதில் சபைத் தலைவர்களல்லவோ உவெஸ்லி மாணவர்கள்!*



கட்டுரை

முருகேசு சச்சிதானந்தம்

# பண்டாரநாயக்க தமிழரின் எதிரியா?

சொலமன் வெஸ்ற் றிஸ்வே டயஸ் பண்டாரநாயக்க என்ற மனிதர் இலங்கையில் பிரசித்தமான சிங்களத் தலைவர். 1956ஆம் ஆண்டில் 'சிங்களம் மட்டும்' என்ற விடயத்தை வலியுறுத்தியதால் தமிழ் மக்களின் மனநிலையில் ஓர் அநாகரிகமான விம்பத்தை ஏற்படுத்திக் கொண்டவர். இந்த மனிதர் தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த மறுநாளே தமிழ்த் தலைவர்கள் அவரைத் துரோகி என உதறிவிட்டு வெளியேறினார்களா? அது தான் இல்லை. இந்த முக்கிய விடயத்தைத் தமிழ்மக்கள் கருத்தில் எடுக்கத் தவறிவிட்டனர்.

**மாறாகத் தலைவர்கள் புகழ்ந்தனர்**

ஆங்கிலம் கற்ற தமிழர்கள் பலர் அவருக்கு 'வெள்ளி நாக்கு', 'மிகச் சிறந்த ஆங்கிலப்பேச்சாளர்' எனமேடைகளிலும் வேறு இடங்களிலும் புகழ்ந்து பேசினர். இந்தப் பாராட்டு என்பது வெறும் வாய் வார்த்தை அல்ல. அவருடன் இருந்து வந்த உறவின்பாற்பட்டது. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் நாயக்கர்களின் ஆட்சி தொடங்கியது. அதன் பின்னர் கண்டி இராசதானிகளுடன் இந்த நாயக்கர்கள் நெருங்கிய உறவு வைத்திருந்தார்கள். திருமணத்துக்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள். படைத்தளபதிகளாகவும் முக்கிய பதவி நிலைகளையும் பெற்றுக்கொண்டனர். தென்னிந்தியா கண்டி இராசதானியுடன் தொடர்புபட்டது. இலங்கையின் கரையோரத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியதுடன்அந்தத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. 1715ஆம் ஆண்டில் கண்டி இராச்சியம் பிரித்தானியர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், கண்டி இராச்சியத்துக்கு அதுவரை இருந்த சிறப்பு இல்லாது போனது. அரச பிரதானிகளின் குடும்பங்கள் பிரித்தானியருக்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று. அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தைப் பேணிக்கொள்வதற்காக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர்.

இந்த அரசியல், உயர் குழாம் தமது மதம், மொழி என்பவற்றுக்கு அப்பால் தமது அரசியல் அந்தஸ்தைப் பேணுவதிலேயே குறியாக இருந்தது. கிறிஸ்தவ மதத்துக்கு மாறாது இருந்தால் மன்னர்களின் விசுவாசிகளுடன் சேர்ந்து தமக்கெதிராகப் புரட்சி செய்வார்கள்

என்றே அந்நியர் கருதினர். போர்த்துக்கேய, ஆங்கிலேய, ஒல்லாந்த ஆட்சிக்காலத்தில் இராஜ பிரதானிகளது குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மாறின. அவ்வாறு மாறாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இந்த வழியில் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிய நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவரே பண்டாரநாயக்க. அவரது மூதாதையரின் பெயரைக்கொண்ட எஸ். டபிள்யு. ஆர். டீ. (சிங்களத்தில் வாசகம் என்று கூறுவர்) என்ற எழுத்தைக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர். பின்னர் இலங்கையின் அரசியலைத் தமதாக்கிக் கொள்வதற்குப் பௌத்தர்களாக மாறினர். அவ்வாறான ஒருவரே பண்டாரநாயக்க. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இதே பின்னணியைக் கொண்டவர்தான்.

**பணிவிடைசெய்து பணிக்கு உரித்தானார்கள்!**

பிரித்தானியர் காலத்துக்கு முன்னரே இந்த அரசியல் செல்வாக்குப் பெற்ற குடும்பங்கள், மொழிபெயர்ப்பாளர்கள் (முதலியார்கள்) உடையார்கள், மணியகாரர்கள், பிரதானிகள் எனப் பல பதவி நிலைகளைச் சுதேச மக்களுக்கு வழங்கியதன் மூலம் தமது நிர்வாகத் தேவைகளைச் சுமுகமாக மேற்கொண்டனர்.

மக்களுடன் தாம் நேரடியாக முரண்படும் நிலையைத் தவிர்த்து இவ்வாறான சுதேசத் தலைவர்களைக் கொண்டே மக்களை கட்டுக்குள் வைத்திருந்தனர். இதனால்தான் வெள்ளைக்காரர்களைக் கண்டால் சாதாரண தமிழர்களும், சிங்களவர்களும் இயல்பிலேயே பயப்படும் நிலை காணப்பட்டது. இந்த விடயத்தில் மிகப் பிந்திய உதாரணத்தை எடுத்துப் பார்த்தால், பண்டாரநாயக்க குடும்பம், சிற்றம்பலம் குடும்பம், இராமநாதன், குமாரசாமி, சரவணமுத்து குடும்பம் எனப் பல குடும்பங்கள் தமிழ் சிங்களம் என்ற வேறுபாடின்றிக் கைகோர்த்து வெள்ளைக்காரர்களுக்குப் பணிவிடை செய்தார்கள்.

இந்தக் குடும்பங்களே கொழும்பு - 7 பகு



தியில் பெரும் சொத்துக்களுடன் வாழ்ந்து வருகின்றன. அது மட்டுமல்லாது இவர்களே இலங்கை அரசியலில் உயர் பதவிகளை வகித்தும் வருகின்றனர். தற்போதுள்ள அமைச்சர் சுவாமிநாதன், இராமநாதன் குடும்பத்தில் வந்தவர். மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, ஆனந்த குமாரசாமியின் வழிவந்தவர். லக்ஸ்மன் கதிர்காமர், பாக்கியயோதி சரவணமுத்து, நீலன் திருச்செல்வம் போன்றவர்களும் இப்படியான வரிசையில் வந்தவர்களே. 1983ஆம் ஆண்டில் இனக்கலவரம் நடைபெற்று, நாடு அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருக்கையில் கொழும்பு 7இலில் இருந்த இந்த உயர் குடும்பங்கள் ஆங்கிலம் பேசிக்கொண்டு வழமையான தமது மது அருந்தும் கேளிக்கைகளை நடத்திக்கொண்டிருந்தமை சாதாரண சிங்களவருக்கோ தமிழருக்கோ தெரிந்திருக்கவில்லை. இந்த அரசியல், பொருளாதார, சாதிய, உயர் குழாம் ஒருபோதும் தமக்குள் பிரச்சினைப்படவில்லை. சாதாரண ஏழைச் சிங்களவருக்காகவோ ஏழைத் தமிழருக்காகவோ கதைத்து அவர்கள் முரண்பட்டுக்கொள்ளவில்லை. இவர்களின் அரசியல் அந்தஸ்து, பொருளாதார மேம்பாடு, ஏற்றுமதி இறக்குமதி என எல்லாமே சிறப்பாக இருந்தன.

**கொழும்பின் வசதிகளைத் தவிர்க்க மனமில்லை!**

பண்டாரநாயக்க தனிச்சிங்களம் என்ற ஒன்றைக் கொண்டுவந்ததற்காகத் தமிழ்த் தலைவர்கள் அதுவரை அவருடன் இருந்த தமது உறவுகளை தமிழுக்காகவோ, தமிழ் இனத்துக்காகவோ உதறி எறிந்துவிட்டு கொழும்பு வசதி வாய்ப்புக்களைப் புறந்தள்ளிவிட்டு வடக்குக் கிழக்கிலுள்ள தமது பூர்வீக இடங்களுக்கு ஓடி வரவில்லை.

தமிழ்த் தலைவர்களுக்கு தமது பூர்வீகம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை என இருந்தாலும், அவர்களின் பிறப்பு, படிப்பு, வளர்ப்பு, கல்வி என எல்லாமே கொழும்பாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருப்பதைவிடக் கொழும்பில் இருப்பதையே கௌரவமாகவும் கருதினர். அரசியல் உயர்குழாம் மட்டுமல்லாமல், அரசில் உயர் பதவிகளை வகித்த சில தமிழர் கூட தமது ஊர்களுக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டார்கள். 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் லங்காராணி கப்பலில் வந்தவர்களுக்கும், பலாலி விமான நிலையத்தில் வந்து இறங்கியவர்களின் பிள்ளைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் எது தங்களது ஊர் என்பது தெரிந்திருக்கவில்லை. இது பற்றி ஒரு டக்சிக்காரர் கூறும்போது, 'நாலைந்து பொம்புளப் பிள்ளைகள் வந்திறங்கிப் பைகளுடன் நின்றார்கள். நான் அவர்களை ஏற்றும் நோக்கில் தங்கச்சி எங்க போறதுக்கு நிக்கிறியள். ரக்சியில போகலாம். என்று கூற அவர்கள் உடன்பட்டார்கள். ஆனால், அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் அவர்கள் போகவேண்டிய ஊர் எது என்பது தெரிந்திருக்கவில்லை. 'சம்திங்... பாய்க்கு போகவேணும் என்றார்கள். அவர்கள் கூறிய 'பாய்' என்பது கோப்பாயா? சண்டிலிப்பாயா? மானிப்பாயா? என்ற முடிவை என்னால் எடுக்கமுடியவில்லை' என்றார்.

**தலைவர்களின் உறவு**

தமிழ் மக்களைச் சிங்களம் படிக்கக்கூடாது. சிங்களம் படித்தால் துரோகி என்று கூறிய அரசியல் தலைவர்கள், பண்டாரநாயக்கவுடன் மிக நெருக்கமான உறவைப் பேணியிருந்தார்கள். அந்த உறவு அவரது மனைவியான ஸ்ரீமாவோ புண்டாரநாயக்க, அவரது மகளான சந்திரிகா பண்டாரநாயக்க வரை தொடர்ந்தது. சந்திரிக்காவைப் பொறுத்தவரையில் தனது தாய் தந்தையருடன் நெருங்கிப் பழகிய தமிழ்த் தலைவர்களை அங்கிள் என்று செல்லமாக அழைக்கும் நிலை இன்று வரை இருந்து வருகிறது. பண்டாரநாயக்க குடும்பத்துடன் மிக நெருக்கமான உறவைப் பேணியிருந்தவர்கள், தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் கல்விமான்கள், தமிழ் பெரும் முதலாளிகள்.

தமது பதவி உயர்வுகளுக்காக பண்டாரநாயக்கவின் வீடு வரை சென்று வந்தார்கள். 2016ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் வருகை தந்தார்கள். வீரசிங்கம் மண்டபத்துக்குச் சந்திரிகா வருவதற்குச் சற்றுத் தாமதமாகியது. அவர் மண்டபத்துக்குள் வருவது தொலைக்காட்சித் திரைகளில் காட்டப்பட்டபோது ஒரு மூத்த தமிழ்ப் பேராசிரியர் அவர் வரும் வழியைப் பார்த்துத் திரும்பி நின்று வணங்கித் தனிப்பட்ட முறையில் தனது பண்டாரநாயக்க குடும்ப உறவை மீண்டும் ஒரு தடவை புதுப்பித்துக்கொண்டமை புலப்பட்டது. அரசியல்வாதிகள் என்று பார்க்கும்போது தந்தை செல்வா, திருச்செல்வம், நீலன் திருச்செல்வம், ஈ.எம்.வி.நாகநாதன், அமிர்தலிங்கம் உட்பட்ட பலரைக் குறிப்பிட முடியும். இவர்கள் அனைவரும் பண்டாரநாயக்க எதிர்மறையானவர் என்றே தமிழ்மக்களுக்குக் கூறியிருந்தார்கள். அதேவேளை இடதுசாரிகள் என்று தம்மை அடையாளப்படுத்திய அரசியல்வாதிகளும், பண்டாரநாயக்க குடும்பத்துடன் மிக இறுக்கமான உறவை வைத்திருந்தார்கள். வி.பொன்னம்பலம், ஆனந்தசங்கரி, காராளசிங்கம் போன்றவர்களை இதில் குறிப்பிடலாம்.

கல்விமான்கள் என்ற வகையில் பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் (தந்தை செல்வாவின் மருமகன்) பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர்பத்மநாதன் போன்றவர்கள் ஸ்ரீமாவோ, சந்திரிகா காலத்திலும் பண்டார நாயக்க குடும்பத்துடன் மிக இறுக்கமான உறவைப் பேணியிருந்தார்கள். 1974ஆம் ஆண்டில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாடு, அப்போதைய யாழ். மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவின் தலைமையில் நடைபெற்றதை எதிர்த்தே பேராசிரியர் கைலாசபதி, பேரரசிரியர் சிவத்தம்பி ஆகிய இருவரும் கலந்து கொள்ளவில்லை என்ற கருத்தும் எழுந்தது. ஆனால் அல்பிரட் துரையப்பா மற்றும் இந்தப் பேராசிரியர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நெருக்கமான உறவைக் கொண்ட தமிழர்களாகவே இருந்தனர். இதைவிட பெரும் வர்த்தகர்கள் தமது வர்த்தக தேவைகளை நிறைவேற்ற பண்டாரநாயக்க குடும்பத்துடன் மிக இறுக்கமான உறவைப் பேணியிருந்தனர். மஸ்கன் கம்பனி உரிமையாளர்களை இந்த வரிசையில் குறிப்பிடலாம்.

**வெறுத்தவர்கள் பதவிகளை இழந்தார்கள்**

1970ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கு சிறிமாவோ பண்டாரநாயக்க அதிக முக்கியத்துவம் கொடுத்தார். வடமாகாணத் தமிழர்களே இதனால் அதிக நன்மை அடைந்தார்கள். இந்த ஏழு வருட உழைப்பில்தான் யாழ்ப்பாணத்தில் ஒற்றைக்கூரை வீடுகளும், உழவு இயந்திரங்களும் சேமிப்புக்களும் நிலை பெற்றன. 1974ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிறிமாவோ பண்டாரநாயக்கவால் திறந்து வைக்கப்பட்டது. எல்லாவற்றிலும் நுணுக்கம் பார்க்கிற யாழ்ப்பாணத் தமிழர்கள் ஒரு விதவையைக் கொண்டு தமிழ் மக்களுக்கான கல்வி நிலையம் ஒன்றைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அதேவேளை சுன்னாகம் நகரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வரவேற்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அவரைத் தமிழரின் எதிரியாக நினைத்திருந்தால் எவரும் அவரை வரவேற்கச் சென்றிருக்க மாட்டார்கள். இந்தப் பெரிய கூட்டத்துக்கு வி.பொன்னம்பலம் தலைமை தாங்கியிருந்தார்.

இந்த அடிப்படையில் பார்த்தால் பண்டாரநாயக்கவைத் துரோகியாக நினைத்த சாதாரண தமிழர்கள் தான், சிங்களம் படிக்கமாட்டோம் என்றும் இறுமாப்புடன் இருந்தார்கள். தமது அரச உத்தியோகத்தையும் இழந்தார்கள். தவிர, தமிழ் அரசியல்வாதிகளும், கல்விமான்களும், வர்த்தகர்களும் பண்டாரநாயக்க குடும்பத்தை வெறுக்கவில்லை.

# இணைந்தன துருவங்கள்!



வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. கடந்த ஆறு தசாப்தத்துக்கும் அதிகமான காலப்பகுதியாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் தீராப் பகை நிலவிவந்த நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பி டத்தக்கது.

1953ஆம் ஆண்டு கொரியப் போர் முடிவுக்கு வந்திருந்தாலும், அதன் பின்னர் கடந்த ஆறு தசாப்த காலமாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதங்களும் பனிப்போரும் இடம்பெற்று வந்தன. தென்கொரியா சாம்பராக்கப்படும் என்று வெளிப்படையாக அறிவித்திருந்தது வடகொரியா. இந்த அறிவிப்புடன் நின்று விடாமல், தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மேலாக ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தியது.

அமெரிக்கா என்றும் இமாலயப் பலத்தின் துணையுடன் இருக்கும் தென்கொரியாவும் வடகொரியா மேலும் கோபப்படும் படியான துலங்கல்களையே காட்டியது. அமெரிக்காவுடன் இணைந்து கொரியத் தீபகற்பத்தில் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டமை, வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா. சபையின் உதவியை நாடியமை, பொருளாதாரத் தடைகளை விதித்தமை, வடகொரியாவின் ஏவுகணைகளைச் சுட்டு வீழ்த்துவதற்கு 'தாட்' என்னும் ஏவுகணைத் தடுப்பு அமைப்பை எல்லையில் நிறுத்தியமை ஆகியன தென்கொரியாவின் நடவடிக்கைகளில் சில. ஆக, கடந்த டிசெம்பர் வரையிலான நிலைப்பாடானது மூன்றாம் உலகப்போர் என்ற ஒன்று ஏற்பட்டால், அதன் தோற்றுவாயாக கொரியத் தீபகற்பம் இருக்கும் என்பதாகவே இருந்தது. ஆனால், தென்கொரியாவில் அண்மையில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடர் அனைத்தையும் மாற்றிவிட்டது.

குளிர்கால ஒலிம்பிக் தொடரில் தனது அணியை பங்கேற்கச் செய்தது வடகொரியா. அது மட்டுமல்லாமல் "தென் கொரியாவுடன் பகையை மறந்து புதிய அத்தியாயம் எழுதத் தயார்" என்று கிம் ஜோங் உன் அறிவித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட அடுத்தடுத்த முன்னேற்றங் களே இன்று இந்தச் சந்திப்பு வரை இரு நாடுகளின் தலைவர்களையும் கொண்டு வந்து விட்டுள்ளது.



**'மூஸ்தபா மூஸ்தபா பாடல்தானாம் தீபகற்பத்தில் தற்போது ஒலிக்கிறது...'**

## ரவுண்ட் த வேள்ட்

தொகுப்பு
பிரகாஸ்

## “வரும் ஆனால் வராது...”



பரிஸ் ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியுள்ள நிலையில், அந்த நாடு மீண்டும் ஒப்பந்தத்தில் இணையும் என்று நம்பிக்கை தெரிவித்தார் பிரான்சின் அதிபர் மக்ரோன்.

உலக வெப்பமயமாதலை இரண்டு செல்சியஸால் குறைவடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு பிரான்சின் தலைநகர் பரிசில் கடந்த 2015ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன உலக நாடுகள்.

உலக வெப்பநிலையை 2 செல்சியஸ் குறைவடையச் செய்தல், ஆயுத மற்றும் அணுவாயுத பயன்பாடுகளைத் தவிர்த்தல், தேவையற்ற போர்ப் பயிற்சிகளைக் குறைத்தல், அமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த ஒப்பந்தம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வேளையில் அதிலிருந்து அண்மையில் வெளியேறியது அமெரிக்கா. 'அமெரிக்காவுக்கு எதிராக குறித்த ஒப்பந்தம் உள்ளது' என்று குறிப்பிட்டே அதிலிருந்து விலகினார் ட்ரம்ப். இவ்வாறிருக்க இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும் என்கிறார் பிரான்ஸின் அதிபர் மக்ரோன். அமெரிக்காவுடன் தற்போது மிகநெருங்கிய நட்பைப் பாராட்டும் நாடுகளின் பட்டியலில் முதலாவது இடத்தை பிரான்ஸே கொண்டுள்ளது. சிரியாவுக்கு எதிராக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது அமெரிக்காவுடன் மிகவும் இணைந்து செயற்பட்டது பிரான்ஸ். இந்தப் பின்னணியில் மக்ரோனின் அறிவிப்பு நம்பக்கூடிய வகையிலேயே உள்ளது.

**'வடிவேலுவின் முசுப்பாத்தியோ தெரியல...'**

## காபூல்



ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் மீண்டும் ஒரு தடவை இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அந்த நகரம் இவ்வாறு இலக்கு வைக்கப்படுவது கடந்த ஆறு மாதங்களில் இது 32ஆவது தடவை.

ஒருநாட்டின்தலைநகரம்என்பதுபல்வேறுபட்ட விடயங்களைக் கொண்டே கட்டமைக்கப்படுகிறது. வாழ்வாதாரம், பொருளாதாரம், ஆடம்பரம், பாதுகாப்பு, அடையாளம், பாரம்பரியம் என்பன அவற்றுள் வெகுசில. இவ்வாறாக ஏகப்பட்ட விடயங்களைக் கருத்தில்கொண்டே அமெரிக்க மக்கள் தமது தலைநகரான வொஷிங்டனை செயற்கையாக கட்டமைத்தனர். ஒருநாட்டின் இயதம் அந்த நாட்டின் தலைநகரே. ஆனால் ஆப்கானிஸ்தானின் தலைநகர்தானா காபூல் என்று கேட்டும்படியாக அமைந்துள்ளது அந்த நகரின் பாதுகாப்பு கட்டமைப்புக்கள்.

ஒரு தடவையல்ல இரு தடவையல்ல, ஐந்துமல்ல பத்துமல்ல 32 தடவைகள் கடந்த ஆறு மாதத்துக்குள் காபூல் இலக்கு வைக்கப்பட்டு சுமார் 300 பேர் வரை காவு வாங்கப்பட்டுள்ளனர். அதாவது ஐந்து அல்லது ஆறு நாள்களுக்கு ஒரு தடவை காபூல் இலக்கு வைக்கப்படுகிறது. சராசரியாக ஒவ்வொரு தாக்குதலிலும் எட்டு முதல் பத்து வரையிலானோர் கொல்லப்படுகின்றனர். அதிலும், காபூலில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் பாதுகாப்பு அற்றவையாகவே அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. மேற்குறித்த தாக்குதல்களில் பாதியளவான தாக்குதல்கள் பள்ளிவாசல்களிலேயே நடத்தப்பட்டுள்ளன என்றவாறாக குறிப்பிடுகின்றன புள்ளி விவரங்கள்.

உலகின் மோசமான (பாதுகாப்பு அற்ற) நகரங்களில் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டன. தென்னமரிக்கக் கண்டத்தில் உள்ள நகரங்களே முதல் பத்து இடங்களிலும் இடம்பிடித்திருந்தன. அவற்றில் ஐந்து நாடுகள் பிரேசிலையும், நான்கு நாடுகள் வெனிசுலாவையும் சேர்ந்தவை. அவற்றிலும் பிரேசிலின் தலைநகர் பிரேசிலியா, வெனிசுலாவின் தலைநகர் கரஸ்கஸ் இரண்டும் பாதுகாப்பாவேதான் உள்ளன. (இதன் அர்த்தம் அவை ஆகச் சிறந்த நகரங்கள் என்பது அல்ல. காபூலை விடவும் பாதுகாப்பாக உள்ளன என்பதே). எனின், ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல்தானா என்று கேட்பதில் தவறொன்றும் இல்லையே.

**'கலக்கத்தைக் கொடுக்கிறது காபூல்...'**

"இனம். மொழி. நீ. நான் கடந்து மானுட உணர்ச்சிகளைப் பேசுவதே உலகப்படைப்பு, மனிதத்தின் பொதுமொழி, மௌனத்தின் அடியாழத்தில் தளும்பும் எல்லோருக்குமான சிரிப்பும் அழுகையும்தான், அந்தச் சிரிப்பை, அழுகையை. கோபத்தை. காதலை. திரையில் மொழி பெயர்ப்பதே உலக சினிமா"– பா.சீனிவாசன்.
மேலே குறிப்பிட்ட எல்லாவற்றையும் கடந்து உலகக் குறுஞ் சினிமாவை அணுகும் ஒரு முயற்சியில் தென்னாபிரிக்க குறும்படமான சிண்டிஸ்வா எனும் படைப்பு நல்ல சினிமாக்களோடு உறவு கொண்டாடும் படைப்பாளிகள் பார்க்கவேண்டிய ஒரு படம்



# மனிதத்தை மொழிபெயர்க்கும் சினிமா 'சிண்டிஸ்வா'

பார்வை

சி.ப.வேந்தன்

**'சிண்டிஸ்வா'**

ஒதுக்குப்புறமான மலைப்பகுதிக் கிராமமொன்றில் சிண்டிஸ்வா தனது தாயுடனும் எயிட்ஸ் நோயால் பீடித்துள்ள தனது மகன் மற்றும் கணவனுடனும் வாழ்ந்து வரும் போது திடீரெனக் கணவன் இறந்து விடுகிறான். அவனை தமது வீட்டுக்கு அருகிலேயே புதைத்து விட்டுசச் டங்குகளைச் செய்தும் போது கிராமத்தில் வைத்தியசேவை செய்யும் பெண் வருகிறாள். அவளைப் பார்த்தவுடன் சிண்டிஸ்வாவினுடைய தாய் அவளை ஏசுகின்றாள். உள்ளே போய் அவள் ஏற்கனவே கொடுத்திருந்த மருந்துப் புட்டிகளைக் கொண்டு வந்து திருப்பிக்கொடுக்குமாறு சிண்டிஸ்வாவிடம் கூறி விட்டு உள்ளே போகிறாள்.

சிண்டிஸ்வாவினுடைய தாய் தனது பாரம்பரிய மற்றும் தெய்வீகச் சடங்குகளோடான வைத்தியமுறையில் நோயைக் குணப்படுத்திவிடலாம் என நம்புகின்றாள். அதனால் மருத்துவமாதைப் பார்க்கும்போது ஆத்திரம் கொள்கிறாள்.


சிண்டிஸ்விடம் பேசும் மருத்துவப் பெண் நானும் எச்.ஐ.வி தொற்று உள்ளவள்தான். ஆனாலும் அந்த மாத்திரைகளைத் தொடர்ந்து பாவித்து வருகின்றேன் இப்போது மூன்று வருடங்களாக 'பொசிற்வாக' இருக்கிறேன். நீ உனது மகனுக்கும் இந்த மாத்திரைகளைக் கொடு என கூறுகிறாள். சிண்டிஸ்வா மறுத்துவிட்டுப் போகிறாள். வீட்டுக்கு வரும் சிண்டிஸ்வா மகனை வைத்தியசாலையில் காட்டுவோமா எனக் கேட்கிறாள். அதற்குத் தாய் அது முட்டாள்தன மானது' எனக் கூறி தனக்குத் தெரிந்த வைத்தியத்தை செய்கிறாள்.

தட்டில் நெருப்புப் போட்டு இலைகுழைகளைப் போட்டு .பேரனுக்கு புகையைச் சுவாசிக்கக்கொடுக்கிறாள். பல நிறத்தாலான பொடி வகைகளை உடலெங்கும் பூசுகிறாள். அவை அனைத்தையும் மறுப்பதா? ஏற்றுக்கொள்வதா ?என தெரியாமல் கவலையோடும் குழப்பத்தோடும் சிண்டிஸ்வா மகனுக்கு அருகில் அமர்ந்து அவனது தலையக் கோதியவண்ணம் இருக்கிறாள்.

அன்றிரவு படுக்கையில் கிடந்தவாறு தனக்குச் சைக்கிள் வாங்கித்தரும்படி மகன் கேட்கிறான். அதற்குச் சிண்டிஸ்வா

நீங்கள் வளர்ந்தவுடன் வலுவானவனாக மாறியபின் சவாரி செய்யுங்கள் எனக் கூறுகின்றாள். அதற்கு மகன் நான்,வளர்ந்தவுடன் அப்பாவைப்போல சவாரி செய்வேன் என கூறுகின்றான்.

இவர்களின் உரையாடலைக் கேட்ட தாய் பேசாமல் தூங்கும்படி இருவரையும் அதட்டுகின்றாள். எல்லோரும் தூங்குகின்றார்கள். காலையில் முற்றத்தில் அமர்ந்து ஏதோ பச்சிலைகளை தாய் அரைத்துக் கொண்டிருக்கிறாள். சிண்டிஸ்வா தண்ணீர் எடுப்பதற்காகச் செல்கிறாள். சிண்டிஸ்வா திரும்பிவர நேரமாகும் என்பதை உணர்ந்த தாய் பேரனுக்குத் தன்னுடைய வைத்தியத்தைச் செய்ய ஆயத்தமாகிறாள். அவளைப்பொறுத்தவரையில் இது தெய்வத்தின் சாபமாகவும் அதன் முடிவு சாவு என்பதாயும் நினைக்கிறாள். எப்படியாவது இதிலிருந்து மீண்டுவிட வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறான் சாபத்திலிருந்துவிடுபடும் செயற்பாட்டில் பேரனின் உயிரைப்பற்றிய கவலையைக்கூட எண்ண அவளது நம்பிக்கை மறுக்கிறது.





சிண்டிஸ்வா தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும் வழியில் மருத்துவமாது அவளைக் காண்கிறாள். அப்போது அவள் சிண்டிஸ்வாவுக்கு மகனை வைத்தியசாலையில் கொண்டுவந்து காட்டும்படி கூறுகின்றாள். அதற்குச் சிண்டிஸ்வா உங்களுக்கு எதுவும் தெரியாது எங்களை விடுங்கள் என கோபத்தோடு கூறிவிட்டுப் போகிறாள். ஆனாலும் அவள் மனம் குழப்பமாகவே இருக்கிறது.

அதே நேரம் வீட்டில் சிண்டிஸ்வாவின் தாய் தெய்வஅருள் வந்து ஆடியபடி தனக்குத் தெரிந்த மந்திர மருத்துவங்களை செய்துகொண்டிருக்கிறாள். அப்போது அங்குவரும் சிண்டிஸ்வா மகனின் முனகல் சத்தத்தைக்கேட்டு தண்ணீர் வாளியை எறிந்துவிட்டு ஓடோடிவந்து தாயிடமிருந்து மகனைப்பறித்து அவளுடைய பூசைப்பொருட்களை எல்லாம் தூக்கிஎறிந்து சத்தம் போடுகிறாள். அப்போது அவளுக்கு இருமல் வந்து தாங்கமுடியாது துடிக்கிறாள் தாய் தைலம் எடுத்து அவளது மூக்கினடியில் பூசுகின்றாள். பின்னர் மகனையும் அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு புறப்படுகின்றாள். அப்போது சிண்டிஸ்வாவை அழைக்கும் தாயார் அவளருகில் வந்து தன்னுடைய போர்வையால் இருவரையும் போர்த்திவிட்டுக் கவனமாக இருங்கள் என வாஞ்சையோடு கூறுகின்றாள் இருவரும் ஒருவரையொருவர் கட்டிக்கொள்கிறார்கள். சிண்டிஸ்வா தனது கணவனுடைய சைக்கிளில் மகனை ஏற்றிக் கொண்டு பயணமாகிறாள். அப்போது நீங்கள் சைக்கிள் ஓட்டுவீர்கள் என்று எனக்குத்தெரியாது என்று மகன் கூறுகின்றான். கவலையோடு புன்னகைத்தவாறே அவள் எதிர்க்காற்றை மோதியபடி சைக்கிளை மிதிக்கிறாள். பச்சையும் மஞ்சளும் கலந்த புற்களின் நடுவே விரிந்திருக்கும் மலைப்பாதையில் அவர்கள் போவது தூரமாய்த் தெரிவதோடு படம் நிறைவடைகிறது.

### உணரவைக்கும் படைப்பு

'சிண்டிஸ்வா' எனும் தென்னாபிரிக்க சிறுகதைக்குத் திரைக்கதை எழுதி படமாக்கியிருக்கிறார் கிராண்ட்பால் ராய். ஒளிப்பதிவு செய்திருக்கிறார் லூயிஸ்பவல் இசையமைத்திருக்கிறார் நிக் மார்கஸ் ரேப். நடிப்பு கியூகுலே ஐஇமா திண்டி டம்பா மற்றும் ஸீலா மன்ல்ஸி. 2006இல் வெளிவந்த இந்தத் திரைப்படத்துக்கு சிறந்த மாணவர் திரைப்படத்துக்கான அக்கடமி விருது கிடைத்திருக்கிறது. ஒரு கிராமத்து விதவைப் பெண் ஒருத்தி தன்னுடையநோய்வாய்ப்பட்ட மகனுக்குச் சிகிச்சையளிப்தில் உள்ள தவிப்பைக் குழப்பத்தைப் பேசுகிறது படம்.

தென்னாபிரிக்காவின் மலைவாழ் மக்களுடைய கிராமிய வாழ்க்கை முறையையும் அவர்களுடைய தற்காலத்தையும் அறிவியல்சார் விடயங்களை புரிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் முடியாத முன்னேற்றமடையாத வாழ்வியலையும் கட்டறுத்துவரமுடியாத பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் மிக அழகாகப் பேசுகிறது சிண்டிஸ்வா திரைப்படம்.

எயிட்ஸ் நோய் பற்றிய போதிய தெளிவின்மையோடு அதை தெய்வக்குற்றமென நம்புகின்ற அந்த மண் மக்களுடைய வாழ்வியலைப் பேசும் படம் ஆபிரிக்க சினிமாவின் பிதாமகர் என வர்ணிக்கப்படும் 'மூலாத்' திரைப்படத்தை நினைவுபடுத்துகின்றது.

பாசம் ஒருபுறம் நம்பிக்கை ஒருபுறம் என வாழும் பேத்தி சம்பிரதாய சடங்குகளை உடைப்பதா? புதிய நவீன முறையை நம்புவதா அதற்கான சந்தர்ப்பமாக மகனது வாழ்வைப் பணயம் வைப்பதா? எனத் தவிக்கும் தாய் தனது நோய் என்னவென்றே புரியாத அதன் விளைவுகளை தெரியாமல் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற மகன் என மூன்று முக்கிய பாத்திரங்களும் படத்துக்கான மூச்சு எனலாம். நடிப்பு என்பது வெளிப்படாத இயல்புத்தன்மையிலிருந்து சற்றும் மாறுபடாமல் கதையில் வாழ்ந்திருக்கும் பாத்திரங்கள் பாராட்டுக்குரியவர்கள்.

### கால இடைவெளியைக் கடத்தல்

ஒரு கால இடைவெளியை மாற்றமடையும் பண்பாட்டு வாழ்வியலைஂபவ் ஒருயுகநாகரிகத்தைகடக்கும்புள்ளியை வெறும் உணர்வுகளின் துணையோடு கடக்க முயன்றிருக்கும் இயக்குநரின் தைரியம் துணிச்லானது. இதன் மூலக்கதையான 'சிண்டிஸா' எனும் சிறுகதை இந்தக் குறும்படத்தைவிட மிகப்பெரிய வாசிப்பனுபவத்தை. அழகியல் கூறை தரும் என்பதில் நம்பிக்கை இருக்கிறது.

கதை நிகழும் சூழலான மலைப்பிரதேசம் கதைமாந்தரின் வீடுஂபவ் அவர்களின் புழக்கத்திலுள்ள பொருட்கள்(சமையல்ஂபவ் விளக்கு நீர்) சடங்கு உடை என அனைத்தும் அந்தப்பிரதேச மக்களை அடையாளம் காண ஏதுவாக அமைகின்றது.

அழகான மலைப்பிரதேசத்தையும் கதைநிகழ்களத்தையும் காட்சிப்படுத்தியதில் இரசிக்கவைக்கிறார் ஒளிப்பதிவாளர்.உணர்வுகளோடன ஒரு கதையை நகர்த்திச்செல்ல இசையும் ஒரு பாத்திரம் என்பதை உணர்ந்து அதை திறம்படச் செய்திருக்கும் இசையமைப்பாளர் இசையால் இளகவைக்கிறார்.

தமிழ் சினிமாவில் எப்போதாவது இருந்துவிட்டு வெளிவருகின்ற நல்ல சினிமாக்களில் எயிட்ஸ் நோயை மையமாக வைத்து அண்மையில் வெளிவந்த 'அருவி' திரைப்படம் தந்துவிட்டுப்போன கனத்தை அடுத்து 'சிண்டிஸ்வா' குறும்படம் கொடுத்திருக்கிறது. கலைக்கு மொழி தடையில்லை என்பது அதரப்பழசான மாபெரும் உண்மை. சில சமயங்களில் அவை அவரவர்க்கு நிறைவேறும்போது மனம் கூத்தாட ஆரம்பிக்கிறது. கலையின் எண்ணவிரிப்பை பலமடங்கு பரவச்செய்கிறது. இதுபோன்ற படங்களை இன்றைய .இளம்திரைப்படைப்பாளிகள் தத்தம் அறிவின் தன்மைக்கேற்ப அறிவியலைப் பயன்படுத்தி பார்த்தாலே கலையின் பார்வைப்பரப்பு விசாலமடையும் .அப்போதுதான் நம்மிலிருந்தும் பல மரியாதையான படைப்புக்குள் உருவாகச் சாத்தியம் உண்டாகுவதற்கு. முயற்சிப்போம் அதற்கான சாத்தியங்களை உண்டாக்க.

# சமூகத்தைச் சீரழிக்கும் தொலைக்காட்சிகள்

## தொடர் நாடகங்கள் புதுப்புது நிகழ்ச்சிகள்

தமிழ்த் திரையுலகம் பணிப்புறக் கணிப்பில் இருந்த காரணமோ என்னவோ தெரியவில்லை கடந்த மாதம் முழுவதும் ஆர்யாவின் அந்த 'ரியாலிட்டி ஷோ' பொழுது போக்கு வெற்றிடத்தை வீடுதோறும் நிரப்பிக்கொண்டிருந்தது.

ஒரு நிமிடம்...

இது ஆர்யாவுக்கான பாராட்டு அல்ல. 'ரியாலிட்டி ஷோ' என்ற பெயரில் அவர் இளைய சமூகத்தின் மனங்களில் எதை நிரப்பிக்கொண்டிருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுவதான எழுத்து.

**வக்கிரமயமாகும் மனித மனங்கள்..**

எத்தகைய ஆபாசமானாலும் இணைய வழியில் ஒரு சொடுக்கில் கிடைக்கும் இந்தக் காலகட்டத்தில் மனித மனங்களில் வக்கிரம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. மனநலம் பாதிக்கப்பட்ட 13வயதுச் சிறுமியை அயல்வீட்டு இளைஞர் ஏமாற்றி அழைத்துச் சென்று வன்புணர்வு செய்து அதைக் காணொலியாகப் பதிவு செய்து அதைச் சிறுமியின் குடும்பத்துக்கே அனுப்புகிறார். இது, மனித மனத்தின் வக்கிரத்துக்கு கட்டியம் கூறும் கொடூரங்களுக்கான சாட்சிகளில் ஒன்று.

கத்துவாசிறுமியின்வன்புணர்வுதொடங்கி, சீதனத்துக்காகத் திருமணமான மூன்று நாள்களிலேயே மனைவியைக் கணவனும் அவனது நண்பர்களும் கூட்டு வன்புணர்வு செய்த சம்பவம் வரை இன்னும் நிறைய வக்கிரங்கள் இருக்கின்றன. இவற்றைப் 'பாலியல் தீவிரவாதம் 'என்றுதான் குறிப்பிட வேண்டும்.

குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல்கள் குறித்த செய்திகள் இல்லாதே நாளே இல்லை எனுமளவுக்கு குற்றங்கள் மலிந்து கிடக்கின்றன. இதுவே தொடருமானால் ஒருநாள் பெரும்பான்மையான மனித சமூகம் குற்றவாளிகளாகவே நிற்கும்.

இப்படியான தருணத்தில்தான் ஒவ்வொரு தனி மனிதனும் சற்று கூடுதலாகவே சமூக அக்கறையைக் காட்ட வேண்டும். தனி மனித ஒழுக்கம் சமூக ஒழுக்கத்துக்கு வித்திடும் என்பதால் கூடுதல் அக்கறை தேவையாகிறது.

இங்கே 'பம்பர்ஸ்' அணிந்த பெண் குழந்தைக்கும் பாதுகாப்பில்லை. குட்டைப் பாவாடை அணிந்த யுவதிக்கும் பாதுகாப்பில்லை. முழுமையான உடையாகச் சுடிதார் அணிந்த பெண்ணுக்கும் பாதுகாப்பில்லை.


ஒவ்வொரு தனிமனிதரும் ஒழுக்க சீலராக இருப்பது அடிப்படைப் பண்பு என்பதை உணரும் தருணத்தில் இந்தச் சமூகம் இருக்கிறது. அப்படியான காலகட்டத்தில் காட்சி ஊடகத்தின் வழியாகக் கடத்தப்படும் கருத்துகள் எத்தகைய கவனத்துடன் கையாளப்பட்டிருக்க வேண்டும்? ஆனால், உண்மையில் அந்த 'ரியாலிட்டி ஷோ' என்ன செய்திருக்கிறது தெரியுமா?

**13 பெண்களும் ஆர்யாவும்**

மகளிர் மட்டும் படத்தில், நடிகர் நாசர், பணியிடத்தில் பெண்களுக்குப் பாரபட்சம் பார்க்காமல் பாலியல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பார். அவரை ஸ்டாக்கருக்கு (Stalker) துல்லிய உதாரணம் என்று சொல்லலாம். 'காளை மாடு ஒண்ணு கறவைமாடு மூணு. அடிச்சான் 'லக்கி ப்ரைசு அதிர்ஷ்டக்காரன் ஆளு' என்று அந்தப் படத்தில் ஒரு பாடல் உண்டு. விரசமான பாடல்தான்.. ஆனால் ஒரு ஸ்டாக்கரின் மனோபாவத்தைப் பிரதிபலிக்கும் வரிகள் அவை.

ஆர்யா.. நீங்களும் ஒரு ஸ்டாக்கர்தான். 13பெண்களைப் பார்க்கும்போதே உங்கள் கண்களில் ஆசை வழிந்தோடியது. அத்தனை வாஞ்சையுடன் ஒவ்வொருவரையும் பார்த்தீர்கள். எல்லோரிடமும், 'ஐ லைக் யூ' என்று சொன்னீர்கள். எல்லோருமே அழகாக இருப்பதாக வர்ணித்தீர்கள். உங்களைத் தழுவிக்கொள்ள ஆசைப்பட்டதால் தாராளமாக உங்கள் மார்பில் இடம் கொடுத்தீர்கள். எல்லோரையும் சமையல் செய்யச் சொல்லி புசித்தீர்கள். லவ் டோக்கன் கொடுத்தீர்கள். சப்ரைஸ் கிவ்ப்ட் என வாரி வழங்கினீர்கள். அவர்கள் அளித்த பரிசுகளையும் இன்முகத்தோடு பெற்றுக் கொண்டீர்கள். சிலரை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றீர்கள். தாஜ்மஹாலுக்குக் கூடக் கூட்டிச் சென்றீர்கள். எல்லோரது வீட்டுக்கும் சென்றீர்கள். நிஜமான மாப்பிள்ளைபோலவே அத்தனை பவ்வியமாக வீட்டுப் பெரியோர்களிடம் பேசினீர்கள். சொக்லேட் கொடுத்தீர்கள். பூங்கொத்துக் கொடுத்தீர்கள். ஆடிப் பாடினீர்கள். உங்கள் வீட்டுக்கு கூட்டிச் சென்றீர்கள்.

இவற்றையெல்லாம் ஒரே ஒரு பெண்ணிடம் செய்தாலே ஸ்டாக்கர் என்று உங்களை அழைப்பதற்கான அத்தனை நியாயமும் இருக்கிறது. ஆனால், நீங்கள் 13பெண்களிடமும் இதைத்தான் செய்திருக்கிறீர்கள். அப்படி என்றால் உங்களை ஸ்டாக்கர்களின் தலைவர் என்றுதான் அழைக்க வேண்டும்.



ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக இதையெல்லாம் செய்தால்தான் ஸ்டாக்கர் என்பது அர்த்தமல்ல. இங்கே 13பெண்களின் விருப்பத்தோடே நீங்கள் பழகியிருந்தாலும் நீங்கள் ஸ்டாக்கர்தான்.

ஏனென்றால், ஆர்யாவும் அகாதாவும் நல்ல ஜோடி, ஆர்யாவும் சீதாலக்ஷ்மியும்தான் சிறந்த ஜோடி, இல்லை இல்லை ஆர்யாவும் சூசானாவும் தான் ஆகச் சிறந்த ஜோடி என்றெல்லாம் கல்லூரி மாணவ மாணவிகள் தங்களுக்குள் விவாதம் நடத்திக் கொள்ளும் அளவுக்கு 'கெமிஸ்ட்ரி'யை கச்சிதமாக 'ஒர்க் அவுட்' செய்து கொண்டிருந்தீர்கள்.

ஆனால், கடைசியில் மூன்று பெண்களில் ஒருவரைத் தெரிவுசெய்தால் மற்ற இரண்டு பெண்களும் அவர்களது குடும்பத்தாரும் வருத்தப்படுவார்கள் என்று நழுவிக்கொண்டீர்கள்.

இந்த மூன்று பெண்களை விடுங்கள், கோலம் போடு, பாட்டுப் பாடு, நடனம் ஆடு என்று நீங்கள் 'டாஸ்க்' கொடுத்துக் கொடுத்து வெளியேற்றினீர்களே அந்தப் பத்துப் பெண்கள் பற்றி உங்களுக்கு எந்தக் கவலையுமே இல்லையா ஆர்யா? உங்களை ஸ்டாக்கர் என்று அழைக்காமல் வேறு எப்படி அழைப்பது? சமூகத்தால் நன்கு அறியப்பட்ட நீங்கள் இளைஞர்கள் பலரின் விருப்ப நாயகனாக இருக்கும் நீங்கள் சமூக அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டாமா? சாதாரண மானவர்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது ஆர்யா. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

**'ரியாலிட்டி ஷோ' தகிடு தத்தங்கள்**

இந்த நிகழ்ச்சியைப் பற்றி விமர்சிப்பவர்களுக்கு எல்லாம் சில அறிவு ஜீவிகள், "இது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி. அதை வெறும் நிகழ்ச்சியாகப் பாருங்கள். அதில் வருவதெல்லாம் உண்மையல்ல. அங்கு சிந்தப்படும் கண்ணீர் ஏற்கெனவே முடிவுசெய்யப்பட்ட காட்சி. அங்கே நடத்தப்படும் ரொமான்ஸ் ஸ்க்ரிப்டின் அடிப்படையிலானது. அதனால் வெறும் பொழுதுபோக்காகப் பார்த்துவிட்டுக் கடந்து சொல்லுங்கள்" என்று வக்காளத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கனவான்களே..! உங்களுக்கெல்லாம் ஒரு கேள்வி. உங்கள் வாதத்தின்படியே இந்த விஷயத்தை அணுகுவோம். சினிமா[illegible]டக்கூடிய வன்புணர்வுகள் நிஜமல்ல, கொலைகளும் உண்மைக் கொலை அல்ல, கொள்ளையும் அப்படியே. ஆனால், ஒத்த சம்பவங்கள் சமூகத்தில் நிகழும்போது சினிமப் பாணியில் கொள்ளை, அலைபாயுதே பாணியில் காதல் ஜோடி திருமணம், சிவப்பு ரோஜா பாணியில் கொலை என்று ஏன் செய்திகள் எழுகின்றன தெரியுமா? சினிமா சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதாலேயே. 'தூங்காதே தம்பி தூங்காதே...' என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் ஒரு தம்பிக்கு உத்வேகத்தை அளிக்குமானால் 'கட்டிப் பிடி கட்டிப்பிடிடா...' என்ற காம இச்சை முனகல்கள் நிரம்பிய பாடல் இளைஞர்களுக்குள் நிச்சயம் ஒரு கிளுகிளுப்பைக் கடத்தத்தான் செய்யும் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். இது உங்களுக்கும்தான் ஆர்யா. உங்களைப்போல் நாளை ஒரு கல்லூரி மாணவன் தன் கல்லூரியில் படிக்கும் சக மாணவிகள் பலரிடமும் ஜொள்ளராக இருந்துவிட்டுக் கடைசியில் 'சூஸ் தி பெஸ்ட்' ஒப்ஷனுக்குப் போகும் அபாயம் இருக்கிறது.

> 'தூங்காதே தம்பி தூங்காதே...' என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் ஒரு தம்பிக்கு உத்வேகத்தை அளிக்குமானால் 'கட்டிப்பிடி கட்டிப்பிடிடா...' என்ற காம இச்சை முனகல்கள் நிரம்பிய பாடல் இளைஞர்களுக்குள் நிச்சயம் ஒரு கிளுகிளுப்பை கடத்தத்தான் செய்யும்

**இந்த யோசனையே தவறு**

ராஜா காலத்தில் சுயம்வரம் பெரும் வரமாக இருந்திருக்கலாம். ஆனால், இது பெண்கள் சாதிக்கும் காலம். பெண்கள் போராடி முன்னே வந்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் இருந்து கொண்டு ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சிக்காக எனினும் இப்படியொரு நிகழ்ச்சிக்கான கருத்து வடிவம் ஏற்றுக்கொள்ளமுடியாதது. ஆர்யா மட்டுமல்ல இதில் பங்கேற்க வைக்கப்பட்டுள்ள பெண்களும் சில கருவிகள்தான். ஆனால் இந்தக் கருத்து வடிவத்தைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக உருவாக்கி வெற்றிபெற முடியும் என்ற சிந்தனையே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களின் பழைய ஆண்வழி நிலப்பிரபுத்துவக் கனவு உலகத்திலேயே மிதக்கும் மோசமான மன உலகத்தைக் காட்டுகிறது.

**சற்றுத் தரையில் இறங்கி வாருங்கள்**

சமூகத்தில் தங்களுக்கு என்று ஓர் இடத்தை அடையப் போராடும் பெண்களின் நூறு விதமான கருத்து வடிவங்கள் உங்களுக்குக் கிடைக்கும். முதல் தலைமுறை பட்டதாரியான பெண்கள் பல உயரிய சாதனைகளைச் செய்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் எல்லாம் அடையாளம் இல்லாமல் இருக்கின்றனர்.

அப்படிப்பட்டவர்களை அடையாளம் காட்ட முற்படுங்கள். பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொலைக்காட்சிகளில் வழங்க உதவுவதோடு புதிய பார்வையாளர்களின் ஏகோபித்த ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கும்.

அதைவிடுத்து 'டிஆர்.பி'க்காக 'செலிபிரிட்டி'யை வைத்து இப்படி ஒரு நிகழ்ச்சியைச் செய்வது என்பதும் அதற்குச் சில பெண்களைக் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்வதும் நியாயமானதல்ல.

இந்தச் சமுதாயத்தில் காதல் இயற்கையானது, காமம் இயற்கையானது. ஆனால் ஒரு பெண்ணைப் பின்தொடர்தலும் அதன் நீட்சியாக அவளைக் காதலுக்கு கட்டாயப்படுத்துதலும் மறுத்தால் வன்புணர்வு செய்வதும் அசிட் வீசுவதும் வக்கிரம். அந்த வக்கிரத்தை யார் செய்தாலும் தவறு. அதை ஆதரிக்கும் படைப்பு எதுவாக இருந்தாலும் விமர்சனத்துக்குரியது. அந்தவகையில்தான் ஆர்யா நீங்கள் விமர்சனப் பொருளாகியிருக்கிறீர்கள். மீண்டும் வலியுறுத்துகிறேன்.. உங்களுக்கும் ஒரு தார்மீகப் பொறுப்பு இருக்கிறது ஆர்யா. அதை உணர்ந்து செயல்படுங்கள்.

**காதலை உரக்கச் சொல்லுங்கள் கடைச் சரக்காகாதீர்கள்**

பெண்கள் காதலை உடைத்துச் சொல்வதே தவறு என நினைக்கும் பிற்போக்குத்தனமான சமுதாயத்தில் ஆர்யாவிடம் 13 பெண்களும் தங்கள் ரொமான்ஸை வெளிப்படையாகச் சொன்னது துணிச்சலானது வரவேற்கத்தக்கது என்கின்றனர் சிலர். பெண்களே காதல் பழகுங்கள். தவறல்ல. சாதிகளற்ற சமுதாயம் உருவாகும். காதலனுடன் கைகோத்து நடந்து செல்லுங்கள்.. குற்றமல்ல. காதலரை உங்கள் அப்பா அம்மாவுக்கு அறிமுகம் செய்து வையுங்கள்.. கண்ணியமானது அது.

பெண்களே உங்களை யாராவது அழகாக இருக்கிறீர்கள் என்று புகழ்ந்தால் அதைப் பெருமித அடையாளமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். இத்தகைய வார்த்தைகளுக்கு மயங்கிவிடாதீர்கள். நீங்கள் சாதிக்க வேண்டியவை ஏராளம். பெண் என்பவளை அழகியலோடு தொடர்புபடுத்தி அடிமைப்படுத்தும் தூண்டிலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். கூட்டுப்புழுவாய் இருந்ததுபோதும், நீங்கள் சாதித்தால் வண்ணத்துப்பூச்சி என்ற அழகு சார் அடைமொழியுடன் உங்களை இணைத்துப் பேசினால் அதில் திருப்தி அடைந்துவிடாதீர்கள். இன்னும் இன்னும் உயரே செல்லுங்கள். பருந்தைப்போல சிறகை விரித்து உயரப் பறக்கப் பிறந்தவர்கள் நீங்கள்.

அதைவிடுத்து, உங்கள் துணிச்சலை எல்லாம் இப்படி கடை விரிக்காதீர்கள். நீங்கள் உங்களையே ஒரு போகப் பொருளாக ஆக்கிக் கொண்டு கடைச்சரக்கு ஆகாதீர்கள். உங்களைப் பார்த்து சில விவரமறியா யுவதிகள் 'இம்ப்ரெஸ்' செய்கிறேன் என்ற பெயரில் சுயமரியாதையை இழக்கக்கூடும். நீங்கள் வெறுமனே நடித்துவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால், அது சிலரின் மனதில் பதியமாகியிருக்கும். ஆர்யாவுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் இந்தச் சமுதாய ஒழுக்கத்தைப் பேணுவதில் தார்மீகப் பொறுப்பிருக்கிறது பெண்களே.

*நன்றி-ஈஹிந்து*

மேரிகிறேஸ் வரதராஜன்

சின்னதா ஓர் அரட்டை

# மோடியின் இந்தியா?

தலைமை அமைச்சர் மோடி இதுவரை பல புதிய இந்தியாக்களைப் பெத்துப் போட்டுள்ளார். அவருடைய புதிய இந்தியாவில் என்றுமில்லாதவகையில் பெற்றோல், டீசல் விலைகள் அதிகரித்துள்ளன. ரூபாவின் மதிப்பு இறங்கியுள்ளது. வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ளது.

ஆனால் மோடி பிரிட்டனில் 1பில்லியன் பவுண்ட் முதலீடு செய்யப்போவதாக அறிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறியதால் இழக்கும் முத லீடுகளை ஈடு கட்ட முடியாமல் பிரிட்டன் தடுமாறி வருகிறது.



இந்த நிலையில் மோடி 1பில்லியன் பவுண்ட் முதலீட்டைச் செய்து பிரிட்டனுக்கு உதவ முன்வந்துள்ளார். இதன்மூலம் பல வேலை வாய்ப்புகளைப் பாதுகாக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன் என்று கூறிய மோடி, இதுவரை இருபது இலட்சம் வேலை வாய்ப்புகளைக்கூட உருவாக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

ஆனால், அவரோ வேலை வாய்ப்புகளுக்காக அதுவும் பிரித்தானியர்களின் வேலை வாய்ப்புக்காக 1பில்லியன் பவுண்ட் முதலீடு செய்கிறார். இத்தனை முதலீட்டைச் செய்பவர் ஆகக்குறைந்தது இந்தியர்களுக்காகக் கல்வி, வேலை நுழைவிசைவுகளையாவது இலகுவாக வழங்கும்படி பிரிட்டனிடம் கேட்டிருக்கலாம். அல்லது, வங்கியை ஏமாற்றிவிட்டு லண்டனில் பதுங்கியிருக்கும் முதலாளி மல்லையாவை ஒப்படைக்கும்படியாவது கேட்டிருக்கலாம்.

ஆனால் எவ்வித நிபந்தனையும் இன்றி 1 பில்லியன் பவுண்ட் பணத்தை வழங்க மோடி முடிவு செய்துள்ளார். இது குறித்து இந்திய அரசியல் கட்சிகள் குறிப்பாக கம்யுனிஸ்ட் கட்சிகூடக் கண்டனம் தெரிவிக்காதது ஆச்சரியம்தான்.

# கேட்டது விடுதலை கிடைத்தது பத்தாயிரம் ரூபா!!



குழந்தைகளுக்காகத் தந்தை ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யும்படி தமிழ் மக்கள் கேட்டார்கள். அரச தலைவர் மைத்திரியும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் விடுதலை செய்வதாக உறுதியளித்திருந்தார்.

உறுதியளித்தபடி விடுதலை செய்யாதது மட்டுமன்றி ஏன் விடுதலை செய்யப்படவில்லை என்பதையும் அவர் அறியத்தரவில்லை.

ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளை நேரில் அழைத்துச் சந்தித்த வடமாகாண ஆளுநர் பத்தாயிரம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார்.

ஆனந்த சுதாகரனின் குழந்தைகள் தமது தந்தையின் விடுதலையைக் கோருகின்றார்களே தவிர பண உதவி கோரவில்லை.

இனி அடுத்த தேர்தல் வரும் போதுதான் பலருக்கும் இவர்களின் நினைவு வரும்போல!.

# கல்லெறி

சில வேளைகளில் எழுதும் பேனா க்களைவிட
எறியப்படும் கற்கள் வலிமையானவை என்பதைச் சில ஊடகவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.
பேனாவால் மட்டுமன்றிக் கற்களாலும் செருப்புகளாலும் தங்களால் பேச முடியும் என்று ஊடகவியலாளர் காட்டியுள்ளனர்.
ஆனால், சில பச்சோந்திகள் கல் எறிந்தது சரியா? தவறா? என
பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றன.

அவர்கள் ஓர் உண்மையை உணர வேண்டும்.
முதல் கல் எறியப்பட்டுவிட்டது. அது 'நாய்சேகர்' ஓடி ஒளிந்து மன்னிப்புக் கேட்கும் அளவுக்கு வலியைக் கொடுத்துள்ளது.

விசர்பிடித்த நாயைக் கல்லால் அடித்து விரட்டுவது தவறு அல்லவே...!

வெறி பிடித்த நாய் கடிக்க வரும் போது அதைக் கல்லால் விரட்டுவது வழக்கம்தானே? நாயைப் பிடித்து கூண்டில் அடைக்காமல் அதற்குக் கல் எறிந்தவரைப் பிடித்துச் சிறையில் அடைப்பது என்ன நியாயம்?
பெண்களை கேவலமாக பேசிய எஸ்.வி. சேகரைக் கைது செய்திருந்தால் ஊடகவியலாளர்கள் கல் எறிய வேண்டி வந்திருக்காதே.



# எய்தவன் இருக்க அம்பை நொந்த கதை

“போர் வந்தால் சொல்லுங்கள் வருவேன்” என்றார். மக்கள் போராடுகின்றனர். அவரோ அமெரிக்கா போகிறார்.

சரி பரவாயில்லை. நிர்மலாதேவியைத் தண்டிக்க வேண்டும் என்றவர் ஆளுநரைத் தண்டிக்க வேண்டும் என்று ஏன் கூறவில்லை? நிர்மலா தேவிக்கு உதவியதாக இரண்டு பேராசிரியர்கள் கைது என்கிறார்கள் ஆனால், நிர்மலாதேவி யாருக்காகப் பெண்களை வற்புறுத்தினார் என்பதைக் கண்டறிந்து அவரை இன்னும் ஏன் கைது செய்யவில்லை?

எய்தவன் இருக்க அம்புகளை மட்டும் இன்னும் எத்தனை நாளைக்குத் தண்டித்துக்கொண்டிருக்கப் போகிறோம்?

குருமூர்த்தி ஐயருடன் பேசிவிட்டுப் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுப்பவர் ஆளுநரைக் கைது செய்யச் சொல்வார் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்தான்!

# உன் இதழ் ஈரத்தோடு...

எதிர்த் திசையில் ஓடிக்கொண்டிருந்த
எந்த வாகனத்தின் வெளிச்சமும்
உன் சுவாசத்துக்கானஎன் தேடலை
பெரிதாய்ச் சிதைக்கவில்லை
உன்விரல்களைக் கோர்த்தபடி
தோள்மீது சாய்ந்தபடி
தயங்கித் தயங்கிவிழிகளைப் பார்த்தபடி
உன்னிதழின் ஈரத்தை எதிர்பார்த்தபடியே
உன்னோடு நடந்துகொண்டிருந்தேன்
உணராத ஒரு நொடியில்பயணம் முடிந்துவிட்டது
நீளாத பாதைநீண்டதாய் எண்ணிக்கொண்டு
நானறியாத உன்னிதழீரத்தோடு
தனியே நடந்துகொண்டிருக்கிறேன்
எனது வீட்டையும் தாண்டி...

# மௌனங்களின் அலைவரிசை

இன்று நீ எங்கே போய்விட்டாய்...?
தனிமையில் நான்
தள்ளாடிக்கொண்டிருக்கின்றேன்
சப்தங்களின் நுரைவடிந்து கரை
ஒதுங்கிய சொற்கள் இறந்து கிடக்கின்றன
நீ ஏதும் பேசாதஇவ்வேளையில்
மணியோசை கேட்காதகோயிலைப்போல
ஒலியிழந்து கிடக்கிறதுஎன் அலைபேசி
உன் அன்பைப் பேசாமல்
பிரிவை வலியுறுத்திநீ பேசிய சொற்களில் எல்லாம்
உன் பிரியங்களேவழிந்து கிடந்தன
அதிகாரம் என்பதுஅன்புக்கு எதிரானது
நீ செய்யும் அதிகாரம்அன்பைப்போல் சுகமானது..!
உறவைப் பிரார்த்தனை செய்து கொண்டே
பிரிவில் விழுந்தவள் நான்
பிரிவைப் பிரார்த்தனை செய்து கொண்டே
உறவில் கலந்தவன் நீ

# காதல் என்பது...?

காதல் ஒரு வழிப்பாதை
திரும்பிச்செல்ல வழிகள்
இல்லை
காதல் நாய்க்குட்டியைப்போல
பின் தொடரத்தான் தெரியும்
முன் செல்லத் தெரியாது
காதல் ஒரு பிச்சைப்பாத்திரம்
அதில் நாணயங்களுக்குப்
பதிலாக
நாமே விழுந்து விடுகிறோம்
அணைத்த பின்புஅணைவது
காமம்
அணைத்த பின்பும் சுடர்விட்டு
ஒளிர்கிறதுகாதல்
நான் உன்னோடு பேசிக்
கொள்ள
முடியாதபொழுதுகளில்
உன் மௌனத்துடன்பேசிக்
கொண்டிருக்கிறேன்
உன் பெயரைஉச்சரித்த
பின்னால் நான் என்பது
புனைப்பெயராகி விட்டது
நீ தான்என் இயற்பெயர்
உனக்காகச் சிந்தப்பட்ட
கண்ணீர்த்துளிகளில்
எனக்கான
இரங்கல் கவிதைகள்ஒளிந்திருக்கின்றன
காதல் செரிக்காத விஷம்
வாழவும் விடுவதில்லை
சாகவும் விடுவதில்லை
உன்னைப்போலவே....

கவிதைகள்

தர்சி



# நடுங்க வைக்கும் நரக வாசல்

கட்டுரை

வி.பிரணவன்

மனித வாழ்வு மகத்துவம் வாய்ந்தது. அதை ஒழுக்கமான முறையில் பிறருக்கு உதவும் வகையில் வாழ வேண்டும் என்பது இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய அனைத்து மதங்களும் வலியுறுத்தும் ஒன்றாக இருக்கிறது. மனிதன் ஒருவன் இம்மையில் தனது வாழ்நாளை எவ்வாறு வாழ்கிறானோ அவ்வாறே, அதைப் பொறுத்தே அவனது மறுமை என்று கூறப்படும் மறு உலக வாழ்வு அமையும் என்பதை மதங்களின் புனித நூல்கள் (கீதை, திருக்குர்ஆன், பைபிள்) வலிபுறுத்துகின்றன. அதாவது ஒருவன் தன்வாழ்வில் ஒழுங்கானவனாகவும் பிறருக்கு உதவி செய்தும் நல்ல விதம் வாழ்வானாயின் அவன் சொர்க்கத்துக்கும் அதற்கு நேர்மாறாக வாழ்வானாயின் அவன் துன்பக் கடலான நரகத்துக்கும் செல்வான் என்றும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது.

**நரக தண்டனை...?**

இதிகாச புராணங்கள் மற்றும் பல்வேறு காலக்குறிப்புக்கள் மூலமாக நாம் அறிந்து வந்த சொர்க்க, நரகங்களைத் திரைப்ப டங்கள் நம்முன் கற்பனையாகக் கொண்டு வந்து நிறுத்தின. நரகத்தின் கொடுமைகளையும் அதன் தன்மைகளையும் அவற்றில் வாழ்பவர்களின் அவஸ்தைகளையும் விளக்கும் அந்நியன், ஹெல்பாய், அண்டர்வேல்ட், ஹெலகேட் போன்ற திரைப்படங்களும் வெளிவந்தன. அவற்றைப் பார்க்கும் போது இப்படி எல்லாம் இருக்குமோ? என்று அதிர்ச்சியில் உறைந்து போனவர்கள் ஏராளம்.

கிரேக்க புராணக் குறிப்புக்களின்படி இறக்கும் மனிதர்களின் ஆன்மாக்கள் பூமிக்கு அடியில் இருக்கும் நரகத்துக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அவர்கள் செய்த பாவ, புண்ணியங்களுக்கு ஏற்ப நரக தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். பூமிக்கு அடியில் நரகம் இருந்தாலும் நரகவாசல் 'ஹரோபாலிஸ்' என்றழைக்கப்படும் பிரைஜின் என்ற நகரில் அமைந்திருப்பதாகவும் சில குறிப்புக்களும் இதிகாச புராணங்களும் சான்று உரைக்கின்றன. இந்த நரக வாசலானது பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட சிறுமணி மண்டபமாகக் காட்சி அளிக்கக்கூடியது.

இதன் முன்னால் தண்ணீர்க் குளமும், அதையடுத்து பூமியின் கீழ் படிக்கட்டுக்களும் அமைந்திருக்கும்.

**உஷ்ணக் காற்று**

நரக வாசலின் வழியாக வெப்பம் மிகுந்த காபன் டை ஒக்சைட் வெளியேறியபடி இருக்குமாம். நரகத்தின் வேதனையை தாங்கிக் கொள்ளாமல் வாசல் வழியாக வெளியேற நினைக்கும் யாவரும் வெளியில் சுற்றிக்கொண்டி ருக்கும் காபன் டை ஒக்சைட்டின் அதீத வெப்பம், நச்சுத் தன்மையால் பாதிக்கப்பட்டு அங்கேயே சுருண்டு விழுவார்கள். மேலும் நரகத்தில் இருந்து யாரும் தப்பிக்காமல் இருக்க வாசலில் மூன்று தலைகள் கொண்ட நாயும், சுருண்ட நிலையில் பாம்பும் வாசலைப் பாதுகாக்கும். இவை அனைத்தும் கிரேக்க, உரோமானியப் புத்தங்க ளிலும் ஒருசில கிறிஸ்தவ தேவாலயங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. புராணக் கதைகளிலும் காலக் குறிப்புக்களிலும் எழுதி வைக்கப்பட்டிருந்த நரக வாசல்கதைகள் உண்மையோ, பொய்யோ ஆனால் அதைப் பலரும் நம்புகிறார்கள். இந்த நிலையில் நரக வாசல் என்ற தோற்றப்பாடுடைய ஒன்று இருப்பதற்கான ஆதாரங்கள் துருக்கி நாட்டில் கண்டறியப்பட்டுள்ளன. காலக் குறிப்புக்களில் கூறப்பட்டுள்ள பிரை ஜியன் நகரம் தற்சமயம் பம்காலே என்று அழைக்கப்படுகின்றது.

காலமாற்றத்தால் உருக்குலைந்து போன இந்த நகரைத் தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்.

**நரகவாசல்**

தென்மேற்குத் துருக்கிப் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 'கேட் ஒவ் ஹெல்' என்று அழைக்கப்படும். நரக வாசல் தொல்பொருள் ஆய்வாளர்களுக்குப் பெரும் ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது. காலக் குறிப்பில் கூறப்பட்டுள்ள பலவும் இந்த நரக வாசல் அமைப்பில் ஆதாரங்களாகக் கிடைத்ததே அவர்களின் ஆச்சரியங்களுக்குக் காரணமாகும்.

இதை இத்தாலியைச் சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் டி அண்ரியா என்பவர் கண்டுபிடித்துள்ளார். இயேசுவின் 12சீடர்களில் ஒருவரான புனித பிலிப் என்பவரது கல்லறையைக் கண்டுபிடித்தவர் என்ற பெருமைக்குரியவர் இவர். நரக வாசலுக்கு, புளுட்டோவின் வாசல் என்ற புனைப் பெயரும் உண்டு. புளுட்டோவின் என்ற வார்த்தை கிரேக்க மற்றும் இலத்தீன் மொழிகளின் கலவை



யாகச் சூட்டப்பட்டது. புளுட்டோ னின் மற்றும் புளுட்டோனி யம் என்ற இரண்டு வார்த்தைகளுக்கும் பூமிக்கு அடியில் இருக்கும் மறு உலகம் என்று பொருள். இந்த வாசல்களைப் பற்றி கிரேக்க மற்றும் உரோமானிய வரலாறுகளிலும் புராணங்களிலும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அழிந்துபோன படிமங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த ஆராய்ச்சிக் குழுவினர்,

பூமிக்கு அடியில் பெரிய அரண்மனையின் அடித்தளம் போன்ற கட்டமைப்பைப் பார்த்துப் பிரமித்துள்ளனர். இதன் கட்டமைப்பு முறை, சுரங்க அமைப்பு போன்றவற்றைக் கொண்டு பழங்கால அரண்மனை என்றுதான் முதலில் ஆய்வாளர்கள் கருதி உள்ளனர். ஆனால் முழு ஆராய்ச்சி பணிகள்நிறைவடைந்ததும் சுரங்கப் படிகளில் மூன்று தலைகொண்ட நாய் உருவரும் சுருண்ட நிலையிலும் தலை துண்டிக்கப்பட்ட பாம்புச் சிலையும் கண்டுபிடிக்கப்பட்டது. பிறகே அது நரக வாசல் என்பதை உறுதி செய்துள்ளனர்.

**புறாக்கள் இறந்தன**

நரக வாசலின் சுரங்கப் பாதையில் இன்றும் உஷ்ணம் நிறைந்த காபன் டை ஒக்சைட் வெளியேறுகின்றது. தற்போதைய உஷ்ணத்தை மனிதர்களால் எளிமையாகத் தாங்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால் பறவைகள், விலங்குகள் போன்றவற்றால் இந்த வெப்பக் காற்றைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதன் தன்மையைப் பரிசோதிக்கும் விதமாக ஆயுக்குழுவினர் மூன்று புறாக்களை நரக வாசலின் சுரங்க படிகட்டு பகுதியில் பறக்கச் செய்தனர். ஆனால் அந்த வாசலில் இருந்து வெளியேறிய உஷ்ணம் நிறைந்த காபன் டை ஒக்சைட்டை சுவாசிக்க முடியாமல் அந்தப் புறாக்கள் அங்கேயே சுருண்டு வீழ்ந்து இறந்தன. அதுவரை இது ஒரு பழங்கால அரண்மனை என்றே நினைத்த ஆய்வுக் குழுவினர் அதன் பிறகே? இருப்பதாக காலக்குறிப்புக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதை உணர்ந்தார்கள். அதன் தலைவாசல் எனப்படும் முன்பகுதி காபன் டை ஒக்சைட் வெளியேறும் வாசலாகும். எரிமலைக்குழம்பு வெளியேறும் மலையாக அமைந்திருந்தது என்று குறிப்புக்க ளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நரகத்துக்குப் பின்வாசல்!**

நரக வாசலின் ஒரு பகுதியை மட்டுமே கண்டு பிடித்திருப்பதாகத் தெரிவிக்கும் டி - ஆண்ரியா புராணக் குறிப்புக்க ளின்படி நரகத்துக்கு பின்வாசல் ஒன்று இருப்பதாகக் கூறுகின்றார். கிரேக்க வரலாற்றுக் குறிப்புக்களில் இதற்கான சான்று இருப்பதாகக் கூறும் இவர். அதன் வழியைக் கண்டறிந்த பின்னரே இந்த நரக வாசலுக்கான தேடல் முற்றுப்பெறும். அதைக் கண்டறியும் ஆவலில் நான் இருக்கின்றேன் என்று கூறியுள்ளார்.

மனித வாழ்வின் நிகழ்காலம் மட்டுமே நம்பகத்தன்மையானது. சொர்க்கம், நரகம் என்பவை கட்டுக்கதைகள் என்று பலரும் ஆண்டுகளாக விவாதித்து வந்த நிலையில் நரக வாசல் என்று ஒன்று இருப்பதான இந்தத் தகவல் பலரையும் பீதியடையச் செய்யலாம்!

> கிரேக்க புராணக் குறிப்புக்க ளின்படி இறக்கும் மனிதர்களின் ஆன்மாக்கள் பூமிக்கு அடியில் இருக்கும் நரகத்துக்கு கொண்டு செல்லப்படும். அங்கு அவர்கள் செய்த பாவ, புண்ணி யங்களுக்கு ஏற்ப நரக தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள்




## காத்திருக்கிறோம்...

பொங்கல் வாங்கப்போன தாத்தா
எங்கள் அப்பாவின் விடுதலை
பற்றியும் ஏதாவது
கதைத்திருக்கலாம்
அம்மாவின் இழப்பால்
நாம் இன்று யாருமற்றவர்களாய்
அப்பாவின் விடுதலைக்காய்
காத்திருக்கிறோம்
சித்திரைப் புத்தாண்டுக்கு முன்
விடுவிக்க
விரைவுபடுத்துவதாய்
நல்லாட்சியின்
தலைவர் மைத்திரித் தாத்தா
சொன்ன நாள் முதல்
எங்கள் அப்பா
எங்களிடம் வரும்
அந்த நாளை எண்ணி
கை விரல் மடித்துக்
கணக்கிட்டுக் காத்திருந்தோம்
சித்திரை வந்தது
புத்தாண்டும் வந்தது
ஆனால் எங்கள்
அப்பா மட்டும் விடுதலையாகி
எங்கள் வீடு வரவில்லையே!
நாடெல்லாம்
புத்தாண்டுக் கொண்டாட்டம்
எங்கள் வீட்டில்...?
சொல்ல முடியவில்லை
சொன்னால்தான்
தெரியவேண்டுமென்றும்
இல்லை
மைத்திரித் தாத்தா வீட்டில்
சித்திரைப் புத்தாண்டுக்
கொண்டாட்டத்தில்
பொங்கல் உண்டு மகிழ்ந்த
எங்கள் தாத்தாவே
அந்த நேரத்தில்
எங்கள் நினைவுகள்
உங்கள் மனங்களில் வந்தனவா?
எங்கள் நிலையறிந்து
அன்று இரங்கிய
அந்த மனிதனிடம்
எங்கள் நிலை பற்றியும்
நினைவுறுத்தி
"இன்றைக்குச் சித்திரைப்
புத்தாண்டு
தனது தந்தை ஆனந்தசுதாகரின்
வரவுக்காய்
கிளிநொச்சியில் இரண்டு
பிஞ்சுகள்
திறந்த விழி மூடாது
வாடிய முகத்துடன்
காத்திருக்கின்றார்கள்
இன்றுதான் அந்தத்
தந்தையின் விடுதலை நாள்
இன்றுதான் அந்தப் பிஞ்சுகள்
தந்தையுடன் சேரும் நாள்
தாங்கள் மறந்துவிட்டீர்கள்
அதை நினைவுபடுத்துகின்றேன்
விரையுங்கள்"
என்பதை
வேலைப் பளு காரணமாக
மறந்துவிட்ட அந்த மனிதனுக்கு
நினைவுபடுத்தியிருக்கலாமே
எங்கள் தாத்தாவே...

கவிதை

சிவேந்தன்



தர்மிகா உமாசுதசர்மா,
தரம் - 4B,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.



பி.லோஜினி,
நவாலி.



## துணிவு

இரவும் பகலும் போலவே
இன்ப துன்பம் வருகுது
இதனை உணரும் போதிலே
இதயம் உறுதி பெறுகுது

தோல்வி கண்டு வாடாதே
வெற்றி கண்டு ஆடாதே
வாழ்வில் என்றும் சோராதே
வலிமை இழந்து போகாதே

பத்துத் தடவை வீழ்ந்தாலும்
பாய்ந்து மீண்டும் எழும்பிடுவோம்
புத்தியுள்ள சிறார்கள் நாம்
பாரில் புதுமை படைத்திடுவோம்

வேலணையூர் சுரேஷ்

## ஈழத்துப் படைப்பாளர் வரிசையில்...



# அ. மாற்கு

ஈழத்து ஓவியர்களுள் ஒருவராக அறியப்படும் மாற்கு யாழ்ப்பாணம் - குருநகரைச் சேர்ந்தவர். 1933 ஜூன் 25ஆம் திகதி பிறந்தவர். நவீன ஓவியங்கள், மற்றும் சிற்பங்கள் மூலம் தனது கலைத்திறனை வெளிப்படுத்தியவர். யாழ்ப்பாணத்தில் ஓவியப் பயிற்சி வகுப்புகளை நடத்தி ஓவியத்துறையை வளர்ப்பதற்குப் பாடுபட்டவர்.



சிற்பங்களைப் பார்ப்பதிலும், அவற்றைச் செய்வதிலும் சிறு வயதிலேயே ஈடுபாடு காட்டிய மாற்கு, யாழ்பாணம் புனித சார்ள்ஸ் வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்றார். ஓவியப் புத்தகங்களை விரும்பிப் படித்தார். குருநகர் புனித ஜேம்ஸ் கல்லூரியில் ஓவிய வகுப்புகளை நடத்தி வந்த ஓவியர் பெனடிக்ரிடம் உருவ, ஓவியப் பயிற்சியைப் பெற்றார். பின்னர், கொழும்பு தொழிநுட்பக் கல்லூரியின் ஓவியப்பிரிவில் சேர்ந்து ஓவியம் கற்றுத்தேறினார். சமகாலத்தில் கழுவுதற் பாணி நீர்வர்ண ஓவியங்களை வரையக் கற்றுக் கொண்டார்.

**ஓவியப் பணி**

பட்டப்படிப்பை முடித்த பின்னர், மாற்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது வின்சர் ஓவியக் கழகம் (1938-1955) என்ற அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். 1959ஆம் ஆண்டில் விடுமுறை ஓவியக் கழகம் என்ற பெயரில் ஓவியப் பயிற்சிக் குழு ஒன்றை ஆரம்பித்தார். இந்தக் குழு மூலம் பல இளம் ஓவியர்களுக்குப் பயிற்சி அளித்தார். பல ஓவியக் கண்காட்சிகளை நடத்தினார். 1957ஆம் ஆண்டில் கொழும்பு கலாபவனத்தில் நடந்த ஓவியக் கண்காட்சியில் மாற்குவின் ஓவியத்துக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது. ஈழப்போரின் தாக்கத்தால் யாழ்ப்பாணத்தில் இருந்து தான் சேகரித்த அனைத்துப் பொருள்களையும் விட்டு விட்டு இடம்பெயர்ந்து மன்னாரில் வசித்து வந்த மாற்கு 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி இறையெய்தினார்.

மாற்குவின் ஓவியங்களில் நவீனத்துவத்தின் செல்வாக்கையும் காணலாம். பிக்காசோவைப்போன்று கியூபிசப் பாணியை ஏற்றும், 'ஹென்றி மூர்' ஐப் போன்று அரூபச் சிற்ப முறைமையிலும் பரீட்சயம் பெற்றிருந்தாராயினும் மாற்குவின் நுட்பமும் பாணியும் தனியானது. ஈழத்துக்கேயுரிய சில தனிப்பண்புகள் மாற்குவின் படைப்புக்களில் இழையோடியிருப்பதைக் காணலாம்.

## அபிநயாவிடமிருந்து கற்றுக்கொள்வோம்...




அபிநயா இன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டாள். நேரத்தோடு எழுந்து தனது பாடசாலை வேலைகளைச் செய்து முடிப்பது அவளுடைய இயல்பு. லஷ்மி அவளுடைய நல்ல தோழி. தன்னுடைய தோழியுடன் அளவளாவுவது அவளுக்குப் பிடித்தமானது. ஒரு தொகை வைக்கோல் கற்றையை எடுத்து லஷ்மிக்குப் போட்டாள். வாழி நிறைய நீரும் கொண்டு சென்று அதன் அருகே வைத்தாள். மனம் மகிழ்ந்து 'ம்மே' என்று லஷ்மி அன்பு பொழிந்தது.

காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாடசாலைக்கு ஆயத்தமான அபிநயாவுக்குத் தாய் உணவளித்து உதவிகள் சிலவும் செய்தார். அபிநயா பாடசாலைக்குப் புறப்பட்டு விட்டாள். பாடசாலையில் பாடங்கள் நகர்ந்தன. ஆசிரியர்கள் வந்துபோயினர். பாட இடைவேளை ஆனது. அபிநயா தனது நண்பி மாலதியுடன் நீர் அருந்துவதற்கு நீர்த் தொட்டியை நோக்கிச் சென்றாள். அங்கு சில சிறுவர்கள் குவிந்து நின்று ஏதோ செய்துகொண்டிருந்தனர். எட்டிப்பார்த்தாள். அவர்கள் அவ்விடத்தில் நின்ற மண்புழு ஒன்றைப் பிடித்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். "நீங்கள் விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள். அது துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. உங்களை இப்படித் துன்புறுத்தினால் உங்களுக்கு எப்படியிருக்கும் தெரியுமா?" என்று அவர்களுக்குப் புத்தீமதி சொல்லி மண்புழு விவசாயிகளின் தோழன், மண்புழுவால் நமக்கு ஏற்படும் நன்மைகளையும் சொல்லி, அவர்களுக்கு அறிவூட்டினாள். மண்புழுவை விடுவித்தாள். "உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதைப்போதிக்கும்" ஆசிரியை மீது அபிநயாவுக்கு இயல்பாகவே பிடிப்பு இருந்தது. அபிநயாவுக்கு எந்த ஒரு சிறு உயிரினங்களையும் நேசிக்கும் பண்பு இருந்தது. படிப்பிலும் அவள் கெட்டிக்காரிதான்.

பாடசாலை முடிந்தது... வீட்டுக்கு வந்த அபிநயா நேராக லஷ்மியிடம் போனாள். அவள் தாய் லஷ்மியை இடம்மாற்றி இப்போது நிழலுக்குள் கட்டியிருந்தார். பால் தரும் பசுவை மாத்திரமன்றி நமக்கு உதவும் அனைத்து உயிரினங்கள் மீதும் நாம் அக்கறை செலுத்தவேண்டும். அபிநயாவிடமிருந்து இதைக் கற்றுக் கொள்வோம்.

## வழிகாட்டுவோம்





Status Photo / Video Life Event

ஹலோ சார்
நான் வீணா பேசுறேன்...




வீணா எதுக்குமா பேசுறா
ஏதாவது பிரயோசனமாக பேசு

முன்பு பழமையான ஏரியாகத்
திகழ்ந்த இடமெல்லாம் இன்று...




இன்று ஏரியாவாக மாறிவிட்டது...



**புன்னகை மன்னன்**

இழந்தவைகள்
எதுவும்
எமக்கானதல்ல
இருப்பவைகள்
எதுவும்
இழப்பதற்கில்லை...!

எத்தனை தான் வெட்டினாலும்
மீண்டும் மீண்டும் பூவாகி காயாகி
முளைக்கும் மகத்துவம்
சிலருக்கே உண்டு.
இந்த உலகம் அவர்களுக்கே
சொந்தம்...

# விவசாயி வேடத்தில் நடிக்கிறார் சேதுபதி



தொடர்ச்சியாக பல படங்களில் ஒப்பந்தமாகியுள்ள விஜய் சேதுபதி, விவசாயத்தை மையப்படுத்தி உருவாக இருக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

விஜய் சேதுபதி நடிப்பில் கடைசியாக வெளியான 'ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்' படம் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில் அவர் தற்போது, 96, சூப்பர் டீலக்ஸ், ஜுங்கா, சீதக்காதி, சயீரா நரசிம்ம ரெட்டி, டிராபிக் ராமசாமி, செக்க சிவந்த வானம் உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். ரஜினியின் அடுத்த படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இவ்வாறிருக்க விவசாயத்தை மையமாகக் கொண்ட படமொன்றில் விவசாயி வேடத்திலும் அவர் நடிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. படத்துக்கு விவசாயி என்று தலைப்பு வைக்கப்படவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



எவ்வளவு கொடுக்கிறோம் என்பதல்ல.. எந்த மனநிலையில் கொடுக்கிறோம் என்பதே முக்கியம்...

அன்பு சொற்களில் அல்ல வாழ்க்கையில் வடிவம் பெறுகிறது....

இறக்கத்தான் பிறந்தோம். இருக்கும்வரை இரக்கத்தோடு இருப்போம்....

வெறுப்பவர் யாராக இருந்தாலும் நேசிப்பவர் நீங்களாக இருங்கள்...

வாழ்க்கை என்பது நீ சாகும் வரையல்ல.. பிறர் மனதில் வாழும் வரை...

அன்புதான் உன் பலவீனம் என்றால் அதுவே உன் ஆற்றல்




எங்கட மூளை இருக்குதே அது
நாம் மறக்கனும்னு நினைக்கிறதை
ஞாபகத்தில வைச்சிருக்குது....




ஞாபகத்தில வைச்சிக்கனும்னு
நினைக்கிறதை மட்டும் டக்குனு
மறந்திடுது.....



## இன்றைய நாள்

**மேடம்:** பணியால் குழப்பம் தீர இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. தொழிலில் அளவான மூலதனம் போதும். வருமானம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**இடபம்:** அனைவரிடமும் பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை எட்டும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கடகம்:** நண்பருடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். சிறு அளவில் பணக்கடன் பெறும் சூழல் உருவாகும்.

**சிங்கம்:** எதிர்மறை எண்ணம் உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபார இலக்கு தாமதமாக நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** எதிர்கால வளர்ச்சி குறித்து சிந்திப்பீர்கள். நண்பர் வழியில் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் திருப்திகரமாக இருக்கும்.

**துலாம்:** நண்பரிடம் அன்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள வருமானம் கிடைக்கும். நிலுவை கடன் அடைபடும். உறவினர் வருகையால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** நண்பரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழிலில் நிலுவைப் பணியை உடனே நிறைவேற்றுவது அவசியம். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**தனுசு:** எதிலும் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் வளர நவீன மாற்றம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மையை தரும். தொழில், வியாபாரத்தில் நினைத்தது விரைவில் நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.


**கும்பம்:** மற்றவர் விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். சுறுசுறுப்புடன் செயல்படுவது அவசியம். பணவரவு சுமாராக இருக்கும். வாகனம் வாங்க யோகம் உண்டு.

**மீனம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும். பணவரவுக்கு குறைவிருக்காது. உறவினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | கன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 50 | 60 | 60 | 50 | 60 |
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 30 |
| மரவள்ளி | 40 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 70 | 120 | 90 | 100 | 70 |
| பாகல் | 100 | 200 | 120 | 120 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 60 | 140 | 100 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 150 | 150 | 100 | 160 | 140 |
| பூசணி | 40 | 50 | 50 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 40 | 60 |
| கீரை | 50 | 30 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 35 | 20 |
| ப.மிளகாய் | 50 | 60 | 30 | 50 | 60 |
| புடோல் | 70 | 70 | 60 | 60 | 40 |
| கோவா | 40 | 60 | 70 | 40 | 50 |
| வெண்டி | 50 | 100 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 100 | 140 | 80 |
| லீக்ஸ் | 200 | 180 | 170 | 180 | 140 |
| தேங்காய் | 65 | 80 | 80 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 280 | 200 | 140 | 160 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 90 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 80 | 100 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 280 | - | 400 | 300 | 300 |

# இறால் ஊறுகாய்



**தேவையான பொருள்கள்**
இறால் - கால் கிலோ
இஞ்சி பூண்டு விழுது - 2 தேக்கரண்டி
மிளகாய் தூள் - 2 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
நல்லெண்ணெய் - 200 மில்லி லீற்றர்
வினிகர் - 1/2கோப்பை
உப்பு - 1 தேக்கரண்டி

**வறுத்து பொடிக்க**
கடுகு - 1 கரண்டி
சோம்பு - 1 கரண்டி
வெந்தயம் - 1/2 கரண்டி

**செய்முறை**
இறாலை சுத்தமாக கழுவிச் கொள்ளவும்.
நன்றாக கழுவிய இறாலில் கொஞ்சம் உப்பு, மஞ்சள் தூள், மிளகாய் தூள், இஞ்சி பூண்டு விழுது போட்டு பிசறி அரை மணிநேரம் ஊற வைக்கவும்.
ஒரு சட்டியில் பாதி எண்ணெய் விட்டு காய்ந்ததும் இறாலை போட்டு நன்கு சிவக்க பொரித்து எடுத்து ஆற வைக்கவும்.
இறாலை பொரித்த எண்ணெயுடன் மீதி எண்ணெயை ஊற்றி சூடானதும் இஞ்சி பூண்டு விழுதை போட்டு வதக்கவும்.
அடுத்து பொரித்த இறால் மஞ்சள் தூள், மிளகாய் தூள் போட்டு 5 நிமிடம் கிளறி விடவும்.
பின்பு அதில் வினிகர், உப்பு சேர்த்து இறக்கி விடவும்.
கடைசியாக அதன் மேல் வறுத்து தூளாக்கிய தூளை போட்டு நன்றாக கிளறி ஆற வைத்து போத்தலில் போட்டு வைக்கவும்.
ஊறுகாய்க்கு மேலே 1 இஞ்ச் உயரத்திற்கு எண்ணெய் இருக்க வேண்டும்.
போத்தலின் வாயை வெள்ளை துணியால் மூடி மூன்று நாள் கழித்து உபயோகப்படுத்தலாம். உப்பு காரம், புளிப்பு போன்றவை அவரவர் ருசிக்கேற்ப்ப சேர்த்துக் கொள்ளலாம். இந்த ஊறுகாய் 2 மாதம் வரை கெடாமல் இருக்கும்.
இறால் ஊறுகாய் தயார்.

## இது புதுசு



பெண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 900 | 1000 | 800 |
| நண்டு | 500 | 600 | 500 | 400 |
| கணவாய் | 800 | 800 | 800 | 800 |
| பாரை | 500 | 600. | 700 | 900 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 350 | 450 | 500 | 500 |
| விளை | 400 | 450 | 500 | 600 |
| முரல் | 300 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 450 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 300 | – |
| ஓரா | 300 | 400 | 500 | – |
| திரளி | 250 | 200 | 300 | 200 |
| நகரை | 200 | 250 | 400 | – |
| சூடை | 300 | 180 | 200 | 200 |
| ஓட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 350 | 300 | 500 | – |
| மதனம் | 200 | 250 | 300 | – |
| கொய் | 100 | 80 | 50 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 400 |
| வாளை | 200 | 350 | 300 | – |

# மூளையின் குருதி ஓட்டத்தை மேம்படுத்தவல்லது கொய்யாப்பழம்



கொய்யாப் பழத்தில் விற்றமின் ஏ இருப்பதால் அது பார்வைத் திறனை மேம்படுத்தும் என்று அறியப்படுகிறது. மேலும் கண் புரை ஏற்படுவதைத் தடுக்க உதவுகிறது. கொய்யாப் பழத்தில் விற்றமின்கள் மற்றும் போலிக் அமிலம் நிறைந்துள்ளது. இந்த விற்றமின் 'பி 9' மற்றும் போலிக் அமிலம் கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில் இவை குழந்தையின் நரம்பு மண்டலத்தை வளர்க்க உதவுகிறது.
கொய்யாப் பழம் மூளையின் குருதி ஓட்டத்தை மேம்படுத்துகிறது. அறிவாற்றல் செயல்பாட்டினையும் தூண்டுகிறது. மேலும், கொய்யாப் பழம் நரம்புகளுக்கு ஓய்வை அளிக்கிறது. குழந்தைகளுக்கு கொய்யாப்பழம் ஒரு வரப்பிரசாதாகும். உடல் நன்கு வளரவும், எலும்புகள் பலம் பெறவும் உதவும்.
கொய்யாவின் தோலில்தான் அதிகச்சத்துகள் உள்ளன. இதனால் தோலை நீக்கி சாப்பிடக்கூடாது முகத்திற்கு பொலிவையும் அழகையும் தருகிறது. மேலும் தோல் வறட்சியை நீக்குகிறது. முதுமைத் தோற்றத்தை குறைத்து இளமையானவராக மாற்றுகிறது. மது போதைக்கு அடிமையானவர்கள் கொய்யாப்பழத்தை அதிகம் சாப்பிடலாம்.
கொய்யாப்பழத்துக்கு மருந்தை முறிக்கும் ஆற்றல் உண்டு. ஒரு சிலருக்கு மயக்கத்தை ஏற்படுத்தும் வாத நோய், ஆஸ்துமா போன்ற நோய் உள்ளவர்கள் இந்தப் பழத்தை சாப்பிடக்கூடாது.

# அடிக்கடி கொட்டாவி வருவதற்குக் காரணம்

பெரும்பாலும் எமது உடல், "போதும்டா சாமி போய் தூங்கு என்னால இதுக்கு மேல முழிச்சிருக்க முடியாது.." என்று சொல்லும் எச்சரிக்கை மணி தான் கொட்டாவி. ஆனால், கொட்டாவி வருவதற்கு தூக்கம் வருவதும், உடல் சோர்வும் மட்டும் காரணம் இல்லை என்கின்றனர் நிபுணர்கள்.
சிலரை அடிக்கடி கொட்டாவி விட்டுக்கொண்டே இருப்பார்கள். காலை, மதியம், மாலை என இவர்கள் கொட்டாவி விடாத நேரமே இருக்காது. இதற்கு என்ன காரணம்..??
சில உடல்நலக் குறைபாடுகளின் அறிகுறிகளாக கூட கொட்டாவி இருக்கிறது. வியப்பாக இருந்தாலும் கூட உங்களுக்கு அடிக்கடி கொட்டாவி வர இதெல்லாம் கூட காரணமாக இருக்கலாம்...
சோர்வின்றி அடிக்கடி உங்களுக்கு கொட்டாவி வந்துக்கொண்டே இருந்தால் நீங்கள் கல்லீரல் பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டியது அவசியம். கல்லீரலில் பலவீனம், அல்லது செயல்திறன் குறைபாடு ஏற்பட்டால் கூட கொட்டாவி அடிக்கடி வருமாம்.
கொட்டாவி வர மற்றுமொரு காரணமாக கருதப்படுவது மூளையின் ஆரோக்கியம். மூளை அலர்ஜி, ஸ்ட்ரோக், போன்றவையின் அறிகுறி தான் அதிகமாக வரும் கொட்டாவி என்கின்றனர். மூளையின் தண்டில் ஏற்படும் புண்களினால் கூட அதிகம் கொட்டாவி வருமாம்.
சோர்வின்றி அடிக்கடி கொட்டாவி வருவது கைகால் வலிப்பு ஏற்படுவதனால் கூட இருக்கலாம். வலிப்பு ஏற்படுவதால் மூளையில் ஏற்படும் எரிச்சல் ஓர் சிக்னலை வெளிப்படுதுமாம், அதனால் கூட அதிகம் கொட்டாவி வரலாம்.
நீங்கள் அடிக்கடி எடுத்துக்கொள்ளும் மருந்து மாத்திரைகளின் விளைவால் ஏற்படும் சோர்வு கூட அடிக்கடி கொட்டாவி வரக் காரணமாக இருக்கலாம். மருந்து மாத்திரைகள் உங்களை தூக்க நிலைக்கு எடுத்து செல்ல கூடியவை. அந்த மயக்க நிலையின் காரணத்தினாலும் கொட்டாவி வருகிறது.



தூக்கமின்மை போன்ற குறைபாடுகளினால் கூட அதிகம் சோர்வின்றி கொட்டாவி வரலாம்.
ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் எதற்கும் மருத்துவரிடம் பரிசோதனை செய்துக் கொள்ளுங்கள்.

# துவாரங்கள்



**கவிதை**

முருகு

துவாரங்கள் வருவதாலே
ஏற்படும் பலன்கள் பற்றித்
துலக்கமாய்ப் பாக்களாலே
விளக்கிடக் கேட்பீரின்றே!

கல்லினில் ஓட்டை கண்டால்
சிற்பத்தின் சிறப்புக் குன்றும்!
பற்களில் ஓட்டை கண்டால்
சொற்களின் உறுதி குன்றும்!!

முரசத்தில் துவாரம் கண்டால்
முழக்கத்தில் குறையுண்டாகும்!
கலசத்தில் துவாரம் கண்டால்
கஞ்சிக்குச் சிதைவுண்டாகும்!!

மழையினில் நனையநேரும்
குடையினில் துவாரம் கண்டால்!
மதிப்பினில் குறையநேரும்
உடையினில் துவாரம் கண்டால்!!

வாழ்க்கையின் மதிப்புக்குன்றும்
வாக்கினில் துவாரம் வந்தால்!
நீரோட்டத் திசையும் மாறும்
வாய்க்காலில் துவாரம் வந்தால்!!

வேலியில் ஓட்டை வந்தால்
பயிர்களை மாடழிக்கும்!
தாழியில் ஓட்டை வந்தால்
வெண்ணையும் சிந்திப்போகும்!!

மணியினில் ஓட்டை வந்தால்
நாதத்தில் பேதம் சூழும்!
கனியினில் ஓட்டை உண்டா?
கனியுள்ளே வண்டு வாழும்!!

சட்டத்தில் ஓட்டை உண்டேல்
பிழை செய்தோன் தப்பிப் போவான்!
பட்டத்தில் ஓட்டை உண்டேல்
பறப்பதில் தடை உண்டாகும்!!

கப்பலில் ஓட்டை காணில்
கப்பலின் பயணம் முடங்கும்!
தொப்பியில் ஓட்டை காணில்
தலையினில் மழைநீர் சிந்தும்!!

இதயத்தில் துவாரம் காணில்
வாழ்க்கையின் நோய்கள் காணும்!
விதையினில் துவாரம் காணில்
முளையினல் குறைகள் காணும்!!

முட்டியில் துவாரம் உண்டேல்
நிலத்தினில் கள்ளுச் சிந்தும்!
சட்டியில் துவாரம் உண்டேல்
அடுப்பினுள் குழம்பு சிந்தும்!!

சாக்கினில் ஓட்டை கண்டால்
அரிசி – மா சிந்திப் போகும்!
பாக்கினில் ஓட்டை கண்டால்
சுவையுடன் மதிப்பும் குன்றும்!!

பறியினில் ஓட்டை கண்டால்
பிடித்த மீன் சிந்திப்போகும்!

பொறியினில் ஓட்டை கண்டால்
எலிகளும் தப்பிப்போகும்!!

தெருவினில் ஓட்டை காணின்
பயணமும் தடங்கிப் போகும்
செருப்பினில் ஓட்டை காணின்
கல்முட்கள் காலைக் குத்தும்!!

வாளியில் துவாரம் கண்டால்
அள்ளும் நீர் சிந்திப் போகும்!
நாழியில் துவாரம் கண்டால்
அளவையில் குறைந்து போகும்!!

கூரையில் ஓட்டை காணில்
மழைவெள்ளம் வீட்டுள் தேங்கும்!
கூறையில் ஓட்டை காணில்
மணமகள் உள்ளம் ஏங்கும்!!

பணத்தாளில் (க) குறையேது மென்றால்
யாருமே ஏற்கமாட்டார்!
குணம்போக்கில் குறையேதுமென்றால்
யாருமே மதிக்கமட்டார்!!

துவாரமொன்றினால் ஏற்படுகின்ற
தொல்லைகள் இவைகளென்றால்
துவாரமொன்றினால் உண்டாகின்ற
இன்னல்கள் இவைகளென்றால்

துவாரங்கள் பலவும் கொண்ட
வேய்ங்குழல் தருவது இன்னலா?
துவாரங்கள் பலவும் கொண்ட
நாதஸ்வரம் தருவது தொல்லையா?

மனிதரெம் உடம்பில் காணும்
ஓட்டைகள் கணக்கில் இல்லை!
அத்தனை ஓட்டைகள் எம்மேல்
இல்லையேல் வாழ்க்கை ஏது?

துவாரத்தின் அமைவிடம் பற்றிக்
கணித்திடல் வேண்டாதொன்று
துவாரங்கள் விளைக்கும் பயனையே
கணித்திடல் வேண்டுமென்றும்!!

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 520

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | | | ■ | |
| 7 | 8 | | | ■ | 9 | 10 | |
| 11 | | | ■ | 12 | | | |
| ■ | | ■ | 13 | | | ■ | |
| 14 | | 15 | | | ■ | 16 | |
| | ■ | 17 | | ■ | 18 | | ■ |
| 19 | | ■ | 20 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:..............................................

---

**இடமிருந்து வலம்**

1. எல்லோருக்கும் தேவையானது
4. நாட்டுக்கு இது தேவை
6. இவள் குறிஞ்சி நிலப் பெண்
7. விவாதித்தல்
9. இது ஒரு தூரம் அளக்கும் முறை
11. தற்கால நிறை அலகு
12. வரையறுக்கும் எல்லை
13. பிடிவாதம்
14. பகிரங்கம்
16. இரவு
17. ஒரு 'ஒலி' வடிவம்
18. ஒரு வரிசையில் இருக்கும் தொடர்
19. உலகம்
20. மான்களில் இதுவும் ஒரு வகை

**மேலிருந்து கீழ்**

1. நிர்வாம் செய்பவன்
2. கிரீடம்
3. தைரியம்
4. அரசியல் போட்டி இதற்காகத்தான்
5. மீண்டும் வருதல்
8. பொலிவு
10. தமது
12. கனமான முறுக்குக் கயிறு
13. கழுவு
14. எய்யப்படும் ஆயுதம்
15. பிரி
16. ஆண் சிங்கம்
18. பூமியைச் சுற்றி நிலைத்திருப்பது

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 518 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) அபரிமிதம் (6)கல (7) குடி (8)சில (9)ரம்பை (11)மகரம் (12)யமன் (14) சுப (15)கன்னி (17)சனி (18)தர்க்கம் (20)மாதவன் (22)கல் (23)தில்லை

**மேலிருந்து கீழ்**

(1)அகரம் (2)பலம் (3)மிகு (4)தடிமன் (5)கலம்பகம் (8)சிரசு (10)பையன் (13)மனிதன் (15)கனிதல் (16)சிக்கல் (17)சமாதி (19)கல்லா (21)வலை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 518 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கா.மயூரதி,
இல.13 செட்டித்தெரு லேன்,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
S.சிவரங்கன்,
152A,ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.

**3 ஆம் பரிசு**
பீ.ஜோஜ்ஜியா,
இல.22 சுவாமியார் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
த.தூயனா,
இல.40, மாட்டீன் லேன்,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
தி.விமலாதேவி,
கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

**பாராட்டுப் பெறுவோர்**

குலநாயகி நடேசன்,
'சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

V.N.பரமலிங்கம்,
இல.37,செட்டித்தெரு, ஒழுங்கை,
நல்லூர்.

த.நித்தியகலா,
ஏழாலை மத்தி,
ஏழாலை

**சொற்சிலம்பம் போட்டி இல.520**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (09.05.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.520 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.05.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 518 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**29.04.2018 முதல் 05.05.2018 வரை**

உங்களுக்கு எப்படி?

## மேடம்

சுக்கிரன், குரு நற்பலன் தருவர். குடும்பத்தில் சாதகமான சூழல் அமையும். சாதனை எண்ணத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தம்பி, தங்கையரின் தேவையறிந்து உதவுவீர்கள். வாகனப்பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் செயல்களை மென்மையாக கண்டிப்பது நல்லது. விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பரின் கவனக்குறைவான பேச்சால் சிரமத்திற்கு ஆளாகலாம். மனைவி வழி உறவினர்கள் கூடுதல் அன்பு செலுத்துவர். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிலுவை பணிகளை உடனே நிறைவேற்றுவது நல்லது. பெண்கள் வீட்டுச்செலவில் சிக்கனம் பின்பற்றுவர்.

## இடபம்

ராகு, புதன், சுக்கிரனால் அளப்பரிய நன்மை உண்டாகும். வசீகரமாக பேசி பிறரை கவர்வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய திட்டம் உருவாக்குவீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை ஓரளவு கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோர்க்கு பெருமை சேர்க்கும் செயலில் ஈடுபடுவர். ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் அன்பு மனதில் நெகிழ்ச்சி தரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். தொழில், வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்களால் வளர்ச்சி கூடும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பம் அறிந்து செயல்படுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

## மிதுனம்

சுக்கிரன், குரு, புதன், சூரியனால் ராஜயோக பலன் கிடைக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வீடு,வாகனத்தில் கூடுதல் வசதி பெற நவீன மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உரிய சிகிச்சை பெறுவதால் நோய் தொந்தரவு குறையும். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவியின் சொல்லும், செயலும் குடும்ப நலன் பாதுகாக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள் நற்பெயரும் சலுகையும் பெறுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

## கடகம்

செவ்வாய், சனி, சூரியன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். வாழ்வியல் நடைமுறைகளை உணர்ந்து செயல்படுவீர்கள். உங்களை அவமதித்தவரும் அன்பு பாராட்டுகின்ற சூழல் உருவாகும். வாகனப்பயணத்தால் நன்மை காண்பீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லை மதித்து செயல்படுவர். மனைவி கருத்து ஒற்றுமையுடன் குடும்பநலன் பாதுகாத்திடுவார். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் உரிய காலத்திற்குள் பணியிலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர்.

## சிங்கம்

கேது, புதனால் நன்மை ஏற்படும். மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும். வாகன பராமரிப்புச் செலவு ஏற்பட வாய்ப்புண்டு. பிள்ளைகளின் படிப்பு, செயல்திறன் மேம்பட உதவுவீர்கள். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது. மனைவியிடம் கருத்து வேறுபாடு வராத அளவில் நடந்து கொள்ளவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிக உழைப்பால் சீராகும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய கவனம் பின்பற்ற வேண்டும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்பது கூடாது. மாணவர்கள் படிப்பில் முன்னேற கூடுதல் அக்கறை தேவை.

## கன்னி

குரு, சுக்கிரன், ராகு மூவரும் நற்பலன்களைத் தருவர். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை எளிதில் வந்து சேரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் தேவையான உதவியை வழங்குவர். பிள்ளைகள் ஆன்மிக விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். வழக்கு, விவகாரத்தில் சமரசப்பேச்சு சுமுக தீர்வுக்கு வழிவகுக்கும். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து பணிபுரிவது நல்லது. பெண்கள் இஷ்டதெய்வவழிபாடுநடத்துவர்.

## துலாம்

செவ்வாய், சனி, புதன், சுக்கிரன் அளப்பரிய நன்மை வழங்குவர். சமயோசிதமாக செயல்பட்டு வருவீர்கள். திட்டமிட்ட பணிகள் சிறந்து முழுஅளவில் பலன் தரும். சமூக நிகழ்வுகள் இனியதாக அமைந்திடும். புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க தேவையானதை செய்வீர்கள். சத்தான உணவும், சீரான ஓய்வும் உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும். மனைவியின் அன்பு நிறைந்த சொல்லும், செயலும் கண்டு மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் பணியிலக்கை எளிதாக நிறைவேற்றுவர். பெண்கள் விரும்பியபடி ஆடை, ஆபரணம் வாங்குவர்.

## விருச்சிகம்

கேது, புதன், சூரியன் அனுகூலமாக உள்ளனர். பேச்சில் நேர்மை நிறைந்திருக்கும். உறவினரின் அன்பும், வாழ்த்தும் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பிள்ளைகளை நல்வழி நடத்துவதில் இதமான அணுகுமுறை நல்லது. இஷ்டதெய்வ வழிபாடு நன்மையளிக்கும். மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். சுற்றுலா செல்லும் வாய்ப்பு தள்ளிப்போகும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப விஷயங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## தனுசு

புதன், குரு அளப்பரிய நற்பலன் தருவர். குறை சொல்பவரிடம் இருந்து விலகுவது நல்லது. திட்டமிட்ட செயல் நிறைவேற கூடுதல் முயற்சி வேண்டும். உடன்பிறந்தவரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும். மனைவியின் செயலை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சியும், தாராள பணவரவும் கிடைக்கும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பம் அறிந்து முன்னேறுவர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறப்பதோடு, நண்பருக்கும் உதவுவர்.

## மகரம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை வந்து சேரும். தாமதமான பணியில் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்களிடம் சூழல் உணர்ந்து பழகுவீர்கள். வாகன பயணத்தால் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். பிள்ளைகளின் எண்ணத்திற்கு முக்கியத்துவம் தருவீர்கள். உடல் நலனுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும். மனைவியின் அன்பும், ஆதரவும் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சியால் சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணித்திறமையை வளர்த்துக் கொள்வர். பெண்கள் தாய் வீட்டின் தேவையறிந்து உதவுவர். மாணவர்கள் கூடுதல் முயற்சியால் நல்ல மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் நற்பலன் கிடைக்கும். வாழ்வில் முன்னேற கிடைக்கின்ற வாய்ப்புகளை சரியாக பயன்படுத்துவீர்கள். உடன்பிறந்தவர்களால் உதவி உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். பிள்ளைகளின் குளறுபடியான செயலை இதமாக சரி செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலம் உண்டாகும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. வெளியூர்ப் பயணம் அளவுடன் இருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்பை பெறுவர். மாணவர்கள் தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவர்.

## மீனம்

சுக்கிரன், கேது நற்பலன் தருவர். கடின செயல்களையும் புதிய உத்தியால் எளிதாக நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களின் அன்பும், ஆதரவும் ஊக்கம் அளிக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் சில விஷயங்களில் பிடிவாத் குணத்துடன் செயல்படுவர். ஆரோக்கியத்தில் உரிய கவனம் தேவை. ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதால் சிரமம் விலகும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் நேர்மை எண்ணத்துடன் பணிபுரிவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் உலக நடப்புகளை அறிய விரும்புவர்.



> தனியார் காணிகளுக்கு மட்டுமே உறுதி எழுத முடியும் என்ற சட்டவரையறையுள்ளபோதிலும் சில சட்டத்தரணிகள் அரச காணிகளை அடாத்தாகப் பிடித்திருந்தவர்களுக்கும் அரச அனுமதி இல்லாத நிலங்களுக்கும் வெளிப்படுத்தல் உறுதிகளை முடித்து உரிமையாளர்களுக்கு வழங்கினர்.

# ஜப்பான் உறுதி

கட்டுரை

ந.லோகதயாளன்

வடக்குமக்களின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது காணி விடயமாகும். அந்த வகைப் பிரச்சினைகளில் ஒன்று இது. அந்தக் காணி விடயத்தில் பலரிடம் உள்ள ஒரே ஆவணமாக இருப்பது 'ஜப்பான் உறுதி' எனப்படும் உறுதிப்படுத்தல் ஆவணம் மட்டுமே. காணிகளைப் பொறுத்தவரையில் அரச காணிகள், தனியார் காணிகள்மற்றும்திணைக்கள ஆளுகைக் காணிகள் என மூன்று வகையாகக் காணப்படுகின்றன. இதில் தனியார் காணிகளின் உரிமையாளர்கள் அனைவருமே நேரடியாகவே தனியாள்களுக்குக் காணியைக் கைமாற்றம் செய்ய முடியும். அரச காணியை அந்தந்தப் பிரதேச செயலர் காணிப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் சிபார்சு, அரச அனுமதிகளுடன் சட்ட ஏற்பாட்டுக்குக் கட்டுப்பட்டு விநியோகம் செய்ய முடியும். அந்த விநியோகத்துக்காக முதலில் காணி அனுமதிப் பத்திர விநியோகம் இடம்பெறும்.

இதுபோன்றே, அரச திணைக்களத்துக்கு உரிய காணியை ஏதாவது பயன்பாட்டுக்கு விநியோகிப்பதானால், குறித்த திணைக்களம் பிரதேச செயலகத்துக்கு அதை விடுவித்த பின்னர் அரச காணி விநியோக நடைமுறைக்கு அமைய பிரதேச செயலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டில் விநியோகத்தை மேற்கொள்ள முடியும்.

**இரண்டும்கெட்ட ஜப்பான் உறுதி**

ஆனால் 'ஜப்பான் உறுதி' விடயத்தில் இந்த இரண்டும் கெட்டான் நிலையே காணப்படுகின்றது. தனியார் காணிகளை காணி உரிமையாளர்கள் கைமாற்றம் செய்யும்போது, உறுதி எழுத முடியும். அரச ஆளுகைக்குரிய எந்தக் காணியும் அரச நடைமுறையின் கீழ் அரசால் பகிர்ந்தளிக்கப்பட்டு அல்லது அடாத்தாகக் குடியேறியமைக்கான சான்றைப் பெற்று அதன் பின்னர் காணி அனுமதிப் பத்திர ஒழுங்குக்குள் வழிப்படுத்தப்படும். அவ்வாறு அனுமதிப் பத்திரத்தின் மூலம் குடியேறும் மக்கள், தமக்கான நிரந்தர வாழ்விடங்களை அமைத்து அபிவிருத்தியின் பின்னர் அவை உறுதிக் காணிகளாக அரசால் மாற்றி வழங்கப்படும்.

இவை அனைத்துக்கும் அப்பால் காணி அனுமதிப் பத்திரங்களை விடவும் உறுதி என்பது ஒரு வலுவான ஆவணம். இந்தச் சந்தர்ப்பத்திலேயே இலங்கையின் பல பாகங்களிலும், வடக்கிலும் 'ஜப்பான் உறுதிகள்' தோற்றம்பெற்றன. ஜப்பான் உறுதி என்றால், அதன் நிலவரம் மட்டும் சுவையானது அல்ல. அதற்குப் பெயர் வந்த வடிவமும் சுவையானதாகவே காணப்படுகின்றது. 'ஜப்பான் உறுதி' என்றால் என்ன? என்பதற்குப் பல கதைகள் கூறப்பட்டன. இது ஜப்பான் நிறுவனம் ஒன்று எழுதிய உறுதி எனவும், ஜப்பான் நிறுவனத்திடமிருந்து குறித்த நில மக்கள் நிதியைப் பெறும் நோக்கில் எழுதப்பட்ட உறுதி என்றும் கதைகள் கூறப்பட்டு வந்தன. இந்த ஜப்பான் உறுதிகளை வைத்திருப்பவர்களுக்குக் கூடத் தெரியாது இதன் பின்னணி.

**உலகப் போரே பின்னணி!**

உண்மையில் இந்தப் பெயர் வந்தது 2ஆம் உலகப்போர்க்காலத்திலேதான். அப்போது ஜப்பானிய விமானங்கள் ஒருதடவை இலங்கையிலும் குண்டுத் தாக்குதல் நடாத்தின. அதில் இருந்து பலர் தப்பியோடினர். பின்னர் தமது இடங்களுக்குத் திரும்பியிருந்தனர். தனியார் காணிகளுக்கு மட்டுமே உறுதி எழுத முடியும் என்ற சட்டவரையறையுள்ளபோதும் சில சட்டத்தரணிகள் அரச காணிகளை அடாத்தாகப் பிடித்திருந்தவர்களுக்கும், அரச அனுமதி இல்லாத நிலங்களுக்கும் வெளிப்படுத்தல் உறுதிகளை முடித்து உரிமையாளர்களுக்கு வழங்கினர். இந்தச் சட்டத்தரணிகள் அரச காணிக்கு எழுதப்பட்ட வெளிப்படுத்தல் உறுதிகளை மாவட்டச் செயலகங்களில் பதிவுகளை மேற்கொண்டும் வழங்கினர். இங்கேதான் அப்பாவி மக்கள் ஏமாற்றப்பட்டனர். அதாவது வடக்கில் தற்போதுவரை முன்னேற்றம் கண்டிராமல் இருக்கின்ற கிராமங்கள் 1945, 50ஆம் ஆண்டுகளில் எந்த நிலைமையில் இருந்திருக்கும்...? இந்தக் காலத்தில் எழுதப்பட்ட ஒரே காரணத்துக்காகவே இது இன்றுவரை ஜப்பான் உறுதி என்ற நாமத்துடன் விளங்குகின்றது.

**சட்டபூர்வ ஆவணமல்ல!**

தற்போதுவரை சட்டபூர்வ ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படாத ஜப்பான் உறுதியானது வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4மாவட்டங்களிலும் காணப்படுகிறது. வவுனியா மாவட்ட மக்கள் பல ஏக்கர் நிலத்துக்கு இதையே ஆவணமாக வைத்திருக்கிறார்கள்.

*இது தொடர்பில் வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் சேதுகாவலர் கருத்துத் தெரிவிக்கையில்;*

"வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் மட்டும் சுமார் 15ஆயிரம் முதல் 20ஆயிரம் வரையான ஜப்பான் உறுதிகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் 20 ஆயிரம் உறுதிகளில் குறைந்தது 5ஏக்கர் முதல் உச்சபட்சமாக 50ஏக்கர் வரைக்கும் அந்த உறுதிகள் உண்டு. இந்த ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை வன வளத் திணைக்களத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் ஆக்கிரமித்துள்ள நிலங்களில் பல ஜப்பான் உறுதிக் காணிகளும் உள்ளடங்குகின்றன.

இந்த உறுதியானது, சட்ட வலுவற்றது எனக் கூறப்படும் நிலையில், 70 ஆண்டுகளுக்கு முன்னர் எமது மக்களுக்கு என்ன புரிந்திருக்கும் அல்லது எமக்குத்தான் என்ன தெரியும்?. எனவே உரிய தரப்புக்கள் இது தொடர்பில் ஆராய்ந்து ஆவண செய்து பாதிக்கப்பட்டவர்களின் இருப்புக்கும் வாழ்வியலுக்கும் உதவ வேண்டும்" என்றார்.

*இந்தவகையான உறுதி தற்போதும் பாவனையில் உள்ளதா? இதைச் சட்டபூர்வமாகப் பதிவு செய்ய முடியுமா? என்ற சந்தேகக் கேள்விக்கு காணிப் பதிவாளர் செயலகம் இப்படித் தெரிவிக்கிறது...*

"தற்போது அரச காணி ஒன்றுக்கு வெளிப்படுத்தல் உறுதி எழுதினால், அந்த உறுதியைப் பிரதேச செயலாளரின் ஒப்புதல் இன்றிப் பதிவு செய்ய முடியாது. இதேநேரம் 40, 50வருடங்களுக்கு முன்பே இவ்வாறு வெளிப்படுத்தல் உறுதி உள்ளவர்கள் அதைக் கைமாற்றுவதையும் எம்மால் தடுக்க முடியாது. சட்டத்தரணி எழுதினால் மாவட்டச் செயலகம் பதிவை மேற்கொள்ளும். அதன் உரிமை தொடர்பில் எழும் சட்டச் சிக்கல்களுக்கு உரியவர்கள் நீதிமன்றம் சென்றே தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்" என்கின்றது.

*கட்டுரையாளர் யாழ். மாநகர சபை உறுப்பினர்*

---

–12

# சாவு

## ஓர் அப்பாவியின் கதை

சாவிடம்
தோற்றவர் பட்டியலில்
நானும் இருக்கிறேன்
தினம் தினம்

தலையில் முடியை
முகத்தில் மீசையை
காலில் நகத்தை
என என
கொண்டுபோன சாவு
என்னை மட்டும்
மீதமாய்
கழித்துப் போட்டிருக்கிறது.

ஏராளம் பேர்
கழித்து விடப்பட்ட
வெறுமையிழந்து குமுற
முடிகிறது
இன்றைய பொழுதில்.

சாவு
தோற்றுவிட்ட
பல உயிர்கள்
பலருக்கும்
சோறிடுகின்றன

இன்றுவரை.


சாவைத் தோற்கடித்தவர்
வாழ ஓர் இடத்தை
ஆற ஒரு குழிநிலத்தை
அபகரித்துவிட்ட
அத்தனை பேரையும்
தோற்றவர்
காவுவர் என யாரும்
எண்ணியிருப்பரா?

எப்படியெனினும்
சாவின் மீதான பயம்
இன்னும் வாழ்கிறது
வயிற்றில் பசியாகவும்.
சாவு பற்றிக் குறிப்பெழுதும்
இக்கணம் வரை
நானும்
இருக்கிறேன்.

கவிதை

கை.சரவணன்

(நிறைவு)



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்




**1886 மே - 1**
**தொழிலாளர் புரட்சி**

1886ஆம் ஆண்டு மே முதலாம் நாள் அமெரிக்காவின் முக்கிய தொழில் நகரமான சிக்காக்கோவில் அமைந்துள்ள மெக்கார்மிக் வஸ்டிங் மெஷின் நிறுவனத்தின் 3ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உரிமைக் கோஷங்களை எழுப்பியவாறு வீதியில் இறங்குகின்றனர். தொழிலாளர்களின் பேரணி பெரும் தொழில் நிறுவனங்கள் அமைந்திருந்த வீதிகளூடாகப் பேரெழுச்சியுடன் நகர்கிறது.

ஆலைகளில் புகைபோக்கிகள் புகைகக்குவதை நிறுத்துகின்றன. இயந்திரங்களின் பேரோசைகள் காணாமற்போக அவை மௌனிக்கின்றன. மின்சாரக் குமிழ்கள் ஒளியை உமிழ மறுக்கின்றன. காற்றாடிகள் உறக்கத்திலாழ்கின்றன. தொழிற்சாலைகளில் போட்டதைப் போட்டபடிவிட்டுவிட்டுத் தொழிலாளர்கள் வெளியேறி வீதியால் நகர்ந்து கொண்டிருந்த பேரணியில் இணைகின்றனர். 3ஆயிரம் பேருடன் ஆரம்பித்த ஊர்வலம் சிக்காக்கோ நகரின் மத்தியை அடைந்தபோது பல்லாயிரம் தொழிலாளர்களால் பெருக்கெடுத்து, காட்டாறாகப் பொங்கி நகர்கிறது.

பேரணி நகர மத்தியை அடைந்தபோது கட்டடங்களின் பின்னாலிலிருந்து துப்பாக்கி ரவைகள் சீறிப் பாய்கின்றன. முதலாளிகளால் கூலிக்கு அமர்த்தப்பட்ட குண்டர்களும் பொலிஸாரும் இரும்புப் பொல்லுகளாலும் துப்பாக்கி வேட்டுகளாலும் கண்மூடித் தனமான தாக்குதலை நடத்துகின்றனர். 4தொழிலாளர்கள் அந்த இடத்திலேயே சாவடைகின்றனர். ஏராளமானோர் படுகாயங்களுக்குள்ளாகின்றனர்.

சிக்காக்கோ நகர மத்தியின் வீதிகள் செங்குருதியால் நனைகின்றன. உழைக்கும் மக்கள் அச்சமடைந்து ஒதுங்கிப்போவதில்லை. குருதியில் தோய்ந்த தங்கள் ஆடைகளைச் செங்கொடிகளாக ஏந்திக் கொண்டு பெருமுழக்கத்துடன் பேரணியைத் தொடர்கின்றனர்.

**உலகெங்கும் பரவிய மே எழுச்சி!**

பேரணி மீது நடத்தப்பட்ட கொலை வெறித் தாக்குதல்களைக் கண்டித்து சிக்காக்கோவின் ஹமார்கட் சதுக்கத்தில் மே 4ஆம் நாள் கண்டனப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்படுகிறது. 2ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தின் மேல் இனந்தெரியாத ஒருவரால் வீசப்பட்ட கைக் குண்டால் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழக்கின்றார். பல பொதுமக்களும் காயமடைகின்றனர். அதைச் சாட்டாக வைத்துப் பொலிஸார் மேற்கொண்ட மிருகத் தனமான துப்பாக்கிச் சூட்டில் 20க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். ஏராளமானோர் காயமடைகின்றனர். அதையடுத்துக் கைதுசெய்யப்பட்ட தொழிலாளர் தலைவர்களில் 7பேருக்குச் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் தூக்கிலிடப்படுகின்றனர். பல தலைவர்களுக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஆனால், சிக்காக்கோவில் வெடித்த மே நாள் எழுச்சி உலகத் தலைநகரங்களையெல்லாம் உருக்குகின்றது. எங்கும் வேலை நிறுத்தங்களும் கலகங்களும் வெடிக்கின்றன. இறுதியில் பல நாடுகளில் 8மணி நேர வேலை சட்டபூர்வமாக்கப்படுகின்றது. மேலும் வேலை நிரந்தரம், வேலைநிறுத்தம் செய்யும் உரிமை, குடியிருப்பு வசதிகள் போன்ற பல உரிமைகள் போராட்டங்கள் மூலம் வென்றெடுக்கப்படுகின்றன. அதற்குப் பின்னர் 1891ஆம் ஆண்டில் மே முதல் நாள் உலகத் தொழிலாளர் தினமாக அறிவிக்கப்படுகிறது. அன்றிலிருந்து மே1 உலகம் முழுவதும் தொழிலாளர் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

**01/05/1968**
**பௌத்தத்துக்குக் கீழ்ப்பட்டது தொழிலாளர் தினம்**

அன்று போயா நாள். அது பௌத்த மக்களின் புனித நாளாகக் கருதப்பட்டு வருகிறது. டட்லி சேனநாயக்காவை அரச தலைவராகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் தமிழ் அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட ஏழு கட்சிகள் கூட்டரசை அமைத்து ஆட்சிசெலுத்திய காலம். அந்த அரசில் தமிழ் அரசுக் கட்சியைச்சேர்ந்த செனட்டர்திருச்செல்வம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பதவி வகித்தார். இப்படியான ஒரு சூழலில் அந்த வருட மே நாள், போயா தினத்தில் வருவதால் பன்னாட்டுத் தொழிலாளர் தினமான மே தினத்தை அந்த நாளிலேயே கடைப்பிடிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டது. அதாவது உலகம் முழுவதுமுள்ள உழைக்கும் மக்களின் உரிமை நாள் இலங்கையில் பௌத்த மதத்துக்குக் கீழ்படுத்தப்பட்டது.

1972ஆம் ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்பு மூலம் இலங்கையில் பௌத்தத்துக்கு முதன்மை வழங்கப்பட்டது. ஆனால், அதற்கு 4வருடங்கள் முன்பே ஐக்கிய தேசியக் கட்சி, அரசியல் சாசன அங்கீகாரம் எதுவுமின்றிப் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கிவிட்டது. அதைத் தமிழ் அரசுக் கட்சியும் ஏற்றுக் கொண்டது என்பதை நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். 1908ஆம் ஆண்டில் மே தினம் கொண்டாடத் தடை விதித்த அரசின் பங்காளியாகவிருந்த தமிழ் அரசுக் கட்சி அன்றே பௌத்தத்துக்கு முதலிடம் வழங்கிவிட்டது. ஆனால் வட பகுதியிலுள்ள உழைக்கும் மக்கள் மே தினத்தைக் கொண்டாட முடிவெடுத்தனர். நா.சண்முகதாசன் தலைமையிலான பீக்கிங் சார்பு பொதுவுடமைக் கட்சி மே தினம் கொண்டாடப் போவதாகப் பகிரங்க அறிக்கை விடுத்தது. 1886ஆம் ஆண்டில் எவ்வாறு பல நாடுகளிலும் தொழிலாளர் போராட்டங்கள் இடம்பெற்றுப் பெரும் புரட்சிகரச் சூழல் நிலவியதோ அவ்வாறே யாழ்ப்பாணத்தில் 1958ஆம் ஆண்டுச் சூழல் இருந்தது. பல தேநீர்க் கடைகளுக்குள் நுழைவதில், மாவிட்டபுரம், பன்றித் தலைச்சி ஆலயத்துக்குள் நுழைவதில் நிலவிவந்த தீண்டாமைகளை எதிர்த்து ஒழிப்புப் போராட்டங்கள் வெடித்தன. வெற்றி கண்டன.

**வடபகுதி போர்க்களமானது!**

1968ஆம் ஆண்டு மே நாளன்று வட பகுதியெங்கும் பொலிஸ் குவிக்கப்பட்டு ஒரு போர்க்களம்போல் காட்சியளிக்கின்றது. மேதின நிகழ்வுகளைத் தடுப்பதில் பொலிஸாரும், புலனாய்வுப்பிரிவினரும் தீவிரமாகச் செயற்பட்டனர். ராஜா திரையரங்கப் பகுதியில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற கோஷத்துடன் செங்கொடிகளை ஏந்தியவாறு மக்கள் வீதியில் இறங்குகின்றனர். செங்கொடிகளை ஏந்திக் கொண்டு இன்னொரு குழுவினர் வின்சர் திரையரங்கிலிருந்து வெளியேறி முன்னைய குழுவோடு இணைகின்றனர். சற்றுமுன் வெறிச் சோடிப் போயிருந்த சந்தி கோஷங்களாலும் செங்கொடிகளாலும் நிறைகிறது. பௌத்தத்துக்கு முதலிடம் என்பது தகர்க்கப்பட்டுத் தொழிலாளர் தினம் மேலெழுகிறது. வின்சர் தியேட்டரிலிருந்து புறப்பட்ட மேதினப் பேரணி ஸ்ரான்லி வீதி வழியாக வந்து ஆரியகுளம் சந்தியை அடைந்து பின்பு வைத்தியவாலை வீதியால் சத்திரச் சந்தியை நோக்கி நகர்கின்றது. ஏறக்குறைய முந்நூறு பேருடன் ஆரம்பித்த ஊர்வலத்தில் அது சென்ற பாதையில் உள்ள கடைகளின் தொழிலாளர்கள், பொதுமக்கள் என்று ஏராளமானோர் கலந்துகொள்ள இது ஆயிரம் பேருக்கு மேற்பட்ட பேரணியாக மாறுகின்றது.

சத்திரச் சந்தியில் பொலிஸார் தகரப் பீப்பாய்களை அடுக்கி, வீதிகளைத் தடை செய்து தடிகளுடனும், துப்பாக்கிகளுடனும், தாக்குதல் நிலையில் இருக்கிறார்கள். பேரணியில் வந்தவர்கள் அஞ்சவில்லை. கோஷங்கள் வலுக்கின்றன. ஊர்வலம் மேலும் உத்வேகம் அடைகிறது. பொலிஸார் கலைந்து போகும்படி கட்டளையிட்டதை எவருமே பொருட்படுத்தவில்லை. குண்டாந்தடி, கண்ணீர் புகை எல்லாமே மேற்கொள்ளப்படுகின்றது. சிலர் காயமடைந்த நிலையில் கைது செய்யப்படுகின்றனர். இன்னும் சிலர் கோஷம் எழுப்பியவாறு ஆரியகுளம் நோக்கிச் செல்கின்றனர். பொலிஸாரின் தடையை மீறி ஒரு தனியார் காணியில் மேதினக் கூட்டம் உணர்ச்சிபூர்வமாக இடம்பெறுகின்றது.

**01/05/2018**
**பின்தள்ளப்பட்ட தினம்**

1968 மேதினத்தின்போது, தமிழ் அரசுக் கட்சி அரசின் பங்காளியாகப் பௌத்தத்துக்கு முதன்மை இடம் வழங்கி ஆதரவு வழங்கியது. 2018 மே தினத்தின்போது எதிர்க்கட்சியாக இருந்துகொண்டே அரசமைப்பில் பௌத்தத்துக்கு முதன்மை இடம் வழங்க ஏற்றுக் கொண்டதன் மூலம், மே தினத்தை உதாசீனம் செய்வதற்கு ஆதரவு வழங்கியது.

ஆனாலும் இம்முறை சில மாற்றங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஜே.வி.பி வடக்கில் மே தினத்தைக் கொண்டாடவுள்ளதாக அறிவித்துள்ளது. அதாவது பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் தென்பகுதியில் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்து மே நாள் கொண்டாடுவதைத் தவிர்த்துவிட்டு பௌத்தர்கள் குறைந்த வடக்கில் மே நாளைக் கொண்டாடவுள்ளது. இதில் நகைப்புக்குரிய விடயம் என்னவெனில் தெற்கில் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்கும் ஜே.வி.பி. வடக்கில் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் தனது நிலையற்ற கொள்கையை வெளிப்படுத்தியமைதான்.

ஐக்கிய தேசியக் கட்சி மே ஆறாம் நாளிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மே 7ஆம் நாளிலும் மேதினத்தைக் கொண்டாடவுள்ளன. முதலாந் திகதி மேதினம் கொண்டாடுவதற்குத் தடையில்லை என்று அரச தலைவர் கூறியபோதிலும், அன்று மே தினக் கூட்டங்களுக்கான ஊர்வலம் நடத்தவோ ஒலிபெருக்கி பாவிக்கவோ அனுமதி வழங்கப்படவில்லை. கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இடவசதிகளும் வழங்க மறுக்கப்பட்டுள்ளது. இன்னொரு புறம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் மே தினம் கொண்டாடப்போவதாக அறிவித்துள்ளனர். சுமந்திரன் வடக்கிலும் கிழக்கிலும் மே முதலாம் நாளே மேதினம் கொண்டாடப்படுமென அறிவித்துள்ளார். தமிழ் அரசுக் கட்சியின் துரைராஜசிங்கம் வெசாக் தின நிகழ்வுகளுக்கோ அல்லது பௌத்த விகாரைகளுக்கோ எவ்வித அசௌகரியங்களும் ஏற்படாத வகையில் கவனமாக மேதினம் கொண்டாடப்படுமென அறிவித்துள்ளார். எப்படியிருப்பினும் ஒரு பன்னாட்டுத் தினம் இலங்கையில் பேரினவாதிகளால் கொச்சைப்படுத்தப்படுவதை தொழிலாளர் வர்க்கம் பரிந்து கொள்ள வேண்டும்.

1968ஆம் ஆண்டு மே நாளன்று வட பகுதியெங்கும் பொலிஸ் குவிக்கப்பட்டு ஒரு போர்க்களம்போல் காட்சியளிக்கின்றது. மேதின நிகழ்வுகளைத் தடுப்பதில் பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் தீவிரமாகச் செயற்பட்டனர். ராஜா திரையரங்கப் பகுதியில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற கோஷத்துடன் செங்கொடிகளை ஏந்தியவாறு மக்கள் வீதியில் இறங்குகின்றனர்.



# கிண்ணத்தை நெருங்குகிறது







## வெந்த புண்ணில் வேல்!

இந்திய அணியில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவரான கம்பீருக்கு அண்மைக்காலம் மிகவும் மோசமானதாகவே அமைந் துள்ளது.

கடந்த வருட ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா அணியை தலைமைதாங்கி வழிநடத்தினார் கம்பீர். ஆனால் நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் அவரைத் தக்கவைக்க கொல்கத்தா அணியின் நிர்வாகம் மறுத்தது. கம்பீருக்கும், கொல்கத்தா அணியின் நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட சில தனிப்பட்ட பிரச்சினைகளும் கம்பீர் கொல்கத்தாவில் இருந்து விலக காரணமாக அமைந்தன. இதையடுத்து நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டெல்லியின் சார்பாகக் களமிறங்கினார் கம்பீர். தலைமைப் பொறுப்பும் கம்பீருக்குக் கொடுக்கப்பட்டது. கம்பீரின் தலைமையில் முதல் ஆறு ஆட்டங்களில் ஓர் ஆட்டத்தில் மட்டுமே டெல்லியால் வெற்றிபெற முடிந்தது. இதையடுத்து தலைமைப் பொறுப்பில் இருந்து கம்பீர் விலகினார். கம்பீரின் பரிந்துரைப்பின் படியே ஸ்ரேயாஸ் தலைவரானார்.

வெந்த புண்ணில் வேல் பாய்ந்த வலியைப் போல் நேற்றுமுன்தின ஆட்டம் கம்பீருக்கு அமைந்திருக்கும். ஸ்ரேயாஸ் தனது தலைமையில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் கம்பீருக்கு இடம் வழங்க மறுத்தார். ஓய்வறையில் இருந்தபடியே ஆட்டத்தை கண்டுகொண்டிருந்தார் கம்பீர். இந்த ஆட்டத்தில் டெல்லி வெற்றிபெற்றது. எனவே கம்பீர் புறக்கணிக்கப்பட்டமை சரியானது என்கிற வாதங்களும் பரவலாக எழுந்துள்ளன.

## ரியல் மட்ரிட்

விளையாட்டு பிரகாஸ்


ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றும் வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளது ரியல் மட்ரிட் அணி.

அரையிறுதியில் விளையாடுவதற்கு ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் மற்றும் ஜேர்மனியின் பெயர்ன் மூனிச் அணிகள் தகுதி பெற்றிருந்தன. அரையிறுதியின் முதலாவது சுற்று ஆட்டம் நேற்றுன்தினம் நடைபெற்றது. 2:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. அடுத்த ஆட்டம் (அரையிறுதியின் இரண்டாவது சுற்று) ரியல் மட்ரிட்டின் மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் இரு கோல்கள் வித்தியாசத்தில் மூனிச் வெற்றிபெற்றாலேயே அந்த அணி இறுதிக்குத் தகுதி பெறும். ரியல் மட்ரிட்டின் மைதானத்தில் அது சாத்தியமற்றதொன்று. எனவே ரியல் மட்ரிட்டின் வாய்ப்பு மிக அதிகளவில் உள்ளது என்றே கருதப்படுகிறது.

## ஆப்கான் இங்கிலாந்து கோக்லியின் தெரிவு எது?

ஆப்பானிஸ்தானுக்கு எதிரான பன்னாட்டு டெஸ்ட் ஆட்டம், இங்கிலாந்துத் தொடருக்கான தயார்ப்படுத்தல் ஆட்டம் இந்த இரண்டில் எதைக் கோக்லி தெரிவுசெய்வார் என்பது தொடர்பில் தற்போது மிகப்பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் டெஸ்ட் அந்தஸ்தைப் பெற்றதை அடுத்து, தனது முதலாவது டெஸ்ட் ஆட்டம் இந்தியாவுக்கு எதிராக அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது ஆப்கானிஸ்தான். இதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் ஏற்றதை அடுத்து இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டமொன்று ஜூன் மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகிறது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்யவுள்ளதால், இந்தத் தொடருக்காக தன்னைத் தயார்ப்படுத்தும் பொருட்டு, ஆப்கானிஸ்தான் இந்தியாவுக்கு வந்து விளையாடும் காலத்தில், இங்கிலாந்துக்குச் சென்று அங்கு கழக மட்ட ஆட்டங்களில் விளையாடவுள்ளார் கோக்லி. இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே எதிர்ப்பைப் பதிவுசெய்துள்ளது. எனினும், இந்த விடயத்தில் கோக்லியின் முடிவே இறுதியென்பதால் அவர் எதைத் தெரிவுசெய்வார் என்பது தொடர்பில் பெரியளவில் எதிர்பார்ப்புகள் தற்போது நிலவுகின்றன.



## எனக்கு ஓய்வா..!

"தற்போது ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று அழுத்தம் திருத்தமாக தெரிவித்தார் முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான செரபோவா. பன்னாட்டு ரென்னிஸ் அரங்கில் முதல்நிலை வீராங்கனையாக இருந்தவர் மரிய செரபோவா.

கடந்த 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியத் தொடரில் களமறங்கிய போது அவரிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளைச் சோதித்துப் பார்த்ததில் அதில் மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்து இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு சுமார் 2 வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடைக்கு முன்பாக ஆறாவது இடத்தில் இருந்த அவர் தடைக்குப் பின்பாக 250ஆவது இடத்துக்கு அப்பால் பின்தள்ளப்பட்டார். கடந்த வருடத்தின் மத்திய பகுதியிலேயே செரபோவா மீண்டும் களமிறங்கினார். எனினும், இதுவரை சொல்லிக்கொள்ளும்படியான பெரிய வெற்றிகள் எதையும் செரபோவா பெறவில்லை. இதனால் செரபோவாவின் ரென்னிஸ் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது என்றே பலரும் கருதினார்கள். இவ்வாறிருக்க 'முற்றுப்புள்ளியென்பது தற்போதில்லை' என்று தெரிவித்தார் அவர்.

"தடைக்குப் பின்னர் முன்பைப்போல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்பது நியாயமானதுதான். ஆனால் அதற்காக எனது ரென்னிஸ் வாழ்க்கை முடிவுக்கு வருகிறது என்று அர்த்தமில்லை. பெரியதொரு தொடரைக் கைப்பற்றும் காலம் வெகுவிரைவில் வரும் "என்று தெரிவித்துள்ளார் செரபோவா. கடந்த ஒரு வருட காலமாக இவ்வாறான நம்பிக்கையை செரபோவா மாறிமாறி வெளிப்படுத்துகின்ற போதிலும் இன்னும் அவரால் கிண்ணமொன்றைக் கைப்பற்ற இயலவில்லை.

கட்டுரை

பரணிகிருஸ்ணரஜனி

# மறைந்தும் மறையாத மாமனிதர் சிவராம்

இன்று ஏப்ரல் 29. ஊடகப் போராளி மாமனிதர் 'தராக்கி' சிவராம் தலைநகர் கொழும்பில் கடத்தப்பட்டு சுட்டுப் படுகொலைசெய்யப்பட்ட நாள். அவரின் 13ஆவது நினைவேந்த லையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

மூத்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை செய்யப்பட்டபோது அப்போதைய தமிழ்த் தேசிய குரலை அடக்கவே அவர் கொலை செய்யப்பட்டதாக பலரும் நம்பினோம். இப்போது திரும்பிப் பார்க்கும் போதுதான் இன அழிப்பு அரசும் அனைத்துலக சக்திகளும் ஒன்றிணைந்து தூர நோக்கில் அந்தப் படுகொலையை நிகழ்த்தியதை புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தமிழ்த் தேசியத் தளத்தில் இதுவரை அவரைப்போன்ற தீர்க்க தரிசனம் மிகுந்த கருத்துக்களை இதுவரை யாரும் முன்வைத்ததில்லை. அவர் படுகொலை செய்யப்பட்ட காலத்திற்கும் தற்போது இருக்கும் காலத்திற்கும் இடையில் வரலாறே தலைகீழாக மாறி நிற்கின்றது. ஆனால், இப்போதும் அவரது ஆய்வுகள் சமகால வரலாற்றுக்கு அமைவாக எழுதப்பட்டிருப்பதை நாம் பிரமிப்புடன் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. எத்தனை ஆய்வாளர்களின், அறிஞர்களின், புலமையாளர்க ளின் ஆய்வுகள் பொய்த்துப்போனதும் நேரத்திற்கு ஏற்றமாதிரி தமது தாளலயங்களை மாற்றிக்கொள்ளும் கபடத்தனத்தையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கும் சூழலில் வாழ்கின்றோம். சிவராம் இவர்களிடமிருந்து வேறுபட்டு தனித்துவமாக அன்றுமட்டுமல்ல இன்றும் நிற்கிறார்.

**தமிழ்த் தேசியத்தின் சொத்து சிவராம் என்றால் மிகையல்ல**

இன அழிப்பு நோக்கங்கங்களுடன் சிங்கள அரசு மட்டுமல்ல எமக்குள்ளிருந்துகூட வரலாற்றை மறைக்கவும் திரிக்கவும் பலர் களமிறங்கியிருக்கும் சூழலில் சிவராமின் இன்மை முன்பைவிட தற்போதுதான் எம்மை நிலைகுலையச் செய்கின்றது. 'தராகி' சிவராம் தமிழர் தேசத்திற்கு எதிரான அனைத்துலக நகர்வின் தாக்குதல் திட்டமான 'புறொஜெக்ட் பெக்கன்' குறித்து முதல் முதலாக எச்சரித்தவர் மட்டுமல்ல அந்த புறொஜெக்டின் ஒரு இலக்காக இருந்து, அதன் வழி கொல்லப்பட்டவரும் கூட.

**புறொஜெக்ட் பெக்கன்**

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒஸ்லோவில் அனைத்துலக மற்றும் பிராந்திய சக்திகள் ஒன்றிணைந்து புறொஜெக்ட் பெக்கன் திட்டம் இறுதிப்படுத்தப்பட்டது. புரிந்து ணர்வு உடன்படிக்கையினூடாக தமிழர் சேனைகளை அழித்தொழிக்கும் நயவஞ்சக நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இணைத்தலைமை நாடுகள் குறித்து நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். இந்த இணைத்தலைமை நாடுகளும் குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா சிங்களத்துடன் இணைந்து வரைந்த திட்டம்தான் புறொஜெக்ட் பெக்கன். இந்த நாசகாரத் திட்டம் குறித்து விடு தலைப் புலிகளே வெளிப்படையாக அறிவித்தார்கள். தாம் இந்த திட்டத்தின்படி 2009 இற்கு முன்பே அழித்தொழிக்கப்படுவோம் என்றும் அதுவும் கரையோரமாக நிலங்களை இழந்து புதுக்குடியிருப்பு நிலப்பகுதிக்குள் வைத்து அழித்தொழிக்கப்படுவோம் என்பதை 2007 இலேயே தமது செயற்பாட்டாளர்களுக்கும் 2008ஆம் ஆண்டில் பகிரங்கமாகவும் அறிவித்தார்கள். ஆனால், இங்கு பலரும் வசதியாக அனைத்தையும் மறந்து விடுகிறார்கள். இவ்வளவையும் உணர்ந்த புலிகள் ஏன் மாற்றுவழி தேடவில்லை?. என்ற கேள்விக்கு இங்கு விடை பகிர நாம் முன்வர வில்லை. ஏனென்றால் எல்லாவற்றையும் உணர்ந்த புலிகள் தம் அழிவை முன்னுணர்ந்து பிராந்திய - பூகோள சதிக்கு எதிராக தமிழர் தேசம் சார்ந்து நடத்திய பகடையாட்டம் அது. அதை ஒரு வரியில் விளக்கம் செய்ய முடியாது.



புலத்தில் தமிழ்த் தேசிய செயற்பாடுகளை முடக்குதல், விடுதலைப்புலிகளின் அனைத்துலக ஆயுத மற்றும் அரசியல் கட்டமைப்புக்களை உடைத்தல், தாயகத்தில் விடுதலைப் புலிகளை மக்களிடம் இருந்து வேறுபடுத்துதல், இறுதியாக விடுத லைப் புலிகளை படைத்துறை ரீதியாக அழித்தொழிப்பு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும் தமிழர் தேசத்திற்கு எதிரான அனைத்துலக நகர்வின் தாக்குதல் திட்டத்தின் பெயர்தான் 'புறொஜெக்ட் பெக்கன்'.

தமிழீழம் என்ற நடைமுறை அரசையும் அதன் மக்களையும் இனஅழிப்பு செய்ய புறொஜெக்ட் பெக்கன் திட்டம் எப்படி வரையப்பட்டதோ அதே போன்று தமது அழிவின் பின்னரும் கூட எஞ்சியுள்ள தமிழ்த் தேச அரசியலையும் நிர்மூலம் செய்ய எமக்குள்ளிருந்தே தமிழ் அரசியல்வாதிகளையும் மேட்டுக்குடி கனவான் அரசியல் செய்வர்களையும் வைத்து ஒரு புறெஜெக்ட் வரையப்படும் என்பதையும் புலிகள் முன்கூட்டியே அறிவித்துவிட்டுத்தான் சென்றிருக்கிறார்கள் அதுதான் தற்போது நடந்து கொண்டிருக்கிறது. இதைத்தான் 'ஒப்பரேசன் புறொஜெக்ட் பெக்கன் 2' என்று நாம் வரையறுக்கிறோம். இதற்கான வரைபுகள் தயார் செய்யப்பட்டு மேற்குலக ஆசியுடன் பிராந்திய சதியின் (இந்தியா) துணையுடன் சிங்களத்தால் எமக்குள்ளிருந்தேவிலைபோனகும்பல்களின் துணையுடன் சிங்கப்பூர் மற்றும் தென்னாபிரிக்காவில் வைத்து அது இறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. நாம் இங்கு பேச வந்த விடயம் அதுவல்ல. விடுதலைப்புலிகளை அழிப்பது மட்டுமல்ல விடுதலைப்புலிகளின் தொடர்ச்சி அல்லது புலிகளின் லொபி என்று அடையாளம் காணப்பட்டவர்களும் இந்த திட்டத்தின் பிரகாரம் அழித்தொழிக்கப் பட்டார்கள் என்பது தற்போது புலனாகின்றது. உதாரணம் தராகி சிவராம், இன்னொருவர் ஜோசப் பரராஜசிங்கம் முன்னையவர் விடுதலைப்புலி கள் எதிர்கொள்ளும் போர்க்குற்றச்சாட்டுக்களை மறுதலிக்கும் இராணுவ மூலோபாய அறிவுத் தர்க்கங்களை கொண்டவராக இருந்தார். அடுத்தவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலை புலிகளின் தொடர்ச்சியாக காவும் வல்லமை கொண்டவராக இருந்தார்.

இரண்டுமே எதிரிகளுக்கு உவப்பான ஒன்றல்ல. விளைவு, அழித்தொழிக்கப்பட்டார்கள். தராக்கி சிவராம் அவர்களது நினைவு நாளில் விடுதலைப்புலிகள் எதிர்கொள்ளும் ஒரு குற்றச்சாட்டு குறித்து மட்டும் ஒரு விளக்கத்தை பதிவு செய்வதே இந்த பத்தியின் நோக்கம். அதுதான் அவருக்கான அஞ்சலியும் கூட.

**மனிதக் கேடயம்**

இந்த புறொஜெக்ட் பெக்கன் திட்டத்தின் முக்கிய ஒரு செயற்பாடாக விடுதலைப்புலிகளை போர்க் குற்றவாளிகளாக்கும் ஒரு வரைபு இருக்கின்றது. 2005 இலேயே புரிந்து ணர்வு உடன்படிக்கை முறிந்து போர் வெடிக்க முன்பே புறொஜெக்ட் பெக்கன் திட்டத்தில் இந்தப் பகுதியைக் கொண்டு வந்த சாணக்கியத்தனத்தை நாம் வியக்காமல் இருக்க முடியாது. ஒரு நடைமுறை அரசை அழிப்பதென்றால் சும்மாவா?

இனி விடயத்தை பார்ப்போம். வெளியக அடிப்படையில் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் முத்திரை குத்தி அழித்த பிற்பாடு நிலத்தில் விடுதலைப்புலிகளையும் மக்களையும் வேறுபடுத்தும் நோக்குடன் புறொஜெக்ட் பெக்கன்திட்டம்விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்பு மூன்று கடலோரப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. ஒரு ஆண்டுக்கு ஒரு பிரிவு வீதம் மூன்று ஆண்டுகளில் (2006 -2009) மொத்த நிலப்பரப்பையும் கைப்பற்ற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அப்படியே நடந்தும் முடிந்தன. அப்போது மக்கள் விடுதலைப்புலிகளோடு சென்று ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் சிக்குவார்கள் என்றும், அப்போது இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் இருக்கும் மக்களை 'மனிதக்கேடயம்' என்ற அடிப்படையில்பிரித்துவிடுதலைப்புலிகளை போர்க் குற்றவாளிகளாக்க முடியும் என்று திட்டம் தீட்டப்பட்டது. அப்படியே நடந்தும் முடிந்தது. விடுதலைப்புலிகள் மக்களை மனிதக் கேடயமாக பயன்படுத்தவில்லை. அப்படி ஒரு சிந்தனையும் இல்லாத, போரே தொடங்காத ஒரு காலப்பகுதியில் டோக்கியோவிலும் பின்பு ஒஸ்லோவிலும் வைத்து இந்த 'மனிதக் கேடயம்' என்ற பதத்தை பயன்படுத்தியதே இந்த புறொஜெக்ட் பெக்கான் திட்டத்தை வரைந்த சதிக் கூட்டணி தான். இதை சிவராம் அறிந்திருந்தார். விடுதலைப்புலிகளுக்கு உடனடியாக அதைத் தெரியப்படுத்தியும் இருந்தார்.

இந்த உண்மை எத்தனை பேருக்குத் தெரியும்? அந்தத் திட்டத்தின் பிரகாரமாகவே இன்று விடுதலைப்புலிகள் மனிதக் கேடய குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார்கள். எந்த அரசியல் - இராணுவ புரிதலுமின்றி குறிப்பாக நிலப்பரப்பு குறித்த புரிதலின்றி இதை வதந்தியாக எடுக்கும் எமது மனித உரிமைவாதிகள், ஜனநாயகவாதிகள், ஆய்வாளர்கள் அரசியல்வாதிக்ளை என்னவென்று சொல்வது?

இதன் விளைவாக மாமனிதர் சிவராம் கொல்லப்பட்டது கூட இந்தப் புறொஜெக்ட் பெக்கன் திட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதை மிகத் தாமதமாகவே நாம் அறிந்து கொண்டோம். ஏனென்றால் அவர் இருந்திருந்தால் விடுதலைப்புலிகள் எதிர்கொள்ளும் இந்த மனிதக் கேடயக் குற்றச்சாட்டை இராணுவ விஞ்ஞான அடிப்படையில் மட்டுமல்ல அவரிடமிருந்த ஆவணங்களின் பிரகாரம் பெக்கான் திட்ட வரைபையும் முன்வைத்து அம்பலப்படுத்தியிருப்பார்.

எப்படியெல்லாம் நுட்பமாகப் பார்த்து புறொஜெக்ட் பெக்கன் திட்டம் வரையப்பட்டு, தமிழின அழிப்பு நடந்து முடிந்து, 'தமிழீழ நடைமுறைஅரசு' அழிக்கப்பட்டது என்பதை மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும்.

சிவராம் 'மனிதக் கேடயம்' தொடர்பாக எச்சரித்து அனுப்பிய ஆவணங்கள் இன்று யாரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் தேடிக் களைத்து விட்டோம். விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தில் இருந்த அந்த ஆவணங்கள் நந்திக்கடலில் ஏனைய ஆவணங்களுடன் எரித்து சாம்பலாக்கப்பட்டுவிட்டன. அந்தத் தகவல்களை அறிந்தவர்கள் என்று நாம் நம்புபவர்கள் இன்று எதிர் முகாமுக்குள் அடைக்கலமாகிவிட்டார்கள். இந்த இனத்தின் பாவ - சாபக் கதை இது.

**நந்திக்கடல் கோட்பாடுகள்**

அரச பயங்கரவாதத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டம், புரட்சிகர வன்முறை, மக்கள் போராட்டம் குறித்த எந்தவித புரிதலுமின்றி ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட இனங்களின் போராட்டங்களை பயங்கரவாத அரசுகள் 'பன்னாட்டு உறவுகள்', 'பிராந்திய பூகோள நலன்கள்' என்ற வகைமைக்குள் பொருத்தி எப்படி அழித்தொழித்து வருகின்றன என்ற தர்க்க அறிவுகூட இல்லாமல் எமக்குள்ளிருந்தே விடுதலைப்புலிகளை குற்றவாளிகளாக்கும் போக்கு இருக்கிறது. இந்த இடத்தில்தான் சிவராம் போன்றோரின் இழப்பு எம்மை நிலைகுலையச் செய்கின்றது. ஆனால், அதை 'நந்திக்கடல்' தர்க்க நியாயங்க்ளுடன் மறுதலிப்பது மட்டுமல்ல ஒரு உலாகளாவிய கோட்பாடாகவும் முன்வைக்கிறது. போராடும் இனங்களையும் அவர்களின் போராட்ட பிரதிநிதிகளையும் பிரித்தாளும் தந்திரங்கள் குறித்து நிறையவே எச்சரிக்கிறது 'நந்திக்கடல்'.

ஒரு வரலாற்று நாயகனின் சாட்சியாக - உளவியலாக இறுதிக் காலங்களில் மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிகழ்ந்த ஊடாட்டத்தை அறம் சார்ந்து விபரிப்பது மட்டுமல்ல, 'மனிதக் கேடயம்' என்ற பயங்கரவாத அரசுகளின் அயோக்கிய சொல்லாடலான அறம் மீறிய இராணுவ தந்திரோபாயத்தையும் அம்பலப்படுத்துகின்றது 'நந்திக்கடல்'.

இதன் வழி தமிழினத்திற்கான விடுதலைச் சூத்திரத்தை மட்டுமல்ல உலகளாவிய ஒடுக்கப்பட்ட இனங்களின் விடுதலைக் கோட்பாடுகளை முன்வைத்து வரலாற்றில் தனது இடத்தை நிலை நிறுத்திக்கொண்டுள்ளது 'நந்திக்கடல்'.

சிவராம் 'மனிதக் கேடயம்' தொடர்பாக எச்சரித்து அனுப்பிய ஆவணங்கள் இன்று யாரி டமும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் தேடிக் களைத்து விட்டோம். விடுதலைப்புலி களின் தலைமைச் செயலகத்தில் இருந்த அந்த ஆவணங்கள் நந்திக்கடலில் ஏனைய ஆவணங்களுடன் எரித்து சாம்பலாக்கப்பட்டுவிட்டன. அந்தத் தகவல்களை அறிந்தவர்கள் என்று நாம் நம்புபவர்கள் இன்று எதிர் முகாமுக்குள் அடைக்கலமாகிவிட்டார்கள். இந்த இனத்தின் பாவ - சாபக் கதை இது.

கட்டுரை

பா.குமுதன்



# விபத்துக்கள்

## தவிர்க்கக் கூடியவையே ...

மனிதப் பிறவி என்பது இயற்கையின் பரிசுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. வாழ்க்கை என்பது ஒரு தடவை மட்டுமே. இதுவே உலகில் நியதியாக உள்ளது. கிடைக்கின்ற வாழ்வின் நல்லன, கெட்டன என்பவற்றைப் பிரித்தறிந்து வாழ்வு முறைகளை ஒவ்வொருவரும் கட்டமைத்துக் கொள்கிறார்கள். சில நேரங்களில் எமது சிந்தனைகளையும், செயல்களையும் மீறிப் பல விடயங்கள் நடந்து விடுவதுமுண்டு அதனால் உருவாகின்ற புறத்தாக்கங்கள் எமது ஆயுளைத் தீர்மானிப்பவையாக மாறிவிடுகின்றன. இன்று அதில் முன்னணியில் இருப்பது வீதி விபத்துக்கள். இன்றய உலகின் நவீன கொலைக்களங்களாக வீதிகள் உருமாறி விட்டதை அவதானிக்கிறோம். எங்கு பார்த்தாலும் விபத்துக்க ளும், உயிர்ச் சேதங்களும், உடல் சேதங்களும் மலிந்து விட்டதை அவதானிக்கிறோம். எம்மை அறியாமல் ஏற்படும் துன்பியல் நிகழ்வுகளைப் பொதுவாக விபத்து என்று வரைவிலக்கணப் படுத்தலாம். விபத்துக்களில் பல வர்க்கம் இருந்தாலும் இன்று உலகளவில் அதிகமான உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதில் முதன்மையானது வீதி விபத்துக்கள் என்றே பல ஆய்வுகள் கூறிநிற்கின்றன. இயந்திரமயமாக மாறிவிட்ட வாழ்க்கைச் சூழலிலே தக்கன பிழைத்தல் என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப நாம் ஒவ்வொருவரும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறோம். பயணங்களுக்கான தூரங்கள் நீண்டு கொண்டு போகின்றனவே தவிர வாழ்க்கைச் சுமைகள் குறைந்த பாடில்லை. இறுதியில் பயணம் முடியும் முன்பாகவே ஆயுள் முடிந்துவிடுகிறது.

### விபத்துக்களுக்கான காரணங்கள்


இன்றைய நிலையில் உலகில் நிகழும் சாவுகளில் 2.2விதமானவை வீதி விபத்துக்க ளால் ஏற்படுகின்றன. மனிதர்களிடத்தில் அதிகான இறப்பை ஏற்படுத்துவதற்கான காரணிகளுள் வீதி விபத்துக்கள் 9ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2030ஆம் ஆண்டளவில் அது 7ஆவது இடத்துக்கு வந்து விடும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது. நவீன தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள இன்றய கால சூழ்நிலையிலும் கூட வீதி விபத்துக்களால் ஏற்படும் இறப்பைக் கட்டுப்படுத்த முடியாமலே போகின்றது. அநேகமாக விபத்துச் சம்பவங்கள் பொதுக்காரணிகளை விட மனிதர்களுடைய செயற்பாடுகளாலும், அலட்சியங்களாலுமே ஏற்படுகின்றன. வாகனத்தை அதிக வேகமாகச் செலுத்துதல், மது போதையில் வாகனம் செலுத்துதல், உடல் நிலை சோர்வு, நித்திரை அசதியுடன் செலுத்துதல், வீதிச் சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாமை, பயன்படுத்தும் வாகனம் சரியான நிலையில் இருக்கிறதா என்பதைக் கவனத்தில் எடுக்க தவறியமை, அனுமதிப் பத்திரம் இன்றிச் செலுத்துதல், பாதசாரிகளின் ஒழுங்கற்ற தன்மை, சாரத்தியத்தின் போதான கைபேசிப் பாவனை போன்ற நிலைமைகளே இன்று அதிக விபத்துக்களையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தி நிற்கின்றன. இவை அனைத்தும் மனிதருடைய அலட்சியமான செயற்பாடுகளே. இதனால் பாதிக்கப்படுவது ஒருவர் மட்டுமல்ல சமூகங்களுமே. இவை தடுக்கப்படக் கூடிய விடயங்களே. அத்துடன் சில பொதுக்காரணிகளும் விபத்துக்களில் செல்வாக்கு செலுத்துவதை நாம் மறந்து விட முடியாது உதாரணமாக வீதிகளின் அவல நிலை, போக்குவரத்துச் சட்டங்கள் சரியான முறையில் வகுக்கப்படாமை அல்லது நடைமுறைப்படுத்தாமை. சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் உள்ள ஒழுங்குச் சிக்கல்கள் மற்றும் ஊழல்கள் என்பனவும் விபத்துக்களில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்க முடிகிறது. எமது வேகமானது ஒரு நிமிடத்தில் வாழ்க்கையில் பல தாமதங்களை உருவாக்கி விடும் என்பதை நாம் உணர வேண்டும்.

### இலங்கையில் வீதி விபத்துக்களின் நிலை

இலங்கையைப் பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் உயிரிழப்புகளும் கூடிக் கொண்டே செல்கின்றன. 2015ஆம் ஆண்டில் 2ஆயிரத்து 880பேரும், 2016ஆம் ஆண்டில் 2ஆயிரத்து 935பேரும், 2017ஆம் ஆண்டில் 3ஆயிரத்து 78 பேரும், வீதி விபத்துக்களில் உயிரிழந்திருப்பதாக அரச புள்ளிவிவரங்கள் சுட்டுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் எண்ணிக்கை



கூடிக் கொண்டே செல்கிறதே தவிர குறைந்த பாடில்லை? ஒவ்வொரு நாளும் குறைந்தது 100க்கும் அதிகமான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதுடன் 48 வரையான சாவுகளும் ஏற்படுகின்றன. 40க்கும் மேற்பட்டோர் காயமடைகின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் அதிகமான விபத்து இடம்பெறும் பகுதியாக மேல் மாகாணம் காணப்படுகிறது. அத்துடன் 50சதவீதமான விபத்துக்கள் வாகனத்தை அதிவேகமாகச் செலுத்துவதாலேயே ஏற்படுகின்றன. கடந்த 10 வருட காலப்பகுதியில் இலங்கையில் 26ஆயிரத்து 251 பேர் வீதி விபத்துக்களால் சாவடைந்துள்ளமை புள்ளி விவரங்களின் மூலம் தெரிய வருகிறது. குறைந்தளவு மக்கள் தொகையைக் கொண்டமைந்த எமது நாட்டிலே இந்த எண்ணிக்கை அதிகரிப்பானது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை. அரசைப் பொறுத்த வரை வீதிப் பாதுகாப்புச் சட்டங்கள் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வந்தாலும், அவை இன்னமும் பேண்தகு நிலையை அடையவில்லை என்பதே உண்மை.

### வடக்கின் நிலை

வட பகுதியைப் பொறுத்த வரை போருக்குப் பின்னரான காலப்பகுதியில் அதிகமான விபத்துக்கள் சம்பவித்துள்ளதைப் பார்க்கமுடிகிறது. சடுதியாக நிதி நிறுவனங்கள் அதிகரித்த தன்மையால் மிக இலகுவாகக் குறைந்த ஆரம்பப் பணத்தைச் செலுத்தி வாகனங்களை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்ய முடிகிறது. இதானால் கடந்த 7 வருட காலப்பகுதிக்குள் வாகனங்கள் வடக்கில் பெருகியுள்ளமையை கண்கூடாகப் பார்க்கின்றோம். அத்துடன் வடக்கில் அதிகமாக முதன்மை வீதிகளைத் தவிர்த்து ஏனைய வீதிகள் சீராக்கப்படுகின்றனவே தவிர அவை அகலிக்கப் படுத்தப்படுவதில்லை. இதனால் ஏற்படும் நெருக்கடியான நிலைமை விபத்துக்களை ஏற்படுத்தி விடுகிறது. அநேகமாக மோ்ட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிகளே பல விபத்துக்களை ஏற்படுத்துகின்றன. வடக்கைப் பொறுத்த வரை அதிகவேகமே பல விபத்துக்களுக்குக் காரணமாகிறது.

### அரசின் கடமை

உலகின் பல வளர்ந்த நாடுகளில் வீதி விபத்துக்கள் மிகவும் குறைவாகப் பதிவாகின்றமையைப் பார்க்க முடிகிறது. அது அந்த நாடுகளின் அரசினது வினைத்திறனான செயற்பாட்டையே எடுத்தியம்புகிறது. இலங்கையைப் பொறுத்தவரை வீதிச் சட்டங்கள் பல கணப்பட்டாலும் அவை நடைமுறைப்படுத்துவதில்லை என்றே கூறவேண்டும். போக்குவரத்துத் துறைசார்ந்த அனைத்துவிடயங்களிலும் பெருகிவிட்ட இலஞ்ச, ஊழல், அதைக் கட்டுப்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அரசு செய்யாமை, போக்குவரத்து விதிமுறைகளில் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளாமை போன்றன விபத்துக்களில் செல்வாக்குச் செலுத்துவதை மறுக்க முடியாது. எனவே அவற்றை சீர்செய்வதுடன் பொது மக்கள், சாரதிகள், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல், போன்ற செயற்பாடுகளையும் அரசு ஆற்ற வேண்டிய தேவை இருக்கிறது. அத்தோடு அரசுகளின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அதன் பால் ஒழுகுவது பொதுமக்களின் கடமையாகவும் இருக்கிறது. கடுமையான சட்டங்களை உருவாக்கினால் தான் விபத்துக்களைத் தடுக்க முடியும் என்ற வெற்று வார்த்தைகளை நாம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ளாது. அனைவரும் சிந்தித்துச் செயலாற்றுவதன் மூலமே விபத்துக்க ளைத்தவிர்க்க முடியும். இதுவே உண்மை. எனவே எம்மால் முடிந்த வரை வீதி ஒழுங்குகளைப் பேணி, அதிவேகத்தைக் குறைத்து நாமும் நாம் சார்ந்த சமூகமும் வள முடன் வாழ வழிசமைப்போம்.

இயந்திரமயமாக மாறிவிட்ட வாழ்க்கைச் சூழலிலே தக்கன பிழைத்தல் என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப நாம் ஒவ்வொருவரும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறோம். பயணங்களுக்கான தூரங்கள் நீண்டு கொண்டு போகின்றனவே தவிர வாழ்க்கைச் சுமைகள் குறைந்த பாடில்லை. இறுதியில் பயணம் முடியும் முன்னமே ஆயுள் முடிந்து விடுகிறது.



கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

# முன் நகர்ந்த பின் நகர்ந்த தினங்கள்!

இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல குடிமக்களுக்கும் குழப்பகரமான நாள்களாக அமைந்துவிட்டன இந்த நாள்கள். இருக்கிற குழப்பம் போதாதென்று வருகிற குழப்பங்கள் கூட ஒன்றும் ஓய்வைக் காட்டியிருக்கவில்லை. தாம் குழம்பியது மாத்திரமல்லாமல் குடிமக்களையும் குழப்பத்தில் ஆழ்த்தியிருப்பது ஆட்சியாளர்கள் மட்டில் விசனத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

**மே தினத்தின் பின்னகர்வு!**

இலங்கையில் இந்த முறை அனைத்துலகத் தொழிலாளர் தினம் அது வழமையாகக் கொண்டாடப்படும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து 7ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டிருக்கிறது. அதுவும் மஹா சங்கத்தினரின் வேண்டுகோளின் பேரிலேயே அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தது. வெசாக் வாரத்தில் குறித்த தினம் வருவதனாலேயே அத்தகைய வேண்டுகோளும் அதையொட்டிய அரச தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் மே தினத்தின் காரணமாகப் பொது வங்கி வர்த்தக விடுமுறை தினமாக ஏலவே அறிவிக்கப்பட்டிருந்த மே மாதம் முதலாம் திகதியன்றைய விடுமுறையை நீக்கி மே மாதம் 7ஆம் திகதியை மே தினத்துக்குரிய பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. ஏப்ரல் 28 தொடக்கம் மே 1 வரையான நெடியதொரு விடுமுறைக் காலத்தை எதிர்பார்த்திருந்த பலருக்கும் குறித்த அறிவித்தல் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருந்தது.

**இந்த முறை மே தினமா? அல்லது மே வாரமா?**

குறித்த மே தின மாற்ற மற்றும் விடுமுறை மாற்ற அறிவிப்பு, மஹா சங்கத்தினரைச் சந்தோஷப்படுத்தியதோ இல்லையோ அரசியற் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட தரப்புக்களைச் சங்கடப்படுத்தியிருக்கிறது. விளைவாக, இந்த முறை மே தினம், வெறும் தினமாக அல்லாமல் மே வாரமாகக் கடைப்பிடிக்கப்படும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. ஆமாம், எதிர்வரும் வாரத்தில் வெவ்வேறு தினங்களில் மே தினமான தொழிலாளர் தின நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

நாளை மறுதினம் முதலாம் திகதி, ஆறாம் திகதி மற்றும் ஏழாம் திகதி என்பன வெவ்வேறு தரப்புக்களால் மே தினத்துக்குரிய நாள்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் விடுதலை முன்னணி தனது மே தினப் பேரணியை எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தவிருப்பதாக அறிவித்திருக்கிறது.

அத்தோடு அதன் முதன்மைப் பேரணி எதிர்வரும் 7ஆம் திகதி, கொழும்பு பி.ஆர்.சீ. மைதானத்தில் இடம்பெறவிருக்கிறது. இலங்கை வர்த்தக தொழிலாளர் ஒன்றியம் உள்ளிட்ட சில தொழிற் சங்கங்கள் தமது மே தினக் கொண்டாட்டத்தை முதலாம் திகதியி லேயே நடத்தத் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வுகள் எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவிருக்கின்றன. குறித்த நிகழ்வு சுகததாச அரங்கில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. சுதந்திரக்கட்சி மற்றும் ஒன்றிணைந்த எதிரணி என்பன தமது மே தின ஒன்றுகூடலை ஏழாம் திகதியன்று நடத்தத் தீர்மானித்திருக்கின்றன. சுதந்திரக் கட்சியின் நிகழ்வுகள் மட்டக்களப்பிலும் ஒன்றிணைந்த எதிரணியின் நிகழ்வுகள் காலியிலும் நடந்தேறவிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடபுலமேதினம் பருத்தித்துறையிலும் கிழக்குப் புல மே தினம் வெல்லாவெளியிலும் மே மாதம் முதலாம் திகதியன்றே நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**முன்னகர்ந்த வெசாக்!**

மே தினத்தை முதலாம் திகதியிலிருந்து ஏழாம் திகதிக்கு மாற்றியது, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த முதலாம் திகதிவிடுமுறையை நீக்கியமை, முதலாம் திகதிமே தினத்தைக் கொண்டாடும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களுக்கு விடுமுறை வழங்குவதில் ஏற்பட்டிருக்கும் சிக்கல், மே ஏழாம் திகதியை விடுமுறையாக அறிவிக்குமாறு தனியார் துறையிடம் தற்போதுதான் கோரியிருக்கின்றமை போன்ற குழறுபடிகள் ஒருபுறமிருக்க, அத்தகைய குழப்ப நிலைக்கு இட்டுச் சென்ற தீர்மானத்துக்குக் காரணமாயிருந்த மஹா சங்கத்தினரின் வேண்டுகோள் மறுபுறமிருக்க, வெசாக் தினத்தை இலங்கையர் ஏப்ரலில் கொண்டாடுவது நகைப்புக்குரியது என்கிறார் மல்வத்த அனுநாயக்கர் வண. நியாங்கொட விஜிதசிறி தேரர். பாரம்பரியமாக இலங்கை தனது வெசாக் தினத்தை மே மாதத்தில் வரும் முழுமதி தினத்திலேயே கெண்டாடுவது வழக்கம். ஏனைய பௌத்த நாடுகள் வெசாக் தினத்தை மே மாதத்தில் வரும் முழுமதி தினத்தில் அனுஷ்டிக்கும்போது, இலங்கை தனது வெசாக் கொண்டாட்டத்தை ஏப்ரலில் கொண்டாடுவது அபத்தம் என்று கடந்த திங்கள்கிழமைதான் திருவாய்மலர்ந்திருக்கிறார் அவர். அவருடைய கருத்துப்படி, வெசாக் தினம், எதிர்வரும் மே 29ஆம் திகதி அன்றேதான் கொண்டாடப்பட வேண்டும். தாய்லாந்து, கம்போடியா, திபெத், வியட்நாம், சீனா மற்றும் மியன்மார் போன்ற நாடுகளிலுள்ள பௌத்தர்கள் மே மாதத்தில் வரும் முழுமதியையே வெசாக் தினமாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையின் மஹாநாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்கள் கூட மே 29இல் நடைபெற உள்ள அனைத்துலக வெசாக் வைபவத்துக்கே அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்றிருக்கிறார் அவர்.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் இந்த அனைத்துலக வெசாக் தின வைபவம் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் வருகையுடன் இலங்கையில் நடைபெற்றிருந்தது.



வெசாக் வாரத்தில் குறித்த தினம் வருவதனாலேயே அத்தகைய வேண்டுகோளும் அதனையொட்டிய அரச தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் மே தினத்தின் காரணமாகப் பொது வங்கி வர்த்தக விடுமுறை தினமாக ஏலவே அறிவிக்கப்பட்டிருந்த மே மாதம் முதலாம் திகதி விடுமுறையை நீக்கி மே மாதம் 7ஆம் திகதியை மே தினத்துக்குரிய பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

**இது பக் முழுமதி தினமா அல்லது வெசாக் முழுமதி தினமா?**

மல்வத்தை அனுநாயக்க தேரரின் தகவலின் படி, இந்த முழுநோன்மதி தினம், பக் முழுமதி தினமாகும். மே மாதத்தில் வரும் முழுமதி தினத்திலேயே வெசாக் கொண்டாடப்படவேண்டும் என்பது அவரது வாதமாகும்.

வழமையாக ஏப்ரல் மாதத்தில் வரும் முழுநோன்மதி தினம் பக் பூரணை தினமாகவே கருதப்படுகிறது. எனினும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் 2018ஆம் ஆண்டுக்குரிய விடுமுறை தினங்கள் தொடர்பில் 2017ஆம் ஆண்டு ஜுன் 24ஆம் திகதி வெளியிடப்பட்ட 2024/55ஆம் இலக்க அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலின்படி, இன்றைய தினம், வெசாக் பூரணை தினம் என்றே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மார்ச் 31ஆம் திகதிக்குரிய பூரணை தினம், பக் பூரணை தினமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

13பூரணை தினங்களைக் கொண்ட இந்த வருடத்தில், ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஒரே மாதத்தில் வந்திருந்த இரண்டு பூரணை தினங்களே இந்தக் குழப்பத்துக்கு வித்திட்டுச் சென்றிருந்தன. எதிர்வரும் மே 29ஆம் திகதிய பூரணை தினத்தை அதி பொசன் பூரணை தினமென்று குறிப்பிடும் அந்த வர்த்தமானி, ஜுன் 27ஆம் திகதியில் வரும் பூரணை தினத்தை பொசன் பூரணை தினமென்று காண்பித்திருக்கிறது.

**தமிழ்ப் பஞ்சாங்கத்தில் மாற்றம் இல்லை!**

தமிழ்ப் பஞ்சாங்கத்தின் பிரகாரம், ஏப்ரலில் வரும் இந்தப் பௌர்ணமி தினத்தைச் சித்திராப் பௌர்ணமி தினமாகக் குறிப்பிடப்படுகின்ற அதேவேளை எதிர்வரும் 29ஆம் திகதிய பௌர்ணமி தினம் முருகன் பிறந்த வைகாசி விசாகப் பௌர்ணமி தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையால் வெசாக் தினம் பன்னாட்டுத் தினமாகக் கொண்டாடப்பட பின்னணியில் இருந்த இலங்கையில், வெசாக் நிகழ்வுகள் முன்னகர்த்தப்பட்டு ஏப்ரலில் கொண்டாடப்படுவதும், தொழிலாளர் தின நிகழ்வுகள் உரிய தினத்திலிருந்து பின்னகர்த்தப்பட்டுப் பிறிதொரு தினத்தில் கொண்டாடப்படுவதும் அந்தந்த தினங்களுக்கு கிடைக்கக்கூடிய சிறப்பைக் குறைத்தே இருக்கின்றன. அவை திண்டாட்டத்துடன் கூடிய கொண்டாட்டத்தைதான் வழங்குகின்றன என்றாலும் ஆச்சரியம் அடைவதற்கில்லை.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# மட்டக்களப்பில் சிறப்புற நடைபெற்ற கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 72ஆவது தேசிய மாநாடு

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 72ஆவது தேசிய மாநாடு மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் அண்மையில் நடந்தேறியது பற்றி இந்த ஆக்கத்தில் நோக்குவோம். இந்த ஆக்கத்துக்கான தகவல்களை மட்டக்களப்பு மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் ஜெரிஸ்டன் வின்சன்ட் அடிகளார் தந்துதவினார்.

மேற்படி நிகழ்வில் தலைமை அதிதிகளாக யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயரும் இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவருமாகிய கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இயக்குனர் மல்கம் பெரேரா அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களோடு இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களின் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியங்களின் இயக்குனர்களான குருக்களும் இளைஞர் ஒன்றிய உறுப்பினர்களுமாக 130 பேர் பங்கு பற்றினர். இவர்களோடு மட்டக்களப்பு மறைமாவட்ட குருக்கள் கன்னியர்களும் கலந்து கொண்டனர். இதற்கு முன்னர் நடைபெற்ற 58ஆவது இளைஞர் ஒன்றியத்தின் தேசிய மாநாடு 2013ஆம் ஆண்டு மார்ச் 8முதல் 10ஆம் திகதிவரை மட்டக்களப்பில் இடம்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்க தகவலாகும்.




### இறைவனுக்குச் செவிகொடுங்கள்

'இறைவனுக்கு செவிகொடுங்கள்' என்னும் தலைப்பில் திருத்தந்தையின் இளைஞர்களுக்கான உரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். "இளைஞர்களுக்கு செவி கொடுத்தால் திருச்சபை இன்னுமொரு தடவை இறைவன் பேசுவதைக் கேட்கும்" என்கின்ற பாப்பரசர் பிரான்சிஸின் வரிகளிலிருந்து தெரியப்பட்ட தலைப்பாகும். இந்த நிகழ்வில் கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கு வாழ்வின் தார்ப்பரியங்களை எடுத்துக்காட்ட குருதிக்கொடை நிகழ்வு பெற்றோர்களை இழந்த பிள்ளைகள் சிறப்புத் தேவைகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் வயோதிபர்களைச் சந்தித்து இறுதியில் செப ஆராதனையுடன் மனதைத் தொடும் அளவுக்கு ஆயத்த நிகழ்ச்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டன.



நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கிய மட்டக்களப்பு மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் ஜெரிஸ்டன் வின்சன்ட் அடிகளார் தமது உரையில் தமது தலைமையில் இந்த 72ஆவது தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய மகாநாட்டை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் நடத்த அனுமதி அளித்த தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்துக்கும் பல்வேறு வழிகளிலும் இந்த நிகழ்வை சிறப்பாக நடத்த உதவிய சகலருக்கும் நன்றிகளைத் தெரிவித்தார். அவர் தம் தொடர் உரையில் "இந்த நிகழ்வுக்காக நாம் செலவிடுகின்ற ஒவ்வொரு ரூபாவும் ஏதோவொரு பிரயோசனத்தை காண வேண்டும். இல்லையெனில் இதுபோன்ற ஒன்றுகூடல்களை நாம் நிறுத்த வேண்டும்" எனக் கூறி எல்லோரையும் மனசாட்சியுடன் செயற்பட இன்முகத்துடன் வரவேற்றார்.

### இரண்டாம் நாள் நிகழ்வுகள்

இந்த மாநாட்டில் இரண்டாவது நாளானது சொமஸ்கன் கன்னியர் சபையினரது சிற்றாலயத்தில் ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலியுடன் ஆரம்பமாகியது. அன்று காலை மட்டக்களப்பு மறைமாவட்ட புனித வளனார் சிறிய குருமட இயக்குனர் கிறைட்டன் அவுட்ஸ்கோன் அடிகளாரால் இறைவனுக்கு செவிகொடுங்கள் என்கின்ற தலைப்பில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறப்பாக உரையாற்றப்பட்டு கேள்விகள் எழுப்பப்பட பதிலளிக்கப்பட்டது. இந்த உரையில் கிறைட்டன் அவுட்ஸ்கோன் அடிகளார் தாங்கள் பேசுகின்ற மொழிகளிலும் தங்களது ஆளுமைகளிலும் இருக்கின்ற முரண்பாடுகள் எவ்வாறு எங்களது உறவுகளில் முரண்பாடுகளை ஏற்படுத்துகின்றது என தெளிவுபடுத்தி முரண்பாடுகளை தவிர்த்து கொள்கின்ற ஆர்வமும் ஆளுமையும் இறைவன் இளைஞர் யுவதிகளுக்கு தாராளமாக கொடுத்திருக்கின்றார். ஆகையால் உங்களை படைத்த இறைவனை இளமையில் தொலைக்க வேண்டாம் எனக் கூறி இளமையிலேயே முழுமை பெற அழைத்தார்.

### மூன்றாம் நாள் நிகழ்வுகள்

இறுதி நாளில் ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மாநாடு குறித்து ஆய்வு செய்யப்பட்டது. 73ஆவது தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய மாநாடானது இரத்தினபுரி மறைமாவட்டத்தில் நடத்த தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய கொடியானது 72வது மகாநாட்டை தலைமை தாங்கி நடத்திய மட்டக்களப்பு மறைமாவட்ட இயக்குனர் ஜெரிஸ்ரன் வின்சன் அடிகளாரால் இரத்தினபுரி மறைமாவட்ட இயக்குனர் நிக்கலஸ் கபிரியேல் அடிகளாரிடம் கைமாறி கொடுக்கப்பட எல்லோரும் கைகளைத் தட்டி பொறுப்பை ஏற்றுக் கொண்டமைக்காக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்தனர்.

### காலத்தின் தேவை

இதுபோன்ற ஒன்றுகூடல் வழியாக சமூகத்தில் அக்கறையுள்ள மனிதர்களை உருவாக்குவது மிகவும் அவசியமாகும். இன்றைய இளைஞர் நாட்டின் நாளைய தலைவர்கள் என சொன்னால் மாத்திரம் போதாது. அவர்கள் உண்மையிலேயே நல்ல தலைவர்களாக மாற அவர்கள் மாற்றத்தின் கதாநாயகனாக மற்றவர்களை எதிர்பாராது தங்களது சேவையை இறைவன் சேவையாக நினைத்து இயங்க அவர்களை வளர்க்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். ஆகையால் இந்த மகாநாட்டை பொறுப்பெடுத்து எம்மால் திருப்தி பெறக்கூடிய வகையில் நடத்தியமைக்காக மட்டக்களப்பு மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் ஜெரிஸ்ரன் வின்சன்ட் அடிகளார் பெருமகிழ்ச்சியையும் பெருமையையும் அடைவதை வெளிப்படுத்தி 2018ஆம் ஆண்டுக்கான கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய மாநாட்டை நிறைவு செய்தார்.



### வேண்டுகையும் எதிர்பார்ப்பும்

இன்றைய இளைஞர்கள் மேல் சாட்டப்படும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணம் போதைப்பொருள் மற்றும் குடிவெறி எனலாம். அன்றாடம் நடக்கும் வாள்வெட்டுக்கள் வீதி விபத்துக்கள் தற்கொலைகள் மற்றும் விபரீதங்கள் அனைத்தும் இதனாலேயே ஏற்படுகிறது. வீதி விபத்தை விடுங்கள் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதிக்கு வெளியே இருக்கும் மதிலிலும் மின்கம்பங்களிலும் மோதி இறப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. பாடசாலை மாணவர்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு போதைப்பொருளுக்கு அடிமையாகி என்ன செய்வதென்று தெரியாது வன்முறையிலும் தற்கொலையிலும் ஈடுபடுகிறார்கள். இந்த பிரச்சினைகளுக்கும் தேசிய ரீதியில் ஏதாவது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவராகிய ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் அன்பு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

"இன்றைய இளைஞர்கள் மேல் சாட்டப்படும் அனைத்து பிரச்சினைகளுக்கும் முக்கிய காரணம் போதைப்பொருள் மற்றும் குடிவெறி எனலாம். அன்றாடம் நடக்கும் வாள்வெட்டுக்கள் வீதி விபத்துக்கள் தற்கொலைகள் மற்றும் விபரீதங்கள் அனைத்தும் இதனாலேயே ஏற்படுகிறது. வீதி விபத்தை விடுங்கள் வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதிக்கு வெளியே இருக்கும் மதிலிலும் மின்கம்பங்களிலும் மோதி இறப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. பாடசாலை மாணவர்கள் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு போதைப்பொருளுக்கு அடிமையாகி என்ன செய்வதென்று தெரியாது வன் முறையிலும தற்கொலையிலும் ஈடுபடுகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்கும் தேசிய ரீதியில் ஏதாவது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இலங்கை தேசிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் தலைவராகிய ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையிடம் அன்பு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

## விற்பனைக்கு

நல்லூர் குறுக்கு வீதியில் நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த வீடும். யாழ். பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 6 பரப்பில் அமைந்த வீடும் காணியும். கொக்குவில் பொற்பதி வீதியில் 10 பரப்பு காணியும். யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 10 பரப்புக் காணியும். 5 பரப்புக் காணியும். பளை A9 வீதியில் 15 ஏக்கர் காணியும். 50 ஏக்கர் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- **0777 232 535** (CS 16192)(10)

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம்
## திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



B.Sc in Civil Engineering
(Fast track Degree Programme)

**May Intake 2018**

**Features**

* UGC Approved
* Eligible for A/L, NVQ, HND, Jobs etc...
* Classes once a week
* Everyyear Convocation
* Easy Payment Scheme & Study loan can be arranged
* Can be Used for Migration higher Studies, Govt & Private Jobs
* Conditional Based RPL

**ஆரம்பம் - 01.05.2018, 05.05.2018**

**IPS**

முகாமைத்துவ நிர்வாகசபை
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
021 450 8489
email : desreepgrm@gmail.com

## வேலையாள் தேவை



எமது ஸ்தாபனத்துக்கு கணக்காளராக பணியாற்றக் கூடிய பெண்கள் தேவை. ஸ்தாபனத்துக்கு அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நேரில் சமுகம் தரவும்

**Northway Family Mart**
**No184, Palaly Road, Thirunelvely**
**T.P: 021 222 6002 / 021 222 6001**

(CS 16196)(10)

Development Fortune

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் ▸ 138
சீட்டிழுப்பு திகதி ▸ 28.04.2018 சனிக்கிழமை

| வெற்றி இலக்கங்கள் | சுப்பர் இலக்கம் | அதிர்ஷ்ட மாதம் |
|---|---|---|
| 14 46 53 56 | 03 | ஜனவரி |

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 12,233, 448/= | ரூ. 3, 536, 795/= | ரூ. 1, 882, 786/= |

2018.04.03 ஆம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## மைத்திரியின் மகளுக்கும் மது நிலைய அனுமதியா?

கொழும்பு. ஏப். 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகள் சதுரிக்காவுக்கு மதுபான நிலைய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. அரச தலைவர் தேர்தலின்போது மது ஒழிப்பை மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியிருந்தார். பெண்கள் மது விற்பதற்கும் கொள்வனவு செய்வதற்கும் அரச தலைவர் அனுமதி மறுத்திருந்தார்.

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சதுரிக்கா மதுபான விற்பனை நிலையம் நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளார் என்று அந்த ஊடகத்தின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## டிப்பர் மோதி காயப்பட்டவர் நேற்று இறந்தார்


யாழ்ப்பாணம். ஏப். 29

துவிச்சக்கரவண்டியில் பயணித்தபோது டிப்பரால் மோதுண்டு படுகாயமடைந்தவர் நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்து யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்தியை அண்மித்துக் கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் கிருஸ்ணகுமார் (வயது - 35) என்ற இளைஞரே விபத்தில் உயிரிழந்தார்.

அவர் துவிச்சக்கரவண்டியில் பயணித்து வீதியின் மறுபுறம் செல்ல முற்பட்டு வீதியின் நடுவே வந்தபோது டிப்பர் மோதியது. வேகக்கட்டுப்பாட்டை இழந்து வந்த டிப்பர் மோதியதில் அவர் சுமார் 20 மீற்றர் தூரம்வரை டிப்பருடன் இழுத்துச்செல்லப்பட்டார். வீதியால் சென்றவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்தனர். அவரது வலது கால் தொடையுடன் அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவனர்களிடம்ஒப்படைக்கப்பட்டது. (4)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09.11.1932 இறப்பு 28.04.2018

எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி சாந்தரூபியின்** அன்புத்தந்தையார்

**சிதம்பரப்பிள்ளை இரத்தினம்**

அவர்கள் (28.04.2018) காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவு, மாவட்டச்செயலகம் யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1933 . 04 . 15



இறப்பு 2018 . 04 . 27

*தமிழர் சமூக ஜனநாயகக்கட்சியின்(SDPT) மத்திய குழு உறுப்பினர் கதிரவேலு தம்பையா (தோழர் சாந்தன், லண்டன்) அவர்களின் அன்புத்தாயார்*

**திருமதி கதிரவேலு நாகலட்சுமி**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு : 30.04.2018 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் கடைச்சாமி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதிச்சடங்குகள் நடைபெற்று பின்னர் கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை தோழர்கள் நண்பர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

**தகவல்:**
**தோழர்கள், நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் நாகேஸ்வரி

**தோற்றம்: 21.09.1932 மறைவு: 26.04.2018**



கொழும்புவெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்.சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும், பிரான்ஸில் தற்போது வசித்தவருமான திருமதி பொன்னம்பலம் நாகேஸ்வரி (26.04.2018) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சரவணமுத்து-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், திரு.திருமதி சரவணமுத்து-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், வேலுப்பிள்ளை மற்றும் நாகலிங்கம் (நாகராசா-கொக்குவில்) ஆகியோரின் சகோதரியும், கணேசமூர்த்தி (பிரான்ஸ்) காலஞ்சென்ற ரவீந்திரநாதன் மற்றும் பத்மலோஜினி (ஆச்சி-பிரான்ஸ்), புகனேந்திரன் (ராதா-பிரான்ஸ்), சோதீஸ்வரி (மலர்-பிரான்ஸ்), மோகனதாஸ் (ரமேஸ்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.05.2018 (வியாழக்கிழமை) அன்று பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைவாணி மில் வீதி, கொக்குவில் கிழக்கு,**
(CS 16190)(10)

**தகவல்: சரவணமுத்து நாகலிங்கம்**
**077 221 5479**

### திருமதி
### பவளம் தம்பிராசா



யாழ். பத்தமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் தம்பிராசா 27.04.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகளும், சிவஞானத்தின் அன்புச் சகோதரியும், தேவராணி (கனடா), தேவராசன் (கனடா) பத்மராணி, குகதாசன் (கனடா), ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தன் (கனடா), கலாராணி (கனடா), விஜயதாஸ் (செயலாளர், பிரதேச சபை செட்டிக்குளம்), அம்பிகா (கனடா), சந்திரகுமாரன் ஆகியோரின் மாமியாரும், வாசுகி, வனஜா, தேவகி, சாந்தினி, தரணி, யாதவி, அபிஷேக், சிவதர்சன், சிந்துஜன், மிதுனாளினி, லக்ஸ்மன், லக்ஷனா, கஜானன், கணாளன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வருண், வனோஜ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.04.2018) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பத்தமேனி, அச்சுவேலி.**
(CS 16178)(10)

**தகவல்: குடும்பத்தினர்**
**076 8514525**

## கூலியாள்கள் தேவை

நல்லூரில் கம்பி வேலைக்கு கூலியாள்கள் தேவை. **தொடர்பு -,077 5695 172 077 239 7211**

## மில் வேலைக்கு ஆள்கள் தேவை

மில் வேலை தெரிந்த ஆள்கள் தேவை. விவரங்களுக்கு **077 28 44428** (CS16198)(10)

## பம்பர் தேவை (PUMPER)

யாழ். நகரில் உள்ள எரி பொருள் நிரப்பு நிலையத்திற்கு பம்பர் தேவை

தொடர்பு:- **077 533 9156** (CS16200)(10)

## கடை விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:- **077 2759220** (CS16191)(10)

## காணிவிற்பனைக்குண்டு

இயக்கச்சி பாடசாலைக்கு 50m தூரத்தில் A9 வீதிக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 2 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 033 9477

## முள்ளிவாய்க்கால்...

தெரிவித்தார். அதனால் தூபி அமைக்கும் பணி கைவிடப்பட்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

வன்னி இறுதிப் போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உறவுகள் உட்பட முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூருவதற்கு நினைவுத் தூபி அமைக்க பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டனர். பல்கலைக்கழக வளாகத்திலுள்ள கோவில் முன்றிலில் அதை அமைக்கும் பணியைக் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பித்திருந்தனர். ஆனால் அந்த இடத்தில் அமைப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் தடங்கல் ஏற்பட்டது.

அதன்பின்னர் பல்கலைக்கழக நிர்வாக உயர்மட்டத்தினருக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை பிற்பகல் பேச்சு இடம்பெற்றது. பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்துக்கு அருகில் நினைவுத் தூபியை அமைக்குமாறும் பல்கலைக்கழக உயர்மட்டத்தினர் மாணவர் ஒன்றியத்தினரிடம் ஆலோசனை வழங்கினர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் கோரிக்கையை பரிசீலனை செய்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் அதற்கு இணக்கம் தெரிவித்தனர். முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைக்கும் பணிகள் பல்கலைக்கழகவளாகத்தில்நிர்வாகத்தால்அடையாளம் காட்டப்பட்ட இடத்தில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நினைவுத்தூபியின் கட்டட அமைப்பு பணிகளை முற்றாக தடுக்குமாறு அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் தூபி அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (4,8)

## மின்னல்...

குளம் ஒன்றில் குளித்துவிட்டுப் புறப்பட்ட போது மின்னல் தாக்கியது என்றும் அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் வவுனியா துட்டுவாகை பகுதியில் நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்றது. வவுனியா செட்டிகுளம் நேரியகுளம் பகுதியைச் சேர்ந்த ஜோகராசா நிமல்ராஜ் (வயது - 40) என்பவரே உயிரிழந்தார். அவர் 3 பிள்ளைகளின் தந்தை.

அவரது முதுகிலும், தொடையிலும் எரிந்தமை போன்ற காயங்கள் காணப்படுகின்றன. அங்கிருந்து மரம் ஒன்றும் எரிந்துள்ளது. அதனடிப்படையில் மின்னல் தாக்கியே அவர் உயிரிழந்தார் என்று பொலிஸாரும் ஊரவர்களும் கூறுகின்றனர்.

இறப்பு வீட்டுக்குச் சென்ற அவர் மாலை வீடு திரும்பும்போது துட்டுவாகைப் பகுதியிலுள்ள குளத்தில் குளித்துவிட்டு வெளியேறும்போது மின்னல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார். சடலமாகவே அவர் மீட்கப்பட்டார். நீண்டநேரமாகியும் வீட்டுக்குத் திரும்பாத தால் அவரது மனைவி அயலவரின் உதவியுடன் தேடியபோது இரவு 9 மணியளவில் சடலமாகக் கண்டறியப்பட்டார்.

செட்டிகுளம் மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டபோது ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோனையில் உறுதிப்படுத்தப்பட்டது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவர் வவுனியா முதலியார் குளம் பகுதியில் வியாபார நிலையம் நடத்தி வருகிறார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,110)

## 'மே 1'...

டிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பௌத்தர்களின் புனித நாளும் மே தினமும் ஒரே நாளில் வருவதால் மே தின நிகழ்வுகளை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு மாற்றுமாறு அரசிடம் மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனால் 7ஆம் திகதி மே தினக் கொண்டாட்டங்களை நடத்துவது என்று அரச தரப்பினர் முடிவெடுத்தனர். எனினும், சில கட்சிகள் மே தின நிகழ்வுகளை மே முதலாம் திகதியே நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளன. (4)

## அரசமைப்பு...

யான திகதி அறிவிக்கப்படும். அதில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அரசமைப்பு சீர்திருத்தத்துக்காக நாடாளுமன்றம், அரசமைப்பு சபையாக அறிவிக்கப்பட்டதுடன், 21 பேர் கொண்ட வழிநடத்தல் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்தக் குழு, 2016 ஏப்ரல் 5ஆம் நாள் தொடக்கம், 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் வரை 75 கூட்டங்களை நடத்தி, அரசமைப்புத் திருத்தத்துக்கான இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்தது.

"மே 8ஆம் திகதிக்குப் பின்னர் வழிநடத்தல் குழுவின் கூட்டத்தைக் கூட்ட இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. எனினும், கூட்டம் நடைபெறும் சரியான நாள் இன்னமும் முடிவு செய்யப்படவில்லை" என்று வழிநடத்தல் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (4)

## அரசின்...

கைக்குப் பயணம் செய்யுமாறு இலங்கை ரசு விடுத்த அழைப்பை நிராகரித் துள்ளார். இந்தத் தகவலைச் சிங்கள ஊடகம் ஒன்ற விடுத்துள்ளது.

இலங்கை அரச படையினர் 40 ஆயிரம் அப்பாவித் மிழ் மக்களைக் கொன்று குவித்தனர் என்று சூகா குற்றஞ்சாட்டியிருந்தார். இந்த நிலையிலேயே அரசு அவருக்கு அழைப்பு விடுத்தது. அடுத்தமாதம் அவர் பயணம் செய்வார் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் தான் இலங்கைக்குப் பயணம் செய்தால் எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் அவர் பயணத்தை ஒத்திவைத்தார் என்று அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இறுதிப் போரில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு முன்னாள் ஐ.நா பொதுச் செயலர் பான்கி மூன் நியமித்த நிபுணர் குழுவில் இவர் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## தும்பளையில்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த தெ.யதுசன் (வயது - 31) என்பவரே காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4,173)

## அமெரிக்க...

இலங்கையில் மருத்துவ சிகிச்சைகளை அளிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பசுபிக் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ், 1000 படுக்கைகள், 12 அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், அதிநவீன பரிசோதனை வசதிகளைக் கொண்ட அமெரிக்க கடற்படையின், யு.எஸ்.என்.எஸ். மெர்ஸி என்ற மிதக்கும் மருத்துவமனை கடந்த 25ஆம் நாள் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தது.

எதிர்வரும் மே 8ஆம் நாள் வரை திருகோணமலையில் தரித்து நிற்கவுள்ள இந்த மிதக்கும் மருத்துமவனையில் உள்ள மருத்துவர்கள், பணியாளர்கள் மற்றும் கடற்படையினர், திருகோணமலைப் பகுதியில் மருத்துவ உதவிகள், பொதுப்பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் கப்பலில் வந்துள்ள அமெரிக்க கடற்படையின் மரைன் படைப்பிரிவைச் சேர்ந்த மருத்துவர்கள், மற்றும் மருத்துவ பயிற்சியாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களுக்கு தற்காலிக பதிவுகளை வழங்குவதற்கு இலங்கை அரச மருத்துவர் சங்கம் மறுத்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை பரிசீலிக்க போதிய நேரம் இல்லாமை மற்றும் விண்ணப்பங்கள் தெளிவாக இல்லாமை காரணமாக அவை நிராகரிக்கப்பட்டதாக மருத்துவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக் கடற்படையின் வேண்டுகோளின் பேரில் இந்த விண்ணப்பங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டன.

மருத்துவர்களுக்கான தற்காலிக பதிவு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதால், கப்பலில் வந்துள்ள அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் மருத்துவர்களால், திருகோணமலைப் பகுதியில் மருத்துவ சிகிச்சைகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தக் கப்பலில் உள்ள மருத்துவக் குழுக்கள், கிழக்கில் மருத்துவ சேவை கண்காணிப்பில் மாத்திரம் ஈடுபடவுள்ளன.

அமெரிக்க கப்பலில் வந்த மருத்துவர்கள் இலங்கைக் கடற்படை முகாம்களில் மருத்துவசேவைகளைவழங்கத்திட்டமிட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## மலேரியா...

கூறுகள் அதிகளவில் காணப்படுகின்றன. குளங்கள், ஆறுகள், நீர் ஓடைகள் காணப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மலேரியாவைப் பரப்பக்கூடிய "அனோபிளஸ்" நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து குறிப்பாக இந்தியா உட்பட பிற நாடுகளுக்குச் செல்லும் ஒவ்வொருவரும் மலேரியா தடுப்பு மருந்து பெறவேண்டும் - என்றார்.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின் படி 2013 இல் 19 கோடியே 80 லட்சத்துக்கும் அதிகமானோர் மலேரியாவால் பாதிக்கப்பட்டார்கள். இதனால், கிட்டத்தட்ட 5 லட்சத்து 84 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 80 சதவீதமானோர் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் மலேரியா பாதிப்பு இல்லாத நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4,114)

## புதிய...

னர். மகிந்த தரப்பினரையும் இணைக்க அவர்கள் முடிவெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் சிலருடனும் இது தொடர்பில் பேசப்பட்டு அவர்களையும் அரசின் பங்காளிகளாக இணைத்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சரொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

"ஆட்சியை அமைப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ அணியில் இருக்கும் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவும் பேச்சு நடத்தப்படவுள்ளது. அவர்கள் அமைச்சுப் பதவிகளைப் பெறாத பட்சத்தில் வெளியில் இருந்து ஆதரவை வழங்க முடியும்" என்றும் அந்த அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய ஆட்சி அமையத் தேவையான ஏற்பாடுகள் மற்றும் தலைமை அமைச்சராக யாரை நியமிப்பது என்பன பற்றி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமும் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் அந்த அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கூட்டரசு ஆட்சி அமைக்கக்கூடாது என்று சு.கவின் பல அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடுமையாக வலியுறுத்தி வருகின்றனர். அரச தலைவர் மைத்திரியிடமும் இது தொடர்பில் பேசியுள்ளனர். ஆனால் அதற்குச் சாதகமான போக்கு இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. மகிந்த அணியும் கூட்டரசு வேண்டாம் என்று வலியுறுத்திவரும் நிலையில் இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. (4)

## இதுவரை...

நீதிகோரி நேற்று ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது. மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் (தராகி) படுகொலை செய்யப்பட்ட நினைவு நாளையொட்டி வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்கள் இணைந்து இதனை நடத்தினர்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறை தனது பணியை மக்கள் நலன் சார்ந்து ஆற்றுவதற்கு அனைத்து தரப்புக்களும் ஒத்துழைப்பதே நல்லாட்சிக்கு அழகு.

கொல்லப்பட்ட சக நண்பர்களுக்கு நீதிகோரும் பயணத்தை அற்பசொற்ப் சலுகைகளுக்காக அடகு வைக்கப்போவதில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர். (4,114)

## காரைநகரில்...

ஆலயத்தின் பிள்ளையார் வீதிவலம் வந்த தேரே சரிந்து வீழ்ந்தது.

தேர் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு வீதிவலம் வந்து மீண்டும் இருப்பிடத்தைநெருங்கியபோது சுமார் 11 அளவில் அது சரிந்து வீழ்ந்தது. மழை பெய்ததால் தேர்முட்டியடி சகதியாகக் காணப்பட்டது. அதனாலேயே தேர் சரிந்து வீழ்ந்தது என்று கோவிலில் நின்ற பலரும் கூறினர். அது சரிந்தபோது பக்தர்கள் கூட்டம் நிறைந்துகாணப்பட்டது. எனினும் எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை. பின்னர் காரைநகர் பிரதேச சபையின் டிப்பர் ரக வாகனம் மூலமாக தேர் பாதுகாப்பாக நிமிர்த்தப்பட்டது. (4,111,37)

## ஹபாயா...

தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

குறித்த கல்லூரியில் முஸ்லிம் ஆசிரியைமார் 'ஹபாயா' அணிவது தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

"திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர் பாடசாலை சுமார் 150 வருட பாரம்பரிய வரலாறைக் கொண்டது. அந்த நாள்களில் திருகோணமலையில் உள்ள இந்து மகளிருக்கு ஒரு பாடசாலை தேவையென சைவ இந்துப் பெரியார்களும் நலன் விரும்பிகளும் இணைந்து ஆரம்பிக்கப்பட்ட தனியார் பாடசாலை இது.

எனவே, அதற்கென உள்ள சம்பிரதாயங்கள் மதிக்கப்படவேண்டும் எனப் பெற்றோரும் பாடசாலை சமூகமும் விரும்புகின்றது. அந்தப் பாடசாலைக்கென உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பாரம்பரியம் மரபுகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். இந்த விடயங்கள் பேசப்பட்டு நிதானமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.


எத்தனையோ சகாப்தங்களாக இருக்கும் நடைமுறையை திடீரென மாற்றிவிட முடியாது. எனவே, பேசி சில விடயங்களுக்குத் தீர்வை நாம் காண வேண்டும்"- என்றார். (4)

## வயிற்றோட்டத்தால்...

றது. அதே இடத்தைச் சேர்ந்த கயநேச சர்மா கஜகவிசர்மா என்ற குழந்தையே உயிரிழந்தது.

6 மாதத்துக் பின்னர் சோறு தீத்தலாம் என்று கூறப்பட்டதால் சோறு தீத்தப்பட்டது. குழந்தைக்கு 25 ஆம் திகதி வயிற்றோட்டம் ஏற்பட்டது. ஒவ்வாமையால் வயிற்றோட்டம் ஏற்படுவது வழமை என்று மருத்துவமாது கூறினார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அதனால் பெற்றோர் தொடர்ந்து சில நாள்களாகச் சோறு தீத்தியுள்ளனர். ஆனால் குழந்தையின் நிலமை மோசமாகிக் கொண்டு சென்றது. நேற்றுமுன்தினம் குழந்தைக்கு வயிற்றோட்டம் அதிகரித்தது. பண்டத்தரிப்பு மருத்துவமனைக்கு முற்பகல் 11மணியளவில் குழந்தையைக்கொண்டு சென்றனர். மதியம் சங்கானை மருத்துவமனைக்கு குழந்தை மாற்றப்பட்டது. பிற்பகல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. அங்கு சேர்க்கும்போது குழந்தை உயிரிழந்திருந்தமை பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

வயிற்றோட்டம் ஏற்பட்டதால் குழந்தையின் உடலிலிருந்து ஏற்பட்ட நீர் வெளியேற்றம் அதிகரித்து நீர் இழப்பால் குழந்தை உயிரிழந்துள்ளது என்பது தெரியவந்தது என்று விசாரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினர். சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4)



## இன்றைய மோதல்கள்

**யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டத் தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள், கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இதன்படிகாலை 8.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் நியூ ஸ்ரார் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்த்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துஜொனியன்ஸ்விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அரியாலை ச.ச.நிலைய வலைப்பந்துத் தொடர்**

அரியாலை சனசமூக நிலையம் நடத்திய வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத்தின் துடுப்பாட்டத் தொடர்**

மல்லாகம் சிறி முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரின், இறுதியாட்டம் மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில், நெல்லியடி கொலின்ஸ் அணியை எதிர்த்து அரசடி ஸ்பேஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கல்வியங்காடு ஜீ.பி.எஸ் அணியை எதிர்த்து அளவெட்டிவிநாயகர் அணிமோதவுள்ளது. (ம-23)



# மாகாண கூடைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஏப். 29

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண அணிகளுக்கு இடையிலான. கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால் பாதியில் 13:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது யாழ்ப்பாண மாவட்ட அணி. இரண்டாவது கால் பாதியும் 12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் வசமானது. முதல் பாதியின் முடிவில் 25:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வதித்தது யாழ்ப்பாண மாவட்ட அணி.

மூன்றாவது கால் பாதியும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அணியின் வசமானது. நான்காவது பாதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 2 புள்ளிகளையும் மன்னார் மாவட்ட அணி 4 புள்ளிகளையும் பெற்றன. முடிவில் 33:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது யாழ்ப்பாண மாவட்ட அணி. (ம-23)


# விலக்கப்படவில்லை விலகிக்கொண்டார்

## ஸ்ரேயாஸ் பகிரங்கம்

கொல்கத்தாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கம்பீர் அணியில் இருந்து விலக்கப்படவில்லை. அவர் தானாக விலகிக்கொண்டார் என்று தெரிவித்தார் டெல்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ்.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தக் கருத்தை முன்வைத்தார் ஸ்ரேயாஸ்.

'கவுதம் கம்பீர் போன்ற அனுபவ வீரர்கள் அணிக்கு மிகவும் அவசியம். ஆனால் கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் அவர் தலைவராக இல்லாவிட்டாலும் வீரராகப் பங்களிப்புச் செய்வார் என எதிர்பார்த்தேன். ஆனால், தானாக முன்வந்து இந்த ஆட்டத்தில் நான் ஓய்வு எடுத்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துவிட்டார். கம்பீரை அணியில் எடுக்காமல் நீக்கியது என்னுடைய சொந்த முடிவு அல்ல. கம்பீர் தானாக அணி நிர்வாகத்திடம் கூறிவிட்டார். உண்மையிலேயே துணிச்சலான முடிவு. அவரின் இந்த முடிவு நிச்சயம் ஏதோ காரணத்துக்காகவே இருக்கும். அடுத்தடுத்த ஆட்டங்களில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படும்'' என்று ஸ்ரேயாஸ் மேலும் தெரிவித்தார். (ம)



# அளவெட்டி மத்தி. – ஞானவைரவர் துடுப்பாட்டம் இன்று





வலிகாமம் வடக்கின் போர் என்று வர்ணிக்கப்படும் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான மென்பந்து துடுப்பாட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அளவெட்டி மத்திய விளையாட்டு கழக தலைவர் க.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் ஆ.மணிசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

## மாற்றங்கள் இல்லையென்றால் கிரிக்கெட் அழிந்துபோய்விடும்

### மோர்கன் கருத்து

"புதுப்புது மாற்றங்கள் இல்லையென்றால் கிரிக்கெட் அழிந்து போய்விடும்" என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன்.

பன்னாட்டு கிரிக்கெட் சபையால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் கிரிக்கெட், அதன் இயல்புத் தன்மையை இழக்கக் காரணமாக உள்ளது என்றொரு குற்றச்சாட்டு உள்ள நிலையில், இவ்வாறு தெரிவித்தார் மோர்கன்.



"ரி-20 ஆட்டங்கள் உள்ளிட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லையெனில் கிரிக்கெட் அழிந்துவிடும். பார்வையாளர்களைக் கவருவதற்கு இந்த மாற்றங்கள் மிகவும் அவசியமானவையாக இருக்கின்றன" என்று மோர்கன் மேலும் தெரிவித்தார். (ம)

# அனலைதீவு அருணோதயா கபடியில் கிண்ணம் வென்றது

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நடத்திய இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில், அனலை தீவு அருணோதயா இளைஞர் கழக அணி சம்பியனானது.

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அனலைதீவு அருணோதயா இளைஞர் கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் இளைஞர் கழக அணி மோதியது. 37:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது அனலைதீவு அருணோதயா இளைஞர் கழக அணி. (ம-23)



# சுழல் வீரர்களாலேயே வெற்றி சாத்தியமானது

## வில்லியம்சன் பெருமிதம்



ஐ.பி.எல். தொடரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப்பை வீழ்த்தியது ஹைதராபாத். இந்த வெற்றி சுழல் வீரர்களாலேயே சாத்தியமானது என்று தெரிவித்தார் ஹைதராபாத் அணியின் தலைவர் வில்லியம்சன்.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 132 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. பஞ்சாப் அணியால் வெறும் 119 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. ஹைதராபாத்தின் சுழல்பந்து வீச்சாள்ர்களான ரசிட் கான், சகிப் அல் ஹசன் இருவரும் இணைந்து 5 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். இதையடுத்தே வில்லியம் சன் இவ்வாறு பாராட்டினார்.
"பவர் பிளே' எங்களுக்குச் சாதகமாக அமையாவிட்டாலும், அதன் பின்னர் எமது வீரர்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். குறிப்பாக சுழல் பந்துவீச்சாளர்கள் அபாரமாகச் செயற்பட்டனர்" என்று வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)










ஐரோப்பிய கால்பந்தாட்ட அரையிறுதி

# பெயர்ன் மூனிச்சை வீழ்த்தியது மட்ரிட்

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியின் முதலாவது சுற்று ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.
ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகமும் ஜேர்மனியின் பெயர்ன் மூனிச் கழகமும் அரையிறுதியில்விளையாடத்தகுதிபெற்றிருந்தன. ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களின் விதிப்படி ஒவ்வொரு அணியும் தனது மைதானத்திலும், எதிரணியின் மைதானத்திலும் என தலா ஒவ்வொரு ஆட்டத்தில் விளையாட வேண்டும். மூனிச்சின் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.
ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் பெயர்ன் மூனிச்சின் முதலாவது கோலைப் பதிவு செய்தார் கிம்மிச். முதல் பாதியின் முடிவு வரை பெயர்ன் மூனிச் ஆதிக்கம் செலுத்தியது. 44ஆவது நிமிடத்தில் மார்செலோ கோலொன்றைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப்பெற்றிருந்தன. 57ஆவது நிமிடத்தில் அசென்சியோ வில்லியம்சன் கோலொன்றை ப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது



ரியல் மட்ரிட்.
அரையிறுதியில் இரண்டாவது சுற்று ரியல் மட்ரிட்டின் மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் பதிவாகும் கோல்களையும் சேர்த்து எந்த அணி அதிக கோல்களைப் பதிவுசெய்கிறதோ அந்த அணியே இறுதிக்குத் தகுதி பெறும். (ம)

# ஸ்ரேயாஸ் புதிய சாதனை



ஐ.பி.எல். தொடரில் அணித் தலைவராக அறிமுகமான ஆட்டத்தில், அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றார் டெல்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ்.
கொல்கத்தாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்ரேயாஸ் 40 பந்துகளில் 93 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். 3 பவுண்டரிகளும் 10 சிக்சர்களும் இவற்றில் அடங்குகின்றன. இதையடுத்தே அணித் தலைவராகப் பொறுப்பேற்ற முதலாவது ஆட்டத்தில் அதிக ஓட்டங்களைப் பெற்றவராக ஸ்ரோயாஸ் தன்னைப் பதிவு செய்தார்.
2013ஆம் ஆண்டு பின்ஞ் 65 ஓட்டங்கள் எடுத்தமையே இதுவரை சிறந்த அடைவாக இருந்தது. இதையே ஸ்ரேயாஸ் முறியடித்தார். (ம)

## டெல்லி அணியில் டாலாவுக்கு இடம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், டெல்லி அணிக்காக விளையாட ஒப்பந்தமானார் தென்னாபிரிக்காவின் இளம் வீரர் டாலா.
டெல்லி அணியில் இடம் பிடித்திருந்த கிறிஸ் மொறிஸ் காயம் காரணமாக நடப்பு வருடத் தொடரில் இருந்து அண்மையில் விலகினார். இதனால் அவரின் இடத்துக்கு பிறிதொருவரை நியமிக்கக் கூடிய வாய்ப்பு டெல்லிக்கு இருந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தென்னாபிரிக்காவின் பிறிதொரு வீரரான டாலாவை நியமித்தது டெல்லி. டாலா வெறும் மூன்று ரி-20 ஆட்டங்களில் விளையாடிய அனுபவத்தையே கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. (ம)



## டிமிட்ரோவ் படுதோல்வி

பார்சிலோனா ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதி வாய்ப்பை இழந்தார் டிமிட்ரோவ்.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் டிமிட்ரோவை எதிர்த்து ஸ்பெய்னைச் சேர்ந்த பாப்லோ மோதினார். 3:6, 4:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் இழந்து 0:2 என்ற செற் கணக்கில் படுதோல்வியடைந்தார் டிமிட்ரோவ். (ம)



# பார்சிலோனா தொடரில் அரையிறுதியில் நடால்



ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் நடால்.
நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான நடாலை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 140ஆவது இடத்தில் உள்ளவரான மார்ட்டின் கிளிசான் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட தாக ஆட்டம் அமைந்தது. முதலாவத் செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாகக் கைப்பற்றினார் நடால். ஆனால் அடுத்த செற் நடாலுக்குச் சிறிது சவாலாக அமைந்தது. எனினும், அந்த செற்றையும் 7:5 என்ற புள்ளி களின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார் நடால். இந்த வெற்றியை அடுத்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடரக்கூடிய வாய்ப்பை மேலும் அதிகப்படுத்தினார் நடால். (ம)

வெளிநாடு, உள் நாடுகளுக்கான
பொதிகள் கடிதங்கள் சேவை
WESTERN UNION 070 330 5500 WESTERN UNION
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டன், ஜேர்மனி மற்றும் சில நாடுகளுக்கு
5kg மற்றும் 11kg க்கு மேல் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
வேலணை | ஊர்காவற்துறை | அரியாலை | மீசாலை | கிளிநொச்சி
முல்லைத்தீவு | கனகராயன்குளம் | வவுனியா | திருகோணமலை

## ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புக்கள்

தொழில் புரிவோர்கள், மாணவர்கள் மற்றும் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான மொழிக் கற்கை நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

- குறைந்த செலவுடன் குறுகிய காலத்தில் சான்றிதழ்களுடனான கற்கைநெறி
- அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் வசதியான நவீன கற்றல் முறைமைகள்
- கற்கும் மொழியினை சரளமாகப் பேச 100% உத்தரவாதம்.

கட்டணம் ~~20,000/-~~ 12,500/- மட்டுமே

WINSTAR CONSULTANTS (Pvt) Ltd
45, Vembadi Street, Jaffna.
071 071 6979, 021 300 4641
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்)

## வாகனம் விற்பனைக்கு உண்டு

கொள்வனவு செய்து 2 மாதங்கள் மட்டுமேயான TATA Super ACE (NP DAE ####) With body வாகனம் விற்பனைக்கு உண்டு.

- Body registered
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 734 7578/021 221 7664

## குத்தகைக்கு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ரெஸ்ரோரன்டினை குத்தகைக்கு எடுத்து நடத்த தயாராகவுள்ளோர் தொடர்பு கொள்ளவும்

070 262 7657
076 770 5051

## FREE EDUCATION IN CHINA

இலவசமாக சீன பல்கலைக்கழகங்களில் கல்வி கற்க ஒரு அறிய சந்தர்ப்பம்

DEGREE'S | MASTER'S | PhD
SCHOLARSHIP PROGRAMME
Come Meet The Representatives
MAY 02 03 04
in Jaffna town
call for appointments
0768 38 24 23

COSS LANKA (PVT) LTD Study in
Singapore | Malasiya | Russia | Japan | China
| Austria | Belarus | Poland | Lithuania | Latvia
Canada | Australia | New Zealand
# 357, R.A. De Mel Mawatha, Colombo - 3

## ஆங்கில வகுப்புக்கள்

வவுனியா நகரில் Spoken English With Grammer உங்கள் தகுதிக்கேற்ப 1½ மணித்தியாலய வகுப்புக்கள் வாரத்தில் 3 நாள்கள் நடைபெறும்.

077 428 0702

## UNI MART

Shop Smart. Live Smart.



சாவகச்சேரி நகரில்
நவீன ஆடைக் காட்சியறை திறப்பு விழா
Sarees | Salwars | Tops | Kids Wear | Baby Items | Toys

20% OFF Clothes & Toys Only From 30th Apr to 6th May

நாளை
காலை 9.30 (மணி)
212, ராஜா பிளாசா,
A9 வீதி, சாவகச்சேரி
(பிரதேச செயலகத்திற்கு முன்பாக)
021 227 0 277

## SAMSUNG

Joy begins with J

Enjoy every moment with Sri Lanka's most loved Smartphone Series.



| Galaxy J7 Pro | Galaxy J7 Max | Galaxy J7 Prime2 32GB | Galaxy J7 Nxt 32GB | Galaxy J7 Nxt | Galaxy J2 Pro | Galaxy J2 2017 Edition |
|---|---|---|---|---|---|---|
| 5.5" FHD sAMOLED Display | 5.7" FHD TFT Display | 5.5" FHD Display | 5.5" sAMOLED | 5.5" HD sAMOLED | 5" HD sAMOLED | 4.7" qHD sAMOLED |
| Memory 64GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 4GB | Memory 32GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 3GB | Memory 16GB \| RAM 2GB | Memory 16GB \| RAM 2GB | Memory 8GB \| RAM 1GB |
| 13MP + 13MP Enhanced Camera | 13MP + 13MP Enhanced Camera | Fingerprint scanner | 13MP + 5MP Enhanced Camera | Latest Android Nougat | S Bike Mode | Smart Manager |
| ரூ. 48,990 | ரூ. 42,990 | ரூ. 38,290 | ரூ. 31,290 | ரூ. 25,790 | ரூ. 21,690 | ரூ. 17,190 |

பெறுக்கொள்ளக் கூடிய இடங்கள்: JKOA | SINGER | SINGHAGIRI | softlogic

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864
www.facebook.com/SamsungLanka
My Galaxy The all you need app


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.